கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு - 16

உ
சிவமயம்

# சண்டேசுரநாயனர் புராணம்

உரையுடனும் படங்களுடனும்

நாயனரைப்பற்றிய
சைவத் தெய்வப் பன்னிரு திருமுறைத்திரட்டு அடங்கியது

பதிப்பாசிரியர்
கோவை - வழக்கறிஞர்
திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B. A.

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை.

கோவைத் தமிழ்ச் சங்கம்
கோயமுத்தூர்
25-12-1940



விலை ரூ. 0—8—0

கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு - 16

உ

சிவமயம்

# சண்டேசுர நாயனார் புராணம்

## உரையுடனும் படங்களுடனும்

நாயனாரைப் பற்றிய

சைவத் தெய்வப் பன்னிரு திருமுறைத்திரட்டு அடங்கியது

பதிப்பாசிரியர்

கோவை - வழக்கறிஞர்

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B. A.

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை.

கோவைத் தமிழ்ச் சங்கம்

கோயமுத்தூர்

25-12-1940



விலை ரூ. ~~0-8-0~~ 0.75

# முகவுரை

வேதமலி சேய்ஞலூ ரெச்சதத்தன்
விளங்கியசேய் மறைபயிலும் விசாரசன்மர்
கோதனமேய்ப் பவன்கொடுமை பொறாதுதாமே
கொண்டுநிரை மண்ணியின்றென் கரையினீழற்
றுதகியின் மணலிலிங்கத் தான்பாலாட்டத்
தாதைபொறா தலையிடறுந் தாள்கண்மாளக்
காதிமலர்த் தாமமுயர் நாம முண்ட
கலமகனும் பதமருளாற் கைக்கொண் டாரே.

—திருத்தொண்டர் புராணசாரம்

திருத்தொண்டர்புராண உரை வெளியீடு முற்றும் பெறமுடியாத அன்பர்கட்கும் தமிழ் மாணவர்கட்கும் இலகுவிற் பயன்படும் பொருட்டு இதனைத் தனிப்புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. இதுபோலும் இன்னும் சில புராணங்களையும் தனித்தனி வெளியிடுவது கோவைத் தமிழ்ச்சங்கத்தார் எண்ணம். தமிழ்ச்சைவ உலகம் தக்கபடி ஆதரிப்பதாக.

சேக்கிழார் நிலயம்
கோவை - 15-9-40

C. K. சுப்பிரமணிய முதலியார்,
பதிப்பாசிரியர்.

# பொருளடக்கம்



பக்கம்


1. சண்டேசுரநாயனார் புராணம் - மூலமும் உரையும் ... க—எ0

2. சரிதச்சுருக்கமும் தலவிசேடமும் கற்பனையும் ... எக—எஎ

3. சண்டேசுரநாயனாரைப் பற்றிய சைவத்தெய்வத் திருமுறைத் திரட்டு ... எஅ—அஅ

4. பாட்டு முதற்குறிப்பு ... அசு—கூ0




## படங்களின் விவரம்


1. திருச்சேய்ஞலூர்க் கோயில் ... க

2. திருவாப்பாடிக் கோயில் ... ௩அ

3. திருவாப்பாடி—திருவாத்தி ... „

4. மண்ணியாற்றின் கரை ... „

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# 20. சண்டேசுர நாயனார் புராணம்

தொகை

"மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க,
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்"

—திருத்தொண்டத் தொகை

வகை

"குலமே றியசெய்ஞ லூர்க்குரி சில்குரை கடல்சூழ்
தலமே றியவிறற் றண்டிகண் டீர்தந்தை தாளிரண்டும்
வலமே றியமழு வாலெறிந் தீசன் மணிமுடிமே
னலமே றியபால் சொரிந்தலர் சூட்டிய நன்னிதியே"

—திருத்தொண்டர் திருவந்தாதி - 22

விரி

1206. பூந்தண் பொன்னி யெந்நாளும் பொய்யா தளிக்கும் புனனாட்டு
வாய்ந்த மண்ணித் தென்கரையின் மன்னு, முன்னாள், வரைகிழிய
ஏந்து மயில்வே லினைகாட்டி, யிமையோ ரிகல்வெம் பகைகடக்குஞ்,
சேந்த னளித்த திருமறையோர் மூதூர் செல்வச் சேய்ஞலூர். ௧

புராணம் :—சண்டேசர் என்னும் பெயருடைய நாயனாரது சரிதவரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி நிறுத்த முறையானே மும்மையாலுலகாண்ட சருக்கத்து ஆறாவது சண்டேசுர நாயனார் புராணங் கூறத்தொடங்குகின்றார்.

தொகை:—மெய்ம்மையுள் நின்று மணலாலாகிய சிவலிங்கத் திருமேனியின்கண் சிவனை வழிபட்டுநிற்கவும், அதுகண்டு வெகுண்டு எழுந்த தாதையின் தாள்களை மழுவினால் எறிந்த அம்மைபோன்ற திருவடிப்பற்று மிகுந்த சண்டேசருக்கும் நான் அடியேனாவேன்.

திருமேனியில் மெய்ம்மையே வழிபடா நிற்க என்க. திருமேனி - மணலாலாகிய சிவலிங்கத்திருமேனி யினிடத்து; சிவனைக்கண்டு வழிபடத்தக்க குரு, லிங்க, சங்கமம் என்ற மூன்று திருமேனிகளில் இலிங்கமாகிய திருமேனியில் என்க. திருமேனியின் கண் வழிபட என்பதாம். ஏழனுருபு தொக்கது. வழிபடா நிற்க - அவன் (தந்தை) பார்த்துக்கொண்டிருப்பவும், புடைத்துக் கொடிதா மொழி கூறவும், தாம் பணியிற் சலியாது முயன்றுகொண்டிருக்க என்ற சரிதக்குறிப்பு. வழிபடா நிற்கவும், என்று சிறப்பும்மை தொக்கது. அவர் வழிபட்ட நிலை பிறரறியவாராது நின்றதாதலின் உம்மையும் தொக்கு நின்றது. இந்நாயனார் அந்த வுடம்பு தன்னுடனே அரனார் மகனாராகிச் சண்டேச பதத்தில் அமர்ந்து இன்றும் சிவயோகத்தில் எழுந்தருளி வழிபட்டு நிற்கின்றாராதலின், வழிபடா நிற்க என்று நிகழ்காலத்தாற் கூறிய உண்மையும் காண்க.

திருமேனி - நாயனாரது திருமேனி குறித்ததாகக்கொண்டு அதற்குத்தக வுரைப்பாரு முண்டு.

வேதண்டு எழுந்த தாதை-இது 1252-1254-1255ல் விரிநூலுள் விரிக்கப்பட்டது. தாதை - "தந்தையென வேயறிந்து" (1256) பார்க்க. மழுவினால் எறிந்த - தாள்களை எறிய எண்ணி "மருங்கு கிடந்தகோல் எடுத்தார்க்கு அதுவே முறைமையினால் வந்து மழுவாயிட" (1256) பார்க்க. இதனை "வலமேறிய மழுவாலெறிந்து" என்று வகைநூல் வகுத்துக் காட்டிற்று. "எறிந்தார்" (1256) "எறிந்த அதுவே" (1257).

அம்மையான் - அன்னை போன்றவர். பெண்பாற் பெயர் ஆண்பால் விகுதி பெற்று வந்தது. அடிச்சண்டிப்பெருமான் - திருவடிப்பற்று விடாத தொண்டராகிய சண்டேசர். இறைவரது நின்மாலியத் தீர்த்தத் தொட்டிக்கும் சண்டேசர் கோயிலுக்கும் குறுக்கே போகலாகாது என்ற விதியும் இடையறாத இத்தொடர்பு குறித்தது. அம்மை - அமைதி - மாண்பு என்று கொண்டுரைத்தலுமொன்று. (சிந்தா - நச் - உரை - 3131)

இறைவனாரது மகனாராகப் பெற்ற பெருமை குறிக்க இந்நாயனாரது அடிமைத் திறத்தை முதனூல் ஒன்றரை அடிகளாற் புகழ்ந்து போற்றிற்று. இதுபோலவே ஆளுடைய பிள்ளையாராகிய மகனாரின் அடிமைத்திறத்தினையும் முதனூல் போற்றிய அளவும் காண்க.

வகை :—நன்மை மிகுந்த திருச்சேய்ஞலூரில் அவதரித்த பெருமையால் மிக்கவராகிய, ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த உலகத்தில் வலிமைமிக்க சண்டேசர், தமது தந்தையின் தாள்களிரண்டினையும் வெற்றி பொருந்திய மழுவினால் எறிந்து, ஈசனது அழகிய திருமுடியின்மேல் நன்மைமிகுந்த பாலினைச் சொரிந்து, பூக்களைச் சூட்டி, அருச்சித்த நல்ல நிதிபோன்றவர் என்று அறிந்துகொள்ளுங்கள்.

நலம் - நன்மை என்ற பொருளில் வந்தது. "குலப்பதி" முதலியவை காண்க. குலம் ஏறிய-உயர்குலம் என்று கொண்டு, மறையவர் வாழ்கின்ற என்றலுமாம். "திரு மறையோர் மூதூர்" (1206), "மறையோர் விளங்குபதி" (1207) என்பது விரிநூல்.

குரிசில் - பெருமையிற் சிறந்தோன்.

நலம் ஏறிய விறல் தண்டி - இவரது விறல் எல்லா வுலகமும் நிறைந்து எல்லாரா லும் போற்றப்படுவது என்க. இதனை "எல்லா வுலகு மார்ப்பெடுப்ப" (1262) என்று விரித்தது விரிநூல். விறலாவது "நடமே புரியும் சேவடியின் வழியன்பின் கடனே யியல்பாய் முயற்றிவரும் காதல் மேன்மேல் எழுங்கருத்தின் திடமும்" (1221), ஆனினங்கள் தம்மை யணைந்து கறவாமே பால் பொழிந்தபோது, அது திருமஞ்சன மாங் குறிப்புணர்ந்து பூசனை விரும்பும் வேட்கை விரைந்தெழப்பெற்ற பண்பும் (1236), ஒருமை நினைவால் (1242) ஒன்றுமுள்ளத் துண்மையினால் (1252) பூசனை புரிந்த திண்மையும், தந்தை தமது முதுகிற் புடைத்துக் கொடிதா மொழி கூறவும், மண்டு காதலருச்சனையின் வைத்தாராய் அவை ஒன்றுமறிந்திலராகி நின்ற உறைப்பும் (1254), அவன் திருமஞ்சனப் பாற்குடத்தைக் காலாற் சிதறக் கண்டவுடன் பதைத்து அவ னைத்தந்தை எனவே யறிந்து, மழுவினால் அவனுடைய தாள்களிரண்டினையும்சேதித்து, அவனுக்குக் கழுவாய் விதித்ததும், அருச்சனையில் வந்த இடையூற்றினை அகற்றி முன் போல அருச்சிக்கப்புக்க திறலும் (1256) என்ற இவை முதலாயினவை. தண்டி - சண்டேசர் என்ற பதம். குரிசில் - தண்டி - எறிந்து - பால்சொரிந்து - சூட்டிய - நன்னி தியே - கண்டீர் என்று முடிக்க. பால் சொரிந்து அலர் சூட்டி - எறிந்த என்று மாற்றிக்கொள்க. நலமேறிய மழு - மருங்கு கிடந்த கோல் எடுத்தார்க்குத் திருவரு ளால் அதுவே மழுவாயிட்டமையால் நன்மைமிக்க என்றார். கழுவாயில்லாத

சிவாபராதத்தினுக்கும் திருவருளால் குற்றத்தீர்வு தருதலால் அந்த மழு நலம் ஏறிய தாயிற்று. தந்தையை எறிந்த பாதகமே முத்திக்குக் காரணமாயின நன்மையும் குறிப்பு. தாளிரண்டும் - "இருதாளும் துணித்த" (1257) என்றது விரிநூல். ஒரு தாளே குடத்தைச் சிந்தவும், இரு தாள்களையும் துணித்த தகுதிபற்றிப் பின் 1257-ல் உரைப்பவை பார்க்க. நன்னிதி - சிவபூசைப் பயனாகிய கிடையாச் செல்வம் கிடைப் பிக்கும் தன்மைபற்றி இவ்வாறு சிறப்பித்தார்.

சரித வரலாறும் பெயரும் தொகைநூல் தொகுத்துக் கூறிற்று. ஊரும் பேரும் சரித வரலாறும் பண்பும் வகைநூல் வகுத்துக் காட்டிற்று. இவை விரிந்தபடி விரி நூலுட் காண்க.

1206. (இ - ள்) வெளிப்படை. அழகிய குளிர்ச்சியுடைய காவிரி, எந்நாளினும் பொய்க்காமல் நீர்தரும், நீர்நாடாகிய சோழவளநாட்டில், வாய்ப்புடைய மண்ணி யாற்றின் தென்கரையில், நிலைபெறும்படி, முன்னாளில் கிரவுஞ்சமலை பிளக்குமாறு ஏந்திய கூரிய வேலினது நிலைபெற்ற தன்மையைக் காட்டிப், பின்பு, தேவர்களது கொடிய பகையாகிய சூரர்களைச் செயிக்க நின்ற, முருகனுணையினால், அளிக்கப்பட்ட திருமறையோர்கள் நெருங்கிய பழைய ஊர் செல்வ நிறைந்த சேய்ஞலூர் என்பதாகும்.

1206. (வி - ரை) பூந் தண் பொன்னி-பூ - அழகு. அழகு காவிரியின் இயல்பு; கரடுமுரடாயும், மலையின்வீழருவிகள்போலக் கடிதாயும் ஓடாது மெல்லிதாய்ப் பரந்து செல்லுதலும் செல்லுமிடமெல்லாம் அழகு செய்தலுமாம்.

எந்நாளும் பொய்யாது அளிக்கும் - எந்நாளும் - மழையில்லாத காலத்தும் முது வேனிற்காலத்தும். உம்மை உயர்வு சிறப்பு. பொய்யா தளித்தலாவது சுருங்கி வறண்டுபோகாது நீர் தருதலும் பருவந் தவிராது நீர் தருதலுமாம். "வான் பொய்யி னுந் தான்பொய்யா" (பட்டினப்பாலை - 5). "தவாநீர்க் காவிரிப்பாவை" (மணிமே).

வாய்ந்த மண்ணி - மண்ணி - கொள்ளிடத்திலிருந்து பிரிந்துவரும் கிளை யாறு. இது பல காலங்களில் பல வழிகளால் ஓடிச் சென்றது. பழ மண்ணிப்படிக்கரை முதலியவற்றின் வரலாறுகள் காண்க. இவ்வாறே காவிரியும் மாறிச்செல்லும் வழிக ளுடையதென்பதுபற்றிப் பழங் காவிரி முதலிய வரலாறுகளும் கருதுக. வாய்ந்த - காவிரி பாயும் நாட்டில் வடிகாலாகிய கொள்ளிடத்தினின்றும் பிரிந்துவந்து கூடிய. வாய்த்தல் - ஏற்றவாறு பொருந்துதல்.

மன்ன - அன்றுமுத லின்றுவரையும் இனிமேலும் நிலைபெறும்படியாக.

முன்னாள்...காட்டி - முருகப்பெருமான் சூரசங்காரத்தின் பொருட்டுத் தேவர் சேனைகளுடன் கயிலையினின்றும் தென்றிசையில் வருங்காலத்து இடையில் குறுக் கிட்டு எதிர்த்த மாயமலையாகிய கிரவுஞ்சமலையை வேலாயுதத்தினால் பிளந்து தாரகா சுரனையும் வதைத்தருளினர் என்ற சரிதம் கந்தபுராணத்துள் விரிவாய்க் காணத் தக்கது. முன்னாள்-தென்றிசையிற் போந்து சேய்ஞலூரை யுளதாக்குதலுக்கு முன்னா ளிலே. வரை - கிரவுஞ்சம் என்னும் மாயமலை. "குன்ற மெறிந்த வேலவன்" (1158), "வரையுரங் கிழித்த திண்மை அயில்" (661) என்ற விடங்களிலுரைத்தவையும் பார்க்க. வரைகிழிய என்றதனால் அதனை இருப்பிடமாக்கொண்டு அதனுள் இருந்து மாயஞ் செய்த தாரகாசுரனைக் கொன்றதும் உடன்கொள்க.

ஏந்தும் அயில் வேல் நிலைகாட்டி - வேற்படை வெல்லும் என்ற நிலையினை விளக் கிக்காட்டி. ஞானவேற்படையின் சத்தியினை நாட்டிக் காட்டுதலே பொருளன்றித் தாரகனை வதைத்தல் ஒரு பொருளன்று என்ற குறிப்புப்பட, வேலால் வரை கிழித்த சேந்தன் என்னாது, வரை கிழிய ஏந்தும் வேல் நிலைகாட்டி - என்ற நயமும் காண்க.

**காட்டி - கடக்கும்** - சூரனாதியோர் மூவருள், வேற்படையினாற் சங்கரிக்கப்பட்ட இருவருள், ஒருவனை தாரகனைக் காட்டி என்ற இதனாலும், மற்றவனை சூரபதுமனை இகல் வெம்பகை கடக்கும் என்றதனாலும் உணர்த்தினார். பகை என்றதனால் குலிசாயுதத்தால் வதைக்கப்படும் சிங்கமுகனையும் கொள்ளவைத்தார்.

**இகல் வெம்பகை**-போரிற் கொடிய பகைவன்; சூரபதுமன். **கடக்கும்** - சேய்ஞலூர்த் தாபனத்தின்பின் இனி நிகழ உள்ளது என்பார் எதிர்காலப் பெயரெச்சத்தாற் கூறினார். **சேந்தன்** - முருகப்பெருமான்.

**அளித்த மூதூர்** - அளித்தது அதனைப் புதிதாய் உளதாக்கி விருப்பிய என்றதாம். "செல்லு மாமுகில் செறிந்திடு காப்பின், மல்லன் மாநகர் வளந்தனை நோக்கி, யெல்லையில்லறிவன் யாமுறை தற்கோர், நல்ல மாநகரி தென்று நவின்றான்", "வீரவேளிது விளம்புத லோடு, மாரும் வானவர்க ளம்மொழி கேளா, வேறெ லாமுடைய விந்நகர் சேய்ஞ, லூரதென்று பெய ரோதின ரன்றே" என்னும் கந்தபுராணம் குமாரபுரிப் படலம் (14 - 15) பார்க்க. சேய்ஞலூர் என்பது வடமொழியில் குமாரபுரி என வழங்கப்பட்டது.

**காட்டிக் - கடக்கும் - சேந்தன் அளித்த** - கிரவுஞ்சத்தையும் தாரகனையும் சங்கரித்த பின்னரும், சூரனை வதைக்கும் முன்னரும் ஆக இடைவழியில் முருகர், சேய்ஞலூரை உளதாக்கி அங்குச் சிவபெருமானைப் பூசித்தனர் என்ற சரித நிகழ்ச்சியைச் சுருக்கி விளக்கிய திறம் காண்க. "சேயடைந்த சேய்ஞலூர்" என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் காண்க. சேய் (முருகன்) நல் ஊர் - சேயினால் அமரப்பட்ட நல்ல ஊர் என்க. சேய் நல்லூர் என்பது சேய்ஞலூர் என வழங்குவதாயிற்று. நகரத்துக்கு ஞகரம் போலி.

**திருமறையோர் மூதூர்** - திரு - முத்திக்குச் சாதனமாவது. **செல்வம்** - அருட்செல்வம் குறித்தது.

**மறையோர் மூதூர்** - "வேதியர் வாழும் சேய்ஞல்" (ஆப்பாடி - 2) என்பது திருநேரிசை. இது மறையோர் மிகுதியும் வாழும் நகரமாகும். சரிதமுடைய நாயனார் மறையவராதலும் குறித்தவாறு. **மூதூர்** - சேய்ஞலூர் என்று முடிக்க. பெயர்ப் பயனிலை.*

இப்பாட்டினால் நாயனாரது திருநாடு, ஆறு, திருநகர் முதலிய வளங்களையும், பழஞ்சரிதத் தொடர்பும், குடிவளமும் ஒருங்கே கூறிய நயம் காண்க. இவ்வாறே "விரைசெய் நறும்பூந் தொடையிதழி" (491) என்றதும், பிறவும் காண்க. 1

1207. செம்மை வெண்ணீற் றொருமையினா; ரிரண்டு பிறப்பின் சிறப்பினார்;
மும்மைத் தழலோம் பியநெறியார்; நான்கு வேத முறைபயின்றார்

*முருகப் பெருமான் உளதாக்கி யமர்ந்து சிவபூசை செய்த சிறப்புடைய பெருந்தலமாமிதன் ஆலயம் பழுதுபட்டுப் போய் 50 ஆண்டுகளின் முன் சுவாமி, அம்பிகை முதலிய மூர்த்திகள் எல்லாரையும் இளங்கோயிலினுள் அன்பர்கள் எழுந்தருளுவித்துள்ளார். இதன் கோயில் முழுதும் இடிக்கப்பட்டு அரை குறை வேலையாய் நின்றுபட்டிருப்பதைச் சைவ உலகம் இன்னும் பார்த்துக் கொண்டுதான் வாளா நிற்கின்றது. "மண்ணின் பயனு மப்பதி" (1210) என்று ஆசிரியர் விதந்து போற்றிப் பாராட்டும் பெருமையுடையதாய்ச் சிவபூசைப் பயனை உலகுக்குக் கொடுப்பதாயுள்ள இப்பெருந்தலத்தின் நிலை இதுவாயின் சைவர்கள் சிவபூசையின் பயன் பெற்றுய்வ தெங்கே? இதனைத் திருப்பணி செய்து முற்றுவித்து முன்போலத் தாபித்தல் சிவபெருமான் திருவருளும், முருகப் பெருமான் திருவருளும், சண்டீசர் திருவருளும் ஒருங்கே பெறுவிக்க வல்லதாகிய தலைசிறந்த சிவத்திருப்பணியாகும்.

தம்மை யைந்து புலனும்பின் செல்லுந் தகையா ; ரறுதொழிலின்
மெய்ம்மை யொழுக்க மேழுலகும் போற்று மறையோர் விளங்குவது.

(இ - ள்) வெளிப்படை. சிவநெறிச்சாதனமாகிய திருவெண்ணீற்றில் ஒன்று பட்ட ஒழுக்கமுடையவராய், இரண்டு பிறப்பின் சிறப்புடையராய், முத்தீயினையும் என்றும் வளர்க்கும் நெறியில் நிற்பவராய், நான்கு வேதங்களையும் முறையிற் பயின்ற வராய், ஐந்து புலன்களும் தங்களைப் பின்செல்லும் தன்மையுடையராய்த், தாம் செய்யும் அறுதொழிலின் மெய்யொழுக்கத்தினை ஏழுலகங்களும் போற்றத்தக்கவராய் உள்ள மறையவர்கள் விளங்குவது அவ்வூர்.

(வி - ரை) செம்மை - சிவம் - முத்தி. செம்மை வெண்ணீறு - செம்மையைத் தருவதாகிய - சிவசாதனமாகிய திருவெண்ணீறு என்க. திருநீறு சிவனைப்போலவே அழியாத தன்மையுடையது ; வேதங்களாற் றுதிக்கப்படுவது. "முத்தி தருவது நீறு", "பத்தி தருவது நீறு", "பாவ மறுப்பது நீறு" முதலிய வேத வாக்குக்கள் காண்க. செம்மை - "செம்மையே" (தொகை - பக் - கரு-நு-சு - உரை பார்க்க).

நீற்று ஒருமையினார் - திருநீற்று நெறியிற் பிறழாது ஒன்றுபட்ட உறுதியுடைய வர்கள். "உறுவது நீற்றின் செல்வ மெனக்கொளு முள்ள மிக்கார்" (355), "விதியி னாலே பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர்" (488), "தொன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டி, னன்மைக்க ணின்ற நலம்" (610) முதலியவை காண்க. ஒருமை - ஒன்றுபட்ட உறுதி. "ஒன்றி யிருந்து நினைமின்கள்" என்ற திருவிருத்தம் சிந்திக்கத்தக்கது.

இரண்டு பிறப்பின் சிறப்பாவது ஒரு பிறவியிலே இரண்டு பிறப்பின் சீர்பெறு கின்ற மேம்பாடு. துவிசர் (இருபிறப்பாளர்) என்பர் வடவர். உபநயனம் என்ற சடங் கின் முன்னர் ஒரு பிறப்பும், அதன்பின் பிரம நோக்கம் கொண்டதொரு பிறப்பும் என்பன இருபிறப்பு எனப்படும். உபநயனம் என்பது பற்றி "முந்நூல் சாத்தி" (152) என்ற விடத்துரைத்தவும், பிறவும் பார்க்க. சிறப்பு - உயர்வு. விசேட தீக்கையாற்றான் இருபிறப்பின்றன்மை வருமென்பது சித்தாந்த சாராவலி.

மும்மைத்தழல் ஓம்பிய நெறி - முத்தீ என்பன ஆகவனீயம் முதலாக எண்ணப் பட்ட மூன்று. இவை மறையோர் மனையில் நித்தியமாக வளர்க்கப்படத்தக்கன. "எரி மூன்று" (354), "ஆகுதிகள்" (1064) என்ற இடங்களிலும் பிறண்டு முரைத் தவை பார்க்க. தழல் - தீக்கடவுள். இரண்டு முகங்களையும், ஏழுகைகளையும், மூன்று கால்களையுமுடையவர் என்று சொல்லப்படுபவர். அவ்விய கவ்வியமாகிய இரண்டுக் கும் இரண்டு முகங்கள் ஆவன ; அவ்வியம் தேவர்க்கும் - கவ்வியம் பிதிரர்க்கும் கொடுக்கப்படுவன ; ஏழு கோடி மகா மந்திரங்கள் தேவர் முதலிய ஏழுவகையினர்க்கும் கொண்டு கொடுக்கும் கைகளெனப்படுவன ; (ஏழுகோடி - மந்திரங்களில் சுவாகா முத லாக உள்ள ஏழு முடிபுகள்); மூவுலகங்களும் செல்வன மூன்று கழல்கள். "எண் ணிறந்த கடவுளருக் கிடுமுணவு கொண்டேட்டும், வண்ணவெரி வாயின்கண் வைத்த தென" (796) என்ற விடத் துரைத்தவையும் பார்க்க. "இருமுகங் கழன்மூன் றேழுகைத்தலம்" என்ற (சாட்டியக்குடி - 5) திருவிசைப்பாவும் கருதுக.

நான்கு வேதம் - இருக்கு முதலாக வியாசர் வகுத்த நான்கு வேதங்கள். வியாசர் இவ்வாறு வகுக்குமுன் இவை தைத்திரீய முதலாக நான்காகச் சொல்லப்பட்டன என்ப. முன்னர் மூன்றாகவும் சொல்வர்.

முறை பயிலுதலாவது - பதம், சடை, கிரமம், கனம் ஆகிய முறைமையிற் பயிலு தலும், காலந்தெரிந்து பயிலுதலுமாம். "இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல" (திருமுருகு) என்றது காண்க.

**ஐந்து புலனும் தம்மைப் பின்செல்லும் தகையார்** என்க. புலன் வழியே தாம் செல்லாமல் தம் வழி அவற்றை நிறுத்தினர். "உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்" (குறள்), "மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்து", "ஆட்டுத் தேவர்தம் வழியொழித்து" (திருவாசகம்), "தருமந்தன் வழிச்செல்கை" (29) முதலியவை காண்க.

**அறுதொழிலின் மெய்ம்மை ஒழுக்கம்** - அறுதொழிலாவன : ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பர். மெய்ம்மை ஒழுக்கம் என்றது இந்த அறுதொழிலிலும் உண்மை நிலையில் ஒழுகுதல் ; அஃதாவது உண்டிப் பொருட்டானும் அது போன்ற வேறு காரணங்களானுமன்றி இறைவன் சாட்சியாய் அவ்வொழுக்கத்தைப் பாதுகாத்தற் பொருட்டாகவே அத்தொழிலின் ஒழுகுதல்.

**மறையோர் விளங்குவது** - மறையோர்கள் நிறைந்து விளங்கும் ஊர். "தந்தகைமைக் கேற்றதனி யிடங்கண் மேவி" (1180) என்றபடி பற்பல குலபேதத்தரும் தனித்தனி அங்கங்கு இடம் பெற்று வாழும் நகரங்களும், அவ்வாறன்றிச் சீறூர்களாய் ஒரே குலத்தவர் தனியாக வாழ அமைக்கப்பட்ட நகரங்களும் என்று ஊர்கள் இருவகைப்படும். இவ்வாறு தனி மரபினர்க்கென்று ஊர்கள் அமைப்பது முன்னாளிலும் இந்நாளிலும் வழக்காகும். **சேய்ஞலூர்** - மறையோர் தனித்துக் குடியிருக்கை கொண்டவூர். அக்கிரகாரம் என்பர் ; இது அகரம் என்று மருவி வழங்கும். மறையவர்க்குத் தனியிருக்கைகளுடைய ஊர்கள் அமைப்பதும் முன்னாள் அரசர் முதலியோர் செய்துவந்த தருமங்களுள் ஒன்றாகும். அது சதுர்வேதி மங்கலம் என்ற பெயராற் பழங் கல்வெட்டுக்களில் அறியப்படுகின்றது. இச்சரிதமுடைய நாயனார் மறைச்சிறுவராதலும் உன்னுக. மறையோர் சிறப்புப்பற்றியே 1 முதல் 6 வரை பாட்டுக்களால் நகரச் சிறப்புக் கூறிய தகுதியும் கண்டுகொள்க. இவ்வாறே ஆளுடையபிள்ளையார் புராணத்துக் கூறப்பட்ட நகரவளங்களும் பிறவும் இங்கு நினைவுகூர்க.

இப்பாட்டு ஒன்றுமுதல் ஏழுவரை முறையாக அடுக்கிவரும் எண்ணலங்காரம் என்ற அணிபெற அமைக்கப்பட்டதாம். "ஆழியொன்று" (339) என்ற திருக்கோவையாரும் எதிர்முறையாக வரும் "மணங்கமழ்" (புறநீர்மை - ஓமாம் புலியூர் - 6) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரமும் காண்க.

**விளங்குவது** அவ்வூர் - என்று வருவித்து முடிக்க.

**விளங்குபதி**—என்பதும் பாடம்.                                                   2

1208. கோதின் மான்றோற் புரிமுந்நூல் குலவு மார்பிற் குழைக்குடுமி
யோது கிடைசூழ் சிறுவர்களு முதவும் பெருமை யாசானும்
போதின் விளங்குந் தாரகையு மதியும் போலப் புணர்மடங்கண்
மீது முழங்கு முகிலொதுங்க வேத வொலிகண் முழங்குவன.    ௩

(இ - ள்) வெளிப்படை. குற்றமற்ற மான்தோலுடைய முப்புரி நூலணிந்த மார்பினையும், குழைக்குடுமியினையும் உடைய வேதம் ஓதுகின்ற கூட்டமாய் நிறைந்த சிறுமாணவர்களும், அவர்களுக்கு வேதத்தை உதவும் பெருமையுடைய ஆசிரியனும், இராப்பொழுதில் விளங்கும் தாரகைகளும் சந்திரனும் போலப் பொருந்துகின்ற மடங்களில், அவற்றின்மேல் சத்திக்கின்ற முகில்கள் ஒதுங்கும்படி வேத ஒலிகள் முழங்குவனவாகும்.

(வி - ரை) **மீது...முழங்குவன** - வேதமோதும் மடங்கள் மேகந் தவழும்படி உயர்ந்துள்ளன ; அங்கு ஒதுங்கும் மேகங்களினுடைய ஒலிகளின் மேல் ஓங்கி அந்த மடங்களினின்று பெருகும் வேத ஒலிகள் மிகுந்துள்ளன ; வேதங்கள், யானைப்பிளிறல்

போன்றது எனப்படும் நிஷாதம் என்ற உயர்ந்த சுரம் கலந்து மாணவர் பலர் கூடி ஓதும் போது மேக ஒலிக்கும் மேற்பட ஓங்கி முழங்குவன என்பதாம். ஒதுங்க - மேற் செல்லமாட்டாது ஒருபுறம் தங்க என்க. சுர ஒலிக்குத் தம் ஒலி தாழ்ந்தமையால் வெள்கி ஒருபுறம் ஒதுங்க என்று தற்குறிப்பேற்ற வணி பெற நின்ற குறிப்பும் காண்க. 81, 834 பார்க்க.

**சிறுவர்களும்...புணர்மடங்கள்**-சிறார் பலரும் ஆசான் ஒருவருமாதலின் தாரகையும் மதியும்போல என்றார். சூழ் - சந்திரனைத் தாரகைகள் சூழ்ந்திருப்பதுபோல ஆசானை மாணவர் சூழ்ந்திருப்பர் என்பது.

**போதின் விளங்கு தாரகையும் மதியும்போல - போதின்** - இராப்பொழுதில். பொழுது என்பது போது என நின்றது. தாரகையும் மதியும் பகற்போதில் ஒளி செய்யமாட்டா. ஆசான் - மாணவ ரிடைப் பொருத்தம் தண்ணளியும் ஒண்மையும் நிலவப் பெறுதலால் வெய்யவன் நிலவும் பகற்போதில் உவமை கூடாதாயிற்று. அன்றியும், சிற்றொளிப் பொருள்கள் பலவும் பேரொளிப் பொருள் ஒன்றும் ஒளி விளங்க வேண்டப்படுதலால், பிற ஒளிகளெல்லாவற்றையும் தன்னுள் அடக்கி ஒளி தராமற் செய்து ஞாயிறு தானே தனியரசு செலுத்தும் பகற்பொழுது இங்கு உவமைக் குப் பொருந்தாததாயிற்று. இவை குறிக்க (இராப்)**போதின் விளங்கு** என்றார்.

அளவாற் சிறியவையாய்க் காணப்படினும் தாரகைகளும் மதியினைப் போன்ற தனி ஒளிப்பொருள்களாதலின் ஆசானைப் போலவே தனித்தனி அறிவொளியுடைய உயிர்ப் பொருள்களாகிய சிறுவர்க்கு ஏற்ற உவமையாயின. ஒளி யளவின் பெருமை சிறுமைகளும் உவமைக்கேற்ற தன்மை தந்தன. மதி ஒளிவிடும் காலத்தில் தாரகை கள் விளக்க முறுதலால் ஆசானால் சிறுவர் விளக்கம் பெறுதலும் பெறப்படும்.

அன்றியும் மதி, கோள்களுள் ஒன்றாதலின், போதின் இடையீடின்றி ஒளி நில வும் பொருளாமென்பதும், தாரகைகள் அவ்வாறன்றி விட்டுவிட்டு ஒளியிமைப்பன என்பதும் இங்கு இவ்வுவமைக்குச் சுவை தந்தன. "சேண்விளங் கியற்கை வாண் மதி கவைஇ, யகலா மீனி னவிர்வன விமைப்ப" (முருகு - 87-87) என்றதும், அவ் விடத்து நச்சினார்க்கினியர், மீன் - உரோகிணி முதலியன. வியாழமும் வெள்ளியு மாம் என்றதும் காண்க. **சிறுவர்** - முன் பாட்டிற் கூறிய மறையவர் மக்கள்.

**புணர்தல்** - இங்கு உணர்வொளியால் கலத்தல் குறித்தது. தாரகை மதிஒளி வீசும்போது விளங்கினும் தாந்தாமே தனித்தனி ஒளிப்பொருள்களாதலும் குறிக் கத்தக்கது.

**சிறுவர்களும் - ஆசானும், தாரகையும் மதியும்போலப் புணர்** என்றது வினை யும் மெய்யும்பற்றி எழுந்த உவமங்கள். சிறுவர் தாரகைபோல, ஆசான் மதிபோல என்று நிரனிரையாகக் கூட்டிக்கொள்க.

**ஓதுகிடை** - வேதம் பயிலும் சிறுவர் கூட்டம். "மல்கு பெருங்கிடை" (1063), "வேதமுங் கிடையும்" (81) என்றவை பார்க்க.

**உதவும் பெருமை** - சிறுவர்க்கு வேதத்தை உதவும் பெருமை. வேதம் வரச் செய்யும் தன்மை.

**மான்தோல் - முந்நூல் - குடுமி** - இவை மறைச் சிறுவர்களாகிய பிரமசாரிகள் என்பார்க் குரிய அடையாளங்கள். முந்நூன் மார்பும் குடுமியும் உடைய சிறுவர் என்க.

**கோதில் மான்தோல் - கோதில்** - என்றது பிரமசரிய நிலைக்கு உதவும் பண்பி னாலும் சிறப்பினாலும் இறந்த பிராணியின் தசை சம்பந்தப்பட்ட தோல் என்ற குற்ற மில்லாத என்க. மான்தோல் தூய்மையுடையதென்பதும் மரபு.

**துஞ்சக்குடுமி** - மெல்லிய புன்மயிர் கொண்ட குடுமி. குறுகிய நீளமுடையதாய் அசையும் குடுமி என்றலுமாம்.

**சிறுவர்களும்** என்றது இப்புராணமுடைய நாயனார் இச்சிறார் கூட்டத்தினுள் ஒருவராய்ப் பயின்ற பண்பு குறிக்கச் சிறப்பித்தபடியாம்.

**மடங்கள்** - வேதம் பயில் இடங்களைப்பற்றி 1063-ல் உரைத்தவை பார்க்க.

**புடைசூழ்**—என்பதும் பாடம். 3

1209. யாக நிலவுஞ் சாலைதொறு மறையோ ரீந்த வவியுணவின்
பாகநுகர வருமாலு மயனு மூரும் படர்சிறைப்புண்
மாக மிகந்து வந்திருக்குஞ் சேக்கை யெனவும், வானவர்கோ
னாக மணையுங் கந்தெனவு நாட்டும் யூப வீட்டமுள. ச

(இ - ள்) வெளிப்படை. யாகங்கள் செய்யப்படுகின்ற சாலைகள் தோறும் மறையவர் கொடுத்த அவிப்பாகத்தை உண்ணுதற்கு வருகின்ற மாலும் பிரமனும் ஏறி வருகின்ற படரும் சிறகுகளையுடைய (கருடனும் அன்னமும் ஆகிய) பறவைகள் ஆகாயத்திலிருந்துவந்து தங்குதற்குரிய இருப்பிடம்போலவும், (அவ்வாறே வரும்) தேவேந்திரனுடைய (ஊர்தியாகிய ஐராவதம் என்னும்) யானையைக் கட்டுந் தறிபோலவும், நாட்டப்படும் யூபத்தம்பங்களின் கூட்டம் உள்ளன.

(வி - ரை) யாக நிலவும் சாலை - வேள்விச் சாலைகள். **யூபம்** - வேள்விப் பசுவைக் கட்டும் தம்பம். ஓமத்தறி. சேக்கை - கூடு - இருப்பிடம் - பறவைகள் தங்குமிடம். "பைம்பொழிற் சேக்கைக ணோக்கினவாற், பகலோங் கிருங்கழி வாய்க்கொழு மீனுண்ட வன்னங்களே" (188) என்ற திருக்கோவையாரும், "புள்ளினம் வைகு சேக்கைகள் மேற்செல" (304) என்றதும் காண்க. **கந்து** - யானையைக் கட்டும் தறி. "யூப வேள்விப் பெரும்பெயர்ச்சாலை" (77) என்றதும் காண்க.

**யூப ஈட்டம் சேக்கை எனவும் கந்து எனவும் உள** - என்க. வேள்விகளில் பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களுக்கு அவிப்பாகம் தரப்படும்; அதற்காக அவர்கள் வரும்போது தங்கள் தங்கள் ஊர்திகளில் ஏறி வருவார்கள்; அவை வேள்விச் சாலைகளின் பக்கத்திற் தங்கவேண்டுமாதலின் யூபத்தம்பங்கள் தங்குதற்கு உதவுவன போன்றிருந்தன என்பது கருத்து. யூபத்தம்பங்களின் உயர்ந்த அகன்ற உச்சியிடங்கள் மேலிருந்து வரும் பறவைகளாகிய கருடன் அன்னம் என்ற ஊர்திகள் தங்குமிடம் போலவும், அடியகன்ற யூபம் கீழ் ஊர்ந்து வரும் யானை கட்டும் தறிபோலவும் உள்ளது என்க. உம்மைகள் எண்ணும்மைகள்.

ஒரு பொருளையே இரண்டு பொருளுக்கு உவமை ஆக்கினார். மெய்பற்றி வந்த உவமைகள். இப்பாட்டு மறையவர் வேள்வி குறித்தது.

**படர் சிறைப்புள்** - புட்கள் கருடனும் அன்னமும். **புள்** - பன்மை குறித்த ஒருமை. **நாகம்** - யானை - ஐராவதம்.

**ஈந்த அவி உணவின் பாகம்** - இங்குச் சிவபெருமானைக் குறித்துச் சொல்லாத காரணமாவது, சிவனே வேள்விகட்கெல்லாம் முதல்வராகலானும், சிவனையன்றிச் செய்யும் வேள்விகள் தக்கன் வேள்விபோல முற்றுப்பெறாது சிதைவுபட்டொழியுமாகலானும், சிவபெருமானுக்கு முதற்கண் அவிகொடுத்து எழுந்தருளுவித்த பின்னரே ஏனைத் தேவருக்கு அவியுணவு தருதல் மரபாதலானும், விட்டுணு பிரமன் இந்திரன் முதலினோர் சிவனுக்குரிய வேள்விகளைக் காத்தற்பொருட்டே அமைவார்களாதலானும் சிவனுக்கு அவிகொடுத்தல் கூற வேண்டாதாயிற்று. **ஈந்த** - எனவும், **அவி உணவின் பாகம்** எனவும் கூறிய குறிப்பும் சிவனுக்கு அளித்து எஞ்சியதே. இவர்களுக்கு

அளிக்கப்பெறுகின்றது என்றதாம். இவ்வாறு வேள்வியினிறுதியில் இவர்களுக்கு அவி தரப்படுதலின் அதுவரை இவர்கள் காத்திருக்க வேண்டியவர்களாதலால் இவர்களது ஊர்திகளுக்கும் அதுவரை தங்குமிடம் வேண்டுவதாகும் என்பதும் இப்பாட்டின் குறிப்பாதலும் கண்டுகொள்க. 4

1210. தீம்பா லொழுகப் பொழுதுதொறு மோம தேனுச் செல்வனவுந்,
தாம்பா டியசா மங்கணிப்போர் சமிதை யிடக்கொண் டணைவனவும்,
பூம்பா சடைநீர்த் தடமூழ்கி மறையோர் மகளிர் புகுவனவு
மாம்பான் மையினில் விளங்குவன வணிநீண் மறுகு பலவுமுள. ரு

(இ - ள்) வெளிப்படை. ஓமங்களுக்குப் பஞ்சகவ்வியத்தின் பொருட்டு வளர்க்சப்படும் பசுக்கள் இனிய பால் ஒழுகும்படி பொழுதுதோறும் செல்வனவும், தாங்கள் பயின்ற வேத சாகைகளைக் கணித்துக் கொள்வோராய் மாணவகர்கள் ஓமத்துக்குரிய சமிதைகளைக் கொண்டு அணைவனவும், பூக்கள் நிரம்பிய தடங்களில் நீர்மூழ்கி மறையவர் மகளிர்கள் புகுவனவும் ஆம் பான்மையினில் விளங்குவனவாகிய நீண்ட தெருக்கள் பலவும் அந்நகரில் உள்ளன.

(வி - ரை) செல்வனவும், அணைவனவும், புகுவனவும் ஆம் பான்மையினில் விளங்கும் மறுகுபலவும் உள்ளன என்றபடியாம். செல்வன, அணைவன, புகுவன - செல்வதற்கும் அணைவதற்கும் புகுவதற்கும் இடமாவன என்க.

பொழுது தோறும் தீம்பால் ஒழுகச் செல்வன - என்க. மடியின் மிக நிறைதலால் கறவாமே பால் ஒழுகச் செல்வது பசுக்கள் செழித்து வளர்தற் கறிகுறியாம். அத்தகைய பசுக்கள் கன்றை நினைந்து செல்வதனாலும் பால்கறவாமே ஒழுகுவதா மென்ப. இவ்வாறு பால் ஒழுகச் செல்லும் பசுக்களை இன்றும் கோயமுத்தூர்ச் சில்லா அரசாங்கத்தாரது விவசாயப் பண்ணையிலும் அவ்வாறுள்ள பிற சில இடங்களிலும் காணலாம். கறவாமே பசுக்கள் பால் பொழிதலின் விளைவாகும் இச்சரிதக் குறிப்பும் காண்க. 1235 பார்க்க.

ஓமதேனு - ஆகுதிகளுக்குப் பால் தரும் பசுக்கள். 1247 பார்க்க. தேனு - சாதி யொருமை.

தாம் பாடிய சாமம் கணிப்போர் - பாடிய - இங்குக் கற்ற என்னும் பொருளிலும், சாமம் - பொதுவாய் வேதம் என்ற பொருளிலும் வந்தன. கணிப்போர் - தாம் கற்ற வேதப் பகுதிகளை மீள மீளச் சொல்லிப் பயின்று கணக்கிடும் சிறுவர். சுரங்களினளவும் - பதம் - சடை - கிரமம் என்ற முறைகளினளவும், காலத்தினளவும் கணக்கிட்டுப் பயில்வதால் கணிப்போர் என்றார்.

கணிப்போர் சமிதை இடக்கொண்டு அணைவனவும் - நித்தியாக்கினிக்கு வேண்டும் சமிதைகளைக் கொண்டுவருதல் மறைபயிலும் சிறுவர்களின் கடமைகளுள் ஒன்றாக வைப்பது முன்னாளில் மறையவர் வழக்குக்களுள் காணப்படும். ஊர் வெளியில் உள்ள வேதம் பயில் மடங்களிற் சென்று மறை பயின்ற பின்வேளையில் அச்சிறுவர் அங்குச் சமிதை சேகரித்து மனைக்குத் திரும்பும்போது, காலத்தை வீணாக்காமல் தாம் கற்ற மறைப்பகுதிகளைக் கணித்துக்கொண்டே செல்வர் என்பது. வீண் பேச்சுப் பேசி வீதி செல்லும் இந்நாள் மாணவகர் இதைக் கணிப்பார்களாக.

பூம்பாசடை...புகுவன - மறையோர் மகளிர் நகர்ப்புறத்தில் உள்ள பூம்பொய்கைகளில் சென்று குளித்து நீர்கொண்டு மனைக்கு வருதலும் முன்னாள் மறையவர் வழக்குக்களுள் ஒன்றாகும். மேற்சொல்லிய இவ்வழக்குக்கள் இந்நாளில் அருகி வருதல் வருந்தத்தக்கது.

மறையவர் பதியாதலின் முன்பாட்டில் வேள்விச் சாலைகளைப்பற்றிக் கூறிய கருத்தைத் தொடர்ந்தே, இங்குக் கூறிய மூன்றும் மறையவர் மனையில் வளர்க்கும் முத்தீ வேள்விக்கான பகுதிகளாமென்பதும் கண்டுகொள்க.

ஆம் பான்மை - செல்வனவும் அணைவனவும் புகுவனவும் ஆகும் பான்மை பெற்ற மறுகுகள் என்க. பான்மை - நற்பண்பு - நல்ல தன்மை.

அணி நீள் மறுகு - மறுகுகளுக்கு அணியாவது இடமகன்றனவாய், இருபுறமும் குளிர்ந்த நன்னிழலுடையனவாய், செல்வ மனைக ளிரண்டு புறமும் நிறைந்தனவாய், மேடு பள்ளங்களும் கோணை வளைவு முடுக்குக்களும் இன்றிச் செல்வதற்கு வசதியாய் இருத்தல். நீண்மறுகு - பிரிவும் வளைவுமின்றி நெடுந்தூரம் செல்லுதல். இத்தன்மைகள் இந்நாளும் நல்ல நகர அமைப்பில் தெருக்கள் வகுப்பதில் கருதவுள்ள தகுதிகளாகும்.

1211. வாழ்பொற் பதிமற் றதன்மருங்கு மண்ணித் திரைகள்வயல்வரம்பின்
மூழ்விற் றரளஞ் சொரிகுலைப்பாற் சமைத்த யாகத் தடஞ்சாலை
சூழ்வைப் பிடங்க ணெருங்கியுள தொடங்கு சடங்கு முடித்தேறும்
வேள்வித் தலைவர் பெருந்தேர்கள் விண்ணோ ரேறும் விமானங்கள்.

(இ - ள்) வெளிப்படை. வாழ்வுடைய அந்த அழகிய பதியின் பக்கத்தில் மண்ணியாற்றின் அலைகள் வரம்புகளினடியில் முத்துக்களைச் சொரியும் கரையின் மருங்கு அமைக்கப்பட்ட இடமகன்ற வேள்விச்சாலைகளைச் சூழ்ந்த வெளியிடங்களில், அங்குத் தொடங்கிய யாகச் சடங்குகளை முடித்துச்செல்லும் வேள்வித் தலைவர்களின் பெருந்தேர்களும் அச்சடங்குகளில் வந்து அவிப்பாகமுண்டு செல்லும் தேவர்கள் ஏறிச் செல்லும் விமானங்களும் நெருங்கி உள்ளன.

(வி - ரை) முன்னிரண்டு பாட்டுக்களின் கருத்தினைத் தொடர்ந்து யாகசாலைகளின் இருக்கையும் சிறப்பும் வேள்வியின் முடிபும் கூறுகின்றார்.

பதியின் மருங்கு மண்ணியாறு ஓடுகின்றது; அதன் அலைகள் புரண்டு பரவும்படி இரு கரையிலும் அடுத்து வயல்கள் இருக்கின்றன; வயல் வரம்புகளை யடுத்து இடப் பரப்புடைய கரைகள் உண்டு; நகர்ப்புறத்தே உள்ள அந்தப் பரந்த கரைகளில் வேள்விச்சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன; அவற்றினைச் சூழ வைப்பிடங்களாகிய வெளியிடங்கள் உள்ளன; அந்த இடங்களில் சடங்குமுடித்து வெளியேறும் வேள்வித் தலைவர்களின் தேர்களும், வேள்விக்கு வந்த விண்ணோர்களின் விமானங்களும் இடம் பெற்றிருந்தன என்பதாம்.

வேள்விச்சாலைகள் அமைக்கத்தக்க இடங்கள், நகர்ப்புறத்தில் அதன்பக்கத்தில் ஆறு, வயல், குளம் இவைகளை அடுத்த பரந்த கரைகளாம் என்பதும், யாகசாலைகளைச் சூழத் தேர்கள் நிற்கவேண்டிய அகன்ற வெளியிடங்கள் வேண்டப்படுவன என்பதும், தேர் ஏறிச்செல்லும் பெருந்திருவுடையோரும் தலைவர்களாய் வேள்விகளை இயற்றுவிப்பர் என்பதும் பெறப்பட்டன. தேர்கள் - தரையிற் செல்வனவும், விமானங்கள் - ஆகாயத்திற் செல்வனவும் ஆம். தேர்கள் - விமானங்கள் - வைப்பிடங்களில் - நெருங்கியுள - என்று முடிக்க. எண்ணும்மைகள் தொக்கன. குலை - கரை. வைப்பிடம் - தங்கவைக்குமிடம். Place to park cars & carriages என்பர் நவீனர். 6

1212. மடையிற் கழுநீர் செழுநீர்சூழ் வயலிற் சாலிக் கதிர்க்கற்றை
புடையிற் சுரும்பு மிடைகமுகு புனலிற் பரம்பு பூம்பாளை
யடையிற் பயிலுந் தாமரைநீ ளலரிற் றுயிலுங் கயல்கள்வழி
நடையிற் படர்மென் கொடிமௌவ லனையிற் றிகழுஞ் சினைக்காஞ்சி.

(இ - ள்) வெளிப்படை. மடையில் செங்குவளைகளும், செழிப்புடைய நீர் சூழ்ந்த வயலின் செந்நெற் கதிர்க்கற்றைகளும் பக்கத்தில் வண்டுகள் மொய்க்கும் கமுகிற் பூத்த நீர்ச்செழிப்பினால் மிகுந்த கமுகம் பூம்பாளைகளும், இலைகள் மிகுந்த தாமரைகளின் நீண்ட பூக்களில் துயிலும் கயல் மீன்களும், நடக்கும் வழியில் (மேற் பந்தர் போலப்) படர்ந்த மெல்லிய முல்லைக்கொடிகளும், அரும்புகளால் விளங்கும் கிளைகளையுடைய காஞ்சி மரங்களும் (உள்ளன).

(வி - ரை) அங்கங்கும் உள்ளன என்ற பயனிலை வருவிக்க.

மடையில் கழுநீரும் - வயலில் சாலியும் - புடையில் கமுகுப் பூம்பாளையும் - அலரில் கயல்களும் - நடையில் கொடிமௌவலும் கிளைக்காஞ்சியும், உள்ளன என்று கூட்டி உரைத்துக்கொள்க.

செழுநீர் - செங்குவளை என்பாருமுண்டு. கழுநீர் - செங்குவளை

செழுநீர் சூழ் என்றதனால் நீரின் செழிப்பினால் சாலிக்கதிர்கள் கற்றையாக வளர்தற்குக் காரணங்காட்டியபடி. கதிர்க்கற்றை - நெற்கதிரின் நீளமும் நெல்மணிகளின் செறிவும் குறித்ததுடன் அவ்வகையான கதிர்கள் ஒரு தூற்றில் காண உள்ளதும் குறித்தது.

புடையில் - கமுகு - பூம்பாளை - என்க. நெல்வயலின் ஓரங்களிற் கமுகுப் பயிர் உள்ளது பற்றி முன்னுரைத்தவை பார்க்க. சுரும்புமிடை பூம்பாளை எனவும், கமுகுப் பூம்பாளை எனவும் கூட்டுக. கமுகம்பாளையிற் சுரும்பு மொய்த்தல் அதில் உள்ள மலர்களின் மணமுடைய தேனை நுகர்தற்பொருட்டாம்.

அடையிற் பயிலும் தாமரை நீள் அலர் - தாமரைக் கொடிகள் இலைப்பரப்பு மிகுதியும் உடையன; நீரினுட் கொடிகள் நெருங்கிச் சுற்றியதனால் இலைகளும் நெருங்கியுள்ளன. அவற்றின் பூக்கள் ஏனை யிலைக்கூட்டத்தின் மேல் உயரக்கிளம்பிய ஒவ்வோர் நீண்ட தண்டில் அலர்வன என்றதன்மைகள் குறிக்கப்பட்டன காண்க.

தாமரை அலரில் துயிலும் கயல்கள் - கயல் மீன்களின் ஊற்றுச்சுவை நுகர்ச்சியின்ப உணர்வுடைமை கூறியபடியாம். 926-ல் உரைத்தவை இங்குக் கருதத்தக்கன.

வழி நடையில் படர்கொடி மௌவல் - கிளைக்காஞ்சி - இவை நடை வழியில் நிழல் செய்யும் பொருட்டு வளர்க்கப்படுவன. மௌவல் கொடி படர்ந்துள்ள இலைச் செறிவினால் வழி நடப்போர்க்கு இளைப்பில்லாமற் செய்ய நிழலும், பூக்களால் வழி நடப்போர்க்குக் களைப்பு நீக்க நன்மணமும் தருவன. அவ்வாறே நீண்ட கிளைகளையுடைய காஞ்சி மரமும் இலைகளால் நிழலும் நனைகளால் மணமும் தருவன என்பது குறிப்பு. 1212-ல் "அணிநீண் மறுகு" என்றவிடத் துரைத்தவை பார்க்க. காஞ்சி - நீர்வளமுள்ள இடங்களிற் செழித்து வளரும் ஓர் வகை மரம். காஞ்சியைச் சாலை மரங்களாக வைத்து வளர்த்தனர் என்பதாம். 7

1213. சென்னி, யபயன், குலோத்துங்கச் சோழன், றில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர் போரே, றென்றும் புவிகாக்கு
மன்னர் பெருமா, னநபாயன் வருந்தொன் மரபின் முடிசூட்டுந்
தன்மை நிலவு பதியைந்தி னொன்றாய் விளங்குந் தகைத்தவ்வூர். அ

(இ - ள்) வெளிப்படை. அவ்வூரானது, சோழர் மரபில் அபயன் என்றும், குலோத்துங்கச் சோழர் என்றும், பெயருடையவராய்த் தில்லைத் திருவெல்லையினைப் பொன்மயமாக வேய்ந்த சோழர் போரேறாய் நிகழ்ந்த அநபாயச் சோழர் அவதரித்த பழைமையாகிய மரபில் முடிசூட்டிக்கொள்ளும் தன்மையில் நீடிவருகின்ற ஐந்து பதிகளில் ஒன்றாகி விளங்கும் பண்பினையுடையது.

(வி - ரை) இப்புராணம் பாடுவித்த நன்றியின்பொருட்டு அநபாயரது அன்பின் திறத்தை ஆசிரியர் இப்புராணத்தினுள் வைத்துப் பாராட்டிய பதினொரு இடங்களுள் இது சிறந்த இடமாகும்.

**அபயன் - குலோத்துங்கன்** என்ற இரண்டு பெயர்களும் அநபாயருக்கு வழங்கப் பட்டனவென்ற செய்தியும், அவர் தில்லைத் திருவெல்லையினைப் பொன்மயமாக்கினர் என்ற செய்தியும் அவரது சரித ஆராய்ச்சிக்கும், குலோத்துங்கன் என்று வழங் கப்படும் பலருள்ளும் அவர் இன்னார் என்று குறிப்பிடுதற்கும் பெருந்துணை செய் வன. "சேய வன்றிருப் பேரம் பலஞ்செய்ய, தூய பொன்னணி சோழன்", (8) என்றதும் காண்க. அநபாயரின் பெருமைகள் பலவற்றுள்ளும் அவரது திருநீற்று அன்பின் திறமும், தில்லை எல்லை பொன்மயமாக்கிய தொண்டின் திறமுமே ஆசிரியரது திருவுள்ளத்தைக் கவர்ந்தன ; ஆதலின் அவர் அவற்றைப் பல இடத்தும் பாராட்டுவா ராயினர். **அன்பின்றிறம்பற்றி** அநபாயருக்குத் **திருநீற்றுச்சோழர்** எனப்பெயர் வழங்கலாயிற் றென்பதும் அறியப்படுகின்றது. "பொருவருபே ரம்பலமுங் கோபுர மும் ஆலயமும் பொன்வேய்ந் தண்மைச், சுருதியுடன் சைவநெறி தழைத்தோங்கத் **திருநீற்றுச் சோழ** னென்று, குருமணிமா முடிபுனைந்த குலோத்துங்க வளவன்" என்று சிதம்பர புராணமும் ; "துன்றுபுகழ்த் **திருநீற்றுச் சோழ**னென முடிசூடி, மன்றினடந் தொழுதெல்லை **வளர்கனக மயமாக்கி** வென்றிபுனை யநபாயன்" என்று கோயிற் புராணமும் போற்றியன. **அபயன்** என்பது பல சோழரும் பூண்ட பெயர்.

**குலோத்துங்கசோழன்** என்பதும் பல சோழர்கள் பூண்ட பெயராகும். ஆனால் **அநபாயர்** என்பதே இவ்வரசர் சிறப்பாய்ப் பூண்டுகொண்ட பெயராதலின் அதனை இறுதியில் வைத்துக் காட்டினதுடன் வேறு பல இடத்திலும் அப்பெயராலேயே தம் அரசரைக் குறிப்பாராயினர் ஆசிரியர். இவர் குலோத்துங்கர் இரண்டாவதவர் என்பது இந்நாள் பல ஆராய்ச்சியாளர் கண்ட முடிவாகும். சில காலத்துக்கு முன் முதலாங் குலோத்துங்கரே இவர் என்ற கொள்கை நிலவி வந்தது. இவ்விரண்டு கொள்கையுமன்றிக் கங்கைகொண்ட சோழரே இவர் என்றதொரு புதிய கொள்கையு முண்டு. இவைபற்றி எனது "சேக்கிழார்" 12 முதல் 23 வரை பக்கங்களில் விரி வாகக் கூறியுள்ளவை காண்க. இவ்வாறன்றி இப்பாட்டில் **அபயன்** (1), அபயகுல சோழர் **குலோத்துங்கர்** (2), **அநபாயர்** (3) என மூன்று சோழர்களைக் குறித்ததாக உரைத்தனர் முன் உரைகாரர்கள்.

**எல்லை பொன்னின் மயமாக்கிய** என்றதனால் தில்லையின் எல்லைக்குள் பல இடங் கள் இவர் பொன்மயமாக்கினர் என்பது பெறப்படும். (8) பார்க்க.

**என்றும் புவிகாக்கும்** என்றது பேரன்பராகிய தமது அரசர் பெருமானது ஆட்சி நீடுவாழ்வதாக என்று ஆசிபுரிந்தபடியாம். இன்றும் உலகம் சைவத்திறத்தின் வாழ்ந்து நிற்பதாமென்னில் அது அநபாயரது ஆட்சியின் வலிமையா லாவதாம் என்பது மிகையாகாது. ஆதலின **என்றும் புவிகாக்கும்** என்றது என்றும் திரியாத உண்மைத் திருவாக்காகும் என்க.

**அநபாயன் வரும் தொன்மரபு** - சோழ அரசர் மரபு. **தொன்மை** - வழிவழி வரும் பழமை. **அநபாயர் வரும் மரபு** என்றது அநபாயரது மரபின் முந்தையோரை.

**முடிசூட்டும் தன்மை நிலவுபதி ஐந்து** - சோழ அரசர் தமது நாட்டில் ஐந்து பதிகளில் முடிசூட்டிக் கொள்வது வழக்கு. அவை காவிரிப்பூம்பட்டினம், திருவாரூர், உறையூர், சேய்ஞலூர், கருவூர் என்பன.

இப்பாட்டினால் அரசர் மரபு வழக்குப்பற்றி நகரச்சிறப்புக் கூறினர்.

**நீடும் தகைத்து**—என்பதும் பாடம். 8

*1214. பண்ணின் பயனா நல்லிசையும் பாலின் பயனா மின்சுவையுங்
கண்ணின் பயனும் பெருகொளியுங் கருத்தின் பயனா மெழுத்தஞ்சும்
விண்ணின்பயனும் பொழிமழையும் வேதப்பயனுஞ்சைவமும்போன்
மண்ணின் பயனா மப்பதியின் வளத்தின்பெருமைவரம்புடைத்தோ.

(இ - ள்) வெளிப்படை. பண்ணிற்கு பயனாகும் நல்ல இசையினையும், பாலுக்குப் பயனாகும் இனிய சுவையினையும், கண் பெற்றதற்குப் பயனாகும் பெருகும் ஒளியினையும், கருத்திற்கு உரிய பயனாகும் திரு அஞ்செழுத்தினையும், விண்ணினுக்குப் பயனாகும் பொழியும் மழையினையும், வேதத்திற்குப் பயனாகும் சைவத்தினையும் போல மண்ணிற்குப் பயனாகும் அந்தப் பதியினது வளத்தினது பெருமை அளவுடையதாகுமோ? (ஆகாது).

(வி - ரை) உவமை முகத்தால் பல பெரிய உண்மைகளை இத்திருப்பாட்டினால் ஆசிரியர், உலகம் பயன்பெறப் போதித்துப் புகட்டுதல் காணத்தக்கது.

பண்ணின் பயன் ஆம் நல்இசை - பண் - பாலைப்பண் முதலாயின. இது தமிழுக்கே சிறப்பாக உரிய இசையமைதி. "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்" (குருகாவூர்-6) என்ற ஆளுடைய நம்பிகளது தேவார முதலியவை காண்க. பண்ணின் பயனும் நல்இசை என்றது இசை கூடினாலன்றி வெறும் பண் பயன்தராதென்பதாம். இசை என்பது இறைவனது புகழ்களை இசைக்கும் பொருள்கூடிய தொடர்பு. திருஇசைப்பா என்றது காண்க. இசை அல்லது இறைவன் புகழ்ப்பொருளுடன் கூடாதவழிப் பண் பாடுதல் வெறும் செவிக்கு ஓசை இன்பமாயொழியும் என்பதும், அது மனத்தினுட் சென்று மனத்தையும் உயிரையும் உருக்கி இறைவன் திருவடிச் சார்பு பெறுவிக்காதென்பதும் குறிப்பித்தவாறு. "பண்ணொன்ற இசைபாடு மடியார்கள் குடியாக, மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன்" (சீகாமரம் - புள்ளிருக்கு வேளூர் 8.) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமும், "பண்பொருந்த இசைபாடும்" (பழந்தக்க-பழனம் 5.) என்ற அப்பர் சுவாமிகள் தேவாரமும் காண்க. இச்சிறப்பினையே "பண்ணினேர்மொழி யாளுமை பங்கரோ" (திருமறைக்காடு - குறுந்தொகை) என்ற தேவாரமும், "பண்ணினேர்மொழி யாளென் றெடுத்துப் பாடப் பயன்றுய்ப்பான்" என்ற மாபுராணமும் விரித்துக் கூறுவனவாம். இறைவன் புகழோடு கூடாத வெறும் சங்கீதங்களில் ஈடுபட்டுப் பணமுந் தந்து போதும் போக்கும் மாக்கள் இதனை உய்த்துணர்ந்துய்வார்களாக.

பாலின் பயனும் இன்சுவை - "அன்னைமுலைத் தீம்பாலி னரியசுவைத் திஃது" (மண்சும-பட-23) என்ற திருவிளையாடற்புராணங் காண்க. பாலினை ஆட்டி அதன் பயனாகப்பெற்ற இனிய சுவையாகிய இச்சரித விளைவினைக் குறிப்பாலுணர்த்துவதும் காண்க.

கண்ணின் பயனும் பெருகு ஒளியும் - ஈண்டுக் கண் என்றது கண்ணுறுப்பினை. காட்டும் ஒளியாகிய ஞாயிறு முதலிய பேரொளிப் பொருள்களும் கண்ணுக்குப் பயனாகா; காணுமொளியாகிய கண்ணொளியே கண்ணுக்குப் பயனும். "ஒளியு மிருளு முலகு மலர்கட், டெளிவி லெனிலென் செய" என்ற திருவருட்பயனும் ஈண்டுக் கருதத்தக்கது. பெருகொளி என்றதனையே "அலர்கட் டெளிவு" என்று இத்திருவருட்பயன் குறள் வெண்பாவிற் கூறப்பட்டது. பெருகு ஒளி என்றது கண்ணுக்குப் சிறப்பாகிய, சேய்மையிலும் சென்று அறியும் தன்மையினைக் குறிப்பதுமாம்.

கருத்தின் பயனும் எழுத்து அஞ்சும் - திருவைந்தெழுத்தினைக் கருதுவதற்கே கருத்து மக்களுக்குத் தரப்பட்டிருக்கின்றது என்பது உண்மைநூற் றுணிபு. "நினைக்க மடநெஞ்சம்" (தேவாரம்), "சிந்தனை செய்ய மனமமைத்தேன்" (11-ம் திருமுறை -

பொன்வண் - 92) என்பனவாதி திருவாக்குக்களால், சிவனை நினைத்தலே மனம் பெற்ற தன் பயனும் ; அல்லாதவழி கருத்துப் பெற்ற பயன் இல்லையாகும் என்பது. ஐந்தெழுத்து - சிவன்றிருநாமம். "ஆலைப் படுகரும்பின் சாறு போல அண்ணிக்கு மைந்தெழுத்தி னுமைத் தான்காண்" (திருத்தாண்டகம் - வீழி - 2) முதலியவை காண்க. ஐந்தெழுத்தைக் கருதுவதாவது : அவற்றின் உள்ளீடாய் அறிவிக்கப்படும், சிவன் உயிர் களுக்குச் செய்யும் பெருங்கருணையை எண்ணி உருகுதல். "விதி எண்ணு மஞ் செழுத்தே" என்பது ஞானசாத்திரம்.

விண்ணின் பயனும் பொழி மழையும் - ஆகாயம் ஏனை எல்லாவற்றுக்கும் இடம் கொடுக்கும் என்ப. அவ்வாறு விண் தனது தொழிலைச் செய்வதனில் மழைக்கு இடங் கொடுத்த அளவானே அது பயனுடைத்தாகும் என்பது. இக்கருத்துப் பற்றியே "வானின் றுலகம் வழங்கி வருதலால்", "விசும்பிற் றுளிவீழி னல்லால்" என்ற திருக் குறள்களும் போந்தன. "வான் சிறப்பு" என்ற கருத்துமிது.

வேதப்பயனும் சைவம் - வேதத்தின் முடிந்த பொருள் சைவம்.சைவம் சிவாகமப் பொருள் குறித்தது. "இனி அதர்வசிகை முதலிய உபநிடதங்களிற் கூறும் பொரு ளுஞ் சிவாகமப் பொருளை நோக்கும் வழிச், சூத்திரமும் பாடியமும்போலத் தூலா ருந்ததி முறைமையாமாகலின், வேதம் பொது நூலெனவும், ஆகமஞ் சிறப்புநூலென வுங் கூறப்பட்டன. "வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றும்" (சிவப் - பாயி - 7) என்றதூஉம் இம்முறைமை தெரிந்து கோடற்கென்க. வேதப் பயனுஞ் சைவமும்போல் என்பதும் அது" என்று எமது மாதவச் சிவஞான யோகிகள் சிவஞானமாபாடியச் சிறப்புப் பாயிரத்தினுள் இதனை விளக்கியருளியது காண்க. 1033 - 1037-ல் உரைத்தவையும் பார்க்க.

மண்ணின் பயனும் அப்பதி - மண் - இந்நிலவுலகம் ; மண்ணுலாகிய உலகம். பிருதுவியண்டம் என்பர் வடவர். இந்தப் பதியில்லையாயின் மண்ணுலகம் வேறெல்லா மிருந்தும் பயனற்றதாகும் ; இப்பதியே மண்ணுலகத்துக்குப் பயன் தருவது என்ப தாம். போக நிலங்களாகிய ஏனை மேல் கீழ் உலகங்கள் போலல்லாது, இந்நிலவுலக மாகிய புவனியானது உயிர்கள் இங்குவந்து பிறந்து சிவனைப் பூசித்து முத்தியடைதற் கேதுவாகிய வுலகமாம். "இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற வாறு" (திருப்பள்ளி யெழுச்சி - 10) என்ற திருவாசக முதலியவை காண்க. அவ்வாறு வந்து பிறந்து சிவ பூசை செய்யும் உயிர்க்கு அந்தப் பூசையின் பயனை உதவும் சண்டீச நாயனாரைப் பெறும் பேறுடையது இப்பதி ; ஆதலின் இதனை மண்ணின் பயனும் பதி என்றார்.

உலகத்துயிர்க்கெல்லா மிதுவேபொருள் என்று சிவபூசை செய்து வழிகாட்டி முருகக்கடவுள் இப்பதியை நிறுவினர் என்பதனைச் "சேர்ந்தனளித்த" (1206) என்று முதலிற் கூறிச், அச்சிவபூசைப் பயனை அளிக்கும் தனமையை இங்குக் கூறி, நகரச் சிறப்பினை வளத்தின் பெருமை வரம்புடைத்தோ ? என முடிக்கு மியைபு காண்க.

பண்ணினுக்குப் பயன் என்பனவாதியாக எல்லா இடத்தும் நான்கனுருபுகள் விரித்துக்கொள்க.

போல் - நல் இசை - இன்சுவை - பெருகொளி - அஞ்செழுத்து - பொழிமழை - சைவம் என்ற ஆறனையும்போல அப்பதி உற்றது என்பதாம். பயனுதல் உவமத்துக் குப் பொதுத்தன்மை. பயன்பற்றி வந்த உவமம். அப்பதியாகிய ஒரு உவமேயப் பொருளுக்கு ஆறு உவமானப் பொருள்கள் தந்தது அப்பொருளின் சிறபுக் குறித் தற்கு. இது பல பொருளுவமை என்னும் அணியின் பாற்படும். அன்றியும் பண்ணின் பயன் இசை-கருத்தின் பயன் அஞ்செழுத்து-வேதப்பயன் சைவம் என்ற உண்மைகளை வற்புறுத்திப் புகட்டுதலும் ஆசிரியர் கருத்தென்க. இப்புராண முழுமையும் அறுசீர்க்கழி நெடில் விருத்தமாக யாத்து உரைத்ததும் ஒரு சிறப்புப் பற்றியதென்க.

இனிப், பண்பொருந்த இசை பாடியும், இறைவரைப் பாலின் திருமஞ்சனமாட்டியும், கண்ணாரக் கண்டும், அவனது திருவைந்தெழுத்தை எண்ணார எண்ணியும், விண்ணின் வீழும் மழையானிறைந்த குளிர்புனல்கொண்டு அருச்சித்தும், வேதாகம நூல் வழிச் சிவபூசை செய்தால் அதன் பயனை நிலவுலகத்தாருக்கு அந்தத் தலம் தருகின்ற பெருமையுடையதாம் என்ற தொடர்பாகிய உள்ளுறைப் பொருளும் படுவது காண்க.

**வரம்புடைத்தோ ?** ஓகாரம் எதிர்மறை. 9

1215. பெருமை பிறங்கு மப்பதியின் மறையோர் தம்முட் பெருமனைவாழ்
தரும நிலவு காசிபகோத் திரத்துத் தலைமை சான்மரபி
லருமை மணியு மளித்ததுவே நஞ்சு மளிக்கு மரவுபோ
லிருமை வினைக்கு மொருவடிவா மெச்ச தத்த னுளானான். கo

(இ - ள்) வெளிப்படை. பெருமையால் விளங்கும் அந்தப் பதியில் மறையவர்களுள்ளே சிறந்த இல்வாழ்க்கைக்குரிய அறங்களில் நிலைத்த காசிப கோத்திரத்தில், தலைமையாகிய குடியில், அருமையாகிய மணியையும் கொடுத்து அதுவே நஞ்சினையும் கொடுக்கும் பாம்பினைப்போல, நல்வினை தீவினை என்ற இருவினைகளையும் செய்தற்கு ஒரு வடிவாய் வந்தவனாகிய எச்சதத்தன் என்பவன் ஒருவன் உள்ளவனானான்.

(வி - ரை) **மறையோர்** - வேதியர் என்ற பெரும்பிரிவு.

**காசிப கோத்திரம்** - மறையோர்களுள் நிலவும் கோத்திரங்கள் என்று சொல்லும் பல உட்பிரிவுகளுள் ஒன்று. இது காசிபர் என்ற இருடியிடத்திலிருந்து தொடர்புகொண்டு வருவதுபோலும். **கோத்திரத்துத் தலைமைசால் மரபு** - கோத்திரம் என்ற உட்பிரிவினுள் வரும் சிறு பிரிவு. பிரவரம் என்று வழங்குவர்.

**அருமை...அரவுபோல்** - அரவு மணியினையும் நஞ்சினையும் தருவது. எச்சதத்தன் விசாரசருமர் என்னும் நற்புதல்வரைப் பெறுதலாகிய நல்வினையும் பெற்றான் ; அவர் செய்த சிவபூசைக்கு இடையூறு செய்தலாகிய சிவாபராதஞ் செய்யும் தீவினையினையும் பெற்றான் ; ஆதலால் **இருமைவினைக்கு மொருவடிவாம்** என்றார். பயன்பற்றி வந்த உவமம். நன்மை தீமை என்ற மாறுபட்ட செயல்களிரண்டும் ஒரு சேர ஒரு பொருளிடத்தே காண உள்ளதொரு உவமப்பொருள் இந்த இடத்துக் கேற்பக் கொண்டு உரைத்தது ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகளது தெய்வக்கவி மாண்புகளுள் ஒன்று.

**எச்சதத்தன்** - எச்சம் - யக்ஞம் என்ற வடமொழி தமிழில் எச்சம் என வந்தது. "தக்கனையு மெச்சனையும் தலையறுத்து" (சாழல் - 5) என்ற திருவாசகமும், "தக்கனது பெருவேள்விச் சந்திரனிந் திரனெச்ச னருக்க னங்கி, மிக்கவிதா தாவினொடும் விதிவழியே தண்டித்த விமலர்" (மேகரா - முதுகுன்றம் - 3) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமும் பிறவும் காண்க. வேள்வி செய்யும் மரபில் வந்தானாதலால் இப்பெயரால் வழங்கப்பட்டனன். **தத்தன்** - முன்னாளில் மறையோர் பூண்ட சிறப்புப் பெயர்களுள் ஒன்று.

**பெருமனைவாழ் தருமம் நிலவு** - சிறந்த இல்லறத்தில் நிலவுகின்ற. இல்லறத்தின் பெருமையாவது "இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றி னின்ற துணை" யாவதும், "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கும்" துணையாவதும், "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங், கைம்புலத்தா றோம்"புதலும் ஆம். தம் பொருட்டன்றிப் பிறர்க்குதவி செய்தற்காகவே மனையறமாகிய இல்வாழ்க்கை உளதாகுமென்று வகுத்தனர் பெரியோர்.

1216. மற்றை மறையோன் றிருமனைவி வாய்ந்த மரபின் வந்துதித்தாள் ;
சுற்றம் விரும்பு மில்வாழ்க்கைத் தொழிலா ளுலகிற் றுணைப்புதல்வற்
பெற்று விளங்குந் தவஞ்செய்தாள் ; பெறும்பே றெல்லைப் பயன்பெறு
பற்றை யெறியும் பற்றுவரச் சார்பா யுள்ள பவித்திரையாம். [வாள் ;

(இ - ள்) வெளிப்படை. அந்த மறையவனுடைய திருமனைவியார், அவன் மணஞ்செய்தற் கியைந்த மரபில் வந்து பிறந்தவர் ; சுற்றந்தழுவுதலை விரும்புகின்ற தன்மையில் இல்வாழ்க்கை நடத்தும் தொழிலுடையவர் ; உலகில் துணையாக உள்ள புதல்வர்ப்பேற்றைப் பெற்று அதனால் விளங்கும் தவத்தை முன் செய்தவர் ; யாவரும் புதல்வராற் பெறுகின்ற பேறுகளுக்கெல்லாம் எல்லையாயுள்ள பயனைப் பெறுபவர் ; உலகப்பற்றுக்களை யெல்லாம் அறுத்தற்குக் கருவியாகிய சிவநேயம் (சிவன்பாற் பற்று) வருதற்குச் சார்பான குணத்தினையுடைய பவித்திரை என்பவர்.

(வி - ரை) மற்றை - முன் சொன்ன என்ற சுட்டுப் பொருளில் வந்தது. அம் மறையவன் இருமை வினைக்கும் ஒரு வடிவாயினமை போலன்றி மனைவியார் ஒரு நிலை நின்று சிவனடிப்பற்று வருதற்குச் சார்பாகவே உள்ளவர் என்ற பொருள் தந்து வினைமாற்றுப் பொருட்குறிப்பும்பட நின்றது. திருமனைவி என்ற குறிப்பும் அது.

வாய்த்தல் - வாய்ப்பு - "இருவர் சுட்டிய பல்வேறு தொல்குடி" (திருமுருகு) என்றபடி குடி மரபு முதலிய பிறப்பு வகையாலும், குணம் முதலிய சிறப்பு வகையாலும் ஆவது. இது பெண்ணுக்குப், பிறந்த இடத்துச் சிறப்பு.

சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத் தொழிலாள் - இல்வாழ்க்கையிற் சுற்றம் விரும்பிப் பேணுதல் மனையாளது பெருங்கடமையும் தொழிலுமாமாதலின் அதனை எடுத்துக் கூறினார். இது பெண்ணுக்குப், புகுந்த இடத்தின் சிறப்பு.

துணைப்புதல்வர் பெற்று விளங்கும் தவம் உடையாள் - நல்ல புதல்வரைப் பெறுதல் இல்லறத்தில் வாழும் மனைவியரின் தவப்பயன். "மங்கல மென்ப மனைமாட்சி மற்றத, னன்கல நன்மக்கட் பேறு" என்பது திருக்குறள். நன்மக்கட் பேறில்லா தாளை மலடி என்றும் இல்வாழ்க்கையின் பயனை யடையாதவள் என்றும் கூறுவர். துணைப்புதல்வன் - நல்ல புதல்வன். தன் பெற்றோர்க்கு இம்மையில் நலம்பெறத் துணை செய்தலோடு தனது நன்மையால் மறுமையில் அவர்கள் நரகம் புகாமலும் துணைசெய்வான். ஆனால் இங்கு இந்நாயனாராகிய புதல்வனார் தமது பெற்றோர்க்கு இம்மை மறுமைகளின் நன்மைகளுடன் மேலாகிய வீட்டுலகமும் பெறத் துணை செய்தாராதலின் துணைப்புதல்வன் என்றும், பெற்று விளங்கும் தவம் என்றும் கூறினார்.

பெறும் பேறு எல்லைப் பயன் - உலகில் புதல்வரைப் பெற்றார் யாவராலும் அடையப்பெறும் எல்லாப் பேறுகளிலும் சிறந்த பயனாக முடிவில் நிற்கும் பயன்.

தவஞ் செய்தாள் என்றது இவரைப் புதல்வராகப் பெறுதற்குச் செய்த முன்னைத்தவங் குறித்தது. பயன் பெறுவாள் - அவரைப் பெற்றதனால் இனி அடைய நிற்கும் சிறந்த பயன். ஆதலின் முன்னதனை இறந்தகால வினைமுற்றாலும், பின்னதனை எதிர்கால வினைமுற்றாலும் கூறினார்.

பற்றை எறியும் பற்று - "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு" என்ற திருக்குறள் இங்கு நினைவுகூர்தற்பாலது. பற்றை என்றதிற் கூறிய பற்று என்றது ஆணவமலத்தை. இது உயிரை அநாதியே பற்றி நின்று மீட்சியின்றித் துன்புறுத்தலால் இப்பெயர்பெற்றது. எறிதல் என்றது அதனை வலியிலதாகச் செய்தல். பின்னர்ப் பற்று என்றது இறைவன்பாற் பற்று ; சிவனிடத்து வைத்த அன்பு.

பற்றுவரச் சார்பாயுள்ள என்றது சிவன்பாலன்பு வருதற்குத் துணையாயுள்ள என்றதாம். தக்கபடி இல்லறம் நடத்தியதனால் "துணைப்புதல்வற் பெற்று"த் தனது கணவனுக்கு உறுதிபயக்கும்வகை சார்பாய் நின்றாள்; தனக்கும் அவ்வகைப் பற்று வருதற்குச் சார்பாகிய ஒழுக்கத்தில் நின்றாள்; இனித், தான்பெற்ற புதல்வர்ப் பேற்றினால் பிற உயிர்களுக்கும் பற்றை எறியும் பற்றுவரச் சார்பாயினாள் என்ற பல குறிப்புக்களும் கண்டுகொள்க. உள்ள - சிவனது சார்பினால் வரும் பயன் என்றும் நிலைத்துள்ளது. முன்னர்ச் செய்தாள் என்றும், பின்னர்ப் பெறுவாள் என்றும் இறந்தகால எதிர்காலங்களாற் கூறிய ஆசிரியர் இங்கு உள்ள என்று முக்காலத்துக்குமுரிய குறிப்புவினைப் பெயரெச்சத்தாற் கூறியதும் குறிக்கொள்க. இவள் சார்பினால் உயிர்கள் என்ஞான்றும் பற்றை எறியும் பற்று வரப்பெறுதல் நிலைத்துள்ளதென்பதாம். சார்பாயுள்ள பவித்திரை என்ற குறிப்புமது.

பவித்திரை - தூய்மையுடையவள். பவித்திரம் - தூய்மை. "பழுதுபுகுந் தனுதீரப் பவித்திரமாஞ் செயல்" (788) என்றது காண்க. பெயர்ப்பொருள் கூறுபவராகி உயிர்களைத் தூயனவாக்கும் தன்மையுடன் நிகழ்பவள் என்ற குறிப்புப்படக் கூறுதல் காண்க.

பவித்திரையாள்—என்பதும் பாடம்.　　11

1217. நன்றி புரியு மவர்தம்பா, னன்மை மறையின் றுறைவிளங்க,
என்று மறையோர் குலம்பெருக, வேழு புவனங் களுமுய்ய,
மன்றி னடஞ்செய் பவர்சைவ வாய்மை வளர, மாதவத்தோர்
வென்றி விளங்க, வந்துதயஞ் செய்தார் விசார சருமனார்.　　கஉ

(இ - ள்) வெளிப்படை. நன்மை செய்யும் அவர்களிடமாக, நன்மை தரும் மறைகளின் துறைகள் விளங்கவும், என்றும் மறையோர்களின் குலம் பெருகவும், எழுலகங்களும் உய்யவும், திருவம்பலத்தில் திருக்கூத்தியற்றும் பெருமானுடைய சைவ உண்மைத்திறம் வளரவும், மாதவத்தோர்களின் வெற்றி விளங்கவும், விசார சருமனார் வந்து திருஅவதாரஞ் செய்தருளினார்.

(வி - ரை) நன்றி - இங்கே நன்மையாவது இல்லற நல்லொழுக்கம்.

நன்மை மறை - இந்நன்மையாவது வேதங்களிற் கூறப்பட்ட விதி விலக்குகளால் உலகம் நன்னெறியில் நிறுத்தப்படுதல்.

மறையின் துறை விளங்க என்றது விசாரசருமனாரின் சரிதத்தால் வேத நீதிகள் விளக்கமுறுதல். அவையாவன - பிரமசரிய நிலை, உபநயனம், வேதம்பயிலுதல், சமிதையும் எரியும்கொண்டு சாமங் கணித்தல், பசுக்காத்தல் முதலியவையாம்.

என்றும் மறையோர் குலம்பெருக என்றது மறையோர் குலத்திலே விசாரசருமனார் திருவவதாரம் செய்து பசுக்காத்துச் சிவபூசை செய்து சிவன் மகனாராகப் பெற்ற சரித நிகழ்ச்சியினை அறிந்து, அதனைப் பின்பற்றிச், சிவனை வழிபட்டு, அந்தக் குலத்தாராகிய மறையோர் வளர்ந்து வருதல் குறித்தது. "கானவர் குலம் விளங்க" (662) என்று கண்ணப்ப நாயனார் திருவவதாரத்திலும், "அந்தண ராகுதி பெருக" (திருஞான - புரா. 23) என்று ஆளுடைய பிள்ளையார் திருவவதாரத்திலும் கூறியனவும், இவ்வாறு வருவன பிறவும் காண்க.

ஏழுபுவனங்களும் உய்ய - சிவபூசைசெய்து அதன் பயனாலன்றி உயிர்களுக்கு உய்தி கிடையாது என்பது ஞானநூன் முடிபு. "சைவத் திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" என்பது (8. 11) சிவஞானசித்தியார். இந்நாயனாரது திருவவதாரத்தாற் புவனம் உய்தலாவது இவர்

காட்டிய வழியாற் சிவபூசை செய்து அதன் பயனை இவர்பாற் பெற்று உய்தல். இவ்வாறே "ஏழுலகுங் குளிர்தூங்க" (திருஞான - புரா. 23) என்று கூறுவதும் காண்க.

**சைவ வாய்மை வளர்தலாவது** சைவத்திற் சொல்லப்பட்ட சிவபூசையே மக்களுக்கு உறுதி தருவதாம் என்ற முடிந்த உண்மை நிலைபெற்றுப் பரவுதல்.

**மாதவத்தோர் வென்றி விளங்க** என்றது சிவபூசை செய்வோரின் வெற்றி விளக்க முறுதல். **மாதவம்** - சிவபூசை, தவங்களுள் எல்லாம் தலைசிறந்தது அதுவேயாகலின். "மாதவத்தோர் செயல்வாய்ப்ப" (திருஞான - புரா. 23) என்றதும் காண்க. இவ் வெற்றியாவது பூசையில் வரும் இடையூறுகள் எவையேயாயினும் அவை முன்னிற்காதொழிதல். "வானந் துளங்கிலென்...ஒருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே", "அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை" என்றற்றொடக்கத்துத் திருவாக்குக்களும் சரிதங்களும் நினைவு கூர்க. இந்நாயனார் சரிதத்தினுள், உலகர் செய்யிற் பெரும்பாதகமாகும் செயலாகிய, மறையவனும் - தந்தையும் - ஆகியவனைக்கொன்ற செயலும், நன்மையாகி முடிந்து முத்திக் கேதுவாகிய வெற்றி காண்க.

**உதயம் செய்தார்** - அவதரித்தார். ஞாயிறு - மதி - முதலிய ஒளிப்பொருள்கள் உதயமாயின் உலகத்துப் புற இருள் நீங்குதல் பயனாவதுபோல, இந்நாயனார் உதயமாயினமையால் ஆணவ இருள் நீங்கி உயிர்கள் உய்தி பெறுதலாகிய பெரும்பயனாகுவது என்பது குறிப்பு.

**விசார சருமனார்** - இஃது இவரது பிள்ளைத் திருநாமம். **சருமர்**-மறையவர்களுக்குரிய மரபுப்பெயர். **விசாரம்** - ஆத்துமஞான விசாரணை. முன்னைநிலையிலே, ஆன்ம விசாரணை முற்றிய உணர்ச்சியுடன் வந்து அவதரித்த சாமுசித்தராவர் என்பது சரிதத்தாலறியப்படும். "கொளுத்து வதன்முன் கொண்டமைந்து...அலகில் கலையின் பொருட்கெல்லை யாடுங் கழலே யெனத்தெளிந்த, செலவு மிகுந்த சிந்தை" (1222) என்பதும், மேல்வரும் பாட்டிற் கூறும் பொருளும் காண்க. பிரளயாகலர் விஞ்ஞானகலர்களுக்குப்போல அருள்புரியத் தக்கவர் சாமுசித்தர். "பண்டைநற் றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்திபண்ணும், தொண்டர்" என்ற சித்தியாரும் உரையும் பார்க்க. விசாரணையாவது - உயிர்களின் இருப்பையும், அவற்றைக்கட்டிய பாசத்தின் இயல்பையும், அந்த மலக்கட்டினை நீக்கி இன்பந்தரும் இறைவனையும் விசாரித்து அறிந்து, பாச நீக்கத்தின் பொருட்டுச் சைவ சாதனங்களின் வழி நிற்றல். 12

1218. ஐந்து வருட மவர்க்கணைய வங்க மாறு முடனிறைந்த
சந்த மறைக ளுட்படமுன் றலைவர் மொழிந்த வாகமங்கண்
முந்தை யறிவின் றொடர்ச்சியினான் முகைத்த மலரின் வாசம்போற்
சிந்தை மலர வுடன்மலருஞ் செவ்வி யுணர்வு சிறந்ததால். கங

**(இ - ள்)** வெளிப்படை. அவருக்கு ஐந்து ஆண்டுகள் நிரம்ப, ஆறங்கங்களுடன் கூடியனவாகிச் சந்தசுகளுடைய மறைகளுட்படத் தலைவராகிய சிவபெருமான் முன்னே மொழிந்தருளிய சிவாகமங்களிலே முன்னைய அறிவினதுதொடர்ச்சியினாலே, அரும்பாகி முதிரும் பூவில் வெளித்தோன்றும் மணம்போலச், சிந்தை மலர அதன் உடனே மலர்கின்றதாகிய பக்குவமுள்ளவுணர்ச்சி சிறக்க உளதாயிற்று.

**(வி - ரை) ஐந்து வருடம்** - ஐந்தாவது ஆண்டின் நிறைவு. **அங்கம்...மறைகள்** - **அங்கம் ஆறு** - சிக்கை முதலியன. 354 பார்க்க. இவை வேதம் ஓதுங்கால் ஒருதலையாகப் பயிலப்பட வேண்டுபவையாதலின் **உடன் நிறைந்த** என்றார். **சந்தம்** - வேதங்களுக்குரிய சுரங்கள்; புகழுடைய என்பாருமுண்டு.

**மறைகள் உட்பட முன் தலைவர் மொழிந்த ஆகமங்கள்** - உட்பட என்றதனால் ஆகமங்கள் சிறப்பு நூலாகவும், வேதம் பொது நூலாகவும் உள்ளன என்பதும், வேதங்கள் உலகர்க்கும் ஆகமங்கள் சத்திநிபாதர்க்கும் உரைக்கப்பட்டன என்பதும் தெரிக்கப்பட்டன; ஆகமங்கள் பயில்வோர் வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் முன்னர்ப் பயில வேண்டுமென்பதும் குறிப்பால் உணர்த்தப்பட்டது. மறைகள் ஆகமங்களினுட்பட்டன என்பதும், மறைப்பொருளை உள்ளடக்கி அதன்மேல் உள்ள முடிந்த பொருள்களை ஆகமங்கள் வெளிப்படுப்பன என்ற குறிப்பும் உட்பட என்றதனாற் பெற வைத்தனர். "வேதமோ டாகம மெய்யா மிறைவனூல், ஓதும் பொதுவுஞ் சிறப்பு மென் றுன்னுக" என்பது திருமந்திரம். **தலைவர் மொழிந்த** என்றதனை இடைநிலைத் தீபகமாகக்கொண்டு மறைகளுக்கும் ஆகமங்களுக்கும் கூட்டுக.

**முந்தை அறிவின் தொடர்ச்சியினால்** - முன்பிறப்பின் அறிவு இப்பிறப்பில் ஆன்மாவினுடன் தொடர்ந்து வருகின்ற முறைமையினால். "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற், கெழுமையு மேமாப் புடைத்து" (குறள்). உடல் அழிந்தபோதிலும் அறிவுப் பொருளாகிய உயிர்க்கு அழிவில்லை; உயிருடன் அறிவு பல பிறவிகளிலும் தொடர்ந்தே வரும் என்பது உண்மை. அதுவே மக்களுள் அறிவின் ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணமாகும். ஆகமங்கள் முந்தையறிவின் றொடர்ச்சியினால் மலர்தல்' என்றது முன் வாசனையினால் ஆகம அறிவு வளர்ந்து வெளிப்பட்டு விளங்குதல் குறித்தது. "வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு வைகல் மறவாது வாழ்த்தி யேத்திக், காதன்மையாற் றொழுமடியார்" (கன்றாப்பூர் - 1) என்ற திருத்தாண்டகமும் காண்க.

**முகைத்த மலரின் வாசம்போல்** - மலரில் வரும் மணம் முன்பு தோன்றாவிடினும் அரும்பினுள்ளே சூக்குமமாயுள்ளதென்க. அரும்பில் வெளித் தோன்றாத மணம் மலரிலே தோன்றுதற்கு, முன் அங்கு அது இருந்ததுவே காரணமாகும். "இல்லது வாராது" என்பது உண்மையன்றோ? அரும்பினில் மறைந்து நின்ற மணமும் நிறமும் மென்மையும், அரும்பு முற்றி மலர மலர நிறைவுற்று வெளிப்படத் தொடங்குவது போல அறிவின் முன்னைத் தொடர்ச்சியும் வந்தது என்றபடி.

**சிந்தைமலர உடன்மலரும் செவ்வி உணர்வு** - **சிந்தை** - உட்கரண நான்கனுள் ஒன்று. **சிந்தைமலர உடன்மலர்தல்** - சிந்தை விரிய அதனைச் சார்ந்துநின்ற அறிவும் நுண்ணிதாய் ஒடுங்கியிருந்த முன்னை நிலையினின்றும் விரிவடைதல். "சிந்தைமலர்ந் தெழுமுணர்வாற் செழுங்கலையின் றிறங்களெல்லா, முந்தைமுறை மையிற்பயின்று" (திருநா - புரா - 21) என்றதும் காண்க. **செவ்வி** - பக்குவம் - ஏற்ற காலம். "மலரும் செவ்வி" - (முருகர் புரா - 7). பக்குவமாவது "கொளுத்துவதன் முன் கொண்டமைந்து, அலகலையின் பொருட்கெல்லை யாடுங் கழலே எனத் தெளி"யும் தகுதியுடைமை. இவ்வுணர்வு சிவஞானம் என்ப. மறைகள் உட்பட ஆகமங்களின் உணர்வுநிறைந்த அறிவு மலர்தலால் சிவத்துவ விளக்கத்துக்குச் சாதனமாகிய சிவஞானம் வெளிப்படலாயிற்று என்பது கருத்து. "பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற், சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது" என்ற திருமந்திரக் கருத்து இப் பாட்டில் விளக்க முறுதல் காண்க. **சிறந்தது** - வெளிப்பட்டு விளங்கிற்று. **ஆல்**-அசை.

முகைக்கு மலரின்—என்பதும் பாடம். 13

1219. நிகழு முறைமை யாண்டேழு நிரம்பும் பருவம் வந்தெய்தப்
புகழும் பெருமை யுபநயனப் பொருவில் சடங்கு முடித்தறிவி
னிகழு நெறிய வல்லாத வெல்லா மியைந்த வெனினுந்தந்
திகழு மரபி னோதுவிக்குஞ் செய்கை பயந்தார் செய்வித்தார். கச

(இ - ள்) வெளிப்படை. வயது நிகழ்ந்துவரும் முறைமையில் ஏழு ஆண்டுகளும் நிரம்பும் பருவம் வந்து பொருந்தப், புகழும் பெருமையையுடைய உபநயனம் என்கின்ற ஒப்பற்ற சடங்கினை முடித்ததற்பின், இகழப்படும் நெறியையுடையனவல்லாத எல்லா மும் அவரறிவினிடத்தே பொருந்தியிருந்தன எனினும், அவரைப் பெற்றவர்கள், தமது விளக்கமுடைய மரபின் வழக்கின்படி வேதமோதுவிக்கும் செயலைச் செய் வித்தனர்.

(வி - ரை) நிகழும் முறைமை - நாளும் மாதமுமாக ஆண்டுகள் ஏறிச் செல்லும் முறையிலே. முன்பாட்டில் அவர்க்கு ஐந்தாண்டுகளின் பருவ நிகழ்ச்சியும், இப்பாட் டால் ஏழு ஆண்டுகளின் பருவ நிகழ்ச்சியும் கூறப்பட்டன. ஐந்து ஆண்டுகளின் பருவம் ஒருவனுக்கு உணர்வு தொடங்கி வெளிப்படும் பருவம் என்ப. "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம்" என்ற அற்புதத்திருவந்தாதிக்குப் "பிறந்துணர்வு தொடங்கியபின்" (காரைக் - புரா - 3) என்று ஆசிரியர் உரை செய்தது காண்க. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் விளையுமா" என்ற முதுமொழிக் கருத்தும் காண்க.

உபநயனப் போருவில் சடங்கு - உபநயனம் - அந்தணர் முதலாகிய முதல் மூன்று வருணத்தார்க்கும் சிறப்பாயுரியதாய் ஏழு வயதளவில் நடைபெறவேண்டுவ தோா சடங்கு. பிள்ளைக்குப் பஞ்சசிகை வைத்தும், மான்றோலுடன் முந்நூலணிவித்தும், பிரமமந்திரோபதேசம் செய்தும் பிரமசரியமாகிய முதல் நிலையில் நிறுத்துதல். பொரு வில் சடங்கு என்றது இதனால் அப்பிள்ளை இரு பிறப்பாளனாகிய நிலையைப் பெறும் அருமைப்பாடு குறித்தது. "உபநயன முறைமை யாகும் இருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி" (திருஞான - புரா - 264) என்றது பார்க்க. உபநயனம் - சேர்ந் தாகிய மற்றொரு கண் என்பது பதப்பொருள். (உப - அணுக; நயனம் - நடத்து தல்; இறைவனை அணுக அடையச் செய்தல் என்றலுமாம். நீ - நய் - நட - என்பது பகுதி.) மந்திரோபதேசத்தால் ஞானக்கண் திறக்கப்படுதல் என்பதாம். சிவத்துவ விளக்கத்துக் கேதுவாகிய ஞானம் மூன்றாவது கண் என்ப. மான்றோலும், முஞ்சி யரைஞாணும், பஞ்ச சிகையும் முதலிய பிரமசரிய அடையாளங்களும் இக்கருத்தே பற்றியன. சிவனே பிரமம்; சிவனை அறிகின்றவன் அவருடைய அடையாளங்களைத் தாஙகிச் சரித்தல்வேண்டும். ஐந்து முகங்களுடைமையால் பஞ்சசிகை சிவனதடை யாளம்; மூன்றாவது கண் சிவனுக்குரியது. 507, 508, 509 பாட்டுக்களில் உரைத்த வையும் பார்க்க. "முந்நூலணியும் கலியாணம்" (வெள் - சரு - 6) என்பதும் காண்க. எனவே, சைவ மரபில் நிற்பவர்க்கன்றி ஏனைப் பாஞ்சராத்திரிகள், துவைதமார்க்கத்த வர், ஏகான்மவாதிகள் முதலியோரிடத்து உபநயனம் என்பது உரிய பொருளின்றிப் போதலும், சைவமே எல்லாவற்றையும் உள்ளடக்கியதென்பதும் அதனாற் போதரு தலும் உய்த்துணர்ந்துகொள்க.

இகழும் நெறிய அல்லாத எல்லாம் - அறிவோரால் இகழ்ந்து விலக்கப்படாத எல்லா நூலறிவும்.

இயைந்த எனினும் - ஓதுவிக்கும் செய்கை - செய்வித்தார் - அறிவின்கட் சிறப்பு முன்னரே பொருந்தியிருப்பினும், உபநயனச் சடங்கு முடித்ததுபோலவே, வேத மோதும் பயிற்சியையும் சடங்காகவே செய்வித்தனர் என்க. ஓதுவிக்கும் செய்கை - வேதம் பயில்வித்தல் - கனம் சடை முதலாக வேதம்பயிலும் செயல். "தாம்பாடிய சாமங் கணிப்போர்" (1210), "ஓது கிடையி னுடன்போவார்" (1222), "சமிதை யுடன்மேல் எரிகொண்டு" (1232) என்றவை வேதம் பயிலுதல் குறித்தன. மறைய வர்க்குரிய அறுதொழில்களுள் "ஓதல்", "ஓதுவித்தல்" என்பன வேதம் ஓதுவத னையே குறிப்பன. இதனை வேத அத்தியயனம் என்பது வழக்கு.

**பயந்தார்** - இவரது அறிவு விளக்க நிலைக்கு ஏற்ற வேதப்பயிற்சி எவ்வாறு செய்யத்தகுவது எனவும், எவ்வாறாயினும் மரபுநிலை வழுவாது செய்வித்தல் வேண்டும் எனவும் எழுந்த அச்சத்துடன் செய்வித்தார் என்ற குறிப்பும் காண்க. "உலகிறந்த சிவஞான முணரப்பெற்றார், தொல்லைமுறை விதிச்சடங்கு மறையோர் செய்ய" (263) என்றும், "ஒருபிறப்பு மெய்தாமை யுடையார் தம்மை யுலகியல்பி லுபநயந முறைமை யாதும், இருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி யெய்துவிக்கு மறை முனிவர்" (264) என்றும் வரும் ஆளுடையபிள்ளையார் புராணங் காண்க.

**சடங்கு முடித்து - ஓதுவிக்கும் செய்கை - செய்வித்தார்** - பயந்தார், சடங்கு தாமே முடித்தும், ஓதுவித்தல் பிறராற் செய்வித்தும் இயற்றினர் என்பது குறிப்பு. தந்தையே குருவாயிருந்து பிரமோபதேசம் செய்யும் வழக்கும் காண்க. 14

1220. குலவு மறையும் பலகலையுங் கொளுத்து வதன்முன் கொண்டமைந்து
நிலவு முணர்வின் றிறங்கண்டு நிறுவு மறையோ ரதிசயத்தார் ;
"அலகில் கலையின் பொருட்கெல்லை யாடுங் கழலே" யெனக்கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினிற் றெளிந்தார் சிறிய பெருந்தகையார். கரு

(இ - ள்) வெளிப்படை. அறிவு விளங்குதற்கு ஏதுவாகிய மறைகளையும் அவைகளை உள்ளிட்ட பல கலைகளையும் ஆசிரியர்கள் கொளுத்துவதன் முன்னே தமது உள்ளத்திற் கொண்டு அமைந்து நிலவுகின்ற அறிவின் திறத்தினைக்கண்டு, போதிக்கின்ற ஆசிரியர்கள் அதிசயித்தனர். அளவில்லாத கலைகளினாற் குறிக்கப்படும் பொருளுக்கெல்லாம் எல்லையாயுள்ள பொருள் அருட்பெருங் கூத்தியற்றும் திருவடியேயாம் என்று கொண்ட உறுதிமிக்க தமது சிந்தையினால் அந்தச் சிறிய பெருந்தகையாளர் தெளிந்து கொண்டனர்.

(வி - ரை) குலவும் என்ற பெயரெச்சம் மறை என்னும் ஏதுப்பெயர் கொண்டது. அறிவு எனக் குலவுதற்கு வினைமுதல் வருவித்துரைக்க. "குலாத்தில்லை யாண்டான்" (திருவாசகம்), "கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்" (கூற்றுவர் - புராணம் - 9), "குலாவு பாதம் விளக்கியே" (443) முதலியவை பார்க்க.

**கொளுத்துதல்** - கொள்ளச் செய்தல். சொல்லுதல் என்ப. தீக்கொளுத்து என்ற பொருளில் பெரும்பாலும் வழங்கும் இச்சொல் தீயைக் கொள்ளச் செய்தல் என்ற பொருளில் வருவதாம். இங்கும் அறிவாகிய தீயைக்கொளுவி அறியாமையைப் போக்குதல் என்ற குறிப்பும் காணப்படும்.

**கொண்டு அமைந்து அறிவின் நிலவும் திறம்** - "முந்தை யறிவின் தொடர்ச்சியினான் முகைத்த மலரின் வாசம்போல்" (1218) என்ற தன்மை.

**முன்** - முன்னரே. ஏகாரம் தொக்கது. இவ்வாறு முற்பிறப்பிற் கற்ற கல்வியறிவு, இப்பிறவியில் கலைபயில்வதன் முன்பே சில மக்களிடை விளங்குதல் இந்நாளிலும் அரிதின் காணப்படுவதறிக.

**நிறுவும் மறையோர்** - ஓதுவிக்கும் ஆசிரியராகிய பிராமணர்கள். **நிறுவுதல்** - கலைப்பயிற்சியை உணர்வினுள் நிற்கச்செய்தல்.

**அதிசயித்தார்** - அதிசயமாவது காரணம் இன்னதென்றறியுமாறு கண்கூடாகக் கண்ட பெருமித உணர்ச்சி, "அதிசயம் கண்டாமே" (திருவாசகம்). இது போதித்த ஆசிரியர்களது மனநிலை.

**தெளிந்தார்** - இது போதிக்கப்பெற்ற மாணவராகிய விசாரசருமரின் மனநிலை. "ஓது கிடைசூழ் சிறுவர்களும் உதவும் பெருமை யாசானும்" (1207) என்றபடி ஆசா

னும் மாணவரும் ஒரு சேரக் காண நிற்பவர்களாதலின் இருவரது மனநிலைகளும் ஒரு பாட்டில் ஒரு சேரக் கூறிய இயைபு காண்க.

அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடும் கழலே என - இது எல்லாக் கலைகளாலும் முடிவாகக் கொண்ட துணிபு. எவ்வகைக்கலையும் ஓரோர் பொருளை நிச்சயிப்பன; ஆதலின் எல்லாக்கலைகளாலும் நிச்சயிக்கப்படும் எல்லாப் பொருள்களும் முடிந்த இடம் திருவடி என்க. முடிந்த இடமாவது அவை யாவும் போய்ச் சேர்ந்து அதற்குமேல் இன்னதென்றறிய முடியாது ஓய்ந்து நிற்கும் இடம் என்பதாம். "உலகுய்ய நடமாடு, மெல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால்" (1075) என்றது காண்க. "பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர், போதார் புனைமுடியு மெல்லாப் பொருண் முடிவே" (திருவெம்பாவை - 10) என்ற திருவாசகங்களும் இக்கருத்துப் பற்றியன. கற்றதனாலாய பயன் நற்றாள் தொழுதல் என்பது திருக்குறட் கருத்துமாம்.

எனச் சிந்தையினில் - தெளிந்தார் - என்று கூட்டுக. கொண்ட செலவு மிகுந்த சிந்தை - முன்னரே உட்கொண்ட உணர்ச்சி போந்திருந்த சிந்தை. செலவு - செல்லுதல். செலவு மிகுதலாவது "அறிவின், எல்லாமியைந்த" (1219) என்ற கருத்து; அதாவது உறைப்பு முற்றியிருத்தல்.

தெளிந்தார் - ஐயமின்றித் துணிந்தார். "உள்ளத்தின் ஒருமை நினைவால்" (1242), "கருத்தின் நிடநேர் நிற்கும்" (1221), "ஒன்று முள்ளத் துண்மையினால்" (1252), "மன்னுடு காத லருச்சனையில் வைத்தார் மற்றொன் றறிந்திலரால்" (1255) எனப் பின்வருவன காண்க.

சிறிய பெருந்தகையார் - முரண்தொடை. சிறுமை பருவத்தாலும் உருவத்தாலும், பெருந்தகைமை - உள்ளத்தின் உயர்வாலும் ஆகும். "அச்சிறிய பெருந்தகையார்" (திருஞான - புரா - 73) என்று இவ்வாறே ஆளுடைய பிள்ளையாரைக் கூறுதலும் காண்க. 15

1221. "நடமே புரியுஞ் சேவடியார் நம்மை யுடையா" ரெனுமெய்ம்மை
யுடனே தோன்று முணர்வின்க ணொழியா தூறும் வழியன்பின்
கடனே யியல்பாய் முயற்றிவருங் காதன் மேன்மே லெழுங்கருத்தின்
றிடநேர் நிற்குஞ் செம்மலார் திகழுநாளி லாங்கொருநாள், ௧௬

1222. ஓது கிடையி னுடன்போவா, ரூரா னிரையி னுடன்புக்க
போது, மற்றங் கொருபுனிற்று போற்று மவன்மேன் மருப்போச்ச,
யாது மொன்றுங் கூசாதே யெடுத்த கோல்கொண் டவன்புடைப்ப,
மீது சென்று மிகும்பரிவால் வெகுண்டு, விலக்கி, மெய்யுணர்ந்து, ௧௭

1223. பாவுங் கலைக ளாகமநூற் பரப்பின் றொகுதிப் பான்மையினான்
மேவும் பெருமை யருமறைகண் மூலமாக விளங்குலகில்
யாவுந் தெளிந்த பொருணிலையே யெய்த வுணர்ந்த வுள்ளத்தா
லாவின் பெருமை யுள்ளபடி யறிந்தா ராயற் கருள்செய்வார், ௧௮

1224. "தங்கு மகில யோனிகட்கு மேலாம் பெருமைத் தகைமையன;
பொங்கு புனித தீர்த்தங்க ளெல்லா மென்றும் பொருந்துவன;
துங்க வமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்க மனைத்துந் தாமுடைய வல்ல வோநல் லானினங்கள் ?; ௧௯

1225. " ஆய சிறப்பி னாற்பெற்ற வன்றே மன்று ளாடல்புரியு
நாய னார்க்கு வளர்மதியு நதியு நகுவெண் டலைத்தொடையு
மேய வேணித் திருமுடிமேல் விரும்பி யாடி யருளுதற்குத்
தூய திருமஞ் சனமைந்து மளிக்கு முரிமைச் சுரபிகடாம்; உ௦

1226. " சீல முடைய கோக்குலங்கள் சிறக்குந் தகைமைத் தேவருடன்
கால முழுது முலகனைத்துங் காக்கு முதற்கா ரணராகு
நீல கண்டர் செய்யசடை நிருத்தர் சாத்து நீறுதரு
மூல மவதா ரஞ்செய்யு மூர்த்த மென்றால் முடிவென்னோ?; உக

1227. " உள்ளுந் தகைமை யினிப்பிறவே றுளவே! யுழைமான் மறிக்கன்று
துள்ளுங் கரத்தா ரணிபணியின் சுடர்சூழ் மணிகள் சுராநதிநீர்
தெள்ளுஞ் சடையார் தேவர்கடம் பிராட்டி யுடனே சேரமிசைக்
கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர் குலமன் றோவிச் சுரபிகுலம்?"

1228. என்றின் னனவே பலவுநினைந், " திதத்தின் வழியே மேய்த்திந்தக்
கன்று பயிலா னிரைகாக்கு மிதன்மே லில்லை கட; னிதுவே
மன்று ளாடுஞ் சேவடிகள் வழுத்து நெறியா வது" மென்று
நின்ற வாயன் றனைநோக்கி "நிரைமேய்ப் பொழிக நீ" யென்பார்,

1229. "யானே யினியிந் நிரைமேய்ப்ப" னென்றா; ரஞ்சி யிடைமகனுந்
தானே யிறைஞ்சி விட்டகன்றான்; றாமு மறையோ ரிசைவினு
லானே நெருங்கும் பேராய மளிப்பா ராகிப், பைங்கூழ்க்கு
வானே யென்ன நிரைகாக்க வந்தார் தெய்வ மறைச்சிறுவர். உச

1221. (இ - ள்) வெளிப்படை. " அருட்கூத்தையே இயற்றும் திருவடியினை யுடையவர் நம்மை உடைய தலைவராவர்" என்னும் உண்மை எண்ணுந்தோறும் உடனே தோன்றும் உணர்வினுள் ஒழியாமல் ஊறுவதாகிய அன்பின் வழியே கடமையாக இயல்பாய் முயற்சி செய்யும்படி வருகின்ற காதலானது மேன்மேல் எழுகின்ற கருத்தின் உறுதி பிறழாமல் நேர்நிற்கும் செம்மலார் இவ்வாறு விளங்குகின்ற நாட்களில் ஆங்கு ஒரு நாளில், கரு

1222. (இ - ள்) வெளிப்படை. வேதமோதும் மாணவர் கூட்டத்தினுடன் போகின்றவர், ஊரவருடைய ஆனிரையினுடன் போயினபோது, அவற்றுள் ஈன்றணியதொரு பசுத் தன்னை மேய்ப்பவன்மேல் கொம்பினால் முட்டச்செல்ல, ஒரு சிறிதும் கூசாமல் எடுத்த கோலினால் அவன் அதனைப் புடைக்க, அதுகண்டு, மேற்சென்று, மிகும் அன்பினாலே சினந்து, அவன் செயலைவிலக்கி, உண்மையினை உணர்ந்தாராய், கஎ

1223. (இ - ள்) வெளிப்படை. பரந்த கலைகளும், ஆகம நூல்களின் பரந்த தொகுதியும், உண்மைப்பகுதியினாற் பெருமை பொருந்திய அரிய வேதங்களும், ஆகிய இவைகளின் மூலமாக, விளங்கும் உலகத்தில், எல்லாந் தெளிந்துணர்ந்து பொருணிலை தெளிய உணர்ந்த உள்ளத்தினால், பசுக்களின் பெருமையினை உள்ளபடியே அறிந்தாராகி, விசாரசருமனார், ஆயனுக்கு அருள்புரிவாராய், கஅ

1224. (இ - ள்) வெளிப்படை. " (உயிர்கள் தங்கும்) எல்லா யோனிகளுக்கும் மேலாகிய பெருமைத்தன்மையுடையன; பொங்குகின்ற தூய தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்தப்பெற்றன; பெருமையுடைய தேவர்களும் முனிவர் கூட்டங்

களும் சூழ்ந்து இருக்கை கொண்டு பிரியாத அங்கங்களையும் உடையன ஆனினங்கள் அல்லவோ ? ; கக

1225. (இ - ள்) வெளிப்படை. "ஆய சிறப்பினாலே ஈன்ற அன்றைக்கே, திருவம்பலத்தில் நடம்புரிகின்ற நாயனாருக்கு, வளர் பிறையும், கங்கையும், வெள்ளிய நகுதலை மாலையும் பொருந்திய சடையுடைய திருமுடியின் மேல், அவர் விரும்பி ஆடியருளுதற்குத் தூய திருமஞ்சனமாகிய ஆனைந்தினையும் அந்த உரிமையுடைய பசுக்கள் கொடுப்பனவாகும் ; உ0

1226. (இ - ள்) வெளிப்படை. "சிறப்பாந் தன்மையுடைய தேவரோடு காலமுழுதும் எல்லா உலகங்களையும் காக்கின்ற முதற் காரணராகும் திருநீலகண்டராகிய சிவந்த சடையினையுடைய திருக்கூத்துடைய பெருமான் சாத்தும் திருநீற்றைத் தருகின்ற கோமயம் என்னப்படும் மூலத்தினைத் தருகின்ற மூர்த்தங்கள் சிலமுடைய இந்தப் பசுக்களேயாகும் என்றால் முடிவு வேறு என்ன உள்ளது ? உக

1227. (இ - ள்) வெளிப்படை. "நினைக்கத்தக்க தன்மை இனிப் பிற வேறும் உளவாமோ ? உழைமான் மறிக்கன்று துள்ளியாடுதற் கிடமாகிய திருக்கரத்தினையுடையவரும், அணியும் பாம்புகளின் ஒளிசூழ் மணிகளைக் கங்கை நீரானது தெள்ளுகின்ற சடையினையுடையவரும் ஆகிய சிவபெருமான் தேவர்கள்தம் பெருமாட்டியுடனே சேரமிசைக் கொள்ளும்படியான சினமால் விடைத் தேவரின் குலமல்லவா இந்தப் பசுக்குலம் ?", உஉ

1228. (இ - ள்) வெளிப்படை. என்று இவ்வகையாகிய பல எண்ணங்களையும் எண்ணிக், "கன்றுகளுடன் கூடிய ஆனிரைகளை இன்பந்தரும் வழியே மேய்த்துக் காக்கின்ற இதனின் மேல் செய்யத்தக்க கடமை வேறில்லை ; இதுவே அம்பலக் கூத்தரது திருவடிகளைப் போற்றும் நெறியுமாம்" என்று கொண்டு, எதிர் நின்ற ஆயனை நோக்கி, "நீ இந் நிரைமேய்க்கும் தொழிலை ஒழிக" என்று சொல்லி, உங

1229. (இ - ள்) வெளிப்படை. "இனி இந்நிரையினை யானே மேய்ப்பேன்" என்றார் ; இடைமகனும் பயந்து அவர் முன் வணங்கி, மேய்த்தற் றொழிலை விட்டு நீங்கினான் ; தாமும் மறையோர் இசைவு பெற்று ஆக்களை நெருங்கும் பேராயத்தினைக் காப்பாராகிப், பசிய பயிர்களுக்கு மழையே போலப், பசுக் கூட்டங்களைக் காக்கத் தெய்வ மறைச்சிறுவர் முற்பட்டுவந்தனர். உச

இந்த ஒன்பது பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1221. (வி - ரை) நடமே - ஆனந்தக் கூத்தினையே. நடமே புரியும் சேவடி - தூக்கிய திருவடி ; இடது திருவடி. முத்தி கொடுப்பது அத்திருவடியே யாதலின் அதனை உடையார் நம்மை உடையார் என்றார்.

மெய்ம்மை - உண்மை உணர்த்தும் நூல்களாகிய வேத சிவாகமங்களின் துணிபு.

நம்மை உடையார் - உடையவர் - (பதி), அவரது உடைமைப் பொருள்கள் (உயிர்கள் - பசுக்கள்), அவை உடையானை யறிந்து அடைந்து இன்புற வொட்டாது அவற்றைக் கட்டிய பாசம், அப்பா சத்தின் வலிபோக்கி இன்பமளிக்க அவர் செய்யும் அருள், என்ற இவ்வளவும் இதனாற் பெறப்படுமென்க.

உடனே தோன்றும் உணர்வின்கண் - மேற்கூறிய மெய்ப்பொருணிச்சயமாகிய துணிபுகள் எல்லாம் ஒருங்கே, நடமேபுரியும் சேவடியார் என்று உணர்ந்த அப்பொழுதே, ஒருங்கே, உணர்விற்றோன்றுவனவாகும் என்பது.

உணர்வின் ஒழியாது ஊறும் வழி அன்பு - அன்பு இடையறாது ஊற்றெடுத்து வழிவழி வருதற்குக் காரணம் உணர்வில் மேற்கூறிய துணிபுகள் எல்லாம் உடன்

தோன்றுவதேயாகும் என்பார் அதனை உணர்வு என்பதனோடு உடம்பொடு புணர்த்தி ஓதினார். வழி அன்பு - முன்னைப் பிறவியிலிருந்து தொடர்ந்து பரம்பரையில் இடையறாது வரும் அன்பு. "முந்தை யறிவின் றொடர்ச்சியினால்......சிந்தை மலர உடன் மலரும் செவ்வி யுணர்வு" (1218) என்றது காண்க. ஒழியாது - இடையறாது.

அன்பின் கடனே இயல்பாய் முயற்றிவரும் காதல் - அன்பினாற் கடமையாகச் செய்யும் செயலினால், செயற்கையானன்றி இயல்பினாலே எழும் முயற்சியாக விளைவிக்கப்படும் காதல். முயற்றுதல் - ஊக்கப்படுத்துதல்.

கருத்தின் திடம் நேர்நிற்கும் - காதல் கருத்தில் மேன்மேல் எழப், பின்னர் மாறாது அதனில் ஒன்றித்து உறைத்துநிற்கும். நேர் நிற்கும் செம்மலார் - கருத்தின் திடத்திலே உறைப்புடன் நிற்கும் பெரியார் - மனம் இறைவனிடமாகப் பதிந்து கொண்டவர். "மண்டுகாத லருச்சனையின் வைத்தார் மற்றொன் றறிந்திலரால்" (1254), "வேறுணரார்" (1255) என்று பின்வருவன இந்த மன நிலையினை வெளிப்படுத்துதல் காண்க. செம்மல் - பெருமையுடையார். "பெருந்தோன்றலார்", "மேலாம் பெரியோர்" என்பன இக்கருத்தையே தொடர்ந்து புலப்படுத்துவன.

திகழுநாளில் - இவ்வாறு கருத்தின் திடம் நேர்நின்று விளங்கும் நாள்களில்.

ஆங்கு ஒருநாள் - ஆங்கு என்ற முதனீண்ட சுட்டும், ஒரு என்ற அடையும் அந்நாளினது சிறப்பை யுணர்த்துவன. அந்நாளின் நிகழ்ச்சிகள் மேல் 1229-ம் பாட்டில் உரைக்கப்படுவன. அவற்றின் பயனாக விசாரசருமனார் ஆனிரை மேய்த்து, மணலால் இலிங்கந் தாபித்துப், பாலால் திருமஞ்சனமாட்டி, அதனாற் சிவனது திருமகனாராகி, உயிர்களுக்குச் சிவபூசைப் பயனை கொடுத்தருளியிருக்கப் பெற்றனராதலின் இவ்வாறு சிறப்பித்தனர் என்பதாம். ஒருநாள் என்ற தொடக்கம் நிரைகாக்க வந்தார் (1229) என்றதனுடன் முடிவுபெறுகின்றது.

செம்மலார் - ஒருநாள் (1221) - நிரையிடன் புக்கபோது - ஆ - ஓச்ச, - அவன் புடைப்ப, - வெருண்டு - விலக்கி - உணர்ந்து (1222) - அறிந்தா(ராய்) - அருள்செய்வார் (1223) - "ஆனினங்கள் - தகைமையன ; - பொருந்துவன - உடைய அல்லவோ? (1224); - ஐந்தும் அளிக்கும் (1225) ; மூர்த்தம் (1226) ; விடைத்தேவர் குலமன்றோ? (1227) ;" என்று - பலவும் நினைந்து, - "இதன்மேலில்லை கடன் ; - இதுவே வழுத்து நெறியாவதும்" என்று, - ஆயன்றனை நோக்கி - "நிரைமேய்ப்பு ஒழிக நீ" என்பார் (1228) - "இனியானே மேய்ப்பன்" என்றார் ; இடைமகனும் அகன்றான் ; இசைவினால் - நிரை காக்க - மறைச்சிறுவர் - வந்தார் (1229) என்று மேல்வரும் பாட்டுக்களுடன் கூட்டி இந்த ஒன்பது பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க. 16

1222. (வி - ரை) ஓதுகிடை - வேதமோதும் மாணவர் கூட்டம். 1208 பார்க்க.

ஊர் ஆன் நிரையின் - உடன்புக்கபோது-வேதம்பயிலும் மடங்களும் வேள்விச் சாலைகளும் ஊர்ப் புறத்தே உள்ளனவாதலின் ஊரினின்றும் வேதம் பயில்வதற்காக உரியநேரத்திற் புறப்பட்டுத் தெருவழியே வேத மாணவர் கூட்டம் செல்வதாம். அந்நேரத்தில் ஊர் ஆனிரையும் காலையில், மனைகளில், பால் தந்தபின் மேய்வதற்கு மண்ணியாற்றின் கரைப்புறவுக்குச் செல்வன ஆதலின் உடன்புக்கபோது என்றார்.

புனிற்று ஆ - ஈன்றணிய பசுவாதலின் கன்றைப்பிரிய மனமின்றி மேய்க்கக் கொண்டுபோகும் இடையன்மேல் மருப்பு ஓச்சிற்றுப் போலும். போற்றும் அவன் - மேய்க்கும் இடைமகன். மருப்பு ஓச்சுதல் - கொம்பினை அசைத்து முட்டச் செல்லுதல். மருப்பு ஓச்ச என்றதற்கு கொம்பினால் முட்ட என்றுரைத்தனர் முன் உரைகாரர். "கடிதோச்சி மெல்ல எறிக", "கைச்சிறிய தொருமாறு கொண்டோச்ச"

(திருஞான - புரா - 73) என்ற இடங்களிற் போல ஈண்டும், ஒக்க - முட்டுதற்குச் செல் என்றல் பொருந்தும். கொம்பினை அசைத்து முயன்றதேயன்றி முட்டிப் பிழை செய்யாதிருக்க இடைமகன் புடைத்தான் என்க.

யாதும் ஒன்றும் கூசாதே 1224—1227 பாட்டுக்களிற் கூறியபடிக்குள்ள பெருமைகளில் எதையும் ஒரு சிறிதும் உணராமலும், பசுவைக் கருணையின்றிக் கோல் கொண்டு புடைத்தலைப்பற்றி ஒரு சிறிதும் அஞ்சாமலும். கூசுதல் - தகாத செயல் செய்ய அஞ்சுதல்.

மெய்யுணர்ந்து - உள்ளத்தினுள் எழுகின்ற வுணர்ச்சியினால் உண்மையை அறிந்து. மேல்வரும் பாட்டில் எய்த உணர்ந்த உள்ளத்தால் என்றது வேத ஆகமநூல் உணர்ச்சி குறித்தது. மெய்யுணர்ந்து, (அதன் மேல்) மறைகள் மூலமாக உணர்ந்த உள்ளத்தால் என்று கூட்டிக் கொள்க. 17

1223. (வி - ரை) பாவும் கலைகள் - மிகப்பரந்துகிடக்கும் எல்லாக் கலைகளும். அளவிடமுடியாத கலைஞானங்களைக் குறித்தது.

ஆகமநூற் பரப்பின் தொகுதி - மூலாகமங்கள் உபாகமங்கள் என்ற இவை பல வற்றின் தொகுதி. தொகுதி - என்றதனால் ஆகமங்கள் பலவாகிப் பரந்திருப்பினும் அவை கூறும் முடிந்த பொருள்களில் ஒற்றுமையுடையன என்பதும், ஆவின் பெருமை யினை ஒன்று போலவே எல்லா ஆகமங்களும் கூறுவன என்பதும் ஆம்.

அருமறைகள் - ஆகமங்களேயன்றி வேதங்களும் ஆவின் பெருமை கூறுவன.

மூலமாக - ஏதுவாகக் கொண்டு. கலைகளும் ஆகமங்களும் மறைகளும் என்னு மிவற்றை ஏதுவாகக் கொண்டு யாவுந் தெளிந்த என்க. எண்ணும்மைகள் தொக்கன. இது நூல்வழியால் தெளிந்த உணர்வு.

யாவும் தெளிந்த...உள்ளம் - பதிமுது நிலை - உயிரவை நிலை - இருண்மலநிலை - அருளது நிலை என்ற பொருணிலை யெல்லாம் தெளிய உணர்ந்து கொண்டமைந்த உணர்ச்சியினையுடைய உள்ளம். "நடமே புரியும் சேவடியார் நம்மை உடையார் எனும் மெய்ம்மை" (1221) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

பெருமை உள்ளபடி அறிந்தார் - உள்ளபடியினை - வகையினை - அறிந்தாராதலின். படி - படியை - வகையை. இரண்டனுருபு தொக்கது. உள்ளவாறு - உண்மையாக என்றுரைப்பினுமாம்.

அருள் செய்வார் - செய்வாராகி. செய்வார் - "நிரைமேய்ப்பொழிக நீ (1228) - யானே - மேய்ப்பேன்" என்றார் (1229) என்று மேல்வரும் பாட்டுக்களுடன் முடிக்க.

மேலே 1224 - 1227-ல் வருவனவும், "இன்ன பலவும்" (1228) விசாரசரும ரைர் தம் மனத்துள்ளே நினைந்து துணிந்து கொண்ட முடிபுகள்.

பொருளினிலை யெய்த—என்பதும் பாடம். 18

1224. (வி - ரை) தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமை - தங்கும் - உயிர்கள் இவ்வுலகிற் பிறவி எடுத்து வரும்போது தங்கும் என்க. அகில யோனிகட்கும் - எல்லாவிதமான யோனி பேதங்களுள்ளும். மேலாம் பெருமை - உயர்வுடையதாகிய பெருமை. யோனி பேதம் என்பது உடல் எடுக்கும் பிறவி வகை. அவை எண்பத்து நான்கு இலக்கம் என்ப. "உரைசேரு மெண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனி பேதம்" (திருவீழிமிழலை - மேகராக - 4) என்றது ஆளுடையபிள்ளையார் தேவாரம். இவை எல்லாவற்றுள்ளும் மேன்மையுடையன ஆவின் பிறவியே என்பது.

புனித தீர்த்தங்கள் - புனிதம் - தூய்மை. தூய்மை செய்யும் தீர்த்தங்கள், 1155-ல் உரைத்தவை பார்க்க.

**எல்லாம்** - கங்கை, யமுனை முதலிய ஏழு பெருந்தீர்த்தங்களும், அவற்றையும் புனிதமாக்கும் மாமக தீர்த்தமும், இன்னும் இவை போல்வனவும் ஆகிய எல்லாமும். முற்றும்மை தொக்கது.

**என்றும்** - எல்லாக் காலங்களிலும்.

**துங்க அமரர்** - பிரமன் - விட்டுணு - வருணன் - அக்கினி முதலிய பெருந் தேவர்கள். **கணங்கள்** - சிவகணங்கள்.

**சூழ்ந்து பிரியாத அங்கம் அனைத்தும்** - அமரர் முதலினோர் ஆனினங்களின் ஒவ் வோர் அங்கத்தினும் பொருந்தி அங்கு நின்றும் அகலாது வாழ்ந்துள்ளார்கள் என்பது.

**நல்** - உயிர்களுக்கு நன்மை செய்கின்ற. அதற்காகவே பிறந்தவை ஆனினங் கள் என்பதாகும்.

பசுக்களின் உறுப்புக்களில் தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் இருத்த லாவது: பிரமனும் விட்டுணுவும், பசுவின் கொம்பினடியிலும், கோதாவிரி முதலிய தீர்த் தங்களும் சராசரமும் கொம்பினுனியிலும் இருப்பர். சிவபெருமான் சிரசிலும் உமா தேவியார் நடு நெற்றியிலும் முருகக்கடவுள் நாசி நுனியிலும் வீற்றிருப்பர். உண் ணுசியில் திக்குப் பாலகர்கள் - செவிகளில் அசுவினி தேவர்கள் - கண்களில் சந்திர சூரியர்கள் - தந்தத்தில் வாயு - நாவில் வருணன் - இருதயத்தில் சரசுவதி - கபோ லத்தில் இயமனும் இயக்கர்களும் - உதட்டில் காலை நண்பகல் மாலை என்னும் மூன்று காலத்துக்குமுரிய அதிதெய்வங்கள் - கழுத்தில் இந்திரன் - முசிப்பில் (இடை) அருக்கதேவர் - மார்பில் சாத்தியர் - நான்கு கால்களில் அநிலவாயு - முழங்காலில் மருத்துக்கள் - குளம்பினுனியில் நாகலோகத்தார் - குளம்பினடுவில் கந்தருவர் - மேற் குளம்பில் தேவமாதர்கள் - முதுகில் உருத்திரர் - சந்துகளில் எண் வசுக்கள் - அரைப் பரப்பில் பிதிர் தேவர்கள் - பகத்தில் எழுகன்னியர் - குதத்தில் திருமகள் - அடி வாலில் தேவர்கள் - வால் மயிரில் சூரியனொளி என்றிவ்வாறு தேவர் முனிவர் அந் தந்த அங்கங்களிற் சூழ்ந்து பிரியாதிருப்பர். கோசலத்தில் ஆகாய கங்கையும், கோமயத்தில் யமுனையும் இருப்பர். பூமிதேவி வயிற்றினும், பெருங்கடல்கள் முலை யினும், காருகபத்தியம் ஆகவனீயம் தக்கிணாக்கினி என்னும் முத்தீயும் வயிறு - இத யம் - முகம் என்னும் மூவிடங்களினும், யாகத்தொழில் முழுவதும் எலும்பிலும் சுக் கிலத்திலும் இருக்கும். கற்புடையமாதர்கள் எல்லா அவயவங்களிலும் வசிப்பார் : என் றிவ்வாறு கண்டுகொள்க. இவை சிவதருமோத்திரத்தினுள் "வேதாவுங் கரியவனு மாவினது கோட்டடியின் விளங்கி வாழ்வர்" என்பது முதலாக ஆறு பாட்டுக்களால் விரித்துக் கூறப்பட்டுள்ளன.

இப்பாட்டினால் தூயஉடம்புடைமைபற்றி ஆனினங்களின் சிறப்புக்கூறப்பட்டது.

1225. (வி - ரை) **ஆய சிறப்பு** - இவ்வாறாகிய சிறப்பு. தூயவுடம்புடைமை யாணுகிய சிறப்பு.

**பெற்ற அன்றே** - கன்றினைப்பெற்ற - ஈன்ற - பொழுதே. ஈன்ற அன்றே அளிப் பினும் திருமஞ்சனமைந்தும் ஆகமங்களில் விதித்த கால எல்லையிற் கொள்ளத்தக்கன என்ப. **அன்றே** - படைப்புக் காலத்திலே, **பெற்ற** - பெற்றன என்று கொண்டுரைத் தலுமாம்.

**நாயனார்** - தலைவர் - சிவபெருமான் "மன்றி னடமாடு, நாயனா ரென்றுரைப்போம் நாம்" (கோயினான்மணிமாலை - 13), "அழகிது நாயனீரே" (774) முதலியவை பார்க்க. இப்பொருள் பற்றியே, நமது தலைவர்களாந் தன்மை கொண்டு நம்மை ஆட் கொண்டருளும் அடியார்பெருமக்களை "நாயனார்" என்ற வழக்கும் போந்தது.

நதி - கங்கை. நகுவெண் தலைத் தொகை - சிரமாலை என்பர். இவை ஊழிகளில் வீந்த பிரமவிட்டுணுக்களின் தலைகளைக் கோவைபோல அணிந்த மாலை. "தலைமாலை தலைக்கணிந்து (திருஅங்கமாலை), "மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்" (தாண்டகம் - பூவணம்) என்ற தேவாரங்களும் பிறவும் காண்க.

ஆடி அருளுதல் - திருமஞ்சனமாடுதல். திருமஞ்சனம் ஐந்து - பசுவின் நெய் - பால் - தயிர் - கோமயம் - கோசலம் என்பன. (916) பார்க்க. இவை ஆனைந்து எனப்படும்.

உரிமைச் சுரபிகள் - அந்த உரிமையுடைய ஆனினம். இவ்வுரிமை ஆனினங்களுக்கே இறைவனுற்றரப்பட்டுள்ளது என்பது குறிப்பு.

உரிமை சுரபிகள் என்று பாடங்கொண்டும், ஆயசிறப்பினால் சுரபிகள் உரிமை பெற்ற அன்றே என்று கூட்டி அந்தச் சிறப்பினால் சுரபிகள் உரிமை பெற்றன வன்றோ? என்று பொருள் கொள்வாருமுண்டு. இப்பொருளில் ஏகாரம் வினாப் பொருளில் வந்ததென்ப.

இப்பாட்டினால் ஆனைந்தின் சிறப்பும் தூய உடம்புடைமையும் பற்றிப் பசுவின் சிறப்புக் கூறப்பட்டது. 20

1226. (வி - ரை) சீலம் - இங்குத் தூய்மை குறித்தது.

சிறக்கும் தகைமைத் தேவருடன் - சிறப்பாகிய படைப்பு முதலிய தொழில்களைச் செய்யும் பெருந்தேவர்களோடு.

தேவருடன்...உலகனைத்தும் காக்கும் என்று கூட்டுக. தேவர்களையும் மற்றும் எல்லா உயிர்களையும் காக்கின்ற.

காலம் அனைத்தும் என்பது இடையில் நின்று தேவருடன் உலகனைத்துங் கால முழுதும் என்று கொண்டு கூட்டி யுரைக்கின்றது. எல்லாக் காலங்களிலும் எல்லா உயிர்களையும் உலகங்களையும் காக்கின்ற என்க.

முதற்காரணர் என்பது தமக்கொரு முதல்வரில்லாத முழுமுதற் காரணர் என்ற பொருளில் வந்தது. காக்கின்ற கடவுளரை யெல்லாம் தோற்றுவித்துக் காத்து இறுதியில் தன்னகத் தொடுக்கும் தன்மை பற்றிக் காக்கும் முதற்காரணர் என்றார் என்றலுமொன்று. "படைப்போற் படைக்கும் பழையோன், காப்போற் காக்குங் கடவுள்" என்ற திருவாசகம் காண்க.

சாத்தும் - அணியும். நீறு அணிந்து நிற்பது சிவபெருமானது சிறப்புத் தன்மை. நீறு - இறுதிக் காலத்திலும் அழியாமலிருப்பது இறைவன் திருமேனியில் தங்கும் திருநீறாகும். இங்குக் குறித்த நீறு இறைவர் திருமேனியில் அணிவதற்கு அடியார் பயன் படுத்துவது. "வள்ளல் சாத்து மதுமலர் மாலையும் அள்ளு நீறும்" (31) என்றது காண்க.

நீறுதரும் மூலம் - திருநீறு பெறுதற்கு ஆதாரமாயுள்ளது. கோமயம் என்பர். பசுவின் சாணம்.

மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் - கோமயம் உண்டாகும் இடம். அவதாரம் - மூர்த்தம் என்ற சொற்கள் அப்பொருள்களின் உயர்வைக் குறித்துநின்றன. மூர்த்தம் - வடிவம்; இங்கு ஆனினத்தைக் குறித்தது.

என்றால் முடிவு என்னே? என்று காண்போமானால் இதன் ஏற்றத்துக்கு அளவும் உண்டோ? என்பதாம்.

சைவத்தின் சிறந்த சாதனமாகிய திருநீற்றினுக்கு ஆதாரமாயுள்ளது பசுக்களது பெருஞ் சிறப்பாம் என்பது. என்னே? என்ற வினா வேறின்மை குறித்தது.

இதனால் திருநீற்றின் சிறப்புப்பற்றிப் பசுக்களது சிறப்புக் கூறப்பட்டது. 21

1227. (வி - ரை) உள்ளும்...உளவே? - மேலும் இனி நினைக்கத்தக்க வேறு தன்மைகளும் உளவோ? இல்லை; என்று இப்பாட்டிற் கூறும் பொருளே முடிந்த முடிபாகக் கூறுகின்றாராதலின் இவ்வாறு தொடங்குகின்றார்.

**உழைமான் மறிக்கன்று துள்ளும் கரத்தார்** - இருடிகள் செய்த ஆபிசார யாகத்தினின்றும் போந்து உலகத்தை அழிக்கவந்த மான்கன்று சிவபெருமானது இடதுகரத்தின் இருவிரனுனியில் ஆடி நிற்பதாகும் என்பது வரலாறு. விரிவு கந்த புராண முதலியவற்றுட் காண்க. **உழை - மான் - மறி** - ஒருபொருட் பன்மொழி; பல தன்மைகளை வற்புறுத்தி ஒரு பொருளின்மேனின்றன. அந்த மானினது தோற்றம், நிலை, ஒடுக்கம் என்ற மூன்று வெவ்வேறு நிலைகளைக் குறிக்க மூன்று சொற்களாற் கூறினார். **உழைமான்** - ஒருவகை மான் என்பாரும், **மறிக்கன்று** - மறியாகிய கன்று என்பாரும் உண்டு. "புள்ளி உழைமானின் தோலான்" என்ற மேற்கோள் முதலியனவும் காட்டுவர். **உழைமான்** - புள்ளிமான் என வழங்குவர். **மறி** - மான் முதலிய சில மிருகங்களின் கன்றுகளுக்குப் பெயராயும் வழங்கும்.

**கன்று துள்ளும் கரத்தார்** - சிவபெருமானது திருக்கரத்தில் விரல்களின் நுனியில் இரண்டு கால்களை நிறுத்தித் துள்ளுவது இந்த மான்கன்று என்பது அவரது அளவில்லாத சத்தியைக் காட்டுவதாம் என்பர்.

**மணிகளை - நீர் - தேள்ளும்** என்றும், **சடையார் - பிராட்டியுடனே - மிசைக் கொள்ளும்** என்றும் கூட்டுக. சுடர் சூழ்ந்த மணிகளையுடைய பணியணியினையும் தெளிந்த நீரையுடைய சுரநதியினையும் அணிந்த சடை என்றுரைத்தலுமாம்.

**அணிபணியின்** - கரத்தார் அணியும் பாம்பினது. **பணி** - பாம்பு. கரத்தாரது அணியாகிய பாம்பின் என்றலுமாம்.

**சுடர்சூழ்மணி** - பாம்பின் தலையில் உள்ளதாகச் சொல்லப்படும் அரதனம். "முழையர வுமிழ்ந்த செய்ய மணிவெயில்" (778) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. "நஞ்சுகால், வாய நாக மணிப்ப ணங்கொள் விளக்கெ டுத்தன" (திருநா - புரா - 355) என்றதும் பிறவும் காண்க.

**சுரநதி** - கங்கை. **தேள்ளும்** - தெளிவுகாட்டும்; விளங்கும்.

**தேவர்கள் தம்பிராட்டி** - தேவர்களுக்கெல்லாம் பெருமாட்டியார் - தலைவியார். உமையம்மையார். தம்பிரான் என்ற சொற்குப் பெண்பாலாகத் **தம்பிராட்டி** என்னும் வழக்கு இந்நாளிலும் மலையாள நாட்டில் வழங்குவதாம். இது பழந்தமிழர் வழக்கு.

**மிசைக் கொள்ளுதல்** - மேல் கொண்டு எழுந்தருளுதல்.

**சினமால் விடைத்தேவர் - சினம்** - பொருளுக்கு இயற்கையடைமொழி. அடைந்தோரைக் காக்கும் பொருட்டுப் பகைவரைச் சீறுகின்ற என்றலுமாம். "அண்ணலரண் முரண் ஏறும்" (காந்தா - அதிகை - 1) என்ற அப்பர் சுவாமிகள் தேவாரம் காண்க. **மால்** - பெரிய. **மால்** - விட்டுணு என்று கொண்டு திரிபுரமெரித்த அந்நாளில் இடபமதாய்த் தாங்கிய திருமால் செய்தி குறிப்பதாகக் கூறுதலுமாம்.

**விடைத்தேவர்** - இடப தேவர். இவர் வேறு; திருநந்தி தேவர் வேறு. நந்தி தேவர் சிவகணங்கட்கெல்லாம் நாயகராய்த் திருமலைக்காவல் பூண்டுள்ளவர். (20).

**விடைத்தேவர் குலமன்றே இச்சுரபிகுலம்** - விடைத்தேவரைச் சூழ்ந்துள்ள நந்தை - பத்திரை - சுரபி - சுசீலை - சுமனை - என்னும் ஐவகைப்பசுக்களின் மூலம் ஆனினம் உலகிற் பெருகும் என்றும், இவ்வைவகைப் பசுக்களும் திருப்பாற்கடலில் உதித்தன என்றும் கூறுவது வரலாறு.

அடியார்களுக்கு அருள் செய்யும் பொருட்டு வெளிப்படும்போதெல்லாம் அறவுருவுடைய விடையினை ஊர்ந்தே அறவனார் எழுந்தருள்வாராதலின் இதனினும் வேறு சிறப்பில்லை என்று முடிபாகக் கூறினார்.

இதனால் விடைத்தேவர் குலம்பற்றிப் பசுக்களின் சிறப்புக் கூறப்பட்டது. 22

1228. (வி - ரை) **என்று இன்னனவே பலவும் நினைந்து** - முன் 1224 முதல் 1227 வரை நான்கு திருப்பாட்டுக்களானும் கூறியவற்றையும், அவை போல்வன பல வற்றையும் எண்ணி. இவை விசாரசருமனார் மனத்தினுள் எண்ணமிட்டுச் சிந்தித்தவை.

**'இதத்தின்...நெறியாவது' என்று** - இது, பலவும் நினைந்தபின் விசாரசருமனார் மனத்துள்ளே துணிந்து கொண்ட முடிபு.

**இதத்தின் வழியே மேய்த்துக் காத்தல்** - 1230 - 1231ல் விரித்து உரைக்கப் படுவது. இதுபற்றி ஆனாயர் புராணத்துரைத்தவையும் பார்க்க.

**கன்றுபயில் ஆன் நிரை** - கன்றுகளுடன் கூடிய கறவைப் பசுக்கள். "பாலும் பயனும் பெருகவரும் பசுக்கள்" (1230) என்றும், "அந்தணாள ராகுதிக்குக் கறக்கும் பசுக்கள்" (1247) என்றும் கூறியவற்றால் ஓமதேனுக்களாகிய இப்பசுக்கள் முழுமை யும் மறையோர் வேள்விக்குரிய பஞ்சகவ்வியமும் பாலும் (நெய்யும்) தரும் கறவைகள் என்பதறிப்படும்.

**இதன்மேல் இல்லை கடன்; இதுவே சேவடிகள் வழுத்து நெறியாவதும்** - மக்கள் செய்யவேண்டிய கடமைகள் பலவற்றுள்ளும் இதற்கு மேற்பட்ட கடமை வேறில்லை; கடமையாதலோடமையாது இது சிவன் சேவடி போற்று நெறியுமாவது. மக்களின் கடமைகள் பலப்பலவாக நூல்களால் வகுக்கப்படினும் அவை பலவும் சிவன் சேவடி வழுத்து நெறியாகாது இவ்வுலக சம்பந்தமாய்ப்போந்து உடல் பற்றிக் கழி வன. இக்கடமை அவ்வாறன்றி, அவற்றுள்ளே தலைமையாய் நிற்பதுடன், சிவன் சேவடி வழுத்து நெறியுமாகும் என்றதாம்.

**இது மன்றுளாடும் சேவடிகள் வழுத்து நெறியாகுமாறு** யாங்ஙனம்? எனில் சிவனைக் குறித்த வேள்விகளுக்குரிய பொருள்களைத் தருதலால் பசுக்காத்தல், சிவ வேள்விக்குரிய சாதனம் தரும் சிவபுண்ணியம் ஆகும்; சிவன் ஆனைந்தும் திருநீறும் மகிழ்ந்தாடுவனாதலால் இது சிவன் ஆடுதற்குரிய திருமஞ்சனம் தருதற்கும், உயர்வாகிய திருநீறு பெறுதற்கும் துணை செய்த சிவபுண்ணியமுமாகும் ஆதலின்.

பசுக்கூட்டத்தைச் சிவன் விரும்புவார்; ஆதலின் அதனைக் காப்போர்பால் மகிழ் வர்; எனவே சிவனை மகிழ்விக்கு நெறியிதுவே என்னலுமாம். **இதுவே - ஆவதும்** - இதன்மேற் கடன் வேறில்லை; அன்றியும் இதுவே நெறியாவதும் என்க. **வழுத்து நெறி** களுள் அருச்சனையும் வேள்வியும் சிறந்தன - ஆதலின் இவற்றுக்குரிய சாதனம் தரும் ஆனிரைகாத்தலே **வழுத்து நெறியாவதும்** என்றதுமாம்.

**நின்ற ஆயன்** - விசாரசருமனார் வெகுண்டு விலக்கியபின் (1222) தம் மனத்துள் எண்ணி, இவ்வாறு உணர்ந்து துணிவு பெறும் வரை அங்கு நின்றுகொண்டிருந்த ஆயன். **ஆயன்** - ஆயத்தை உடையவன். செலுத்துபவன். **ஆயம்** - கூட்டம் இங் குப் பசுக்கூட்டம் குறித்தது. "ஆனே நெருங்கும் பேராயம்" (1229)

**நீ நிரை மேய்ப்பு ஒழிக** என்க. எழுவாயைப் பின்வைத்தது வெகுட்சிக் குறிப்பு. "வெகுண்டு" (1222) என்றது காண்க.

**என்பார்** - என்பார் ஆகி. முற்றெச்சம். என்பார் - என்றார். (1229) என முடிக்க

**நீ நிரை மேய்ப்பு ஒழிக; யானே இனி இந் நிரை மேய்ப்பன்** - என்று தொடர்ந்து கூறியது, "நீ ஒழிக" என்றபோது, "இனி யாவர் அதைக் கைக் கொள்வர்?" என்ற வினா எழுவ தியல்பாகையால், அது எழாவகை தாமே கூறி முடித்தவாறு. 23

1229. (வி - ரை) இடை மகன் - இடையன். ஆனிரை மேய்க்கும் மரபினன்.

இறைஞ்சி விட்டு அகன்றான் - மறையவர் பதியாதலானும், பதியின் எல்லாரும் தலைவர்களாகலானும், அந்த மறையவர் கூட்டத்தினுள் விசாரசருமனார் ஒருவராக லானும் ஊர் சமூதாயத்தாரின் உத்தரவேயாகும் இது என்று தாங்கி இறைஞ்சி ஏற்றுக் கொண்டனன்.

யானே நிரை மேய்ப்பன் - (இடைமகன் அஞ்சி அகன்றானாக) நிரை மேய்த்தல் இடையர் மரபின் றொழிலாகலானும், அந்தணர்க்குரிய தொழில்களுள் ஒன்றாக விதிக்கப்படாமையானும், மரபு பிறழ்ந்து விசாரசருமனார் அதனை மேற்கொள்ளவும் இடைமகன் விடவும் நேர்ந்த இயைபென்னையோ? எனின், இதற்கு விடை முன் பாட்டிற் கூறப்பட்டதென்க. மக்கட் கூட்டத்தின் உயிரினைப் பற்றிய உயர்ந்த கடமைகளுள் ஒன்றாகியும் சிவவழிபாட்டு நெறியாகியும் உள்ள இதன்முன்பு உடலைப் பற்றிய தாழ்ந்த கடமைகளாகிய உலகநிலை மரபுவழக்குக்கள் முனைந்து நில்லாது ஒதுங்கிப்போம் என்பது துணிபு.

மறையோர் இசைவினால் - மறையோர் ஊர் ஆன் நிரைக்கு உடையோர் ஆத லின் அவர்களுடைய இசைவு வேண்டப்படுவதாயிற்று. அன்றியும் மறையவர்களு டைய ஊராதலானும் மறையவர் மரபிற்குரித்தாகாத தொழில் பற்றியதாதலானும் ஏனை மறையோர்களின் இசைவு வேண்டப்படுவதாம்.

ஆனே நெருங்கும் பேர் ஆயம் - ஆன் - ஆனிரை. பசுக்கள் என்னும் ஆன்மாக் களின் பொதுமையையும் குறிப்பாலுணர்த்தி நின்றது. அளிப்பாராகி என்ற குறிப்பும் அது. விசாரசருமனார் நிரைகாக்க வந்தது, ஆன் கூட்டமாகிய அந்த ஆயம்மட்டில் அன்றி, உண்மையில், ஆன் - ஆன்மாக்கள் - நெருங்கும் பேர் ஆயம் - பெருங்கூட்டம் - அளிப்பதற்காகவே யாகும் என்பது. ஆனே என்ற ஏகாரமும், நெருங்கும் என்றதும், பேர் (பெரிய) என்றதும் அங்கு முன்னே நின்ற ஒரு சிறு கூட்டமாகிய ஆனிரை குறித்ததனோடு நில்லாது ஆன்மாக்களின் தொகுதியாகிய வேறுமொரு பெருங்கூட் டத்தைக் குறிக்க நின்றதும் கருதுக. நிரைகாக்க என்றலே ஆன் ஆயமளித்தலாகு மாதலால் முன்சொன்ன ஆன் நெருங்கும் ஆயம் வேறு என்பதும் குறிப்பாலுணர்த் தப்படும். நிரை காத்தலால் ஆன் நெருங்கும் ஆயம் அளித்தலாவது - பின்னர் நிகழும் சிவபூசையும், அதனால் நாயனார் பெறும் சண்டேச பதமும், அது கண்டு வழிபட்டு உலகமுய்ந்து சிவபூசைப்பயன் பெறும் நன்மையும் காரணகாரிய முறையில் பெறப் படுதல் குறிக்கொள்க.

பைங்கூழ்க்கு வானே என்ன - கூழ் - பயிர். வான் - மழை - "வான்சிறப்பு" என்றது காண்க. மழை பயிர்களைக் காத்து வளர்த்தல்போல் நாயனார் ஆன் நிரையை ஓம்பிக் காத்து வளர்த்தனர் என்பது. வினைபற்றி வந்த உவமம். "விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே, பசும்புற் றலைகாண் பரிது" (குறள்) என்றபடி இன்றியமை யாமை குறித்த உவமம்.

நிரைகாக்க வந்தார் - காக்க - காக்கும்பொருட்டு, காத்தற்கு. வந்தார் - காக்குந் தொழிலை மேற்கொண்டு வந்தனர்.

தெய்வ மறைச் சிறுவர் - தெய்வமறை என்றும், தெய்வச் சிறுவர் என்றும் கூட்டி யுரைக்க நின்றது. தெய்வத்தன்மை வாய்ந்த சிறுவர் என்க. "முந்தையறிவின் றொடர்ச்சி" (1218) பெற்றும், "தெளிந்த சிந்தை" (1220) பெற்றும், "கருத்தின் திடநேர் நிற்கும் செம்ம"லாராய் (1221), "யாவும் தெளிந்த பொருளுணர்வையே யெய்த உணர்ந்த உள்ளமுடை"யாராய் விளங்கியது தெய்வத்தன்மை என்க.    24

1230. கோலுங் கயிறுங் கொண்டுகுழைக் குடுமி யலையக் குலவுமான்
றோலு நூலுஞ் சிறுமார்பிற் றுவள வரைக்கோ வணஞ்சுடரப்,
பாலும் பயனும் பெருகவரும் பசுக்கள் மேய்க்கும் பான்மையினாற்
சாலும் புல்லி னவைவேண்டுந் தனையு மிசையுந் தலைச்சென்று, ௨௫

1231. பதவு காலங் களின்மேய்த்தும் பறித்து மளித்தும் பரிவகற்றி
யிதமுண் டுறையு ணற்றண்ணீ ரூட்டி யச்ச மெதிர்நீக்கி,
யதர்நல் லனமுன் செலநீழ லமர்வித், தமுத மதுரப்பால்
உதவும் பொழுது பிழையாம லுடையோ ரில்லந் தொறுமுய்த்தார்.

1230. (இ - ள்) வெளிப்படை. பசு மேய்க்கும் கோலினையும் கயிற்றினையும் கொண்டு, சிறுபுன் குடுமி அசைய, விளக்கமுடைய மான்றோலும் அதனுடன் பூணூலும் சிறிய மார்பகத்தில் துவளத், திருவரையில் கோவணம் ஒளிவிளங்கப், பாலும் கன்றுகளும் பெருகும்படி வருகின்ற பசுக்களை மேய்க்குந் தன்மையில், மிகவும் புல்லின் அவை வேண்டுமளவும் விரும்பி உண்ணும்படி மேற்சென்று, ௨௫

1231. (இ - ள்) வெளிப்படை. புல் மிகவுள்ள காலங்களில் ஆனிரைகளை மேய்த்துப் புல் உண்ணச் செய்தும், கையாற் பறித்துக் கொடுத்துக் காப்பாற்றியும், அவற்றின் துன்பம் போக்கி, இதமாக நீர் உண்ணத்தக்க நீர்த்துறையுள் நல்ல குளிர்ந்த நீரை உண்ணச்செய்து, அச்சங்களை வாராமல் நீக்கி, நல்லனவாகிய வழிகளில் அவை முன்னே செல்லும்படி விட்டு நிழலில் இளைப்பாறச் செய்து, அமுதமாகிய சுவையுள்ள பாலினைத் தரும் நேரத்தில் தவறாமல் அவற்றினை உடையோராகிய மறையவர்களுடைய மனைகள் தோறும் செலுத்தினார். ௨௬

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1230. (வி - ரை) இப்பாட்டினால் விசாரசருமனார் நிரைகாக்க வந்த திருக்கோலத்தை விரித்துக்காட்டுகின்றார். இதனாலும் மேல்வரும் பாட்டாலும் அவர் பசு மேய்த்த திறத்தினையும் விரித்துக் கூறுகின்றார்.

**கோலும் கயிறும்** - இவை நிரைமேய்த்தலுக்கு உதவுவன. ஆனிரை காப்போர் இந்த இரண்டும் கொண்டு போதல் காண்க.

**கயிறு** - பசுக்களையும் கன்றுகளையும் வேண்டும்போது பிணித்தற்கும், **கோல்** அவற்றைச் செலுத்தற்கும் உதவுவன. முன்னர் ஆ மேய்த்த ஆயனும் கோல்கொண்டு சென்றான் என்பது "எடுத்த கோல்கொண் டவன்புடைப்ப" (1222) என்றதனால் அறியப்படும். "ஆயன்கோல் போடிற், பசுக்க டலைவனைப் பற்றி விடாவே" என்ற திருமந்திரமும் கருதுக. விசாரசருமனார் கொண்ட இந்தக் கோலே பின்னர் மழுவாயிட, அது கொண்டே தாதையினது தாள்களை எறிந்தனர் என்பதும் இங்கு நினைவுகூர்தற் பாலது. "முந்தை மருங்கு கிடந்த கோல்" (1256) என்பது காண்க.

**குழைக்குடுமி - மான்றோல் - நூல் - கோவணம்** - இவை பிரமசரிய நிலையின் விளங்கும் அவரது மேனியிற் கொண்டவை.

**குழைக்குடுமி** - பிரமசாரிகளுக்கு அடையாளமாகிய சிறுபுன்குடுமி. பஞ்சசிகை என்பர். **குழைக்குடுமி அலைய** - சிறுபுன்குடுமி கீழ்த்தாழ்ந்து அசைந்தாட. நூல் விதிதவறிக் குடுமியைக் குறுகக் கத்திரித்துப் பிரமசாரிகள் திரியும் கொடுமை இக்காலத்துக் கோர நாகரிக விளைவுகளுள் ஒன்று.

**மான்றோலும் நூலும் சிறுமார்பில் துவள** - மான்றோலினைப் பூணூலில் முடிந்து கொண்டு தாங்குதல் பிரமசரியத்துக்குரிய வழக்கு. பஞ்சசிகை - மான்றோல்

உபநயனம் என்னும் நெற்றிக்கண் முதலிய அடையாளங்கள் பிரமம் என்னும் சிவத்துவ விளக்கங் குறிப்பன என்பதுபற்றி முன்னுரைத்தவை பார்க்க - (1219).

அரைக்கோவணம் சுடர - அரையிற் கோவணம் பூண்பதுவும் பிரமசரிய வழக்கு. அக்கோவணம் தூயதாய் வெள்ளியதாய் விளங்குவதென்பார் சுடர என்றார். நூல் மார்பிற் றுவள என்றதற்கேற்பக் கோவணம் அரையிற் சுடர என்று கூட்டிக் கொள்க. இதுபற்றித் "தஞ்ச மாமறைக் கோவண வாடையின் றசைவும்" (509) என்றதும், பிறவும், பார்க்க.

பாலும் பயனும் பெருகவரும் பசுக்கள் - பயன் - கன்றுகள். பசுக்காத்துப் பெறும் பயனிரண்டு: அவை பாலும் கன்றும் என்பன. அவற்றுட் பால் - அன்றன்று பெற்றுக்கழியும் தற்காலப்பயன் என்றும், பயன் (கன்று) அவ்வாறன்றி நீடிச்செல்லும் பெரும்பயன் என்றும் கொள்ளப்படும். ஆதலின், ஆனிரைந்திற் சிறந்த பாலினும் கன்றினையே பயன் என்றார். பாலின் பயன் என்பாருமுண்டு.

பாலும் பயனும் பெருக வருதலாவது - இந்த இரண்டும் ஒன்றுஞென்று குறை யாது சமமாகப் பெருகநிற்றல். இக்காலத்துப் பலர், பால் வேண்டிய பேராசையால் கன்றுக்குப் பால்விடாமற் கறந்துகொண்டு கன்றினம் செழிக்கவிடாது பாழ்படுத்துப் பயனின்றாக்குவர். "தோற்கன்று காட்டிக் கறத்தல்" என்ற கொடுங்காட்சியும் இந்நாளிற் காணவுள்ளது !. மற்றும் சிலர் கன்றையே நினைந்து பால் பெறுதொழிவர். இந்த இரண்டுமின்றிப் பாலும் பயனும் என்ற இரண்டு பயன்களும் தக்கபடி பெருகு மாறு பசுக் காத்தல்வேண்டும் என்ற குறிக்கோள் நாட்டப்பட்டது காண்க.

மேய்க்கும் பான்மையினால் - மேய்க்கத்தக்க பரிசினைக் கொண்டமையால். இதனைமேல் விரிக்கின்றார்.

சாலும்...தலைச்சென்று - சாலும் புல் - புல்லின் குணநலமும் அளவின் மிகுதி யும் குறித்தது. வேண்டும் துனையும் - துனை - அளவு. மிசையும் தலைச்சென்று - மிசைதல் - விரும்பி யுண்ணுதல். தலை - இடம். உண்ணும் இடங்களிற் கூடப்போய்ச் சென்று - மேய்த்தும் பறித்தும் - அளித்தும் என்று கூட்டுக. 25

1231. (வி - ரை) தலைச்சென்று - மேய்த்தும் - பறித்தும் - அளித்தும் - பரி வகற்றி - தண்ணீர் ஊட்டி - அச்சம் நீக்கி - என்பன விசாரசருமனார் ஆனிரைமேய்த் துக்காத்த வகையை விரிக்கின்றன.

மேய்த்தும் - பறித்தும் - அளித்தும் - புல் மேய இயலுங்காலத்தில் மேய்த்தும், இயலாதபோது பறித்தும், காத்தும் என்க. மேய இயலாத காரணமாவன மழை பெய்தலாலும் பசுக்கள் உடல் நிலையாலும் நிலத்தின் மேடு பள்ளம் சேறு முதலாகிய இயல்பாலும் பலபுறமும் சென்று மேயக்கூடாமல் இருத்தலும், பயிரிட்ட நிலத்திற் புல் இருத்தலும் முதலியவை.

பரிவு - பசித்துன்பம். "அழிவாம் பசி" (திருநா - புரா - 304).

இதம் உண்துறையுள் நல் தண்ணீர் ஊட்டி - தண்ணீர் குடிக்கும் துறை சேறுடனிருத்தல், இறங்குமிடத்தில் கரையின்றி ஆழமாயிருத்தல், நாணல் முதலிய புதல் இருத்தல், கராம் முதலிய இருத்தல் என இவை போன்ற இடர்கள் இல்லாத துறை. துறைகளைப்பற்றி முன் உரைத்தவை பார்க்க.

நல் தண்ணீர் - அழுகற் பொருள்கள், வண்டல் முதலியன இல்லாத தூயநீர். உண்ணும் துறையாயினும் நீர் நல்லதாய் இல்லாத காலமுமுளது.

எதிர் அச்சம் நீக்கி - என்க. அச்சம் - புலிமுதலியவற்றால் வருவனவும், பகை யரசர் நிரைகவர்தல் முதலியவற்றால் வருவனவும் ஆம்.

**அதர்** - வழி. நல்லன (ஆகிய) அதர், என்க. வழிகள் நல்லனவாதல் - குழி, மேடு, கல், முள், முதலிய இடர்கள் இல்லாமலும், தீயவிலங்குகள் தங்காமலும், நேராகவும் உள்ளமை.

**நீழல் அமர்வித்தல்** - இளைப்பாறி உணவு சீரணிக்கச் செய்து கொள்ளும் பொருட்டு மேய்ந்தவுடன் நிழலில் பசுக்களை அமர்வித்தல் முறை.

**அமுத மதுரப்பால்** - நோய் நீக்கம் செய்தும், உடல் வளர்ச்சிக்கு உதவியும், சுவையுள்ள உணவாகி உதவுவது. **மதுரம்** - சருக்கரை முதலிய வேறொன்றின் சேர்க்கையாலன்றித் தானே சுவையுள்ளது. இவை உலக நிலையின் அளவாற் குறிக்கப்படும் தன்மை. இனி, **அமுதம்** - மரணத்தை நீக்குவது. சிவவேள்விக்குரிய பொருளாய் உதவுதலின் சாவா மூவாச் சிவபதப் பயன் தந்து மக்களை நிலைபேறு பெறச் செய்வது என்பது உயர்ந்த உயிரின் நிலையாற் குறிக்கப்படும் பொருள். இச்சரிதத்தில் நாயனார்க்கு இந்தப் பால்தானே அமுதம் பெறச் செய்வதும் காண்க. "அமுதம் பெறு சண்டி" (தக்கேசி திருநின்றியூர் - 2) என்றது நம்பிகள் தேவாரம்.

**உதவும் பொழுது** - உதவ வேண்டிய காலத்தில்; அஃதாவது - மாலைநேரம்; மாலை வேள்விக்குரிய காலம்.

**உய்த்தல்** - உடையவர் இல்லந்தோறும் பசுக்களைக் கொண்டு செலுத்துதல் ஆ மேய்ப்போர் கடமை.

மேய்த்துப் பறித்தும்—இதமுண்டுறையு நற்றண்ணீர்—என்பனவும் பாடங்கள்.

1232. மண்ணிக் கரையின் வளர்புறவின் மாடும் படுகர் மருங்கினிலுந்,
தண்ணித் திலநீர் மருதத்தண் டலைசூழ் குலையின் சார்பினிலும்,
எண்ணிற் பெருகு நிரைமேய்த்துச் சமிதை யுடன்மே லெரிகொண்டு
நண்ணிக் கங்குன் முன்புகுது நன்னாள் பலவா மந்நாளில். ௨௭

1233. ஆய நிரையின் குலமெல்லா மழகின் விளங்கி மிகப்பல்கி
மேய வினிய புல்லுணவும் விரும்பு புனலு மார்தலினால்
ஏய மனங்கொள் பெருமகிழ்ச்சி யெய்தி யிரவு நண்பகலுந்
தூய தீம்பான் மடிபெருகிச் சொரிய முலைகள் சுரந்தனவால். ௨௮

1232. (இ - ள்) வெளிப்படை. மண்ணியாற்றின் கரையில் வளரும் (முல்லைப்) புறவின் பக்கத்திலும், படுகர்களின் பக்கத்தும், குளிர்ந்த முத்துக்களைக் கொழிக்கும் மருதநிலத்துச் சோலைகள் சூழ்ந்த கரைகளின் பக்கத்திலும், மேன்மேல் வளர்ந்து பெருகும் ஆனிரைகளை மேய்த்துச் சமிதையுடன் மேல் எரியினையும் கொண்டு பொருந்தி இரவு வருமுன்பு புகுகின்ற நல்ல நாள்கள் பலவாம்; அந்நாள்களில், ௨௭

1233. (இ - ள்) வெளிப்படை. அவ்வாறாகிய ஆனிரையின் கூட்டமெல்லாம் அழகுடன் விளங்கி மிகவும் பெருகி, மேவிய இனிய புல்லுணவும் விரும்பும் தண்ணீரும் நிறைய உண்ணப்பெற்ற காரணத்தால், எய்திய மனத்திற்கொண்ட பெருமகிழ்ச்சி பொருந்தி இரவிலும் நண்பகலிலும் தூய இனிய பாலினை மடிகள் பெருகிச் சொரியும் படி முலைகள் சுரந்தன. ௨௮

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

1232. (வி - ரை) **புறவின் மாடும் - படுகர் மருங்கும் - குலையின் சார்பினிலும்** - இவை விசாரசருமனார் ஆனிரைகளை மேய்த்த இடங்களைக் குறித்தன. **புறவு** - மருதத்தையும் ஆற்றின் கரையினையும் அடுத்த முல்லைப் புறவு. பசுக்கள் முல்லை நிலக்

கருப்பொருள். "முல்லையின் தெய்வமென் றருந்தமி ழுரைக்கும்" (1095) திருமால் கோபாலனாகப் பசுக்காத்த செய்தியும் காண்க. (குறிஞ்சியின் ஆறுகள் மலையின்வீழருவிகளாதலானும் குறிஞ்சி நிலம் மேடுபள்ளமிக்குள்ள மலைச்சரிவுகளாதலானும் பசு மேய்தற்குரியனவல்ல).

**படுகர் மருங்கு** - ஆற்றோரத்தில் வண்டற்சேர்க்கையாற் கூடிய பள்ள நிலம். படுகர் எனப்படும். இவை நீர்க்கரையில் உள்ளனவாதலாற் புல்லும் செடிகளும் மிக உள்ள இடங்களாம்.

**மருதத் தண்டலை சூழ் குலையின் சார்பு** - மருதநிலத்திற் செழித்த நீர் வளத்தால் சோலைகள்மிகும்; அவற்றின் சார்பாய்க் கரைப்பரப்பாகிய நிலங்கள். இவையும் ஆக்கள் மேய்தற்குரிய பசும்புற் பரப்புடையன. குலை - கரை.

எனவே இம்மூன்று வகையான இடங்களும் ஆனிரை மேய்தற்கென்று வசதிகள் பெற்றவை; நகரின் அணிமையிலும் உள்ளவை.

இவ்வாறாகிய மேய்ச்சனிலங்கள் ஒவ்வோர் ஊர்களின் சுற்றும் ஒதுக்கி வைக்கப் பட்டும், அதனால் ஆனிரைகள் செழித்தும், அதனால் மக்கள் சுகமுற வாழ்ந்தும் வந்தது முன்னாளில் நம்நாட்டு மக்களின் சமூக வாழ்க்கையில் கண்ட நல்வழக்காகும். இவை இந்நாளின் மக்களின் பேராசையின் பயனாக மாறிப்போய், இதற்குரிய எல்லாப் பொது நிலங்களும் மக்கள் தனிவசப்பட்டுப்போக, ஆனிரைகள் மேய்தற்கு இடமில்லாது நலிவு அடைந்து குறையக் காண்பதும் அதனால் மக்களின் உடற்சுகமும் உயிர்ச் சுகமும் குறைந்துவரக் காண்பதும் புது நாகரிக விளைவாகிய கேடுகளுட் சிலவாம். இதனை மக்கள் கண்டு கருதித் திருந்த ஒழுகுதல் நலம்தரும்.

**மாடும் - மருங்கினிலும் - சார்பினிலும்** என்றவற்றால் பசுக்கள், புறவு - படுகர் - தண்டலை சூழ்குலை - இவற்றுக்குட்சென்று கேடுபடாமலும் கேடுவிளைக்காமலும் பக்கங்களில் மேய்க்கப்பட்டன என்பதாம். இதுவும் சமூக நல் வழக்குக்களுள் ஒன்று என்க.

**எண்ணிற் பெருகு நிரை** - பயன் என்னுங் கன்றுகள் பெருக உளவாதல் கருதி எண்ணிற் பெருகும் என்றார்.

**சமிதையுடன் மேல் எரி கொண்டு** - நிதமும் சமிதையும் எரியும் சேகரித்து மனைக்குக் கொண்டுவருதல் மறையவரிலும் பிரமசாரிகளின் கடமைகளுள் ஒன்று. **சமிதை** - மனையிற் செய்யப்படும் நித்திய வேள்விக்குதவுவன. **எரி** - இங்கு (வேள்விக்காக) எரிகடையும் மரக்கோல் (அரணி) குறித்தது. ஆகுபெயர். "எரிகடையு மரணி" (794) "தீக்கடைகோல்" (793) என்றவை காண்க.

**கங்குல்முன் புகுதும்** - பசுக்களும் மனைக்கு மாலைப்போதில் மாலை வேள்விக் குதவும்பொருட்டு இரவு புகுமுன்பு திரும்பிவிடுதல் முறை என்பதாம்.

**நன்னாள்** - நிரைகாக்கு மிந்நாள்களே மன்றுளாடுஞ் சேவடிகள் வழுத்தும் சிவநெறியிற் செல்வதற்குரியனவாதலின் இவையே நன்னாள்களாயின என்பதாம். "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" முதலிய தமிழ்மறைத் திருவாக்குக்கள் காண்க.

அந்நாளில் - எய்தி - பால் - பெருகி - சுரந்தன என்று வரும்பாட்டுடன் முடிக்க.

1233. (விரை) **ஆய** - மேற்சொல்லியபடி காப்பாற்றப்பட்டனவாகிய.

**அழகின் விளங்கி மிகப்பல்கி** - நல்ல புல்லுணவும் நன்னீரும் பெற்று அச்சமின்றிச் செழித்து மனமகிழ்வுற்றிருந்தனவாதலின் பசுக்கள் உடல் செழித்து அழகாய் விளங்கின என்க. **பல்கி** - மிகுந்து இனம்பெருகி. **மேய** - மேவிய - பொருந்திய. **மேய இனிய** - மேய்வதற்கு இனிமையாகிய என்று கொள்வதுமொன்று.

**ஆர்தல்** - நிறைய உண்ணுதல். "அமலைக் கொழுஞ்சோ றார்ந்த பாணர்க்கு" (புறநா - 34 - 14).

**ஏய** - ஏய்தல் - பொருந்துதல். மனங்கோள் ஏய பெருமகிழ்ச்சி என்க.

**மனங்கோள் மகிழ்ச்சி எய்தி** - பசுக்கள் மேற்கூறியபடி நன்றாய் அன்புடன் பாதுகாக்கப்படின் மனமகிழ்ச்சி யடைவன; மகிழ்ச்சி அடையவே பால்நிறையக் கறப்பன என்பது உயிர்வருக்கநூற் றுணிபு. சில பசுக்கள் கீதம் பாடக்கேட்டு மன மகிழ்ந்து மிக்க பால் கறக்குமென்பதும் அந்நூலோர் கண்ட உண்மைகளுள் ஒன்று. பசு மேய்க்கும் இடைமகனை வந்த கோபாலனைக் குழல் ஊதுபவனாகக் (வேணுகோபாலன்)கூறுவதும் இக்கருத்துப்பற்றியதேயாம். பசு மேய்ப்போர் குழலூதும் வழக்கமும், ஆனாய நாயனார் சரித வரலாறும் கருதுக. "கனைத்த மேதி காணா தாயன் கைமேற் குழலூத, வனைத்துஞ் சென்று திரளும் சார லண்ணா மலையாரே" (தக்கேசி - 6) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரமும் காண்க. "ஆடிக் கறக்கும் பசுவை ஆடிக்கற; பாடிக் கறக்கிறதைப் பாடிக்கற" என்ற முதுமொழிக்கருத்தும் கருதுக.

**மகிழ்ச்சியினால் மடிபெருகி** - முலைசுரந்தன என்று கூட்டுக. மடிபெருகினும் கன்றுகள் வாய்வைத்து உண்ணுதபோது முலைசுரத்தல் பெரும்பான்மையில்லையாம். கன்றின்மேல் பசுக்கள் கொண்ட அன்பாகிய இன்பநிலை காரணமாகவே முலைசுரத்தல் நிகழும். பசுக்கள் கன்றின்மேல் வைக்கும் அன்பாகிய வாத்சல்யம் என்பது இறைவன் உயிர்கள் மேல் வைக்கும் அருளுக்கு உவமிக்கப்படும். அதனாலே இறைவன் பக்த வச்சலன் எனப்படுவார். மேல் விசாரசருமரைக் கண்டு தாய்போன்ற தன்மை கொண்டு கறவாமே பால் பொழியவும், அதனால் இச்சரித விளைவுக்குக் காரணமுண்டாகியதும் ஆகியவற்றின் உள்ளுறை இங்குத் தொடங்கி விளக்கப்பட்டதும் கருதுக.

**இரவும் நண்பகலும்** - பால் கறந்துவிட்ட மடி மீளவும் பால்பெருகிச் சுரக்க உள்ள இடைக்காலங்கள்.

**முலைகள் தீம்பால் சோரியச் சுரந்தன** என்க. தூய்மை உடற்சுகம் தரும் தன்மை. **தீம்** - இனிமை. "நெருநலும் தீம்பல மொழிந்த" (அகநா - 239). இது சுவையால் இனிதாந் தன்மை.

எய்த இரவும் நன்பகலும்—என்று பாடங் கொள்வாருமுண்டு. 28

1234. பூணுந் தொழில்வேள் விச்சடங்கு புரிய வோம தேனுக்கள்
காணும் பொலிவின் முன்னையினு மநேக மடங்கு கறப்பனவாய்ப்
பேணுந் தகுதி யன்பாலிப் பிரம சாரி மேய்த்ததற்பின்
மாணுந் திறத்த வானவென மறையோ ரெல்லா மனமகிழ்ந்தார். உகூ

(இ - ள்) வெளிப்படை. மறையவர்கள் எல்லாரும் தாம் மேற்கொள்ளும் தொழிலாகிய வேள்விச்சடங்கு செய்வதற்கு உதவும் ஓமப் பசுக்கள், கண்ணால் நேரே காணுமாறு மிக அழகுடன் விளங்கி முன்னையினும் அநேக மடங்கு பால்கறப்பனவாய், பசுக்காக்கும் முறையில் தகுதியுடன் அன்பினால் இந்தப் பிரமசாரி மேய்த்த தற்பின் மாட்சிகொண்ட தன்மையுடையவாயின என்று மன மகிழ்ந்தார்கள்.

(வி - ரை) **பூணும் தொழில் வேள்வி** - மறையோர் தமது மரபுரிமையாக மேற்கொள்ளும் தொழிலாகிய வேள்வியில். அறுதொழில்களுள் வேட்டல் ஒன்றாகி மறையோரது நியமமாதலிற் **பூணும்** என்றார்.

**ஓமதேனு** - 1210 பார்க்க.

**காணும் பொலிவின்** - வெளிப்படையாகக் கண்ணாற்கண்டு களிக்கும் அழகினுடன்.

**முன்னையினும் அநேக மடங்கு கறப்பனவாய்** - இதற்குக் காரணம் முன்பாட்டில் மடிபெருகி என்றதனால் உரைக்கப்பட்டது.

**பேணும் தகுதி இப்பிரமசாரி அன்பால் மேய்த்ததற்பின்** - என்க.

**பேணும்தகுதி** - பசுக்காத்தற்குத்தக்க தன்மை. இதனை முன், "மேய்க்கும் பான்மை" (1230) என்றார். இத்தகுதிக்குரிய செயல்கள் 1230 - 1231-ல் உரைக்கப்பட்டன. **அன்பால்** - பசுக்கள் செழித்து மனமகிழும்படி மேய்ப்பதற்கு இன்றியமையாத சாதனம் அவற்றினிடத்து அன்புடைமையேயாம் என்ற துணிபை வற்புறுத்திய வாறு காண்க. இதனை முன்னர் "மிகும்பரிவால்" (1232) என்றதும் காண்க.

**இப்பிரமசாரி** - விசாரசருமனார் தம்முள் ஒருவராயிருத்தலின் இ என்ற அண்மைச் சுட்டினாற் குறித்தார்கள்.

**மாணும் திறத்த ஆன** - மாண்பு பொருந்திய தன்மையுடையனவாயின. மாண்பாவது அழகுடைமையும் மனமகிழ்ந்து பால் அதிகம் தரும் தன்மையுமாம். **ஆன** - ஆயின. ஆயன் மேய்த்தபோதில்லாத மாண்பு இப்போது உளதாயிற்று என்பார் **மேய்த்ததற்பின்** - ஆயின என்றார்.

**மறையோர்** - பசுக்களை உடையவர்கள். 1233-ல் பசுக்கள் ஏய மனங்கொள் பெருமகிழ்ச்சி எய்தினதைக் கூறினார்; இங்கு அவற்றின் மகிழ்ச்சிகண்டு அவற்றாற் பெறும் வேள்விச் சிறப்பு நோக்கி மறையோரும் மனமகிழ்ந்தமை கூறினார்.

**எல்லாம்** - எல்லாரும். முற்றும்மை தொக்கது. கறப்பனவாய் - மாணுந்திறத்த ஆயின என்று கூட்டுக. 29

1235. அனைத்துத் திறத்து மானினங்க ளணைந்த மகிழ்ச்சி யளவின்றி
மனைக்கட் கன்று பிரிந்தாலு மருவுஞ் சிறிய மறைக்கன்று
தனைக்கண் டருகு சார்ந்துருகித் தாயாந் தன்மை நிலையினவாய்க்
கனைத்துச் சுரந்து முலைக்கண்கள் கறவா மேபால் பொழிந்தனவால்.

(இ - ள்) வெளிப்படை. எல்லாவகையாலும் ஆனினங்கள் கொண்ட மனமகிழ்ச்சி அளவில்லாமல் வீட்டில் உள்ள தமது கன்றுகளைப் பிரிந்தாலும், தம்முன் மருவிய சிறிய மறைக்கன்றாகிய விசாரசருமரைக் கண்டு அருகே யடைந்து உருகி, அக்கன்றுக்குத் தாம் தாயாகிய தன்மையுள்ள நிலையினை அடைந்தவைகளாகக் கனைத்துக்கொண்டு மடிசுரந்து முலைக்கண்களினின்றும் கறவாமலே பாலினைப் பொழிந்தன.

(வி - ரை) **அனைத்துத்திறம்** - முன் 1233-ல் உரைக்கப்பட்டவை.

மகிழ்ச்சி அளவின்றி - கண்டு - சார்ந்து - உருகி - நிலைமையவாய் - கனைத்து - சுரந்து - பால் பொழிந்தன - என்று முடித்துக்கொள்க.

**மனைக்கட்கன்று பிரிந்தாலும் - மறைக்கன்று தனைக்கண்டு** - பிரியத்தரியாத தமது கன்றுகளை மனைக்கட்பிரிந்து தாம் தனியே மேய்வதற்கு வந்த போதிலும், அதனால் வருந்தாது, விசாரசருமரைத் தம்கன்றாகவேகண்டு. **மருவும்** - தம்முடன் மருவியிருக்கும். விசாரசருமனார் பசுக்களின் கூடவேயிருந்து பேணிய தன்மைகுறித்தது. "கன்றகல் புனிற்றாப் போல்வர்" (761) என்றபடி கன்றினைப் பிரிந்த பசுக்கள் இயல்பாய் வருந்தல் வேண்டுமாயினும், இங்கு அதற்குமாறாக வருந்தாதிருந்ததுடன், அன்பு பெருக நின்று மடி சுரந்து பாலும் பொழிந்தன என்னில், இதுவும் இயற்கைக்கு மாறன்று, இங்கும் ஒரு அன்புமிக்க கன்றிருந்ததாகலின் என்றதாம்.

**சிறிய மறைக்கன்று** - சிறுமை பிராயத்தாலும் உருவத்தாலும் காணப்பட்டது. "அச்சிறிய பெருந்தகையார்" (திருஞான - புரா - 73) முதலியவை காண்க. பசுக்கள்

அவரைத் தம்கன்றாக எண்ணியமையால் மறைக்கன்று என்றார். மறையோர்குழவி என்ற பொருளும் தோன்ற நின்றது. கன்றுபோல்வாரைக் கன்றுஎன்றது இலக்கணை.

பிரிந்தாலும் - கண்டு என்க. தமது கன்றாகவே கண்டு.

தாயாம் தன்மைநிலைமையவாய் - அருகு சார்தல் - உருகுதல் - கனைத்தல் - முலை சுரந்து பால் பொழிதல் என்ற இவை தாய்ப்பசுக்களின் தன்மை. நிலைமைய ஆய் - நிலைமையை அடைந்தனவாகி. நிலைமை அவாய் - என்று பிரித்துத், தமது கன்றினுக்குத் தாயாயிருப்பதனுடன் இந்தக்கன்றினுக்கும் தாயாகியிருக்கும் நிலைமையை விரும்பி - ஆசை கொண்டு - என்றுரைக்கவும் நின்றது. அவாய் - அவாவி - விரும்பி. மனைக்கட் கன்று - தம்மால் ஊட்டி வளர்க்கப்படும் கன்று; மறைக்கன்று - தம்மை அன்புடன் ஊட்டி வளர்க்கும் கன்று என்று கொண்டன என்பதாம். "ஏய மனங்கொள் பெருமகிழ்ச்சி யெய்தி" (1233) என்றது காண்க.


தாயாந்தன்மை நிலைமையில் முலையினின்றும் பால் பொழிதல் உளதாகும் என்பதனை ஆளுடைய பிள்ளையாரது நிலையினைக் கேட்டவுடன் தமது தனபாரங்களிற் பால் சுரந்து நின்ற மங்கையர்க்கரசி யம்மையாரது வரலாறு முதலியவற்றாலுமறிக. "முன்னின் - நிலைவிளம்பக், கொங்கை சுரந்தவருட் கோமகள்" என்றார் சிவப்பிரகாச முனிவர் (நால்வர்நான்மணிமாலை). "பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த, தன முடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த, மனமுடையா ளன்பிருந்த வாறு" (திருக்களிறு - 54) என்றது ஞானசத்திரம்.

கறவாமே பால் பொழிந்தன - கன்றினை நினைந்தபோதும் கண்டபோதும் கறவாமலே பால் பொழிதல் மிக்க அன்பினுக்கும் பாற்செழிப்புக்கும் அடையாளம். இத்தகைய பசுக்களை இந்நாளிலும் காணலாகும். கறவாமே பால் பொழிந்த இந் நிகழ்ச்சியே இச்சரித விளைவுக்குத் தொடக்கமாம். இத்திருப்பாட்டு இப்புராணத்தினுள் சரிபகுதியில் அமைந்த அமைப்பும் காண்க.

பொழிந்தனவால் - ஆல் - அசை - அதிசயக் குறிப்புப்பட நின்றது. முன்னர் 1233ல் முலைகள் சுரந்தனவால் என்றார். அங்குத் தம் கன்றுகள் வாய் வைத்து உண்ணுமாறு சுரந்த மட்டில் நின்றன; இங்குப் பொழிந்தன எனச் சுரந்த மட்டில் அமையாது முலைக்கண்களினின்றும் வெளிப்படப் பால்சொரிந்தன என்று கூறியதும் மனைக்கன்றுக்கும் மறைக்கன்றுக்கும் பசுக்கள் கொண்ட வேறுபாடு குறித்தது. அன்றியும், முன்னைய நிலை, மனங்கோள் பெருமகிழ்ச்சியால் நிகழ்ந்ததாகப், பின்னையது அந்த மகிழ்ச்சி அளவின்றிப் பெருகியதால் ஆகியது என்பதும் காண்க. பின்னரும் செழும்பால் பொழிந்தன (1239) என்றதும் கருதுக. இவ்விடங்களில் ஆல் என்ற ஓரே அசைமொழி தந்தோதியதும், சுரத்தல் பொழிதல் என்ற இரண்டும் கன்றின் மேற் கொண்ட அன்பு ஒன்றே பற்றியது என்று காட்டுதற்காமென்க. 30

1236. தம்மை யணைந்த வான்முலைப்பால் தாமே பொழியக் கண்டுவந்து
செம்மை நெறியே யுறுமனத்திற் றிருமஞ் சனமாங் குறிப்புணர்ந்தே
எம்மை யுடைய வள்ளலா ரெய்த நினைந்து தெளிந்ததனில்
மெய்ம்மைச் சிவனார் பூசனையை விரும்பும் வேட்கை விளைந்தெழலும்,


1237. அங்கண் முன்னை யர்ச்சனையி னளவின் றொடர்ச்சி விளையாட்டாப்
பொங்கு மன்பான் மண்ணிமணற் புளினக் குறையி லாத்தியின்கீழ்ச்
செங்கண் விடையார் திருமேனி மணலா லாக்கிச் சிவாலயமுந்
துங்க நீடு கோபுரமுஞ் சுற்றா லயமும் வகுத்தமைத்தார். ௬௨



சேய்ஞலூர் (முழுப்பார்வை) சேய்ஞலூர் கோயில்




1 2



மண்ணியாற்றின் கரை திருஆப்பாடி கோயில்

—பாட்டு - 1237 - பக்கம் - ௩௮



3 4

1. திருச்சேய்ஞலூர் கோயிலும் குளமும் (பின்புறம்)
2. திருஆப்பாடி (முன்புறம்) 3. திருஆப்பாடி கோயிலும் திருஆத்தியும்
4. திருஆப்பாடி சண்டீசர் கோயில்

1236. (இ-ள்) வெளிப்படை. தம்மை அணைந்த பசுக்கள் முலைப்பாலினைக் கறவாமல் தாமே பொழியக் கண்டு மகிழ்ந்து, செம்மை நெறியிலே உற்ற தமது திருமனத்தில் அந்தப்பால் சிவபெருமானுக்குத் திருமஞ்சனமாகும் குறிப்பினை உணர்ந்தே, எம்மை ஆளுடைய வள்ளலாராகிய விசாரசருமனார், பொருந்தும்படி நினைந்து, தெளிந்து, அத் தெளிவினுள்ளே சிவனாரது உண்மையாகிய பூசையை விரும்பும் வேட்கை விளைந்து எழுந்ததாகவே, ருக

1237. (இ - ள்) வெளிப்படை. அவ்விடத்து, அர்ச்சனையினது முன்னாளிற் செய்த தொடர்ச்சி அளவிற் சிறுவர் விளையாட்டாக உருக்கொண்டு பொங்குகின்ற அன்பினாலே, மண்ணியாற்றின் மணற்றிடரில், ஆத்திமரத்தின் அடியில், செங்கண் விடையினையுடையாரது திருமேனியாகிய சிவலிங்கத்தை மணலினாலே உளதாக்கிச் சிவாலயமும், பெரிய நீண்ட கோபுரமும், சுற்றாலயமும் வகுத்து அமைத்தனர். ருஉ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1236. (வி - ரை) தம்மை அணைந்த - வள்ளலார், தம்மை அணைந்த என்று கூட்டித் தொடங்கிக் கொள்க. அணைந்த - கண்டு அருகு சார்ந்து என்று முன் பாட்டிற் கூறியபடி அணைந்த.

தாமே - பிறர் எவரும் கறவாமல் தாமே. "கறவா மேபால் பொழிந்தனவால்" (1235) என்றது காண்க.

செம்மை நெறி - சிவநெறி - முத்திநெறி. செம்மை நெறியே உறும் மனம் - சிவத்தன்மை பெறுதற்காகிய வழியிலே சென்ற மனம். சிவபூசையே முத்திக்குச் சாதனமாமென்று தெளிந்த மனது. இதுவே செந்நெறி எனவும்படும்.

மனதில் திருமஞ்சனமாம் குறிப்பு உணர்ந்து - செம்மைநெறியே உறும் மனம் ஆதலின் அதனுள் அருளால் முன்சென்ம வாசனைப்படி ஒரு குறிப்பு எழுந்ததாக, அதனை உணர்ந்து. செம்மைநெறி உறுதல் குறிப்பு எழுதற்குக் காரணமாய் நின்றது என்பது குறிக்க அதனை உடம்பொடு புணர்த்தி ஓதினார். ஏனையோர்க்கு அவ்வாறு குறிப்புத் தோன்றாது என்பதாம்.

வள்ளலார் - தம்மை யடைந்தோர் யாவர்க்கும் சிவபூசைப் பயனாகிய, தாம் பெற்ற, பேரின்பத்தை வரையாது கொடுத்தலின் வள்ளலார் என்றார். எம்மையுடைய என்ற கருத்தும் அது; எம்மைத் தமது அடிமையாகக் கொண்டு ஆள்கின்ற - ஆளாகவுடைய.

எய்த நினைந்து - பொருள்முடிவுபெறப் பொருந்த நினைந்து. நினைதல் - சிந்தித்தல் - ஆராய்தல். தெளிதல் - துணிதல்.

நினைதலாவது - உடையவர்களின் சம்மதமின்றி இது செய்யலாவதோ? என்றும், வேள்விக்காகும் பொருளைப் பிறிதொன்றிற் பயன்படுத்தலாகுமோ? என்றும், இவ்வாறு பலவும் எண்ணுதல். தெளிதலாவது உடையவர் சம்மதமின்றியே பசுக்கள் தாமே பால்பொழிதலானும், இவ்வாறு செய்யாவிடின் அந்தப் பால் வேள்விக்கும் உதவாது வீணே நிலத்திற் கழியுமாகலானும், இறைவனைத் திருமஞ்சனமாட்டுதலும் சிவவேள்வியே யாமாகலானும், பிறவாற்றானும் இதுவே தக்கதென்று துணிதல்.

அதனில் - அக்குறிப்பினைத் தெளிந்த அதனுள்; தெளிவினுள்ளே. அதனில் - எழலும் என்று கூட்டுக. தெளிந்தது என வினையாலணையும் பெயராகக் கொண்டு உரைத்தலுமாம். தெளிந்ததனால் என ஏதுப்பொருள் கொள்வதுமொன்று.

செம்மை நெறியே...குறிப்பு - முன் தொடர்ச்சியினால் செம்மை நெறி உறும் மனம் பெறும் விதியில்லாத ஏனையோர், பாலினைக் கண்டபோது, அது தமக்கும் மகார்க்கும் பிறர்க்கும் நல்ல உணவுப்பண்டமாகும் என்ற குறிப்பினையே உணர்குவர்.

இன்னும், முன் தொடர்ச்சியினால் தீமைநெறியே உறும் மனங்கொண்ட விதியுடையோர் திருமஞ்சனத்துக்கு அமைத்த பாலினையும் அது மக்கட்குதவாமல் வீணே கழிகின்றது என்று வாதாடிக் கழிந்து நிரயத்துக்காளாகுவர். இவ்வாறுளாரையும் காண்பது இந்நாட் கொடுமைகளுள் ஒன்று. காதற்ற ஊசியைப் பட்டினத்தார் பொதிந்து பெட்டியில் வைத்திருக்கக் கண்டபோது, பிறரெல்லாம் காதறுந்த ஊசியேயாயினும், வேறு எப்பொருளேயாயினும், இவ்வாறு காப்பாற்றப்படுதல் வேண்டும் என்ற குறிப் புணர்வாராக, எமது பெருமகனாராகிய பட்டினத்தடிகள் "காதற்ற ஊசியும் வாராது கூடக் கடைவழிக்கே" என்ற உண்மையினை அதனுட்கண்டு ஒன்பது கோடி பொருளையும் ஒரே நொடியில் துறந்து தவராச சிங்கமாயினர் என்ற வரலாறும் இங்கு நினைவுகூர்தற்பாலது.

சிவனார் மெய்ம்மைப் பூசனையை என்க. மெய்ம்மையாவது எவ்வாற்றானும் பொக்கம் ஒன்றுமில்லா திருத்தல். "நெக்கு நெக்கு நினைப்பவர்" என்பது முதலிய திருவாக்குக்கள் இங்குக் கருதற்பாலன. சிவனையே குறிக்கோளாகக் கொண்டு குறிவைத்த பூசை. "குறித்த பூசை" (1241), "ஒன்றுமுள்ளத் துண்மையினால்" (1252) என்பன காண்க.

சிவனார் - சிவபெருமானே முழுமுதற் கடவுளாவார் என்பது குறிப்பு. பூசனை - திருமஞ்சனமாட்டுதல் முதலிய பூசையின் எல்லா உறுப்புக்களின் தொகுதி குறித்தது.

விரும்பும் வேட்கை விளைந்து எழலும் - மனத்தின்கண் பூசனையையே விரும்புகின்ற ஆசை. முன்னைப்பிறவியின் விளைத்த வாசனையாகிய விதையினின்று முளைத்தெழுந்து மேன்மேல் வளர்ந்து எழுந்ததனால் விளைந்து எழ என்றார். "முகைத்த மலரின் வாசம்போல்" (1218), "பண்டைப் பரிவால்" (1240) முதலியவையும், "விளைத்த அன்பு" (772) என்றதும் பார்க்க.

விரும்பும் வேட்கை - விருப்பமானது முற்றிய நிலையில் வேட்கை எனப்படும்.

விரைந்தெழலும்—என்பதும் பாடம். 31

1237. (வி - ரை) அர்ச்சனையின் முன்னைத் தொடர்ச்சி யளவில் அங்கண் விளையாட்டா என்க.

விளையாட்டாப் பொங்கும் அன்பால் - முன்னைப் பிறவி வாசனையாகிய அர்ச்சனையின் தொடர்ச்சி இப்பிறப்பில் சிறுவர் மணற்கூட்டி விளையாடும் விளையாட்டு என்ற உருவத்தில் வந்தது என்பதும், அவ்வாறு வரினும் அது உள்ளே நிறைந்து பொங்கும் அன்பினால் ஆகியது என்பதும் ஆம்.

மணற் புளினக்குறை - மணற்றிடர் - திட்டை - திடல்.

செங்கண் விடையார் திருமேனி மணலால் ஆக்கி - "தாபர சங்க மங்களென்றிரண டுருவி னின்று, மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன்" (சித்தியார்-228) என்ற இடத்து "சதாசிவ தத்துவத்தின் வைகும் இறைவன், புறத்தே திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனியும் திருவேடமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டுநின்றும் ஈண்டுள்ளார் செய்யும் பூசை கொண்டருளுவனுகலான், அஃதறிந்தவ்விடங்களின் வழிபடுக" என விதிக்கப்படுதலின் அவ்விரண்டனுள் இங்கு விசாரசருமனார் திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியாகிய இலிங்கத் திருமேனி கண்டு வழிபடலாயினர் என்றும், அவ்வாறு சிவலிங்கத் திருமேனி காண்பதில் மண் - உருத்திராக்கமணி - சந்தனம் - முதலிய பலவற்றானும் சிவலிங்கம் ஆக்கிக்கொண்டு பூசிக்கலாமென்று விதியிருப்பதனால் அவற்றுள் மணலாலாக்கிக் கண்டனர் என்றும் கொள்க.

திருமேனியாக்கிச் சிவாலயமும் - கோபுரமும் - சுற்றாலயமும் வகுத்தமைப்பார்- சிவலிங்கத்தை முன்னர் அமைத்து வைத்துக்கொண்டு, பின் அதற்கு ஏற்றவாறு சிவா

லயமும் கோபுரமும் சுற்றாலயமும் பிறவும் அமைக்கவேண்டுவது முறை என்றும், இப்படிக்கன்றி முன்னர் ஆலயம் கோபுரம் முதலியவற்றை அமைத்துக் கொண்டு பின்னர் அதற்குச் சிவலிங்கம் அமைத்தல் தகுதியன்றென்றும் கருதவைத்த முறை காண்க.

**கோபுரமும் சுற்றலயமும் வகுத்தமைத்தார்** என்றதனால்,சிவலிங்கம் தாபித்தபின், அதற்குரிய சிவாலயமும் கோபுரமும் முதற்கண் இன்றியமையாது வேண்டப்படுவன வென்றும், சுற்றாலயம் அவற்றின் பின்னரே அமைக்கத்தக்கது என்றும் குறித்தபடி.

**சிவாலயம்** - சிவலிங்கப் பெருமானுக்குரிய ஆலயம். **சுற்றலயம்** - பரிவார மூர்த்திகளெனப்படும் விநாயகர் முருகர் நந்தி தக்ஷிணாமூர்த்தி சண்டேசர் வைரவர் சூரிய சந்திரர் முதலிய மூர்த்திகளுக்குரிய இடம். இவை முதற்சுற்றில் இருக்கத்தக்கன.

இந்தச் சிவலிங்கமூர்த்தியும் சிவாலயமும் இப்போது **திருவாப்பாடி மூர்த்தியும், திருக்கோயிலுமாக** அமைந்துள்ளன.

**துங்கநீடு** என்றது பெருமையால் என்றும் நீடியுள்ள என்று குறிப்பதாம்.

**ஆத்தியின் கீழ்** - இந்த ஆத்திமரம் இப்போது திருவாப்பாடிக் கோயிலினுள் தென் மேல்பாகத்தில் உள்ளது. இது காட்டாத்தி என்ற வகையுட்பட்டது. இது போலவே சிறுத்தொண்ட நாயனாருக்கு அருள்புரிய வந்த உத்தராபதியார் திருச்செங்காட்டங்குடி ஆலயத்தில் "வண்ணமலராத்தியின்கீழ்" எழுந்தருளியிருந்த அந்த மரமும் இப்போது தரிசிக்க உள்ளது. 32

1238. ஆத்தி மலருஞ் செழுந்தளிரு முதலா வருகு வளர்புறவிற்
பூத்த மலர்க டாந்தெரிந்து புனிதர் சடிலத் திருமுடிமேற்
சாத்த லாகுந் திருப்பள்ளித் தாமம் பலவுந் தாங்கொய்து [தார். ௩௩
கோத்த விலைப்பூங் கூடையினிற் கொணர்ந்து மணந்தங் கிடவைத்

(இ - ள்) வெளிப்படை. ஆத்திமலரும், செழுந்தளிரும் முதலாகப், பக்கத்தில் வளர்கின்ற (முல்லைப்) புறவினிற் பூத்த மலர்களுள்ளே தாமே தெரிந்து புனிதராகிய சிவபெருமானுடைய சடையுடைய திருமுடியின்மேல் சாத்துதற்காகும் திருப்பள்ளித் தாமங்கள் பலவற்றையும் தாம் கொய்து இலைகளாற் கோத்துவைத்த பூங்கூடையினிற் கொண்டுவந்து வாசனை (வெளிப் போகாது) தங்கும்படி வைத்தனர்.

(வி - ரை) **சாத்தலாகும் திருப்பள்ளித்தாமம் பலவும்** - இங்கு, விசாரசருமனார், இறைவனார் பூசைக்கு ஆகம விதிப்படி சாத்தக்கூடியனவாக விதிக்கப்பட்ட மலர், தளிர் முதலியவற்றைத் தெரிந்து எடுத்தனர் என்றும், அவை ஆத்தி முதலிய மலர்களென்றும் செழுந்தளிர்களென்றும், அவை அங்கு அருகில் முல்லைப்புறவில் தம்மியல்பால் வளர்ந்து பூத்தன என்றும் கூறப்பட்டது. **ஆத்தி** - திருவாத்தி என்று கூறுப.

**அருகு வளர் புறவு** - பக்கத்தில் இயல்பாய் வளர்ந்த முல்லைப்புறவு. "மண்ணிக் கரையின் வளர்புறவின் மாடு" (1232) என்றது பார்க்க. சேய்ஞலூர் உள்ளது மருத நிலமேயாயினும், ஆமேய்க்குமிடங்கள் முல்லைப் பகுதிக்குரியன என்பதும், ஆமேய்த்தல் முல்லைத் திணைக்குரிய பகுதி என்பதும், அமைவன ஆதலின், இங்கு விசாரசருமனார் மலர்பறித்தது அருகேவளர்ந்ததும் தாம் ஆக்களை மேய்த்த நிலமும் ஆகிய முல்லைப் புறவின் சார்பு என்று கொள்க.

**புறவிற் பூத்த மலர்கள்** - மனிதரால் வளர்க்கப்பட்ட நந்தனவன முதலியன வற்றிலன்றி இங்கு நாயனார் எடுத்தவை புறவில் இயற்கையில் வளர்ந்த மரம் செடிகளிற் பூத்த மலர்களாம். இது புண்ணிய நிலமாகிய நமது தென்திசைத் தேசத்திற்குரிய பெருமைகளுள் ஒன்று. இதுபற்றியே "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு

நீருண்டு" என்று திருமூலர் வகுத்தோதியதும், "பூச னைக்குப் பொருந்து மிடம்பல, பேசி லத்திசை யொவ்வா பிறதிசை" (46) என்று முன்னர் வகுத்ததும் கருதுக. நந்தன வனங்களின் அமைவுபற்றி (240) லும், திருப்பள்ளித்தாமங் கொய்து சேர்க்கு முறைபற்றி (559)லும் கூறிய ஆசிரியர் இங்கு அவ்வாறு அமையும் நந்தவனமில்லாத போதும் சிவபூசை செய்யச் சாதனம் தேடும் முறைபற்றி அறிவிக்கும் பண்பு காண்க.

**மலர்கள்** - மலர்களுள் ஆகும் பள்ளித்தாமம் என்று கூட்டுக. மரஞ் செடி கொடி களில் உள்ளபோது பலவகை மலர்கள் என்ற பெயரால் அறியப்படும் இவை, சிவனுக் காகக் குறித்து எடுக்கப்படும்போது திருப்பள்ளித்தாமம் என்ற பெயரால் வழங்கப்படும் முறையினை, **மலர்கள் - தெரிந்து,** சாத்தலாகும் **திருப்பள்ளித்தாமம் - கொய்து** என்றறிவித்த பண்பு காண்க.

**பூத்த மலர்கள்** என்றதனால் புதிதாக மலர்ந்த - அன்றலர்ந்த - என்றுணர்த்தினார்.

**தாந்தெரிந்து - தாங் கொய்து - கோத்த இலைப்பூங்கூடை** - தாமே விதி தெரிந்து தாமே கொய்து கூடையிற் கொண்டு சேர்த்தல் நன்மை தருவதென்பது. இதுபற்றி முன் எறிபத்தநாயனார் - முருகநாயனார் புராணங்களிலுரைத்தவை பார்க்க.

**புனிதர்** - இயல்பாகவே பாசங்களி னீங்கியவர் - தூய்மை யுடையவர் - தூய்மை செய்பவர்.

**சாத்தலாகும்** - சாத்தற்கு ஆவன என்று விதிக்கப்பட்ட. 1024 பார்க்க.

**இலைகோத்த பூங்கூடை** என்க. மலர்களைச் சேர்த்து வைத்தற் பொருட்டுத் தாமே இலைகளாற் கோத்துச் செய்த திருப்பூங்கூடை. மலர்களைக் கையிற் கொண்டு சேர்த்த லும் துணி முதலியவற்றில் வைத்துக் கொணர்தலும் ஆகாவென்பர்.

**மணந்தங்கிட** - மலர்களின் மணம் காற்றினாற் பரவி வெளிச் செல்லாமலும் வெய்யில் முதலியவற்றால் சிதையாமலும் அவற்றினுள்ளே தங்கியிருக்கும்படி.

சிவபூசைக்காகச் சிவலிங்கமும், சிவாலயமும், கோபுரமும் சுற்றாலயமும் வகுத்தது சிவபூசை வேட்கை எழுந்தபின் விசாரசருமனார் செய்த முதற்செயல். சிவபூசை செய்தற்குச் சிவலிங்கமும், ஆலயமும், இன்றியமையாது முதலில் வேண்டப்படுத லால் அவ்விரண்டனையும் முதலில் அமைத்துக் கொண்டனர். பின்னர்த் திருமஞ்சன மாங் குறிப்பு உணர்ந்ததும், அது பூசையின் ஒரு அங்கமேயாதலின், அதற்குரிய பூசை புரிய வேண்டியது முதலில் அவசியமாயிற்று. பின்னர்ப் பிற அங்கங்களும் சாதனங் களுமாகிய மலர் முதலியன வேண்டப்படுமாதலின் அவற்றை அடுத்தபடியாகத் தேடிக்கொண்டனர். இனி இவையெல்லாம் குறிப்பினால் உணர்த்திய பாலாகிய திரு மஞ்சனப் பொருளைத் தேடிக்கொள்ளுதல் (1239) அடுத்த பாட்டிற் கூறுவர். அவ் வாறு தேடி அமைத்தபின் செய்யும் பூசையினையும் அதனை இறைவர் ஏற்றுக் கொண் டதனையும் அடுத்த (1240, 1241) இரண்டு பாட்டுக்களாற் றொடர்ந்துகூறிப், பூசை முடித்து நாயனார் மகிழ்ந்த மனநிலையினை அதற்கடுத்த (1242) பாட்டாற் கூறுவார். பூசை வேட்கை எழுந்ததனையும், பூசைச் சாதனம் தேடியதனையும், பூசையினையும், அதனை இறைவர் ஏற்றுக்கொண்டதனையும், அதனை நிரப்பி விசாரசருமனார் மகிழ்ந்த தனையும் ஒருசேரத் தொடர்ந்து (1237-1242) இந்த ஆறு திருப்பாட்டுக்களாலும் கூறிய வகையைக் கண்டுகொள்க. 33

1239. நல்ல நவகும் பங்கள்பெற நாடிக் கொண்டு நாணற்பூங்
கொல்லை யிடத்துங் குறைமறைவு மேவுங் கோக்க ளுடன்கூட
வொல்லை யணைந்து பாலாக்க ளொன்றுக் கொருகா லாகவெதிர் [வால்.
செல்ல வலைவயுங் கனைத்துமுலை தீண்டச் செழும்பால் பொழிந்தன

(இ - ள்) வெளிப்படை. நல்லனவாகிய நவகும்பங்கள் பெறுதற்கு நாடி எடுத்துக்கொண்டு நாணல்கள் நெருங்கிய அழகிய கொல்லையிடத்தும், ஆற்றிடைக் குறை மறைவிலும் மேய்கின்ற பசுக்களுடன்கூட விரைவில் அணைந்து பாற்பசு ஒன்றுக்கு ஒருகாலாக எதிரே போக, அவையும் முலைதீண்டியவுடன் கனைத்துச் செழும்பால் பொழிந்தன.

(வி - ரை) நல்ல நவகும்பங்கள் - நல்லனவாகிய ஒன்பது கும்பங்கள். "ஆன் மார்த்த பூசைக்கும் நவகும்பங்கள் தாபித்து அபிடேகம் செய்யலாமென்று காமிகாகமங் கூறுகின்றமையால் அது வருமாறு..." என்பது சைவ பூஷணம்; 71-ம் பக்கம் (104) காண்க. ஒன்பது கும்பங்கள் தாபித்துத் திருமஞ்சன மாட்டுதல் ஆகம விதிகளுள் ஒன்று. நவகும்பம் - (பூசைக்காதலின்) புதிய குடங்கள் என்பாருமுண்டு.

பெற நாடி கொண்டு - பெற - எண்ணி; நாடி - அதற்காக முயன்று; கொண்டு - வந்ததைப் பெற்றுக்கொண்டு. நாணற்கொல்லை - துறைமறைவு - இவை பசுக்கள் மேயும் இடங்கள்.

ஒன்றுக் கொருகாலாக எதிர் செல்ல - முலைதீண்ட என்க. ஒரு பசுவினது மடியில் ஒரு முலைக்காம்பில் பால் பெறும்படி முலையைத் தீண்ட. ஒருகாலாக - என்றது முலைக்காம்பாக என்ற பொருளிலும், எதிர் செல்ல என்றது முறையாகப்போக- நிகழ - என்ற பொருளிலும் வந்தன.

ஒருகாலாக - பால் கறத்தலில் வழங்கும் மரபு வழக்கு. இவ்வாறன்றி ஒருதரம் என்று கூறுவாருமுண்டு. முலைதீண்டச் செழும்பால் பொழிந்தன - விசாரசருமனாரைக் கண்ட மாத்திரத்தில் அருகுசார்ந்து உருகி முலைசுரந்து கறவாமே பால் சொரிந்த பசுக்கள், அவர், தம்மை யணைந்து முலைதீண்டப் பால் பொழிதல் ஒரு வியப்பாமோ?

பொழிந்தனவால் - விசாரசருமனாரைத் தம் கன்றாகப் பசுக்கள் நினைந்த நிலையை முன்னரும் "பொழிந்தனவால்" (1237) என்ற இதே சொல்லினாற் கூறினார். முன்னர்க் கூறியது பசுக்கள் விசாரசருமனாரை அருகுசார்ந்து பால்பொழிந்த நிலை; இங்குக் கூறியது பசுக்களை அவை மேயுமிடத்து விசாரசருமனார் அணைந்து முலைதீண்டியபோது பால் சுரந்து பொழிந்த நிலை.

முலைதீண்ட என்றது அன்பு பெருகப் பால் சுரக்கச் செய்யும் செயல் அளவில் நின்றது. இங்கும் கறவாமே தீண்டிய அளவில் பால் பொழிந்தன என்க.

கனைத்தல் - அன்பின் பெருக்கால் நிகழும் மெய்ப்பாடு. முன்னரும் "கனைத்துச் சுரந்து" (1235) என்றது காண்க. 34

1240. கொண்டு மடுத்த குடநிறையக் கொணர்ந்து விரும்புங் கொள்கையினால்
அண்டர் பெருமான் வெண்மணலா லயத்து ளவைமுன் றாபித்து
வண்டு மருவுந் திருப்பள்ளித் தாமங் கொண்டு வரன்முறையே
பண்டைப் பரிவா லருச்சித்துப் பாலின் றிருமஞ் சனமாட்டி, ௩௫

1241. மீள மீள விவ்வண்ணம் வெண்பால் சொரிமஞ் சனமாட்ட
ஆள வுடையார் தம்முடைய வன்ப ரன்பின் பாலுளதாய்
மூள வமர்ந்த நயப்பாடு முதிர்ந்த பற்று முற்றச்சூழ்
கோள மதனி லுண்ணிறைந்து குறித்த பூசை கொள்கின்றார், ௩௬

1242. பெருமை பிறங்குஞ் சேய்ஞலூர்ப் பிள்ளை யார்த முள்ளத்தில்
ஒருமை நினைவா லும்பர்பிரா னுவக்கும் பூசை யுறுப்பான

திருமஞ் சனமே முதலவற்றிற் றேடா தனவன் பினினிரப்பி
வருமந் நெறியே யர்ச்சனைசெய் தருளி வணங்கி மகிழ்கின்றார். ௩௭

1240. (இ - ள்) வெளிப்படை. பொழிந்த அந்தப்பாலினைக் குடங்கள் நிறைய ஏற்றுக்கொண்டு, கொணர்ந்து, விரும்பும் கொள்கையினால் தேவதேவரது வெண் மணலாலாகிய கோயிலினுள்ளே அவற்றை முன் தாபித்து, வண்டுகள் பொருந்த நின்ற திருப்பள்ளித் தாமங்களினால் வரன் முறையாலே முன்னைத் தொடர்ச்சியாகிய அன்பினாலே அருச்சனை புரிந்து, பாலின் திருமஞ்சனத்தை ஆட்டி, ௩௫

1241. (இ - ள்) வெளிப்படை. மீண்டும் மீண்டும் இவ்வாறு வெண் பாலினைச் சொரியும் திருமஞ்சனத்தினை ஆட்ட, ஆட்கொண்டருளுதற்கு உடையாராகிய சிவ பெருமான் தம்முடைய அன்பரது அன்பின்பால் உளதாகி மேன்மேல் உண்ணின்று பெருக விரும்பிய நயப்பாடு முதிர்ந்ததாகிய அன்பு முற்றச் சூழும் கோளத்தினிடத்தில் உள்ளே நிறைந்து நின்று அவர் குறிப்பிற் கொண்ட பூசையினை ஏற்றுக் கொள் கின்றாராக, ௩௬

1242. (இ - ள்) வெளிப்படை. பெருமை விளங்கும் சேய்ஞலூர்ப் பிள்ளையார் தமது உள்ளத்தில் ஒன்றுபட்ட நினைப்பினாலே தேவர் பெருமான் மகிழும் பூசனையின் உறுப்புக்களாகிய திருமஞ்சனமே முதலாகியவற்றில் தாம் தேடிக்கொள்ளாதவற்றை அன்பினால் நிரப்பிக்கொண்டு வரும் அந்நெறியிலே அருச்சனை செய்தருளி வணங்கி மகிழ்கின்றாராயினர். ௩௭

இம்மூன்று பாட்டுக்களும் ஒரு தொடர்பு கொண்டு பொருள்செய்ய நின்றன.

1240. (வி - ரை) மடுத்த குடம் நிறையக் கொண்டு கொணர்ந்து என்க.

**மடுத்த** - முலைதீண்டப் பால் பொழிந்தனவாதலின் இவர் செய்ய எஞ்சிநின்ற செயல் அதனைக் குடத்தில் ஏற்றலேயாம்; ஆதலின் மடுத்தகுடம் என்றார். மடுத்தல் - நிறைய ஏற்றல்; நிறைத்தல். **கொணர்ந்து** - நாணற் கொல்லையிடத்தும் குறைமறை வினும் (1239) பாலினை ஏற்ற இடத்திலிருந்து மணலினிற் புளினக்குறையில் ஆத்தி யின்கீழ்க் (1237) கோயில் ஆக்கிய இடத்துக்குக் கொண்டுவந்து.

**ஆலயத்துள்** - சிவாலயத்தினுள் (1237).

**அவை முன் தாபித்து** - குடங்களைத் தாபித்தலாவது ஆசனம் கற்பித்து வைத்தும், திருமஞ்சனமாகக் கற்பித்து அபிமந்திரித்தும் நிறுவுதல். இதன் விரிவு சிவாகமங்களுட் காண்க.

**வண்டுமருவும் திருப்பள்ளித்தாமங் கொய்து** - இலைப்பூங்கூடையில் மலர்களைக் கொணர்ந்து மணந்தங்கிட வைத்தா (1238) ராதலின் மணத்துக்கும் அதனால் உணர்ந்த தேனுக்குமாக வண்டுகள் மருவி நின்றன என்பது குறிப்பு. "அரும்பற் றப் பட வாய்மலர்...சுரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ" (அப்பர்சுவாமி தேவாரம்). "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி...நறியவு முளவோநீ யறியும் பூவே" என்ற திருப்பாட்டின்படி வண்டுகள் மணத்தினாலே பூக்களைத் தெரிந்து மொய்த்துத் தேனுண்பன என்பதறியப்படும். **மருவும்** - மருவநின்ற என்க.

**திருப்பள்ளித்தாமம் கொண்டு** - பூக்களைக் கொண்டு. 1238ன் உரை பார்க்க.

**பண்டைப் பரிவால் வரன்முறையே அர்ச்சித்து** - என்க. **அர்ச்சித்துத் - திரு மஞ்சனமாட்டி** என்றதனால் இது திருமஞ்சனமாட்டுதலின் முன்னர்ச் செய்யும் அருச்சனையாகும். திருமஞ்சனம் முதலிய பூசை உறுப்புக்கள் எல்லாம் முடிந்தபின் செய்யும் அருச்சனை வணக்கம் முதலியவை வேறு; அவற்றை "அருச்சனைசெய் தருளி

வணங்கி" என்று (1242) பின்னர்க் கூறுவது காண்க. இங்குக்கூறிய அர்ச்சித்தலாவது மணலாதரவாக, அதிற் சிவனது வித்தியா தேகத்தை நிறுவி, அதிற் சிவத்தை வெளிப் படச் செய்வதற்கு ஆகமங்களில் விதித்த மந்திரம், பாவனை, செயல் என்றவற்றைச் செய்தலாம். இவை இலிங்கசுத்தி செய்தலும், ஆதாரசத்திமுதல் ஆதிசத்திவரை இலிங்க பீடத்தில் வைத்துச் சிவாசன பூசைகள் செய்தலும், அதன்மேல் இலிங்கத்தில் வித்தியா தேகமாகிய மூர்த்தியை வருவித்து வைத்தலும், அதன்மேல் அத்தேகத்தினுள் சிவனு யுள்ள பரசிவமாகிய மூர்த்திமானைத் துவாத சாந்தத்தின்மேல் தியானித்து வருவித்து வைத்தல் என்னும் சிவ ஆவாகனம் செய்தலும், பின்பு, அவரைப் பூசை முடியும்வரை அந்த இலிங்கத் திருமேனியில் கருணையுடன் விளக்கமாக எழுந்தருளியிருக்க வேண்டு தலும், அதன்பின் உரிய மந்திரங்களால், மலர்களைக் கொண்டு கைகூப்பிச் சாத்துத லும் துதித்தலும் வணங்குதலும் முதலாயின. "திருப்பள்ளித் தாமஞ் சாத்தி, மஞ் சனமாம்...பாற்குடங்கள் எடுத்து நயப்புற் றாட்டுதலும்" (1254) என்று பின்னரும் இவ்வாறே கூறுதல் காண்க. சுயம்பு - ஆரிடம் - மானிடம் - முதலாக எண்ணப்பட்ட எண்வகைச் சிவலிங்கங்களுள் சுயம்பு - தைவிக இலிங்கங்களுக்கு இந்த நியாச ஆவா கன விதி கிடையாது. ஏனை மானிட முதலாய அறுவகைக்கும் இவை செய்யப்பட வேண்டும் என்று சிவாகமங்கள் விதிக்கின்றபடியால், இங்கு நாயனார் தாபித்ததும், மானிடலிங்கம் என்ற வகையுட்பட்டதும் ஆகிய சிவலிங்கத் திருமேனியில் வரன் முறையே அருச்சித்து அதனிற் சிவபெருமானது விளக்கங்கண்டு, பின்னர்த் திருமஞ்சன மாட்டினர் என்று கூறிய முறை காண்க. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத் தினுள் அம்மையார் கம்பைமா நதிக்கரையில் மாவினடியிற் பூசித்தது இறைவனார் தமதருளாற் றமேவந்து தோன்றிய (1134) (சுயம்பு) மூர்த்தியாயினமையால் அங்கே இவ்வாறு ஆவாகனவிதி இயற்றப்படாமல் திருமஞ்சனம், மெய்ப்பூச்சு, தூப, தீப முத லிய பூசைகளே தொடங்கி ஆகமவிதிப்படி (1139) செய்யப்பெற்றன என்பதையும் இங்கு உய்த்துணர்ந்து கொள்க. அஃது உலகின் பொருட்டுத் தான்றோன்றிமூர்த்தி யிற் செய்யப்பட்ட பரார்த்த பூசையெனவும், இஃது ஆன்மார்த்த பூசை என்னும் கணிக பூசை எனவும் கூறுவர். (நியாசம் - வைத்தல்).

வரன் முறையே என்றது மேலே காட்டியபடி சுத்திகள் - ஆசனபூசை - நியாசம் - ஆவாகனம் - வேண்டுகை முதலிய விதிமுறைகளை ஆகமங்களில் விதித்த கிரமப்படியே. ஆவாகனம் முதல் புட்பதானம்வரை பத்துச் செய்கையாலும், ஐந்து உபசாரங்களா லும் பூசனை புரியும் முறைபற்றிச் சித்தாந்த சாராவளி கிரியாபாதம் 23-24 பார்க்க.

பண்டைப் பரிவால் - முன் பிறவியின் வாசனையால் விளக்கமாகிய அன்பினாலும், அறிவினாலும். "முந்தையறிவின் தொடர்ச்சியினன்" (1218) முதலியவை பார்க்க. ஆகமவிதிகள் யாவும் முன்னைப் பயிற்சி வசத்தால் விசாரசருமனார் மனத்தினுள் அறி யப்பட்டன என்க.

பாலின் றிருமஞ்சனம் - பாலாலாகிய திருமஞ்சனம் என்றும், பால் + இன் = பால் என்ற இனிய திருமஞ்சனம் என்றும் உரைக்க நின்றது. இங்குப் பால்தான் இப்பூசை விளைய ஆதரவாயிருந்தமையின், அச்சிறப்புக் காட்டும்படி இவ்வாறு குறித்தார்.

ஆட்டி - இவ்வண்ணம் ஆட்ட - நயப்பாடு முதிர்ந்த பற்றுமுற்ற - உடையவர் - கோளமதனில் நிறைந்து - பூசை கொள்கின்றார்; பிள்ளையார் - நினைவால் - அன்பினில் நிரப்பி - அருச்சனை செய்து வணங்கி - மகிழ்கின்றார் என்று இந்த மூன்று பாட்டுக் களையும் தொடர்ந்து கூட்டிப் பொருள் கொள்க.

பண்டைப்பயில்வால்—என்பதும் பாடம்.

1241. (வி - ரை) மீள மீள ஆட்ட - நவகும்பங்களையும் மேன்மேல் ஆட்டிய தனால் மீள மீள என்று அடுக்கிக் கூறினார்.

ஆள உடையார் - ஆள்வதற்கு - அடிமைகொள்வதற்கு - உரிமையுடையவர். ஆள உரியார் என்று பாடங் கொள்வாருமுண்டு.

ஆளஉடையார் - பூசை - கோள்கின்றார் என்க.

அன்பின்பாலுளதாய் மூள அமர்ந்த நயப்பாடு முதிர்ந்த பற்று முற்ற - "நயப்புற் றுட்டுதலும்" (1254) என்பதும், "பூசனையை விரும்பும் வேட்கை (1236) என்றதும் காண்க. நயப்பாடு - ஆசை. அமர்ந்த - விரும்பிய. மூள - மேன்மேற் பெருக. நயப் பாடு முதிர்ந்தபற்று - ஆசை மிகுந்ததனாற் பற்றாகி விளைந்தது.

முற்ற - விளைய. அன்பின்பால் உளதாய் - அன்புகாரணமாக உளதாகிய; அன் பினையே இருக்கையாகக் கொண்டதாகிய. பூசைவேட்கையானது அன்பினால் உள தாகியது; அது முதிர்ந்த பற்றாக விளைந்தது. முற்ற - முற்றியதனால். காரணப்பொருட் டில்வந்த வினையெச்சம். முற்றியபடியால் - கொள்கின்றார் என்றபடியாம். அன்பின் பால் - அன்பின் குறிப்பினால் கொண்ட பசுப்பாலினிடத்து என்றுரைக்கவும் நின்றது.

மூள அமர்ந்த நயப்பாடு - "பொங்குமன்பால்" (1237); "மண்டுகாதல்"(1254).

சூழ்கோளம் அதனில் உள் நிறைந்து - கோளம் - இங்கு மணலாலாகிய சிவலிங் கத்தைக் குறித்தது. கோளம் - வட்டவடிவமாகிய பொருளைக்குறிக்கும் பெயர். இங்கு அவ்வாறமைந்த சிவலிங்கங் குறித்து நின்றது. சூழ் கோளம் - சூழ்தல் - கருது தல். விசாரசருமனார் கருதியமைத்துக் குறித்த சிவக்குறி.

உண்ணிறைந்து - மணலிலிங்கத் திருமேனியினுள்ளே நிறைந்து. எங்கும் நிறைந்த இறைவராயினும், இங்குவிளக்கமாக நிறைந்தனர். பசுவினிடத்துப் பால் உடல் முழுதும் நிறைவுடையதாயினும் மடியின் முலைக்காம்பில் விளக்கமாக நிறைவது போல என்க. அரிவாட்டாயநாயனாருடைய நியதி வழுவாது "படிமிசைக் கமரில் வந்து" பூசைகொண்டதும், அவ்வாறு வருவன பிறவும் நினைவு கூர்க.

குறித்த - இது, சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருமேனியாகும் என்ற குறிப்பினாற் பூசித்த. மணல் என்ற குறிப்பு நீங்கச் சிவமென்ற குறிப்புப்பெற மன நேர்பட்ட என்றபடி. "அண்ணல் பாதங், கொண்டவன் குறிப்பினாலே கூப்பினான் தாப ரத்தை" (ஆப்பாடி - 4) என்ற திருநேரிசையின் கருத்தினை ஓர்க. குறித்த பூசை- சிவத்தினிற் குறிவைத்த பூசை.

கோள்கின்றார் - ஏற்றுக் கொள்வாராகவே ஆள உடையார் கொள்கின்று ராதலின், அது கண்டு வணங்கி, ஆட் செய்வாராகிய பிள்ளையார் மகிழ்கின்றார் என்று மேல்வரும் பாட்டில் முடிவது காண்க.

கோளநின்றார்—என்பதும் பாடம். 36

1242. (வி - ரை) பெருமை பிறங்கும் சேய்ஞலூர் என்றும், பிறங்கும் பிள்ளை யார் என்றும் கூட்டி உரைக்கநின்றது. பெருமையினாற் பிறங்குதல். பெருமையானது இங்குச் சார்ந்ததனாற் பிறங்குதற் கிடமாகிய என்றுரைத்தலுமாம். பிறங்குதல்-விளங்கு தல். பிள்ளையார் - "ஆளுடைய பிள்ளையார்" என்பதுபோல உலகத்தந்தையாகிய சிவ பெருமான் "உனக்கு நாம் தாதை" (1259) என்றருளி மகனாகக் கொள்ள வருவா ராதலின் இவ்வாறு கூறினார். சேய்ஞலூரில் வந்தவதரித்த பிள்ளையார் என்றலுமாம்.

தம் உள்ளத்தில் ஒருமை நினைவால் - "ஒன்றியிருந்து நினைமின்கள்" என்பது திருவிருத்தம். ஒருமை நினைவாவது பூசிக்கும் தாமும், பூசிக்கப்படும் சிவபெருமானும் வேறாகக் காணமுடியாது நினைவினில் ஒற்றித்து நிகழ்தல். இதனையே இலயம் என் பது வடவர் வழக்கு. "ஒன்று முள்ளத் துண்மையினால்" (1252) என்பதும், பின்னர் இச்சரிதத்தில் எச்சதத்தன் தம்மைப் புடைத்துக் கோட்டார் மொழி கூறவும்

வேறுணராது நிற்பதும், "மண்டு காத லர்ச்சனையின் வைத்தார் மற்றேன் றறிந் திலரால்" (1254) என்பதும் காண்க.

**உம்பர்பிரா னுவக்கும் பூசை** - "இறைவர்தாம் விரும்பும் உண்மை யாவது பூசனை யென" (1128) என்றது காண்க. உவத்தலாவது உயிர்கள் தம்மைப் பூசித்து இன்பமடையச் சங்கற்பித்தல்.

**பூசை உறுப்பான திருமஞ்சனமே முதலவற்றில் தேடாதன அன்பினில் நிரப்பி** - பூசை உறுப்புக்களில் இலை பூ என்றவற்றையும், திருமஞ்சனவகையில் பாலும் தேடி அமைத்துக் கொண்டமை முன்னர்க் கூறப்பட்டது. ஏனையவாகிய திருமஞ்சன நீர் - சந்தனம் - புகை - அமுது - முதலியவைகளில் தாம் தேடி அமைத்துக் கொள்ளாதனவற்றை அன்பினால் நிறைவு ஆக்கிக் கொண்டு என்றபடி.

**அன்பினால் நிரப்புதல்** - பாவனையால் உளவாகக் கொண்டு பூசித்தல். **தேடாதன** என்றார் முன் சொன்ன பூ இலை பால் என்றவற்றின் மேலும் திருமஞ்சன நீர் தேடிக்கொள்ளக் கிடைத்தமை குறித்தற்கு. **திருமஞ்சனமே முதலவற்றில்** - பூசை உறுப்புக்களில் **திருமஞ்சன நீர்** இன்றியமையாததாய் முதன்மை பெற்றது என்பது குறிப்பு. "பூவுண்டு நீருண்டு" (திருமந்திரம்), "பூவோடு நீர் சுமக்கும் நின்னடியார்" (சம்பந்தர்), "சலம் பூவொடு தூபமறந் தறியேன்" (அப்பர்), "தூயகாவிரியி னன்னீர் கொண்டிருக் கோதி யாட்டி" (ஷை - திருநேரிசை) முதலிய திருவாக்குக்கள் காண்க.

**வரும் அந்நெறியே** - ஆகமங்களில் விதித்தபடி வருகின்ற அவ்வழியாலே. அகரச் சுட்டு **வரன் முறையே** - (1240) என முன்னர்க் கூறியதனைச் சுட்டி நின்றது. **அந்நெறி யாவன** - உரிய, ஆடை - சந்தனம் - பூ - மாலை - அணிகள் முதலியவற்றால் அலங்கரித்த லும், உரிய மந்திரங்களால் அர்ச்சித்தலும், தூப தீபம் அர்க்கியம் கொடுத்தலும், அமு தூட்டலும், ஆவரண பூசை செய்தலும், துதித்தலும், வணங்குதலும், செபித்தலும் முதலாயின. "உயர்ந்த வர்ச்சனைமுறை உய்த்தார்" (9), "மாடு சூழ்புடை வலங் கொண்டு வணங்கிமுன் வழுத்தித், தேடு மாமறைப் பொருளினைத் தெளிவுற நோக்கி, நாடு மஞ்செழுத் துணர்வுற விருந்துமுன் னவின்றார்" (10) என்ற திருநீலநக்கநாயனார் புராணம் முதலியவை காண்க.

**மகிழ்கின்றார்** - பூசை முடிந்த பின்னும், அதனால் நாயனார் கொண்ட மகிழ்ச்சி குறைவுபடாது நிலவி நின்றது என்பது குறிக்க **மகிழ்ந்தார்** என்னாது **மகிழ்கின்றார்** என்று நிகழ்காலத்தாற் கூறினார். "நீடுபூசனை நிரம்பிய மன்பினு ளிரம்பார்" (திருநீலநக்கர் புரா - 10) என்றது காண்க. "மூந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை, யெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து, மெய்ந்நிலை பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்" (தொல் - சொல் - 43) என்பதும், "முக்காலத்து மொத்தியல் பொரு ளைச், செப்புவர் நிகழுங் காலத் தானே" (நன் - பொது - 32) என்பதும், இலக்கண மாதல் காண்க. முன்னர்க், "கொள்கின்றார்" (1241) என்றதும் கருதுக.

**தேடாதன அன்பினில் நிரப்பி** - பூசை உறுப்புக்களாகிய சாதனங்கள் முற்றும் தேடக்கிடையாத போதும் அதனாற் பூசை முட்டுப்படாது இயற்றுதல் வேண்டும் என்பதனை வற்புறுத்தியதுடன், அவ்வாறு இயற்றும் வழியினையும் வகுத்துக்காட்டிய வாறுமிற்று. இவற்றின் விரிவு ஆகமங்களுட் காண்க. பூசைக்கு இன்றியமையாத பூவும் நீரும் நமது புண்ணிய பூமியில் எங்கும் தேடக்கிடைப்பன என்பதனைத் திருமூல தேவநாயனார், "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" என்று வழிகாட்டி உபதேசித்தருளினர். இவையும் கிடைக்காதபோதும் பூசை முட்டாமல் மனத்தாற் செய்யத்தக்கது என்பது விதியாம் என்பதனையும்,மனத்தன்பால் நிரப்பும் வகையினையும், "போதும் பெறாவிடிற் பச்சிலை யுண்டு புனலுண்டெங்கும்; ஏதும் பெறவிடி னெஞ்

கூண்டன்றே" (கழுமல மும் - கோவை - 12) என்று பட்டினத்தடிகள் வற்புறுத்தி யருளியது காண்க. 37

1243. இறையோ னடிக்கீழ் மறையவனா ரெடுத்துத் திருமஞ் சனமாட்டு
நிறைபூ சனைக்குக் குடங்கள்பால் நிரம்பச் சோரிந்து நிரைக்குலங்கள்
குறைபா டின்றி மடிபெருகக் குவிந்த முலைப்பால் குறைவின்றி
மறையோர் மனையின் முன்புதரும் வளங்கள் பொலிய வைகுமால்.

(இ - ள்) வெளிப்படை. இறைவனாரது திருவடிகளில் மறைச்சிறுவனார் எடுத்துத் திருமஞ்சனம் ஆட்டுகின்ற நிறைந்த பூசைக்கு, அன்பு நிறைதலினால் குடங்களில் பால் சொரிந்தும், ஆனிரைகள், குறைவில்லாமல் மடிபெருக அதனாற்குவிந்த முலைப் பாலின் அளவு குறைவின்றி மறையவர்களின் வீடுகளில் முன்பு தருகின்ற வளங்கள் எல்லாம் விளங்கும்படியே பொருந்தியன.

(வி - ரை) இறையோன் - மறையவனார் - என்ற ஒருமை பன்மை விகுதிகளைக் கருதுக. "ஒருவனுமே பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ" (திருவாசகம்) என்றபடி, ஒன்றாயும் பலவாகியும் நிற்கும் இறைவனை ஒருமையிலும் கூறுதல் அமையு மாகலான், அவ்வாறே இறையவன் என்று ஒருமையிற் கூறியருளிய ஆசிரியர், யாண்டும் மறந்தும் அரனடியார்களைப் பன்மைச் சொல்லினாலன்றி ஒருமையிற் கூறாத நியதியுடையாராதலின் மறைவனார் என்றார். "அவர்தம் சென்னிமிசைப் பாத மலர் சூட்டினான், சிவபெருமான்" (திருநா - புரா - 195) என்றதும், இவ்வாறு வருவன பிறவும் கண்டு கொள்க.

திருமஞ்சனம் ஆட்டும் நிறை பூசனை - கறவாமே பொழிந்த பாலினைக் கண்டு, அது திருமஞ்சனமாகும் என்ற குறிப்பு உணர்ந்து, அதனையேபற்றிச் செய்த பூசையாதலின் திருமஞ்சன மாட்டும் பூசனை என்றும், ஆயினும் ஏனைய உறுப்புக்கள் எல்லாம் மேற்காட்டியபடி முற்ற நிகழ்ந்த தென்று குறிக்க நிறை பூசனை என்றும் கூறினார்.

நிரம்ப குடங்கள் பால் சோரிந்தும் - என்க. முலை தீண்டலும் கறவாமே பால் தாமே பொழிந்தனவாதலின் சோரிந்தன என்றார். சோரிந்தும் - சொரிந்தனவாயினும். சொரிந்தும் குறைவின்றி - முன்பு தரும் வளங்கள் - பொலிய என்க. உம்மை உயர்வு சிறப்பு. அன்பாற் குடங்களிற் பால் சொரிந்ததனால் முன்பு தரும் பால் அளவு குறைதல் வேண்டுமே என்று நினைக்க வருமாதலின், அவ்வாறன்றி, முன்பு தரும் வளங்கள் குறைவின்றிப் பொலிய என்று எச்சரித்துக் காட்டியபடியாம். "மடி பெருகிச் சொரிய முலைகள் சுரந்தன" (1235) என்றது காண்க.

இது, பசுக்கள் கொண்ட - அளவின்றி எழுந்த - மகிழ்ச்சியினாலாகிய பெருமையினையும், நாயனாருக்குத் தாயாந் தன்மைநிலை யன்பின் பெருமையினையும், நாயகனாரது அருளின் பெருமையினையும், காட்டுவதாகும்.

குறைபாடின்றி மடிபெருக - முலைப்பால் குறைவின்றி என்றது குறைவில்லாது மடிகள் பெருகின ; அதனாற் குறைவில்லாது பாலும் தந்தன என்றதாம். குறைபாடின்றி என்றதனால் மடியின் ஊற்றின் பெருக்கமும், முலைப்பால் குறைவின்றி என்றதனால் பால்சுரந்து தரும் வளத்தின் அளவும் குறிக்கப்பட்டன. மடி பெருகியிருப்பினும் ஒருமுறை பால் தந்த பசுக்கள் மீளவுந் தருதல் அமையாமையு முண்டாதலின் மடி பெருகப்பால் குறைவின்றி என்று கூறவேண்டியதாயிற்று.

குறைபாடு என்பது அளவினையும், குறைவின்றி வளங்கள் பொலிய என்றது குணத்தன்மையினையும் குறிப்பனவாகக் கூறுவாருமுண்டு.

**நிரம்ப** - *நிரம்பியமையால். தாயார்தன்மை நிலையாகிய அன்பு நிரம்பியதனுல் என்க. காரணப் பொருட்டாய் வந்த வினையெச்சம். குடங்கள் நிரம்ப என்றலுமாம்.*

**வளங்கள்** - *பால். பால் என்றது ஒரு வளமேயாயினும் அதனுல் தயிரும் நெய் யும் என்ற ஏனைய வளங்களும் விளைவன ஆதலானும் நிரைக்குலங்கள் பலவாதலானும் பன்மையிற் கூறினர்.* **போலிய** - *சிறக்க - விளங்க.*

**குடங்கொள்பால்**—*என்பதும் பாடம்.* 38

1244. செயலிப் படியே பலநாளுஞ் சிறந்த பூசை செய்வதற்கு
முயல்வுற் றதுவே திருவிளையாட் டாக முந்நூ லணிமார்பர்
இயல்பிற் புரிய மற்றிதனைக் கண்டித் திறத்தை யறியாத
அயன்மற் றொருவ னப்பதிபி லந்த ணாளர்க் கறிவித்தான். ௩௯

(இ - ள்) *வெளிப்படை. இப்படியாகிய செய்கையாலே பின்னரும் பல நாள் களும் சிறப்பாகிய பூசனை செய்வதற்கு முயல்வுற்று, அதுவே திருவிளையாட்டாக நிகழ, முப்புரிநூலணிந்த மார்பினையுடைய விசாரசருமனர் இயல்பினுற் புரியும் மற்ற இதனைக் கண்டு இதன் திறத்தினை அறியாத அயலானுகிய மற்றை யொருவன் அந்த ஊரில் அந்த ணர்களுக்கு இதனை அறிவித்தான்.*

(வி - ரை) **சிறந்த...திருவிளையாட்டாக - சிறந்த பூசை** - *முத்தி நெறிகளாகிய சைவசாதனங்கள் நான்கனுள் கிரியை என்னும் சிறப்புடைய இரண்டாவது சாதனமாம் என்றபடி. இது* **புத்திரமார்க்கம்** *எனவும் படும். "புத்திரமார்க் கம்புகலிற் புதிய விரைப் போது புகையொளிமஞ் சனமமுது முதல்கொண் டைந்து, சுத்திசெய்தா சன மூர்த்தி மூர்த்தி மானுஞ் சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த, பத்தியினு லருச் சித்துப் பரவிப் போற்றிப் பரிவினெடு மெரியில்வரு காரியமும் பண்ணி, நித்தலுமிக் கிரியையினை யியற்று வோர்க ணின்மலன்ற னருகிருப்பர் நினையுங் காலே" (சித்தி - 8 - 20) என்ற திருவாக்கும், "கிரியையோ கங்கள் கிளர்ஞான பூசை, யரிய சிவனுரு வமரு மரூபம், தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை, யுரியன நேயத் துயர்பூசை யாமே" (5 - 30) என்ற திருமூலர் திருமந்திரமும் இங்குக் கருதத்தக்கன.*

**முயல்வுற்று** - *முயற்சியாவது ஒருகுறிக்கோளை அடைவதற்குச் செய்யும் செயல். சாதனம் என்ப.*

**அதுவே திருவிளையாட்டாக இயல்பிற் புரியும்** - *சிறந்த பூசை செய்யும் முயற்சி பெருமுயற்சியாலும் பலநாள் முயன்று கைவரும் சிறந்த சாதனையாலும் ஏனைப் பெரி யோர்கள்பால் அரிதில் வருவதாகவும், இவரிடத்துச் சிறுவர் இயல்பிற் செய்யும் விளை யாட்டுருவமாக நிகழ்ந்தது என்றபடியாம். இவர்பால் பூசைவிளையாட்டாகவும் விளை யாட்டே பூசையாகவும் விளைந்தது என்க.*

*இது முன்னைத் தொடர்பால் ஆகியது. "நின்ற விதியின் விளையாட்டா நிறைந்த வரும்பூசனை" (1254) என்று பின்னர்க் கூறுவதும் காண்க. ஏனையோர் செய்வன கருவிளையாட்டுக்களாய்க் கழிந்தொழிய, இவர் செய்தது திருவாகிய சிவத்தைப் பெறுவித்தலால் திருவிளையாட்டு எனப்பட்டது.*

**இயல்பிற் புரியும்** - *செயற்கையானன்றித் தம் இயல்பினுற் செய்தனர். மனிதர்க் கியல்பாக அமையவேண்டுவது சிவவழிபாடு, தலையும் வாயும் கையும் முதலிய கருவி கரணங்கள் எல்லாம் அதற்காகவே தரப்படுதலான்; அல்லாதவை எல்லாம் இயல் பிற்கு மாறுபட்டவை என்பது குறிப்பாகும். "ஒழியா தூறும் வழியன்பின் கடனே யியல்பாய் முயற்றிவரும் காதல்" (1321) என்று முன்னர்க் குறித்ததும் இங்கு நினைவு கூர்க.*

மற்றிதனை - மற்று என்பது ஏனைச் சிறூர் விளையாட்டுப் போலாது சிறந்த பூசை முயல்வுற்ற செயலாகும் என்ற குறிப்பில் நின்றது.

இத்திறம் - சிறந்த பூசையாகும் தன்மை. கண்டு - நேரிற் கண்டு. கண்டும் என உம்மை தொக்கது என்றுரைத்தலுமாம்.

அறியாத அயல் மற்று ஒருவன் - விசாரசருமனார் செய்த சிறந்த பூசையினை நேரே காணும் பேறுபெற்றும் உண்மைத்திறத்தை அறியும் விதியின்றி அறியாமையினால் மீதூரப்பட்டு வினை விளைத்தானாதலால், இவ்வாறு அயல் - மற்று - ஒருவன் என்று மும்முறையும் வேறுபடுத்திக் கூறினார்.

மற்று - பெரியதனிற் பெரியதனைக் கண்டும் சிறியதனிற் சிறிய அறிவு படைத்தவன் என்றது குறிப்பு. முன்னர் மற்றிதனை என்றதில் மற்று என்றது சிறூர் விளையாட்டுக்களின் தோற்றமுடையதனை அத்தொகுதியினின்றும் பிரித்து உயர்வின்கட் செலுத்தியது; மற்றொருவன் என்றதில் மற்று என்றது விதியும் அறிவும் உடைய மக்களின் தோற்றமுடைய அவனை அத்தொகுதியினின்றும் பிரித்து இழிபின்கட் செலுத்தியது. மற்று - இரண்டும் அசை என்பாருமுண்டு. 39

1245. அச்சொற் கேட்ட வருமறையோ "ராய னறியா னென்றவற்றின்
இச்சை வழியே யான்மேய்ப்பே னென்றெம் பசுக்க டமைக்கறந்து
பொச்ச மொழுகு மாணவகன் பொல்லாங் குரைக்க வவன்றாதை
யெச்ச தத்தன் றனையழைமி" னென்றா ரவையி லிருந்தார்கள். ௪௦

(இ - ள்) வெளிப்படை. அச்சொற்களைக் கேட்ட, அவையிலிருந்தவர்களாகிய மறையவர்கள் "ஆயன் பசுக்களை மேய்க்க அறியானாதலின் அவற்றின் இச்சையறிந்து அவ்வழியே யான் மேய்ப்பேன் என்று சொல்லிக், கொண்டுபோய் எமது பசுக்களைக் கறந்து வஞ்சனையாக ஒழுகுகின்ற மாணவகனது பொல்லாங்கினைச் சொல்வதற்காக, அவனுடைய தந்தையாகிய எச்சதத்தனை அழையுங்கள்" என்று சொன்னார்கள்.

(வி - ரை) அச்சொல் - அயல் மற்றொருவன் அறிவித்த அந்தச்சொல்.

"ஆயன் அறியான்...அழைமின்" - என்றது அவையிலிருந்த மறையவர் கூற்று. "ஆயன் அறியான் என்று...யான் மேய்ப்பேன்" என்றது விசாரசருமனார் தம்மிடம் ஆமேய்க்க இசைவு பெற்றபோது கூறிய சொற்களை மறையோர் நினைவு கூர்ந்து சொல்லியது. "மறையோர் இசைவினால்" (1229) என்றது காண்க.

பொச்சம் - வஞ்சனை. பொச்ச மொழுகுதல் என்றது, இதத்தின் வழியே மேய்ப்பேன் என்று கொண்டு போய், அதற்கு மாறாகப் பாலைக்கறந்து வீணாக்கி விளையாடுதலை.

பொல்லாங்கு - தீச்செயல். பொல்லாங்கினை உரைக்க என்று இரண்டனுருபு விரிக்க.

அவன் தாதை எச்சதத்தன் தனை அழைமின் - சிறுவர் செய்யும் குற்றங்களுக்குப் பெற்றோரே பொறுப்பாளிகளாவர் என்றும், சிறூரைத் திருத்துதல் பெற்றோர் கடமையாம் என்றும் உள்ள உலக நியாயம் பற்றித் தாதையை அழைமின் என்றார்கள். இந்நாள் அரசாங்க நீதிமுறைகளிலும் இவ்வாறாகிய விதிகள் விதிக்கப்பட்டிருத்தல் காண்க. சிறுவர்களை அவர்கள் செய்த குற்றத்திற்குத் தண்டிக்காத நீதிமுறையும் காண்க. விசாரசருமனார் அதுபோழ்து ஏழு ஆண்டு நிரம்பும் பருவச் சிறுவராயினர் (1219) என்பதனையும் உன்னுக. 40

1246. ஆங்கு மருங்கு நின்றார்க ளவ்வந் தணன்றன் றிருமனையின்
பாங்கு சென்று மற்றவனை யழைத்துக் கொண்டு வரப்,பரந்த
ஓங்கு சபையோ ரவனைப்பார்த் "தூரா னிரைமேய்த் துன்மகன்செய்
தீங்கு தன்னைக் கே"ளென்று புகுந்த பரிசு செப்புவார், ௬௧

1247. "அந்த ணாள ராகுதிக்குக் கறக்கும் பசுக்க ளானவெலாஞ்
சிந்தை மகிழ்ந்து பரிவினாற் றிரளக் கொடுபோய் மேய்ப்பான்போற்
கந்த மலிபூம் புனன்மண்ணி மணலிற் கறந்து பாலுகுத்து
வந்த பரிசே செய்கின்றா னென்றா" னென்று வாய்மொழிந்தார். ௬௨

1246. (இ - ள்) வெளிப்படை. அங்குப் பக்கத்தில் நின்றவர்கள் அவ்வந்தணனுடைய திருமனையினிடத்துப் போய், மற்றவனை அழைத்துக் கொண்டு வரவே, பரந்த ஓங்கிய அந்தச் சபையோர்கள் அவனைப்பார்த்து "உன் மகன் ஊரவருடைய ஆனிரையை மேய்த்துச் செய்யும் தீங்கினை நீ கேட்பாயாக!" என்று தொடங்கி, நிகழ்ந்த செய்தியைச் சொல்வார்களாகி, ௬௧

1247. (இ - ள்) வெளிப்படை. அந்தணாளர்கள் வேள்விக்குப் பால் கறக்கும் பசுக்களை யெல்லாம் மனமகிழ்ந்து அன்பினாலே திரட்டிக் கொண்டுபோய் மேய்ப்பவன் போல, மணங்கமழும் பூக்கள் பொருந்திய நீர் நிறைந்த மண்ணியாற்றின் மணலிற் கறந்து பாலினைக் கீழே ஊற்றி (மனதுக்கு) வந்த தன்மையாகவே செய்கின்றான் என்று சொன்னான்" என்று சொன்னார்கள். ௬௨

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1246. (வி - ரை) **ஆங்கு மருங்கு நின்றார்கள்** - சபையில் "அழைமின்" என்று சொன்னவர்களின் அருகில் நின்றுகொண்டிருந்தவர்கள்; இவர்கள் சபையினரிடம் தம் காரியத்தின் பொருட்டு நின்றவர்கள். மருங்கு எனவும், நின்றார்கள் எனவும் கூறிய குறிப்பினால் சபையோரிடம் வந்து பக்கத்தில் நின்றவர்கள் என்பது பெறப்படும். சபையோர் குறிப்பிட்டு எவரையும் தனிநோக்காது "அழைமின்" என்று பொது மொழியாலுரைத்தாலும், அதுகொண்டு அங்கு மருங்கு நின்றவர்கள் சென்று அந்தப்பணி செய்தல் வழக்கு. அந்தணர்களின் ஊர்ச்சபையாதலின் வேறு எவரும் அதில் உட்கார்ந்திருக்க இடம் பெறாது நின்றிருத்தலும் வழக்காகும். தில்லைமறையோர் சபைமுன் திருநீலகண்டநாயனார் நின்றதும், திருவெண்ணெய் நல்லூர் அந்தணர் சபையின்முன் நம்பியாரூரரும் சுற்றத்தார்களும் நின்றதும் ஆகிய சரிதங்களையும் உன்னுக.

**திருமனை** - விசாரசருமனார் அவதரித்தருளிய இடமாகவும் அவர் இருக்குமிடமாகவும் உள்ளதாதலின் இவ்வாறு போற்றினார். இத்திருமனையின் அடையாளங்களேனும் அது இருந்த இடமேனும் குறித்துக் காப்பாற்றப் பெற்றிருப்பின் அது சைவ உலகத்துக்குப் பெருஞ்சிறப்புத் தருவதாயிருந்திருக்கும்.

**மற்றவன்** - "அறியாத அயன்மற் றொருவன்" (1244) என்றவன்போல அவனும் அயலவனாக நிற்பவன் என்பது குறிப்பு. மற்று-அவனை என்று பிரித்து உரைத்தலுமாம்.

**புகுந்த பரிசு** - நிகழ்ந்த தன்மை. புகுதல் - நிகழ்தல் - போதல்.

**செப்புவார்** - செப்புவாராகி. முற்றெச்சம். செப்புவார் - என்று - வாய்மொழிந்தார் என்று கூட்டி முடிக்க.

**தீங்கு** - மேற்பாட்டில் விரிக்கப்பட்டது. "செயல் தன்னைக்கேள்" என்னாது செய்த தீங்கு என்று செயலைச் சொல்லுதற்கு முன்பே முடித்து ஓதியது, அது தீங்கு என்பதனைச் செய்தி கேட்குமுன்பே அவன் மனதில் ஊன்றுவித்தற் பொருட்டு.

**வரப்பகர்ந்த**—என்பதும் பாடம். 41

**1247.** (வி - ரை) **அந்தணாளர் ஆதுதிக்கு** - ஆறனுருபு விரிக்க. **ஆதுதிக்குக் கறக்கும்** - ஆகுதிக்காக வேண்டும் வளங்களைத் தருவதற்குப்பால் கறக்கும் என்க. நான்கனுருபு கொடைப் பொருளில் வந்தது. முன்னர் "ஓமதேனுக்கள்" (1210 - 1234) என்றது காண்க. ஆகுதி - சிவவேள்வி. "பசுக்கள் பால்குன்றியவழி அவியின்மையானும், அது கொடுத்தற்குரியார் மந்திரங் கற்பமென்பன ஓதாமையானும் வேள்வி நடவாதாம்" என்று "ஆபயன் குன்றும்" என்ற் குறளின்கீழ்ப் பரிமேலழகர் உரைத்தனர்.

**சிந்தை......போல்** - முன் "ஆயன்......ஒழுகும்" (1245) என்று தாம்கொண்ட கருத்தினை எச்சதத்தனிடம் அந்தணர் அறிவிக்கும் மொழிகள். **மேய்ப்பான் போல்** - என்றதனல் மேய்ப்பதாகச் சொல்லியது வஞ்சமொழி என்றும், அவ்வாறு செய்யமுற்பட்டது போலியே என்றும் குறித்தபடியாம்.

**சிந்தை மகிழ்ந்து** - ஆ மேய்ப்பதில் கொண்ட உள்ள நிறைந்த மகிழ்ச்சியே காரணம் என்று காட்டியபடி.

**பரிவினல்** - பசுக்களின்மேல் வைத்த அன்பினல். **பரிவினல்** - சிவன்பால் வைத்த அன்பினல் என்ற உண்மைக் குறிப்பும் காண்க.

**வந்த பரிசே** - சிறுராகிய தமது மனதுக்கு வந்தபடியே. "மனம்போன போக்கெல்லாம்" என்றதுபோல. தாம் இவ்வுலகில் முன்னைத் தொடர்ச்சியுடன் வந்த அத்தன்மைக் கேற்றபடியே என்றதோர் உண்மைக்குறிப்பும் காண்க.

**செய்கின்றன் - என்றன்** - அச்செய்தியைத் தாம் அறிந்த வகையினைக் கூறியபடி. அது தாம் நேரிற் கண்டறிந்ததன்று; மற்றவன்பாற் கேட்டறிந்ததொன்று என உணர்த்தியபடியாம். அவையோர் முறை செய்கின்றபோது ஒருவன் தம்முன் வந்து சொன்ன செய்தியும், அதற்குப் பிறர் கூறும் பக்கமும் கேட்டு ஒழுங்கு செய்தல் போல, **என்றனுதலின்** அதற்கு உனது விடை யாது? என்ற குறிப்புப்பட நின்றது.

**என்றன்** - அயன் மற்ருருவனென்ற எழுவாய் தொக்கது. **மற்றவனைக்** குறித்த பெயரும் மறைந்து நின்றது.

**வாய்மொழிதல்** - சொல்லுதல். நீதிமன்றத்தில் வழங்கும் மரபு மொழி. **வாய்** என்றது வாளா பெயராய் நின்றதெனினுமாம்.

**அந்தண் மறையோர்—என்று மறையோர் வாய்மொழிந்தார்—**என்பனவும் பாடங்கள். 42

1248. மறையோர் மொழியக் கேட்டஞ்சிச் "சிறுமா ணவகன் செய்தவீ
திறையு நான்முன் பறிந்திலே; னிதற்கு முன்பு புகுந்ததனை
நிறையும் பெருமை யந்தணர்காள்! பொறுக்க வேண்டு நீங்க"ளெனக்
குறைகொண் டிறைஞ்சி, "யினிப்புகுதிற் குற்ற மெனதே யா" மென்றான்.

(இ - ள்) வெளிப்படை. மறையவர்கள் இவ்வாறு சொல்லக்கேட்டுப் பயந்து, "சிறுமாணவகன் செய்த இதனைச் சிறிதேனும் நான் முன்பு அறியேன்; இதற்கு முன்பு நிகழ்ந்த தீமையினை, நிறையும் பெருமையுடைய அந்தணர்களே! நீங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று குறைகொண்டு வணங்கிக் கேட்டுக்கொண்டு "இனி, இச்செயல் நிகழ்ந்தால் குற்றம் என்னுடையதேயாகும்" என்று எச்சதத்தன் சொன்னன்.

(வி - ரை) **சிறுமாணவகன் செய்த ஈது** - **செய்த** - செய்ததாகச் சொன்ன. தான் கண்டிலனாயினும், சபையோர் கேட்டுச் சொல்லத், தான் கேட்டறிந்ததனை உள்ளதெனவே கொண்டு, பிழை யுடன்பட்டவனாய்ச், "செய்ததாகச் சொன்ன" என்னாது **செய்த** என்றே கூறினன். "இதற்கு முன்பு புகுந்ததனைப் பொறுக்க வேண்டும்"

என்று குறைகொண்டிறைஞ்சுதலும், "இனிப் புகுதில்" என்றதும் இக்கருத்துப் பற்றியே எழுந்தன.

**இறையும்** - ஒரு சிறிதும். **முன்பு** - நீங்கள் சொல்வதற்கு முன்பு.

**நிறையும் பெருமை அந்தணர்காள்! பொறுக்க வேண்டும்** - பொறுத்தற்குக் காரணங் கூறியவாறு. நிறையும் பெருமையுடையோராதலின் என்க. இது நீதிச் சபையோரைச் சுட்டிக்கூறும் மரபு வழக்குமாம். "அனைத்துணர் வுணர்ந்தீர்" (200) முதலியவையும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

**குறை கோள்ளுதல்** - தன்குறையைச் சொல்லி வேண்டிக்கொள்ளுதல்- பிழையுடன்படுதல்.

**இனிப்புகுதில் குற்றம் எனதே ஆம்** - என்ற அவன் வாய்மொழிகள், பிற்றைநாள் விசாரசருமனார் செய்யப்புகும் செயலினை நேரே கண்டும், அத்திறத்தை அறிந்து கொள்ளாத குற்றமும், சினந்து அவரைப் புடைத்துக் கொடிதாமொழி கூறியும் பாற்குடத்தைக் காலாற் சிதறியும் செய்யும் சிவாபராதமாகிய பெருங்குற்றமும் என் மேலதாகவே இருக்குமன்றி அவர்மேற் குற்றமொன்று மிராது என்றதோருண்மைக் குறிப்புப் பெற நிற்பனவாதலும் காண்க. 48

1249. அந்த ணாளர் தமைவிடைகொண் டந்தி தொழுது மனைபுகுந்து
"வந்த பழியொன்" றெனநினைந்தே மகனார் தமக்கு வாய்நேரான்
"இந்த நிலைமை யறிவே"னென் றிரவு கழிந்து நிரைமேய்க்க
மைந்தனார்தாம் போயினபின் மறைந்து சென்றான் மறைமுதியோன்.

(இ - ள்) வெளிப்படை. அந்தணர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, மாலைச் சந்திக்கடன் முடித்து, வீட்டினுட் புகுந்து இந்த மகனால் தனக்குவந்த பழி இது ஒன்றாகும் என்று நினைந்து கொண்டு, மகனாரிடம் இதனைச் சொல்லாதவனாய், "இந்த நிலைமையினை யானே நாளை நேரிற் கண்டறிவேன்" என்று எண்ணி, அன்றிரவு கழிந்தபின், மைந்தனார் தாம் ஆனிரைகளை மேய்க்கப்போன பின்பு, மறைமுதியோனாகிய எச்சதத்தன் மறைந்து சென்றனன்.

(வி - ரை) **விடைகோண்டு** - பிழை யுடன்பட்டு மன்னிப்புக்கேட்டும், இனிவரில் என்குற்றமே என்று ஒப்பியும், அவையோரிடம் விடைபெற்றுக்கொண்டு. அவையோர் அவனது வேண்டுகோளுக்கு இணங்கி விடை தந்தனர் என்பது.

**அந்தி தொழுது** - மறையோர் அந்தியிற் செய்யவேண்டிய சந்தியா தியானம் என்னும் கடமையைச் செலுத்தி. அந்தி என்பது ஆகு பெயராய் அந்நேரத்தில் வழிபடற்குரிய தேவிக்காயிற்று.

**வந்த பழி ஒன்று** - ஒன்று - பெயர்ப்பயனிலை. மகனார் - மைந்தனார் - என விசாரசருமரைப் பன்மையிற்கூறிய ஆசிரியர் தந்தையை ஒருமையாற்கூறிய தன்மை காண்க. இவ்வாறே மேல்வரும் பாட்டுக்களில் வருவனவும் கண்டு அவ்வவற்றின் அமைதியையுங் கண்டுகொள்க.

**வாய் நேர்தல்** - சொல்லுதல். மகனாரிடம் சொல்லாதிருந்ததற்குக் காரணமாவது பழி ஒன்று வந்ததென்று கவலை கொண்டதும், தானே நேரில் அறிவேன் என்று துணிந்ததும் ஆம் என்பது குறிக்க, வாய் நேரான் என்பதனை அந்த இரண்டற்குமிடையில் வைத்தோதினார்.

**இரவு கழிந்து** - கழிய என்பது கழிந்து என வந்தது. வினையெச்சத்திரிபு. எச்சதத்தன் கவலையினால் தூக்கம் பிடியாமல் இரவுக் காலம் கழித்தான் என்று குறிப்பினு

லுணர்த்தினர். மறையோர் ஆகுதிக்குக் கறக்கும் பால் வீணாய்ப் போயினதெனக் கேட்டதும் அவன் கொண்ட அச்சமும், அந்திதோழுது என்றதனால் அவனது ஒழுக்கமும் புலப்பட்டமை காண்க. "இருமை வினைக்கும் ஒருருவாம்" (1215) என்றபடி அவன் நல்வினைக்கும் காரணனாதலின் பழியஞ்சிக் கவன்றான் என்பதாம்.

**மறைந்து சென்றான் மறை முதியோன்** - பின் சென்றதனால் எழுவாயும் பின்வந்தது. மறை - வேதம் என்றும், மறைதல் என்றும் இருபொருளும் படநின்றது.பின்னரும் மறைந்து - குரவின்மிசை யேறி ஒளித் திருந்தான் (1250) என்பது காண்க. விசாரசருமரின் ஒளியின் முன்அவன் மறைய வேண்டிய நிலையிலுள்ளவனே யாவன் என்க. "நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்" என்பது நீதிநூல். மகனாரிடத்தில் நேரில் கேட்டும் அல்லது கூடவே சென்றும் அறிந்து கொள்ளும் நிலையினையுடைய தந்தை இவ்வாறு மறைந்து நிற்கவேண்டும் அவசியமில்லையாதலின் அதுபற்றி முன்னர் "அதுவே நஞ்சு மனிக்கு மரவுபோல்" (1215) என்று உவமித்ததன் பொருத்தமும் கண்டுகொள்க. மேலும் இக்குறிப்பினால் அவனை "மறையோன்" (1250), "முதுமறையோன்" (1253), "மாலாமறையோன்" (1255), "மறையோன்" (1256), "முதுமறையோன்", (1263) என்றே கூறுவதும் உய்த்துணர்ந்து கொள்க. அவன் காசிப கோத்திரத்தில் உதித்து மறைபயின்று ஒழுகிய அளவில் மறையோனாய் முதியோனாய் நின்றொழிந்தனனன்றி மறையின் உட்பொருளாகிய சிவஞானத்தினை உணராது மடவோனாய் நின்றான் என்பது குறிப்பு. பின் - காலமு மிடமும் குறித்தது. 44

1250. சென்ற மறையோன் றிருமகனார் சிறந்த வூரா னிரைகொடுபோய்
மன்றன் மருவும் புறவின்கண் மேய்ப்பார் மண்ணி மணற்குறையி
லன்று திரளக் கொடுசென்ற வதனை யறிந்து மறைந்தப்பா
னின்ற குரவின் மிசையேறி நிகழ்வ தறிய வொளித்திருந்தான். ருடு

(இ - ள்) வெளிப்படை. அவ்வாறு சென்ற மறையோனாகிய எச்சதத்தன் தனது திருமகனாராகிய விசாரசருமனார் சிறந்த ஊர் ஆனிரைகளைக் கொண்டுபோய் மணங் கமழும் புறவினிடத்து மேய்ப்பாராகி மண்ணியாற்றின் மணற்குறையில் அன்று திரட்டிக்கொண்டு சென்ற அச்செயலை அறிந்து, மறைந்து அப்பால் நின்றதொரு குராமரத்தின்மேல் ஏறி இனி நிகழ்வதனை அறிவதற்காக ஒளித்திருந்தான்.

(வி - ரை) திருமகனார் - மேய்ப்பார் - கொடுசென்ற அதனை - மறையோன் - அறிந்து - மறைந்து - ஏறி - அறிய - ஒளித்திருந்தான் என்று கூட்டியுரைத்துக்கொள்க.

**சிறந்த ஊர்** என்றும், சிறந்த ஆனிரையென்றும் கூட்டி உரைக்க நின்றது. இருவழியும் சிறப்பு விசாரசருமனாரது தொடர்பினால் உளதாகிய தென்க.

**மன்றல் மருவும் புறவு** - மன்றல் - மணம். இது புறவினிற் பூக்கும் பலவகை மரங்களின் மலர்கள் - இலை - தளிர் என்றிவற்றாலாவது. "மணந் தங்கிட" (1238); "வண்டுமருவும்திருப்பள்ளித்தாமம்" (1240.) "கந்தமலர்" (1247) என்பன காண்க.

**அன்று** - விசாரசருமனார் திருவருள் பெறவும், எச்சதத்தன் கழுவாயில்லாத சிவாபராதமும் நீங்கப்பெற்றுக் கதிபெறவும், இச்சரித நிகழ்ச்சியினால் உலகம் சிவபூசைப் பயன் பெற்றுய்யவும் நின்ற ஒப்பற்ற திருநாளாதலின் அதனை அன்று என உயர்வு தோன்றச் சுட்டிக் கூறினார். அன்று - அன்றும். உயர்வு சிறப்புந் தந்து நின்ற இறந்ததுழுவிய எச்சவும்மை தொக்கது.

**அறிந்து - அறிய** - திரளக் கொடுசென்ற அதுவரைக்கும் அறிந்தனன்; இனிமேல் நிகழ்வதனை அறியநின்றான் என்க.

அப்பால் . சிறிது தூரத்திற் கப்பால். அகரம் சேய்மைச் சுட்டு. மகனார் செய்வ தனைத் தான் நன்கு காணவும் தன்னை அவர் காணாமலும் இருக்கும் இடம் தேடினாதலின் தூரத்திலிருந்த மரத்தை நாடியதுடன் அதன் மேல் ஏறி ஒளித்தும் இருந்தான்.

குரவு - குரா என்பது ஒருவகை மரம். இதன் மலரைச் சிவபெருமான் உகந்தணிவர். "குராமலரோ டரா மதியஞ் சடைமேற் கொண்டார்" என்ற திருத்தாண்டகமும், " திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற " என்ற திருவிசைப்பாவும் காண்க. இதனை நந்தனவனங்களின் வைத்துப் போற்ற வேண்டிய மரங்களினுள் வகைப்படுத்தி 240-ல் ஆசிரியர் கூறியதும் ஆண்டு உரைத்தவையும் பார்க்க. 45

1251. அன்பு புரியும் பிரமசா ரிகளுங் மூழ்கி யரனார்க்கு
முன்பு போல மணற்கோயி லாக்கி முகைமேன் மலர்கோய்து
பின்பு வருமான் முலைபொழிபால் பெருகுங் குடங்கள் பேணுமிடங்
தன்பாற் கொணர்ந்து தாபித்துப் பிறவும் வேண்டு வனசமைத்தார்,

1252. நின்ற விதியின் விளையாட்டா னிறைந்த வரும்பூ சனைதொடங்கி
யொன்று முள்ளத் துண்மையினா லுடைய நாதன் றிருமுடிமேன்
மன்றல் விரவுந் திருப்பள்ளித் தாமஞ் சாத்தி மஞ்சனமா
நன்று நிறைதீம் பாற்குடங்க ளெடுத்து நயப்புற் றாட்டுதலும், சஎ

1253. பரவ மேன்மே லெழும்பரிவும் பழைய பான்மை மிகும்பண்பும்
விரவ மேதக் கவர்தம்பான் மேவும் பெருமை வெளிப்படுப்பா
னரவ மேவுஞ் சடைமுடியா ரருளா மென்ன வறிவழிந்து
குரவ மேவு முதுமறையோன் கோப மேவும் படிகண்டான். சஅ

1251. (இ - ள்) வெளிப்படை. அன்பு புரிகின்ற பிரமசாரிகளாகிய விசாரசருமனாரும், நீரில் மூழ்கிப், பின், சிவபெருமானுக்கு முன்னை நாட்களிற் போல மணலாற் சிவாலயமும் சுற்றாலயமும் ஆக்கி, அன்றுமலரும் அரும்புகளையும் மெல்லிய மலர்களையும் கொய்து, பின்புவரும் பசுவின் முலைபொழிபால் பெருகும் குடங்களைப் பேணும் இடத்திற் கொண்டு வந்து தாபித்துப் பிறவும் வேண்டுவனவற்றை அமைத்துக் கொண்டாராகி, சகூ

1252. (இ - ள்) வெளிப்படை. நின்ற விதியின் விளையாட்டாலே நிறைந்த அரிய பூசனையைத் தொடங்கி ஒன்றிய உள்ளத்தின் உண்மையினாலே ஆளுடைய நாதரது திருமுடிமேல் வாசனை பொருந்திய திருப்பள்ளித் தாமத்தைச் சாத்தி அருச்சித்து நன்றாக நிறைந்த இனிய பாற்குடங்களை எடுத்து ஆசையுடன் திருமஞ்சனமாக ஆட்டுதலும், சஎ

1253. (இ - ள்) வெளிப்படை. பரவ மேன்மேல் எழுகின்ற அன்பும், முன் பிறவி வாசனை மீக்கூரும் பண்பும் பொருந்த, மேன்மையுடைய அவரிடம் உள்ள பெருமையை வெளிப்படுத்துவதற்குப், பாம்பினை யணிந்த சடைமுடியுடைய சிவபெருமானது அருளேயாமிது என்று சொல்லும்படி அறிவழிந்து, குராமரத்தின் மேவி இருந்த முதுமறையோனாகிய எச்சதத்தன், கோபமூளும்படி அதனைக் கண்டனன். சஅ

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1251. (வி - ரை) அன்பு புரிதல் - அன்பினால் தூண்டப்பட்ட செயல் செய்தல். அன்பு - அதனால் விளையும் செயலுக்காயிற்று. அன்புகொண்ட என்றலுமாம்.

பிரமசாரிகள் - பன்மை விகுதி பெருமைகாட்டி நின்றது. உம்மை சிறப்புணர்த் திற்று.

மூழ்கி - இதனை நித்த நியமமாய்ச் செய்து பூசனை செய்தனர். இந்நாட் பூசையுடன் இனி மூழ்கும்செயல் வேண்டப்படாமல் "அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனா"ராய் (1264) விளங்கும் பெருமை குறித்து இங்குச் சொல்ல வேண்டியிருத்தலின், முன்னர், முதலிற் பூசைசெய்யத் தொடங்கின செயல் கூறும்போது (1237-ல்) இதனைச் சொல்லாதுவிட்டதிறம் காண்க.

முன்புபோல மணற்கோயி லாக்கி - முன்பு ஆக்கியதிறம் 1237-ல் விளக்கப் பட்டது. (முன்புபோல) முகைமேன் மலர் கொய்து என்க. இதனை 1238-ல் காண்க.

பின்பு வரும் ஆன்முலை பொழிபால் - பின்பு வரும் - மலர் கொய்துவைத்த பின்பு செய்ய வருவதாகிய இச்செயலை விரிவாய் 1239—1240-ல் உரைத்தபடி இங் கும் கொள்க. பால் கறந்து வெகுநேரம் தங்கினால் அதன் தன்மை மாறுமாகையால், ஏனைப்பொருள்களை அமைத்தபின் அதனைத்தேடிக்கொள்வது அமைவுடைத்தாம்என்பது குறிக்க அம்முறைபற்றியே இறுதியிற் கூறியதுடன் பின்பு வரும் என்றும் குறித்தார். இனி, அன்று கொண்டபால் முன்னை நாட்களிற்கொண்ட பால்போலன்றிப் பின்னே வரும் சரித விளைவுக்குக் காரணமாய் வருதல் குறிப்பிற் கூறியபடியுமாம். "வெவ்வே றியல்பினில்" (811) என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

ஆன்முலை பொழிபால் - கறவாமல் ஆன் தாமே பொழிந்தன என்ற பொருள் தோன்றப் பொழிபால் என்றார். "முலைதீண்டச் செழும்பால் பொழிந்தனவால்" (1239) என்றது காண்க.

பெருதுங் குடங்கள் பேணுமிடந் தன்பாற் கொணர்ந்து தாபித்து - 1240 பார்க்க. பெருதுங்குடங்கள் என்றது பால் நிறையப் பொங்கப்பெற்ற என்ற பொருளில் வந்தது. பேணும் இடம் - ஆலயத்தினுள் திருமஞ்சனக் குடங்கள் வைக்கவேண்டிய முறையின் அமைத்த இடம்.

பிறவும் வேண்டுவன - திருமஞ்சன நீர் - தருப்பை முதலாயின. இதற்குச் சிவ லிங்கம் முதலாயின என்பர் ஆறுமுகத்தம்பிரானார். "அரனார்க்கு முன்புபோல மணற் கோயிலாக்கி" என்றதனால் சிவலிங்கம் முன்னரே பெறப்பட்டமை கண்டுகொள்க.

வேண்டுவன பிறவும் என்க. பூசைக்குரிய சாதனங்களையும் வேண்டுவனவாகிய பிறவற்றையும். இரண்டனுருபு தொக்கது.

சமைத்தல் - தேடிக் கொள்ளுதலும், தேடியபின் அவற்றைப் பூசைக் குரியபடி மாலைமுதலியன போல அமைத்துக் கொள்ளுதலுமாம். 46

1252. (வி - ரை) நின்ற விதியின் விளையாட்டால் - சைவாகமங்களின் நிலைத்த விதிகளின்படியே விளையாட்டாகவும். நின்ற விதியின் - விதியின் நின்ற என்றுகூட்டி முன்னைப் பிறவி வாசனையினால் அவரது மனத்தினுள்ளே தோன்றி நின்ற என்றுரைத் தலுமாம். "முந்தை யறிவின் றொடர்ச்சியினால்" (1218), "செம்மை நெறியே உறு மனத்தில்" (1236), "முன்னை யர்ச்சனையின் அளவின் றொடர்ச்சி விளையாட்டா" (1237) என்று முன்னர்க் கூறியவை காண்க.

நிறைந்த அரும் பூசனை - முன்னர், "குறித்தபூசை" (1241), "நிறை பூசனை" (1243) என்ற ஆசிரியர் இங்கு இனி நிறைவாக வுள்ளதனை இவ்வாறு இறந்த காலக் குறிப்பொடு கிளந்தது அன்றைய நாட்பூசை விரைவில் நிறைவு பெறும் அரிய பூசையாய் விளங்குவ தொன்றாகும் என்ற குறிப்புப் பெறக் கூறியபடியாம். "தேடா தன வன்பினி னிரப்பி" (1242) என்றபடி பூசையின் எல்லாவுறுப்புக்களும் நிறைந்து

என்றலுமாம். பிறர் எல்லாரும் செய்யும் பூசைகட் கெல்லாம் குறிக்கொள்ளத் தக்க இலக்கியமாயும் பயன் றருவதாயும் நிகழ்வதொன்றாகலின் அரும் பூசனை என்றார்.

ஒன்றும் உள்ளத் துண்மை - ஒருப்பட்ட உள்ளத்தின் மெய்ம்மைநிலை. "ஒருமை நினைவால்" (1242) என்றது காண்க. மனம் ஒருப்படாதபோது பூசனையாற் பயனில்லை என்பது துணிபு. "பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு, நக்கு நிற்ப னவர்தமை நாணியே" என்ற திருக்குறுந்தொகையும் பிறவும் காண்க.

உண்மை - உள்ளத்தின் தன்மையாகிய ஒருமைப்பாடு. இவ்வுள்ள நிகழ்ச்சி பின்னர் 1254—1257 பாட்டுக்களில் விரித்துக் கூறிய புறநிகழ்ச்சிகளால் அறியப்படும்.

உடைய நாதன் - ஆளுடைய இறைவன். "உடைய நாதனே போற்றி" என்பது திருவாசகம். "ஆளவுடையார்" (1241) என்றது காண்க. சிவபூசைக்கு "உடையவர்" பூசை என வழங்கும் சைவமரபும் கருதுக. உயிர்கள் யாவும் இறைவனது அடிமைகளாம் என்பது உண்மைநூற் றுணிபு. அதனை எஞ்ஞான்றும் மனத்தினுள் ஊன்றவைத் தொழுகுதல் வேண்டும் என்பது உயர்ந்தோர் ஒழுக்கமாம். கல்வெட்டுச் சாசனங் களில் உடையார் எனவரும் வழக்கும் காண்க.

திருப்பள்ளித்தாமஞ் சாத்தி...ஆட்டுதலும் - முன்னரும் "அருச்சித்துப் பாலின் திருமஞ்சன மாட்டி" (1240) என்றது காண்க. அபிடேகத்தின் பொருட்டு அட்ட புட்பஞ் சாத்தி என்பாருமுண்டு.

நன்று நிறை தீம் பாற் குடங்கள் - "பெருகுங் குடங்கள்" என முன் பாட்டிற் கூறியது காண்க. நன்று நிறை என்பது குடங்களுள் நிறைந்தது பால் அளவில் அமை யாது நன்றென்பன எல்லாம் நிறைந்தன என்ற குறிப்புப்பட நின்றது. நன்று ஆட்டு தலும் எனக்கூட்டி யுரைத்தலுமாம். 47

விளையாட்டா நிறைந்த—என்பதும் பாடம்.

1253. (வி - ரை) பரிவும் - பண்பும் - விரவ என்க. பரவ எழும் பரிவு - பரவ எழுகின்ற ஆசை.

பரவுதல் - இங்குப் பூசிக்கும் எல்லா உறுப்புக்களையும் உள்ளிட்டு நின்றது. பூசை செய்யச் செய்ய அதில் அன்புமிகுதல் உயர்ந்தோரிலக்கணம்.

பரவ எழும் பரிவு என்றது இப்பிறவியின் முயற்சியும், பழைய பான்மை மிகும் பண்பு என்றது அதற்கு ஆதரவாய் முன்னைப் பிறவியிற்கொண்ட சைவ ஒழுக்க முயற்சியும் குறித்தன. பான்மை - பழைய வாசனை. முன்பாட்டில் நின்றவிதி என்ற தும், "அன்பர் அன்பின் பால் உளதாய்" (1241) என்றதும் காண்க.

பரிவும் - பண்பும் - விரவ - இவ்வாறாகப் பொருந்தி நிற்க இந்த நிலையினை(க் கண்டான்) என்க.

மேதக்கவர் - மேன்மையுடையவர். மேதகைமை - மேன்மை.

பெருமை வெளிப்படுப்பான் - மேன்மையினை உலகர்க்குப் புலப்படும்படி வெளிப் படுத்திக் காட்டும் பொருட்டு. வெளிப்படுத்திக் காட்டாவிடில் அறிவார் ஒருவருமிலர் என்பதாம். பானீற்று வினையெச்சம். வெளிப்படுப்பான் - சடைமுடியார் - அருளாம் என்ன அறிவழிந்து - வெளிப்படுத்துவதற்காகச் சடையார் மேற்கொண்ட அருள் என்னும்படி மறையோன் அறிவழிந்தனன். அவன் அறிவழியாது, கோபம் மேவாது நேர்கண்டிருப்பானாயின் தான் அன்றுசெய்தது போலச் செய்திருக்கமாட்டான்; அப்படிச் செய்திரானாயின் விசாரசருமரது பெருமை இவ்வுலகில் வெளிப்பட்டிராது; ஆதலின் அருளே அவனை அறிவழியச் செய்தது என்ன என்றார். அருள் அறிவுரு வாதலின் அறிவழியச்செய்யுமோ என்றையுறுவார்க்குப் பெருமை வெளிவருவதற்

காகத் திருவருளாயிற்று இது என்னும்படி என்றார். "உள்ளங் கவர்ந் தெழுந் தோங்குசினங் காத்துக், கொள்ளுங் குணம்" என்றபடி அறிவழிந்தவரே கோபங் கொள்வர் என்ற குறிப்பும் காண்க.

முன்னர் 1240 - 1241 - 1242 மூன்று பாட்டுக்களிற் கூறியது போல் ஈண்டும் இந்த மூன்று பாட்டுக்களால் விசாரசருமனாரது பூசையினைக் கூறும் பண்பும் காண்க. முன்னர்க், "குறித்த பூசை கொள்கின்றார்" (1241) என்று பூசையினை ஏற்று அருள் வைத்ததனைக் கூறியபடியே, ஈண்டும், "சடைமுடியார் அருளாம் என்ன" என்று உவமை முகத்தாற் குறிப்பார் போன்று அருளினைக் கூறிமுடித்த பெற்றியும் சிந்தித்துக் களிக்கவுள்ளது.

பிரமசாரிகளும் - ஆக்கி - கொய்து - தாபித்து - சமைத்தா (ராய்த்) (1251) - தொடங்கி - சாத்தி - எடுத்து - ஆட்டுதலும் (1252) - விரவ - முதுமறையோன் அறிவழிந்து - கோப மேவும்படி கண்டான் (1253) என்று இந்த மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க.

விரவு மேதக்கவர்—என்பதும் பாடம். 48

1254. கண்ட போதே விரைந்திழிந்து கடிது சென்று கைத்தண்டு
கொண்டு மகனார் திருமுதுகிற் புடைத்துக் கோடிதா மொழிகூறத்
தொண்டு புரியுஞ் சிறியபெருந் தோன்ற லார்தம் பெருமான்மேன்
மண்டு காத லர்ச்சனையின் வைத்தார் மற்றொன் றறிந்திலரால். ௪௯

(இ - ள்) வெளிப்படை. கண்டபோதே விரைவில் இறங்கி வேகமாகச் சென்று கைத்தண்டினால் மகனாரது திருமுதுகில் புடைத்துக் கொடிதாகிய மொழிகளைக் கூறவும், திருத்தொண்டு புரியும் சிறிய பெரிய தோன்றலார், தமது பெருமான்மேல் அருச்சனையில் முறுகிய காதலினை ஊன்றி வைத்திருந்தாராதலின் வேறொன்றும் அறிந்தாரல்லர்.

(வி - ரை) கைத்தண்டு கொண்டு திருமுதுகிற் புடைத்து - முதுமறையோனாதலின் கையிற்றண்டு வைத்திருந்தான்; அல்லது ஒருதண்டு அன்று எடுத்திருக்கலாம்.

முதுகிற் புடைத்து - விசாரசருமனார் தன்னை அறியாமல் மறைந்து ஒளித்திருந்தவன் பின்புறமிருந்து சென்றானாதலின் முதுகிற் புடைத்தான் போலும்.

தொண்டு புரிதல் - பூசை புரிதல். இங்குத் திருமஞ்சன மாட்டும் திருப்பணி குறித்தது.

சிறிய பெருந் தோன்றலார் - பருவத்தாலும் உருவத்தாலும் சிறியரேனும் பண்பினாற் பெரியவர் என்க. முரண் தொடை. தோன்றல் - பெருந்தகை, பெருமையிற் சிறந்தோர். "சிறிய பெருந்தகையார்" (1220) பார்க்க.

தம்பெருமான் மேல் அர்ச்சனையின் மண்டுகாதல் வைத்தார் என்க. "ஒன்றும் உள்ளம்" (1252), "ஒருமை நினைவு" (1242) என்று உரைத்தநிலை. இந்நிலையை "நெறிவழியே சென்று நேர்மையு ளொன்றித், தறியிருந் தாற்போலத் தம்மை நிறுத்திச், சோறியினுந் தாக்கினுந் துண்ணேன் றுணராக், குறியறி வாளர்க்குக் கூடலு மாமே" (தந். 5, யோகம் 1.) என்று திருமந்திரம் உணர்த்திற்று.

மற்றொன்று - எச்சதத்தன் செய்த அடாத செயலை அவன் பக்கத்தில் அவனைச் சார்த்திக் கூறிய ஆசிரியர், அச்செயலின் நிலை விசாரசருமனார் பக்கம் சாராவகை அதனை மீண்டும் சொல்லாராகி, மற்றொன்று என்று விலக்கிக் கூறிய பண்பு காண்க. மேல்வரும் பாட்டிலும் "வெகுண்டோ னடிக்க, வேறுணரார்" என்றது

காண்க. "முன்னினைந்த வப்பரிசே" (481), "தன்கருத்தே" (647) என்றவை காண்க. மற்றென்றும் - உம்மை தொக்கது. 49

1255. மேலாம் பெரியோர் பலகாலும் வெகுண்டோ னடிக்க வேறுணரார்
பாலார் திருமஞ் சனமாட்டும் பணியிற் சலியா ததுகண்டு
மாலா மறையோன் மிகச்செயிர்த்து வைத்த திருமஞ் சனக்குடப்பால்
காலா லிடறிச் சிந்தினான் கையாற் கடைமைத் தலைநின்றான். ருo

(இ - ள்) வெளிப்படை. வெகுண்டோனாகிய எச்சதத்தன் பலகாலும் அடிக்க மேலோராய பெரியோர் வேறு அதனை உணராதவராகிப் பாலினால் நிறைந்த திருமஞ்சன மாட்டும் திருப்பணியிற் சலியாததனைக்கண்டு, அறிவழிந்து மயக்கமெய்தி மிகவும் கோபித்து, முன்னர்ச் செயலினாற் கடைத்தொழிலிற் றலைநின்றானாகிய அம்மறையவன், வைத்திருந்த திருமஞ்சனக் குடப்பாலினைக் காலினால் இடறிச் சிந்தினான்.

(வி - ரை) மேலாம் பெரியோர் - மிகப் பெரியோர். பெரியோராயுள்ள யாவர்க்கும் மேலாகும் நிலையினுள்ளவர்; தொண்டர்கள் பெரியோர்; இவர் "தொண்டர்தமக் கதிபராக" உள்ளாராதலின் மேலாம் (மேல் - ஆகும்) என்ற குறிப்புமாம்.

பலகாலும் வெகுண்டோன் அடிக்க - வெகுண்டோனாதலின் பலகாலும் அடிக்க என்று பலகாலும் செய்ததற்குக் காரணங் கூறியவாறு. கோபத்தால் அறிவிழந்திராவிடில் ஒருமுறையோடு நின்றிருப்பான் என்றதும் குறிப்பு.

சலியாதது - ஒரு சிறிதும் பிறழாது செய்தலை. இரண்டனுருபு விரிக்க. "சலியாது முயன்ற தவப்பெருந் தொண்டர்".

மாலா மறையோன்-பலகாற்செய்தும் பயனின்றாதலை உணர்ந்தும் அறிவு பெற்று உண்மையறிய மாட்டாதவனாய் கையாற்செய்த தீமைபோல் காலாலும் செய்ததற்கு அவனது அறிவழிந்த மயக்க மிகுதியே காரணம் என்றபடி. மால் ஆம் - மாலினால் மயக்கத்தினால் - மீதூரப்பட்டு மாலின்படிவமேயாகும் என்றது குறிப்பு.

மிகச் செயிர்த்து - முன்னர் அறிவழிந்து கோப மேவினான்; இப்போது அறிவு முற்றுமழிந்ததுடன் மயக்கமே உருவாகி மேலும் கோபம் கொண்டு என்க.

வைத்த திருமஞ்சனக் குடப்பால் - தாபித்து வைத்தவற்றுள் (1251) எடுத்து ஆட்டியவைபோக எஞ்சி இனி ஆட்டுதற்கென்று தாபித்து வைக்கப்பட்டிருந்ததொரு குடம் என்பது குறிப்பு. திருமஞ்சனப் பாற்குடம் என்க.

காலால்...தலைநின்றான் - கை - செயல் - ஒழுக்கம். கை - சிறுமையுமாம். கடைத்தொழிலில் தலைநின்றவன், கையினால் இனிமேலும் செய்யும் கடைத்தொழிலின்மையின் காலினாலும் அவ்வாறே செய்தான் என்பதுமாம். கடைமை - தலை - முரண் அணி. கை - கால் - சொல்லணி. தலைநின்றான் - வினையாலணையும் பெயர். சிந்தினான் - அதனால் தலைநின்றான் என வினைமுற்றாகக் கொண்டுரைத்தலுமாம்.

இவ்வொரு பாட்டில் வெகுண்டோன் - மாலா மறையோன் - கையாற் கடைமைத் தலைநின்றோன் என்று மும்முறை எச்சதத்தனைக் குறித்து முடித்தது அவன் செய்த சிவாபராதத்தினை மும்முறையாலுங் கடிந்து மொழிந்து காட்டியதுடன், அதனைச் சொல்லுமுன், தன்னை அது தாக்காதபடி கழுவாய் செய்துகொள்ளவே முதலில் மேலாம் பெரியோர் என விசாரசருமரைத் துதித்துக் கொண்டார் என்க.

கடைமைத்தலை நின்றான் என்று முன்புசெய்த அபராதத்தினைக் கடைத்தொழிலிற் றலைமை காட்டிய ஆசிரியர், பின்னர்ச் செய்ததனை, இடறிச் சிந்தினான் என்ற மட்டில் அமைந்ததனால் முன் செய்கை அடியார்பாற் செய்த அபசாரமாய்ப் பின்னதனினும் கொடிய மிக்க பெரும்பாதகமாம் என்பது குறிப்பாம். "முன்னத்தி னுணருங்

*ளைவியு முளவே, யின்ன வென்னுஞ் சொன்முறை யான* " (தொல்-சொல்-எச்ச - 63) *என்றபடி இவ்வாறு மும்முறைகூறி அவனது மிகக் கடையனுந் தன்மை குறித்தனர்.* " *தனியுமொரோவழி* " *என்றதனுல், மறையோன் செயிர்த்துக், கடைமைத் தலையின் ருன் சிந்தினுன் என்று, ஒருபொருள்மேல்வந்த பலபெயர்க்கும் தனி வினைகள் தந்து முடித்தார்.*

**கலியாரது கண்டு**—என்பதும் பாடம். 50

1256. சிந்தும் பொழுதி லதுநோக்குஞ் சிறுவ ரிறையிற் றீயோனைத்
தந்தை யெனவே யறிந்தவன்றன் றாள்கள் சிந்துந் தகுதியினுன்
முந்தை மருங்கு கிடந்தகோ லெடுத்தார்க் கதுவே முறைமையினுல்
வந்து மழுவா யிடவெறிந்தார்; மண்மேல் வீழ்ந்தான் மறையோனும்.

(இ - ள்) வெளிப்படை. *சிந்தும் பொழுதிலே அதனை நோக்கும் சிறுவர், சிறித ளவில், அந்தத் தீயவனைத் தந்தையெனவே அறிந்து, அவனது தாள்கள் சிவபெருமா னுக் குரிய பாலினைச் சிந்திய தகுதியினுல் (அப்பாதகத்தைத் தண்டிக்க எண்ணி) முன்பு பக்கத்திற் கிடந்த கோலினை எடுக்க அவர்க்கு முறைமையினுல் அதுவேவந்து மழுவாயிட, அதுகொண்டு அவனது தாள்களை எறிந்தார்; மறையோனும் மண்ணின் மேல் வீழ்ந்தான்.*

(வி - ரை) **சிந்தும் பொழுதில் அதுநோக்கும்** - ' *மற்றொன்றறிந்திலரால்*'(1254), "*வேறுணரார்*" (1255) *என்றிருந்தவர்,* அது நோக்கிய *தென்னேயோ? வெனின்,முன் குறித்த செயல்களெல்லாம் மற்றவையாயும் வேருயும் இருந்தன ;* அதுவோ *அவரின் வேறல்லாது அவரது உள்ளம் ஒன்றியதாயிருந்தது ; ஆதலின் அவர் அதனை* நோக்கி *னுர் என்க.* **நோக்குதல்** - *ஊன்றிப்பார்த்தல். அவரது நிறைந்த காதல் முழுதும் அருச் சனையில் வைத்தாராதலின் அதுபற்றிய பொருளாகிய பாற்குடம் சிதறுண்டபோது அவர் நோக்கம் பட்டது என்க. அவரது புறக்கருவி அகக்கருவிகள் யாவும் வெளியிற் செல்லாது திருப்பணி யொன்றிலே ஒன்றியிருந்தன வாதலின் திருப்பணிக்கு நேர்ந்த இடையூறு அவரது ஒன்றியிருந்த தன்மையை மாற்றி நோக்குவித்தது என்க.*

**தீயோனை இறையில் அறிந்து, என்க** - *சிந்திய செயலை நோக்கினுர் ; அந்நோக்கம் அதனைச் செய்தவன்பாற் சென்று அவனை யாவன் என்று ஆராயச் செய்தது ; அதனுல் அவன் தமது தந்தையெனவே விரைவில் அறிந்தனர்;* **தீயோனை** - *தந்தையென்ற நினைவு மட்டும் வந்ததேதவிர அவனது தீமையின் நினைவு மாறவில்லை என்பார்* **தீயோனை அறிந்து** *என்றார்.*

**தாள்கள் சிந்தும் தகுதியினுல்** - **தகுதியாவது**-*சிந்திய செயல் தாள்கள் செய்தன ஆதலின் தண்டனை பெறுதற்குத் தகுதியுடைமை.*

**முந்தை மருங்கு கிடந்தகோல்** - **கோல்** - *ஆனிரை மேய்த்தகோல். அது அவர் பக்கத்துக் கிடந்தது என்பதாம்.*

**அதுவே முறைமையினுல் வந்து மழுவாயிட** - *குற்ற நீங்கும்படி தாள்களை ஒறுத் தற்காகக் கோல் எடுக்க அது உரிய தண்டனை தரத்தக்க கருவியாக மாறுதல் முறைமை யாதலின் அம்முறையினுல் அதுவே மழுவாயிட என்க.* **முறைமை** - *இறைவரது ஆணைமுறை.* **வந்து** - *அவரது கையினில் வந்து. தமது கரணங்கள் எல்லாம் சிவ கரணங்களே ஆகப்பெற்ற* மேலாம் பெரியோ*ராதலின் தண்டிக்க எடுத்த சிறுகோலே சிவனுணையால் அவரது கையில் மழுவாயிற்று.* **முறைமை** - *மகனுக்கும் முறை என்ற குறிப்பும் காண்க. தந்தையார் கொண்ட மழு மகனுராகிய இவர்க்கு முரியதாகும் முறைமை. எறியவேண்டுமென்ற எண்ணத்துடன் எடுத்த முறைமையினுல் என்றலு மாம்,*

எறிந்தார் - தாள்களை என்ற செயப்படுபொருள் வருவிக்க.

வீழ்ந்தான் மறையோனும் - எறிந்த செயலோடு இடையீடின்றி வீழ்ந்த செயலும் நிகழ்ந்ததாகலின் எறிந்தார் - வீழ்ந்தான் என்று பயனிலையை முன்வைத்தும், அடுத்துவைத்தும் ஓதினார்; வீழ்ந்ததன் விரைவு குறித்தது. மறையோனும் - உம்மை இழிவு சிறப்பு. 51

1257. எறிந்த வதுவே யர்ச்சனையி லிடையூ றகற்றும் படையாக
மறிந்த தாதை யிருதாளுந் துணித்த மைந்தர் பூசனையில்
அறிந்த விடையூ றகற்றினராய் முன்போ லர்ச்சித் திடப்புகலுஞ்
செறிந்த சடைநீண் முடியாருந் தேவி யோடும் விடையேறி, ருஉ

1258. பூத கணங்கள் புடைசூழப் புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிக ளெடுத்தேத்த விமல மூர்த்தி திருவுள்ளங்
காதல் கூர வெளிப்படலுங் கண்டு தொழுது மனங்களித்துப்
பாத மலர்கண் மேல்விழுந்தார் பத்தி முதிர்ந்த பாலகனார். ருஙு

1257. (இ - ள்) வெளிப்படை. எறிந்த அதுவே அருச்சனையில் நேர்ந்த இடையூற்றினைப் போக்கும் படையாக உதவப், பூசையினைத் தடுத்த தந்தையின் இரண்டு தாள்களையும் துணித்து வீழ்த்திய மகனார், தமது பூசனையில் அறிந்த இடையூற்றினைப் போக்கினராய், முன்போல அருச்சிக்கத் தொடங்கலும், நெருங்கிய நீண்ட சடையினையுடைய சிவபெருமானும் உமாதேவியாருடன் விடையின்மேல் ஏறி, ருஉ

1258. (இ - ள்) வெளிப்படை. பூதகணங்கள் புடைசூழ்ந்து வரவும் பழைய முனிவர்களும் தேவர்களும் வேதமொழிகளால் தோத்திரித்து வரவும் விமலமூர்த்தியாகிய சிவபெருமான் தமது திருவுள்ளக் கருணைமிக்கு வெளிப்பட்டருளலும், பத்தி முதிர்ந்த பாலகனாராகிய விசாரசருமனார், கண்டு தொழுது மனமிகக் களிப்படைந்து அவரது பாத தாமரைகளின்மேல் வீழ்ந்தனர். ருஙு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1257. (வி - ரை) எறிந்த அதுவே...படையாக - சிவபூசையில் இடையூறகற்றும்படை பாசுபதாத்திரமாம். ஆகமங்களில் விதித்த பூசை உறுப்புக்களுள், 'இடையூற்றை விலக்குதல்' (விக்கினோச்சாடனம்) என்பதொன்று. அது, உரிய மந்திரம் பாவனை செயல்களால் மேல் - நடு - கீழ் என்ற மூன்றுலகங்களாலும் நேரும் இடையூறுகளைப் போக்கிப், பின் பூசையிற் புகுதலாகும் என்ப. அவ்விடையூறுகளாவன இன்னவென்றறியாது வருபவை. இங்கு நேர்ந்தது இவற்றின் வேறாய்ப், புதிதாய், இன்னதென் றறியவந்ததொன்று. ஆதலின் அர்ச்சனையில் அறிந்த இடையூறு என்றார்.

மறிந்த - மறித்தல் - தடுத்தல். மறித்த என்பது எதுகை நோக்கி மறிந்த என மெலித்தல் விகாரமாயிற்று. குறித்த செயல் விகாரமாதலின், சொல்லும் விகாரமாயிற்று. அவ்விடையூறு மெலிந்தொழியும் என்பதும் குறிப்பு.

இருதாளும் துணித்த - ஒருதாளே பாற்குடத்தை இடறவும் இருதாளும் சிதைத்ததென்னை? எனின், ஊன்றி நின்ற தாளினது துணைகொண்டே மற்ற ஒரு தாளைத் தூக்கி இடறினாதலின் குற்றஞ்செய்த தாளினுக்குத் துணைசெய்த குற்றத்தினுட்பட்டது ஊன்றி நின்ற காலுமாம். எனவே நீதிநூல் விதிப்படி குற்றஞ்செய்தானும் அதற்குத் துணைசெய்தானும் ஒருங்கே தண்டிக்கப்படுதல் முறையாமெனக.

முன்போல் அருச்சித்திட - இடையூறகற்றிய வகையால், தாதை வீழ்ந்த செயல் முதலிய புற நிகழ்ச்சிகள் ஒருசிறிதும் உள்ளத்திற்றாக்காது இறைவன் பாலதாகவே கொண்ட ஒருமை நினைவால் அருச்சித்திட என்பது.

அர்ச்சித்திடப் புகலும் - சடைமுடியார்நம் - வெளிப்படலும் - உலகப் பற்றறுத்த போதே இறைவன் வெளிப்படுவன் என்பதுண்மை. "யானெனதென் றற்ற விடமே திருவடியா" (கந்தர் கலிவெண்பா) என்றது காண்க.

முடியாநம் - உம்மை சிறப்பும்மை. முன் உள்ளே நிறைந்து பூசைகொண்ட அவரும் என இறந்தது தழுவிய எச்சவும்மை என்றலுமாம்.

வெளிப்படலும் - முன்னர்க் "கோளமதனில் உள் நிறைந்து பூசைகொ"ண்ட அவர், இப்போது காதல்கூர வெளிப்பட்டனர் என்க. "மறைய நின்றுளன்... முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே" (அப்பர் - திருக்குறுந்தொகை - பொது.) என்றபடி அன்பு முறுகி விளைந்த இடத்தேதான் இறைவரது வெளிப்பாடு நிகழு மென்க. நாயன்மார் சரிதங்கள் பலவுங்காண்க.

தேவியோடும் விடையேறி - அடியார்க் கருள்தந்து தம்முலகம் தர வரும்போ தெல்லாம் இவ்வாறு வருவர் சிவபெருமான். 52

1258. (வி - ரை) புராண முனிவர் - பழைய முனிவரர். புத்தேளிர் - தேவர்கள்.

விமலமூர்த்தி - சிவபெருமான். விமலமூர்த்தி என்னும் அன்மொழித் தொகைத் தொடர் மொழி மலங்கட்குப் பகையான திருமேனியையுடையவர் எனப் பொருள் தரும். "மூலமாகிய மும்மல மறுக்குந், தூயமேனி" (திருவாசகம்) என்பது காண்க.

காதல்கூர - தம்மை அவர்க்குத் தாதை எனக் கொள்கின்றாராதலின் காதல் என்ற சொல்லாற் கூறினார்.

பத்தி முதிர்ந்த - முறுகி வளர்ந்த அன்பினையுடைய. "முறுக வாங்கிக்கடைய" என்ற கருத்துமிது. (கடைதல்-தியானித்தல்; "தியான நிர்மதனாத்" என்பது சுருதி.)

பாலகனார் - விமலனார் தம்மைத் தாதை எனக்கொள்வார் காதல்கூர வெளிப் பட்டபடியால் அதற்கேற்ப நாயனாரையும் பாலகனார் என்ற சொல்லாற் கூறினார்.

பாதமலர்கள்மேல் விழுதல் - பாதத்தின்கீழ் மரம்போல வீழ்ந்து அவசமாய்க் கிடத்தல். இக் கருத்துப்பற்றியே மேல்வரும் பாட்டில் "கீழ்விழுந்தவரை எடுத்து" என்றது காண்க. மேல் - ஏழனுருபு. வரும் பாட்டில் கீழ் என்பதுமது. 53

1259. தொடுத்த விதழி சூழ்சடையார் துணைத்தா ணிழற்கீழ் விழுந்தவரை
எடுத்து நோக்கி "நம்பொருட்டா லீன்ற தாதை விழவெறிந்தாய் ;
அடுத்த தாதை யினியுனக்கு நா"மென் றருள்செய் தணைத்தருளி
மடுத்த கருணை யாற்றடவி யுச்சி மோந்து மகிழ்ந்தருள, ருச

1260. செங்கண் விடையார் திருமலர்க்கை தீண்டப் பெற்ற சிறுவனா
ரங்கண் மாயை யாக்கையின்மே லளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி யெழுந்த திருவருளின் மூழ்கிப் பூமே லயன்முதலாந்
துங்க வமரர் துதிசெய்யச் சூழ்ந்த வொளியிற் றோன்றினார். ருரு

1259. (இ - ள்) வெளிப்படை. தொடையாகிய கொன்றை மாலை சூழ்ந்த சடையினையுடைய சிவபெருமானார், தமது துணைத்தாள்களின் நிழலின் கீழே விழுந்த வரை எடுத்து நோக்கி, "நம்பொருட்டாக உன்னைப் பெற்ற தந்தை வீழும்படி நீ எறிந்தாய்; இனி, உனக்கு நாமே அடுத்த தந்தையாயினோம்" என்று அருளிச்செய்து, அவரை அணைத்தருளி, நிறைந்தகருணையினால் தடவி, உச்சிமோந்து மகிழ்ந்தருள, ருச

1260. (இ - ள்) வெளிப்படை. செங்கண் விடையினையுடைய சிவபெருமா னது மலர் போன்ற திருக்கையினாலே தீண்டப்பெற்ற விசாரசருமராகிய சிறுவனார், அவ்விடத்தே தமது மாயை உடம்பின்மேல் அளவில்லாமல் உயர்ந்த சிவமயமாய்ப்

பொங்கி எழுந்ததாகிய திருவருளிலே மூழ்கித், தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரம தேவர் முதலாகிய பெருந் தேவர்களும் துதி செய்யத் தம்மைச் சூழ்ந்து விளங்கிய சிவ வொளியினுள்ளே தோன்றினார். ௫௯

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1259. (வி - ரை) சடையார் - விழுந்த அவரை, எடுத்து - நோக்கி - என்றருள் செய்தருளி - அணைத்தருளி - தடவி - உச்சிமோந்து - மகிழ்ந்தருள - (அவ்வாறு) தீண்டப்பெற்ற சிறுவனார் - மாயையாக்கையின் மேல் - சிவமயமாய்த் - திருவருளின் மூழ்கி - ஒளியில் - தோன்றினார் என்று இந்த இரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க.

தொடுத்தஇதழி சூழ்சடையார் - இதழி - கொன்றை - இதழியும் சடையும் சிவபெருமானுக்குச் சிறப்பாயுரியவை. முன்னர்ச் "சடைநீள் முடியாரும்" (1257) என்றும், பின்னரும் "துண்டமதிசேர் சடைக்கொன்றைமாலை" (1261) என்றும் இவற்றையே எடுத்துக்கூறுதல் காண்க. தொடுத்த இதழி - மாலையாகத் தொடுத்ததுபோன்ற சரக்கொன்றை. தொடுக்கப்பட்ட கொன்றைமாலை என்று உரைத்தலுமாம். விசாரசருமனார் தொடுத்துச் சூட்டிய இதழிமாலை என்ற குறிப்புப் பட உரைக்கவும் நின்றது. ஆத்தியின்கீழ் மணலாற் சிவலிங்கந் தாபித்துக் கோயி லாக்கினாராதலின் அந்தத் தொடர்புபற்றி "ஆத்திமலரும் செழுந்தளிரும் முதலா" (1238) என்று ஆத்தியை முன்வைத்துக் கூறினாரேனும், முல்லைப்புறவுக்குரியதும் சிவபிரானுக்குச் சிறப்பாயுரியதுமாகிய கொன்றையும் உடன்கொள்ளப்படுமென்ப தாம். "பூமலி கொன்றை சூட்ட" (சாய்க்காடு - 6) என்ற திருநேரிசையும் காண்க. விசாரசருமனார் சிவமூர்த்தியாகிய குறிப்புடன் திருப்பள்ளித்தாமஞ்சாத்திக் காதல் கூர அருச்சித்தாராதலின் அவர் நினைத்துக் குறித்து அலங்கரித்த அந்தக் கோலத் துடன் வெளிப்பட்டு நிற்றலும் இறைவனருளின் இயல்பாமென்க. "ஆரொருவ ருள் குவா ருள்ளத் துள்ளே யவ்வுருவாய் நிற்கின்ற வருளுந் தோன்றும்" (பூவணம் - 10) என்ற திருத்தாண்டகமுங் காண்க.

துணைத்தாள் நிழற்கீழ் - துணைத்தாள் - இரண்டு பாதங்கள். அடைந்தவர்க்குத் துணை - பற்றுக்கோடு - ஆகிய திருவடி என்றலுமாம். "கழற்சேவடி யடைந்தார் களைகணெட்டும்" (தாண்டகம்). தாள் - திருவருள் நிறைவு. நிழல் - என்றது அவ்வரு ளின் நிறைவின் ஒருவர் பொருட்டு வெளிப்படும் நிலை. அருள் வெளிப்பட்ட பின்னரே அதன் அனுபவம் நிகழக் கூடியதாதலின் தாளின் கீழ் என்னாது தாள் நிழற்கீழ் என் றார். தாட்கீழ் எனவரும் இடங்களிலும் இவ்வாறே வருவித்துரைத்துக் கொள்ளத் தக்கது.

விழுந்தவரை எடுத்து - கீழ் வீழ்ந்தாராதலின் எடுக்க வேண்டியதாயிற்று. வீழ்ந்தாலன்றி எடுத்தல் நிகழக் கூடாதாதலின்,பெரியோர்கள்பாலும் இறைவர்பாலும் அருள்பெற வேண்டுவோர் அவர் காலின்கீழ் வீழ்தல் வேண்டும் என்பது இக்கருத்துப் பற்றியதாம். கீழ் வீழ்ந்த நிலையிலிருந்த பாண்டியநாட்டை மேலெழுவிக்க விரும்பிய குலச்சிறை நாயனார், ஆளுடையபிள்ளையார் வரும் வழியில் வீழ்ந்துகிடந்து அவரே வந்து தமது திருக்கைகளாற் றூக்கி எடுக்கும் வரையில் எழாமல் வீழ்ந்தபடியே கிடந்த வரலாறு இங்கு நினைவு கூர்தற்பாலது. (திருஞான - புரா - 656 - 657).

நோக்கி - அருட்பார்வை யளித்து.

"நம்...நாம்" என்று அருள்செய்து - இவை இறைவனார், விசாரசருமனாருக்கு உரைத்த உபதேசமாகிய உறுதிமொழிகள்.

**எடுத்து - அணைத்தருளி - தடவி** - என்றவை சிவபெருமான் கையினாற் நீண்டிச் செய்த செயல்கள். எடுத்தல் பாசநீக்கம் செய்தலும், அணைத்தல் - தடவுதல் சிவப் பேறு பெறுவித்தலும் குறித்தன. "அன்று நின்னுரு வாகத் தடவியே யால வாயர னுகத் தடவியே" (திருவியமகம் - 5) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரம் காண்க. "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி" (அச்சோ 1) என்ற திருவாசகக் கருத்தும் நினைவு கூர்க. அணைத்தலால் சிவமாக்கப் பெறுதலும், தடவுதலால் அதனுள் மூழ்கிச் சிவவொளியிற் றேன்றுதலுமாம். இக்கருத்து மேல்வரும் திருப்பாட்டில் "தீண்டப் பெற்ற" என்றதனால் விளக்கப்படுதல் காண்க. சிவஞானமாபாடியம் 11 சூத்திர வுரையைத் தழுவி அணைத்தல் - அருள் விளக்கமும், தடவுதல் - ஆனந்த விளக்கமு மாம் என்று கொள்ளலாமென்பர் வித்வான் திரு. சா. பெரியசாமிப் பிள்ளை. "தீவகமா மென வுருவாய் வந்து நாதன் றிருநோக்காற் பரிசத்தாற் றிகழும் வாக்காற், பாவனை யால்" (சிவப்பிரகாசம் - 8) என்றபடி இங்கு நோக்கி - அருள் செய்து - தடவி என்ற வற்றால் முறையே நோக்கால் - வாக்கால் - பரிசத்தால் நிகழும் தீக்கைகளும், இனம் பற்றி ஏனைய தீக்கைகளும் நிகழ்ந்தன எனக் கொள்ளலாமென்பர் ஸ்ரீ ந. சிவப்பிர காசதேசிகர்.

**எடுத்து** - "என்னைப் பவத்திற் சேரா வகையெடுத்து" என்ற சிவஞான சித்தி யார் பார்க்க.

**ஈன்றதாதை** - பெற்றெடுத்து வளர்த்துப் பிரமோபதேசமும் செய்த தந்தையை யும். சிறப்பும்மை தொக்கது.

**நம்பொருட்டால்** - நமக்குச் செய்யும் திருப்பணிவிடை முட்டின்றி நிறைவேறும் பொருட்டு. "அர்ச்சனையில் இடையூறகற்றும் படையாக", "அறிந்த இடையூ றகற் றினராய்" (1257) என்றது காண்க.

**இனி உனக்கு நாம் அடுத்த தாதை** என்க. அடுத்த - பின்முறையால் என்று கொண்டு ஈன்றதாதை எறிந்து பட்டொழிந்தமையால் அடுத்ததாதை - அடுத்தபடியில் - என்க. அடுத்த - தகுதியான என்று கொண்டு அவன் உனக்கு அடாத தாதை, நாமே அடுத்ததாதை என்ற குறிப்பும் காண்க. இனி அடுத்த - வழிபட்ட - தாதை என்றலு மாம். இனி உனக்கு அடுத்த தாதை என்றது இதன் முன்னர் எல்லா உயிர்களுக்கும் போல உனக்கும் பொதுவகையால் இறைவராயும் தாதையாயு மிருந்தோம்; இனி அவ்வாறன்றிச் சிறப்பு வகையால் தாதை முறைமையால் அடுத்து மிகநெருங்கி விளங் குவோம் என்றதும் ஆம்.

**அணைத்தருளி - தடவி - உச்சிமோந்து - மகிழ்ந்தருள** - இவை தாதையர் தம் சிறுவரிடத்து அன்பினாற் செய்யும் செயல்கள். தாதை என்ற முறைமை அருளி னாராதலின் தாதைபோல இவை செய்தருளினர். இதன்மேல் மகன்மையாகிய உரிமை தந்த விவரம் 1261-ல் உரைப்பார். 54

1260. (வி - ரை) **திருமலர்க்கை தீண்டப்பெற்ற** - தீண்டப் பெற்ற - தீண்டப் பெற்றதனால் என்க. காரணப் பொருட்டாய் வந்த பெயரெச்சம். பெற்றதனால் திருவருளின் மூழ்கி ஒளியில் தோன்றினார் என்றதாம்.

**அங்கண்மாயை யாக்கை** - அங்குத் தீண்டப்பெற்ற யாக்கை - மாயையால் ஆகிய உடம்பு. உயிர்களுக்கு உடம்பு மாயையினின்றும் தரப்படுகின்ற தென்பது சாத்திரம். தநு என்கின்ற உடம்பும், கரணம், புவனம், போகம் என்ற இவையும் எல்லாம் மாயையினின்றும் வருவனவாம்.

**அளவின்று உயர்ந்த சிவமயமாய்** என்றது மாயாவுடம்பும் கரணங்களும் சிவ வுடம்பும் சிவகரணங்களும் ஆகி. பசு கரணங்கள் எல்லாம் பதி கரணங்களாக மாறி

என்க. "மற்றவர்க்கு நந்தம் கரணம்போ லல்லாமை காண்" என்ற திருக்களிற்றுப் படியாரும், "ஊனுயிர் வேறு செய்தா னொடித்தான்மலை யுத்தமனே" என்ற நம்பிகள் தேவாரமும் "மாயை மாமாயை மாயா வருமிரு வினையின் வாய்மை, ஆயவா ருயிரின் மேவும் அருளொளி லொளியாய் நிற்கும்" (சிவப்பிரகாசம் - 70) என்ற ஞானசாத் திரமும் பிறவும் காண்க. கைதீண்டினதால் மாயை யாக்கையே அதற்கு மேற் பட்ட அளவில்லா உயர்வுடைய சிவமயமான யாக்கையாக மாற்றப்பெற்றது; பரிசவேதியானது தான் தீண்டிய பொருளைப் பொன்னுக்குதல்போல என்க. சிவ மயம் - சிவசொரூபம். திருவருளில் மூழ்கி - அருட்பெருக்கினுள் அழுந்தித் தன்வச மிழந்து. அருள் நிறைவுபெற்று.

பூமேல் அயன் முதலாந் துங்க அமரர் துதிசெய்ய - பூ மேல் அயன் - பூ - தாமரை; தாமரையில் இருக்கும் பிரமன். துங்கம் - பெருமை. சிவத்துவ விளக்கமாகிய திருவருள் வெளிப்பாடு கண்டு அமரர் துதித்தனர் என்க. "வானவர்பூ மழைபொழிந் தார்" (130) என்பது முதலிய இடங்கள் காண்க.

பூ - பூமி என்று கொண்டு, அயன் முதலாம் பெருந் தேவரும் தமது தேவருலகம் விட்டுப், பூ மேல் - பூமியில் வந்து துதிக்க என்றுரைத்தலு மொன்று. "இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற வாறு என்று" விரும்பிப் பிரமன் முதலியோர் பூவுலகில் வந்து சிவபூசை செய்கின்றார்கள்; அவர்கள் எல்லாம் சிவபூசையின் பயன்பெறச் சண்டீச ரைத் துதிக்கின்றார்களாதலின் இவ்வாறுகூறினர் என்றலுமாம் என்க.

சூழ்ந்த ஒளியில் தோன்றினர் - தம்மை உள்ளடக்கி மேற் சூழ்ந்து எழுந்த சிவ வொளியில் விளங்கினர். சிவப்பிரகாசம் என்பது வடமொழி. இவ்வொளி ஞானக் கண்ணாற் காணப்படுவதாகும்.

சிவபெருமான் வெளிப்பட்டுக் கைதீண்டியதனால் மாயையுடம்பு சிவவுடம்பாய் விளங்கினமை இப்பாட்டிற் கூறப்பட்டது. இதனை "அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனா ராயினார்" (1264) என்பது காண்க.

சூழ்ந்த ஒளி என்பது சிவத்துவ விளக்கமாகிய பேரொளி. இத்தகைய ஒளி பெரி யோர்களுடலைச் சூழ்ந்து விளங்கு மென்பது. "அங்க ணேரொளி யாயிர ஞாயிறு பொங்கு பேரொளி போன்று" (26) என்றதனாலும் காண்க. 55

1261. அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னாக்கி யனைத்துநாம்
உண்ட கலமு முடுப்பனவுஞ் சூடு வனவு முனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோ" மென்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார். ருசு

(இ - ள்). வெளிப்படை. தேவர்களது பெருமானாகிய சிவபிரானும் விசாரசரு மனாரைத் தொண்டர்களுக்கெல்லாம் அதிபராக ஆக்கி, "நாம் உண்டபரிகலமும், உடுக்கும் உடைகளும், சூடும் மாலை அணிகலன் முதலியனவும் ஆகிய அனைத்தும் உனக்கே உரிமையாகும்படி சண்டீசன் ஆகும் பதவியையும் தந்தோம்" என்று சொல்லி அவருடைய அழகிய பெரிய திருமுடிக்குத் தமது பிறைச்சந்திரன் இருக்கும் சடையிற்சூடிய கொன்றைமலர் மாலையை எடுத்துச் சூட்டியருளினார்.

(வி - ரை) அதிபன் ஆக்கி - சூழ்ந்தஒளியிற் றோன்றிய அவரை எனச் செயப்படு பொருள் முன்பாட்டிலிருந்து வருவிக்க.

தொண்டர்தமக்கு அதிபன் ஆக்கி - தொண்டர்களுக்கெல்லாம் நாயகராக - முதல்வராகச் - செய்து. "சோதி மணிமுடித் தாமமு நாமமும் தொண்டர்க்கு நாயகமும்" (திருப்பல்லாண்டு) என்றது காண்க.

**உண்ட கலமும், உடுப்பனவும், சூடுவனவுமாகிய அனைத்தும் எனக. அனைத்தும்** என்ற முற்றும்மையால் "பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயில்" முதலியன வாய் இங்குக்கூறுதலையும் கொள்க.

**உனக்காகச் சண்டீசனுமாம் பதம்** - உனக்கே உரிமையாகுமாறு சண்டீசன் என்கிறபதவியை.

**சண்டீசர்** என்பது ஒரு பதவி ; அல்லது தானம். சிவபெருமான், அம்பிகை, விநாயகர், முருகக்கடவுள் சூரியன் இவர்களுக்கெல்லாம் அவ்வம் மூர்த்திகளை நெருங்கி அந்தந்த நிலையில் சண்டீசபதம் உண்டு. அவ்வவற்றில் வாழ்பவர்கள் அவ்வம் மூர்த்திகளை வழிபடுவோர்க்கு அவ்வவழிபாடுகளின் பயனை அளிப்பர். சிவபெருமானுடைய சண்டீச பதத்தில் இந்தக்கற்பத்தில் வாழ்பவர் இச்சரிதத்தில் கண்ட விசாரசருமனாராவர். இவர் இப்பதவியின் பெயரால் அழைக்கப்படுகின்றார். சூரியமூர்த்தியிடம் உள்ள சண்டி தேசச்சண்டர் எனப்படுவர். அவ்வாறே அம்பிகை விநாயகர் முருகக்கடவுள் இவர்களது சண்டபதத்து வாழ்வோர் முறையே நீலிச் சண்டன், ஆம்போச்சண்டன், மாத்ருச்சண்டன் என்று பெயர்பெறுவர். சிவபெருமானது சண்டபதத்தில் வாழ்வோர் தொனிச்சண்டர் எனப்படுவார். இவ்வரலாறுகளையெல்லாம் ஆகமங்களுள் விரிவாய்க் கண்டுகொள்க.

**சண்டீசனுமாம் பதம்** - தொண்டர்தமக் கதிபனாக ஆக்கியதுடன் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

**உனக்காக** - சிவநின்மாலியங்களாகிய அமுது, பரிவட்டம், மாலை முதலியவைகள் சண்டீசருக்கு உரியன. இவர்க்குக் கோயில் சிவாலயத்தில் அபிடேகத்தீர்த்தத் தொட்டிக்கு அடுத்து அமைக்கப்படும். சிவபெருமானுடன் இடையறாத தியானத் தொடர்புடையாராதலின் இவரது கோயிலுக்கும் சிவதீர்த்தத் தொட்டிக்கும் இடையே குறுக்கிட்டுப்போகலாகாது என்பது சிவாலய தரிசன விதிகளுள் ஒன்று. சிவதரிசனம் சண்டீச தரிசனப் பிரார்த்தனையுடன் நிறைவேறுகிறது. சண்டீசர் கோயிலையடைந்து வணங்கிக் கைகளைத்தட்டித் தாம்பெற்ற சிவ நின்மாலியப் பிரசாதங்களை அவரிடம் சேர்த்துச் சிவதரிசன பலனைத்தர வேண்டுமென்று பிரார்த்தித்து அவர்பாற்பெற்ற விபூதியை அணிந்துகொள்ள வேண்டுமென்பது விதி. சிவ நின்மாலியங்களைச் சிவதீக்கையில்லாதவர்கள் புசிக்கலாகாது ; சண்டீச நின்மாலியத்தை எவரும் புசிக்கலாகாது; என்றிவ்வாறு பலவும் சிவாகமங்களுள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றை நல்லாசிரியர்பாற்கேட்டு ஒழுகுவது சைவ நன்மக்களின் கடமை.*

**உண்டகலம்** - நிவேதனமாயின உணவாகிய பரிகலம். பரிகலசேடம் என்பர் வடவர். உண்டு மிகுந்த உணவு. பரிகலம் - கலம் என வந்தது.

**உண்டகலம் - உடுப்பன - சூடுவன - அனைத்தும் உனக்காக** என்றதனால் சிவனுக்கு நிவேதித்த திருஅமுதே சண்டீசருக்கு ஊட்டத்தக்கது ; அவருக்கு உடுத்த ஆடையே உடுக்கவும், சூட்டியமாலை - அணிகள் என்பவையே சூட்டி அலங்கரிக்கவும் தக்கன என்பதாம்.

**துண்டமதி** - பிறைச்சந்திரன். **வாங்கி** - எடுத்து. **கொன்றைமாலை** - சிவனுக்குரிய திருவடையாளமாலை.

---

*முக்கிய குறிப்பு :—வழிபடுவோர் சண்டீசமூர்த்தியின் பேரில் தமது ஆடைகளின் நூலிழைகளை எடுத்துப்போடும் கெட்ட வழக்கம் பல கோயில்களிற் காணப்படுகிறது. இது பெருஞ் சிவாபராதமாம். சிவனுக்குச் சாத்திய நின்மாலியமான ஆடையே சண்டீசருக்குச் சாத்தப்படுவதாகும். மக்கள் தாங்களணிந்து அசுத்தமான ஆடைகளின் இழைகளைப் போடுதல் மிகவும் அநுசிதமும் பாவமுமாகும்.

உனக்காக - தந்தையின் உரிமை மகனுருக் காகும் என்றபடி. "அடுத்த தாதை இனி உனக்கு நாம்" (1259) என்று கொண்டாராதலின் தமது உரிமைகளையெல்லாம் தந்து மகனுராக்கிக் கொண்டருளினர் என்க. சூட்டுதல் - மகுடம் சூட்டுதலைக் குறிப்பா லுணர்த்தி நிற்றலுங்காண்க. மதிசேர்சடைக் கொன்றைமாலை என்ற குறிப்புமது. 56

1262. எல்லா வுலகு மார்ப்பெடுப்ப வெங்குமலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர் பாடி யாடிக் களிபயிலச்
சொல்லார் மறைக டுதிசெய்யச் சூழ்பல் லியங்க ளெழச்சைவ
நல்லா றோங்க நாயகமா நங்கள் பெருமான் றொழுதணைந்தார். ருஎ

(இ - ள்) வெளிப்படை. எல்லா உலகங்களில் உள்ளோரும் மகிழ்ச்சியினல் அரகரவென்று ஆரவாரிக்கவும், எவ்விடத்தும் பூமழை பொழியவும், பற்பல ஆயிரம் சிவகணநாதர்கள் பாடியும் ஆடியும் களிப்படையவும், வேதங்கள் மொழிகளால் நிறைந்த துதிகளைச்செய்யவும், நாற்புறமும்சூழ்ந்த பலவகைவாத்தியங்கள் முழங்கவும், சைவ நன்னெறியானது ஓங்கி வளரும்படியாக, நமது பெருமானுகிய நாயனர் சிவ பிரானைத் தொழுது, தலைவராகத் தமது சண்டீசபதவியில் அணைந்தனர்.

(வி - ரை) ஆர்ப்பெடுப்ப - பொழியக் - களிபயிலத் - துதிசெய்ய - எழ - என் றவை முன் ஐந்து பாட்டுக்களிற் போந்த திருவருள் வெளிப்பாடுபெற்று நிகழ்ந்தவை.

சைவ நல்லாறு ஓங்க என்பது ஓங்கும்பொருட்டு என நாயனர் நாயகம்பெற்று அணைந்ததன் பயன் குறித்தது. சிவபூசையின் பெருமையை உலகம் அறிந்து பயன் பெறுதல் குறிப்பு. "சைவ வாய்மை வளர" 1217 என்றதை இங்கு நினைவு கூர்க.

நாயகமா - தலைவராக. முன்பாட்டிற் கூறியபடி "தொண்டர்தமக் கதிப னுக்கி"னராதலின் அவ்வாறே நாயகமாக அணைந்தனர். ஆக - என்பது ஆ - என ஈறுகுறைந்து வந்தது.

நங்கள் பெருமான் - தொண்டர்தமக் கதிபராக ஆயினமையின் நமக்கெல்லாம் தலைவர் - பெருமானுவர் என்பது குறித்து நின்றது.

தொழுது - தமக்கு மாலைசூட்டிப் பதமளித்த சிவபெருமானைக் கும்பிட்டு.

அணைந்தார் - தமக்குத் தந்த சண்டீசராகிய பதத்தில் சேர்ந்தனர் என்க.

கணநாதர் பாடி ஆடிக் களிபயில - இவை இவரைத் தலைவராகக் கிடைக்கப் பெற்ற மகிழ்ச்சியின் விளைவு.

மறைகள் சொல்லார் துதிசெய்ய என்க. மறைகள் தாமே துதி முழக்கின என்பதாம். இயங்கள் எழ - இவை தேவதுந்துபி முழக்குக்கள். மலர்மாரி - தேவர் கள் பொழியும் கற்பகப்பூமழை. 57

1263. ஞால மறியப் பிழைபுரிந்து நம்ப ரருளா லுன்மறையின்
சீலந் திகழுஞ் சேய்ஞலூர்ப் பிள்ளை யார்தந் திருக்கையிற்
கோல மழுவா லேறுண்டு குற்ற நீங்கிச் சுற்றமுடன்
மூல முதல்வர் சிவலோக மெய்தப் பெற்றான் முதுமறையோன். ருஅ

(இ - ள்) வெளிப்படை. வயதான் முதிர்ந்த மறையோனுகிய எச்சதத்தன் உலக மறியும்படி சிவாபராதஞ் செய்தும், சிவபெருமானது திருவருளினல், நான்மறையின் நல்ல ஒழுக்கம் விளங்கும் சேய்ஞலூர்ப் பிள்ளையாருடைய திருக்கையில் ஏந்திய அழ கிய மழுவினலே எறியப்பட்டதனல், அந்தப் பிழையினின்றும் நீங்கினவனுய்த், தன் சுற்றத்தாருடனே மூலமுதல்வருடைய சிவலோகத்தில் சேரும் பேற்றினைப்பெற்றான்,

(வி - ரை) ஞாலமறிய - உலகத்தாரெல்லாருங்காண. வெளிப்படையாக.

பிழை புரிந்தும் - பிழை - சிவாபராதம் - சிவனடியாரிடத்திலும் சிவனிடத்தி லும் குற்றம் செய்தமை. உம்மை இழிவு சிறப்பு. பிழைபுரிந்தும் குற்றம் நீங்கிச் சிவலோக மெய்தப்பெற்றான் என்க. பிழை இங்குக் கழுவாயில்லாத சிவாபராதம் குறித்தது. அந்தப் பெரும் பிழையின் குற்றமும் நீங்கப்பெற்ற காரணம் கூறுவாராய், அது, நம்பரருளால் பிள்ளையார் தம் திருக்கையிற் கோலமழுவால் ஏறுண்டமையாம் என்று மேலே தொடர்ந்து கூறுவது காண்க.

நம்பரருளால்-இவ்வாறு இக்குற்றத் தீர்வு நம்பரருளாதலுக்குக் காரணம் இரண்டு வகையாலறிவித்தார். அவை: "மேதக்கவர் தம்பால் மேவும் பெருமை வெளிப்படுப் பான், அரவ மேவுஞ் சடைமுடையா ரருளா மென்ன" (1253) என்றதனால் எச்ச தத்தனுக்கு வந்த கோபம், விசாரசருமனாரது பெருமையினை உலகுக்கு வெளிப்படுத்து வதற்குத் திருவருளால் வந்தது என்பதொன்று; "கோல் எடுத்தார்க்கு அதுவே முறை மையினால் வந்து மழுவாயிட" (1256) என்றதனால் அச்சிவாபராதத்தினைப் போக்க அருளினால் கோலே மழுவாயிற்று என்பதொன்று என்க.

நான்மறையின் சீலம் திகழும் சேய்ஞலூர் எனவும், சீலம் திகழும் பிள்ளையார் எனவும் உரைக்க நின்றது. திகழும் - ஊர் என்ற பொருள், மறையவர்பதி யாதலின் திகழ்தற் கிடமாகிய ஊர் என்றதாம்.

சேய்ஞலூர்ப் பிள்ளையார் - சேய்ஞலூரில் அவதரித்த சிவகுமாரர் என்க. மூத்த பிள்ளையார் என்று விநாயகப் பெருமானையும், இளைய பிள்ளையார் என்று முருகப் பெரு மானையும், ஆளுடைய பிள்ளையார் என்று திருஞானசம்பந்தப் பெருமானையும் சிவபெரு மானது பிள்ளைகளாகும் காரணத்தால் வழங்குதல் காண்க. "யாவர்க்குந் தந்தைதா யெனுமவரிப் படியளித்தா, ராவதனு லாளுடைய பிள்ளையா ராய்" (திருஞான - புரா - 69) என்று இச் சொற்பொருளை விரித்தமை காண்க. ஆர் - விகுதி சிறப் புணர்த்திற்று.

பிள்ளையார் என்றும், திருக்கை என்றும், கோலமழு என்றும் சிறப்பித்தது தீர்த் தற்கரிய சிவாபராதத்தையும் தீர்க்கத்தக்க திருவருட்குக் காரணமாய்நின்ற சிறப்பு உணர்த்துதற்கு என்க.

ஏறுண்ணுதல் - எறியப்படுதல். ஏறுண்டு - ஏறுண்டதினால். ஏறுண்டு - நீங்கி என்க. உண்டு - பெற்று. ஏறு - எறிகை.

நீங்கி - எய்தப்பெற்றான் - நீங்கியதனால் - சேரும் பேறுபெற்றனன். ஏறுண்டத னால் நீங்கினான்; நீங்கியதனால் எய்தினான் என்று ஒன்றற்கொன்று காரணமாயிற்று. "தந்தைதா ளொடும் பிறவித்தா ளெறிந்து" (திருவிளை - புரா) என்றதும் காண்க.

சிவலோகம் எய்தப்பெற்றான் - தனது குற்றத்தினால் நரகலோகத்தில் நெடுங் காலம் கிடக்கவேண்டியவன் அதற்கு மாறாகச் சிவலோகத்தை யடையப்பெற்றனன் என்பது குறிப்பு. இவன் சிவனடியாரைப் பகைத்துச் சிவலோகமடைந்தவர்களுள் ஒருவன். திருத்தொண்டர்புராண வரலாறு (48) பார்க்க.

முதுமறையோன் - முதுமை வயதளவின்நின்றது. "மறைமுதியோன்" (1249) என்றவிடத்துரைத்தவை பார்க்க.

சுற்றமுடன் - இவர்கள் விசாரசருமனாரின் தொடர்புகொண்ட புண்ணிய விசே டத்தினால் சிவனுலகடைந்தவர்கள். "மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை, யாழாமே யரு ளரசே போற்றி" என்ற திருவாசகம் காண்க. "கோத்திரத்தி லிருபத்தோர் தலை முறைக்கு முத்திவரங் கொடுப்போ மென்றார்" என்ற அருணாசலபுராணமும் பார்க்க,

பிள்ளையார் தம் திருக்கையின் கோல மழுவா லேறுண்டு குற்ற நீங்கினாராயினும், மூலமுதல்வர் சிவலோக மெய்தப்பெற்றுச் சிவபெருமானது அங்கீகாரமும் பெற்றாராயினும், எங்கள் ஆசிரியர் பெருமானது திருவாக்கானது அடியார்க்குச் சொல்லும் சிறப்பினை வேறெவருக்கும் சொல்ல இடந்தராதென்பதனை அவன் சிவலோகமடைந்த இந்த இடத்தினும் "பெற்றான் முதுமறையோன்" என்று அவனை முன்போலவே ஒருமையிலும், நாயனாரைப் "பிள்ளையார் தம்திருக்கை" என்று சிறப்புப்பன்மையிலும் கூறியதனாலறிக. இதுபற்றி முன்னர் உரைத்தவையும் நினைவுகூர்க. 58

1264. வந்து மிகைசெய் தாதைதாண் மழுவாற் றுணித்த மறைச்சிறுவர்
அந்த வுடம்பு தன்னுடனே யரனார் மகனா ராயினார்;
இந்த நிலைமை யறிந்தாரார்? ஈறி லாதார் தமக்கன்பு
தந்த வடியார் செய்தனவே தவமா மன்றோ சாற்றுங்கால்? ௫௯

(இ - ள்) வெளிப்படை. வந்து தகாதகாரியம் செய்த தந்தையுடைய கால்களை மழுவினால் வெட்டி வீழ்த்திய மறைச்சிறுவர் அந்த உடம்புடனே சிவபெருமானாரது திருமகனாராக ஆயினார். யாவரே இந்த நிலைமையினை அறிந்தவர்கள்? சொல்லப்புகுவோமாகில் எஞ்ஞான்றும் ஈறில்லாதவராகிய சிவபெருமானுக்கு அன்பு தந்த அடியார்கள் செய்தவை எவையோ அவையே தவமாகுமன்றோ?

(வி - ரை) வந்து - "மைந்தனார் தாம் போயினபின் மறைந்து சென்று" (1249) எனவும், குராமரத்தின் மேலிருந்து கோபத்துடன் வந்து, எனவும் உரைக்க. வந்து - வந்தும் - நல்ல குலத்தில், நல்ல கோத்திரத்தில், நல்ல மரபில் வந்தும் என்று, உயர்வு சிறப்பும்மை தொக்கதாகக் கொண்டு, உரைப்பினும் பொருந்தும்.

மிகை - செய்யத்தகாத செயல். வரம்புகடந்த செய்கை.

அந்த உடம்பு - அந்த - இப்பூவுலகில் ஒரு பெயரும் உருவும் தாங்கி எச்சதத்தனுக்கு மகனாராகப் பிறந்து வளர்ந்து இதுகாறும் செயல்செய்த அந்த என முன்னறி சுட்டு. உடம்பு - "அங்கண் மாயை யாக்கை" (1260) என்றபடி மாயாஉடம்பு.

அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனா ராயினார் என்றது மாயை உடம்பு அதன் தன்மை திரிந்து சிவமயமாய்ப் பொங்கி எழுந்து திருவருளின் மூழ்கிச் சிவவொளியில் தோன்றியதாதலின் அவ்வுடம்புடனே சிவனார் மகனாராவதற்கு ஏதுவாயிற்று. "ஊனுயிர் வேறுசெய்தான்", "யானையின்மேல் என்னுடல் காட்டுவித்தான்", "மானவ யாக்கையொடு" என்பன இத்தன்மையை விளக்குவனவாம்.

அறிந்தார்ஆர்? வினா ஒருவரும் அறியும் வலியிலர் என்பது குறித்தது. எவரும் பசுஞான பாசஞானங்களால் அறிய வலியிலர்.

அன்புதந்த - தம்மையும் தம்முடையவாகக் கொண்ட உயிர்ப்பொருள் உயிரில் பொருள் எல்லாவற்றையும் இறைவருக்குத் தந்த; அவருக்கு உடைமையாக ஒப்புக்கொடுத்த.

அடியார் - அடிமை செய்வோர். தம்மையே தந்து விட்டமையால் அடிமைகளாய்த் தம்வசமின்றி அவர் வசமேயாயினவர் என்று குறிக்க இங்கு அடியார் என்ற சொல்லாற் கூறினார்.

செய்தனவே தவமாம் அன்றே? ஏகாரம், தவமென்று உலகில் விதிக்கப்படாதனவும் விதிக்கு மாறாயினவும் என்பதனைக் குறிப்பாலுணர்த்தி நின்றது. "செய்தனவே தவமாக்கும் அத்தன்" என்ற திருவாசகச் சொல்லும் பொருளும் ஆகிய ஆட்சி போற்றப்பட்டது காண்க. (திருத்தோணோக்கம் - 6.)

சாற்றுங்கால் தவமா மன்றோ? என்க. சொல்லப்புகின் அடியார் செய்தனவே தவம்; தவம் என்பது வேறில்லை; தவமென்று நூல்களால் விதிக்கப்படாதனவும் அடிமைத்திற முனைப்பில் உறைத்து நின்று அடியார் செய்தனராகில் அவையே தவமாம் என்பது. "ஆருலகி லிதனுண்மை யறிந்துரைக்க விசைந்தெழுவார்" (1205) என்று தொடங்கிக் காட்டிய கருத்தையே இங்கு அனுபவத்தின் முடித்துக் காட்டிய திறமும் பண்பும் காண்க.

இவ்வுண்மையை "அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும், பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும், வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி, நரரினிற் பாலன் செய்த பாதக நன்மை யாய்த்தே" (2 - 29) என்றும், "அவனிவனும் நின்றமுறை யேக னாகி யரன்பணியி னின்றிடவு மகலுங் குற்றஞ்...... பரிவாற் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே" (10 - 1) என்றும் வரும் சிவஞானசித்தியார் திருவாக்குக்கள் விளக்குவனவாம். 59

குறிப்பு:—பாராயணஞ் செய்வோர் 1217 - 1221 - 1234 - 1243 - 1250 பாட்டுக்களில் நிறுத்தி வாசிக்கலாம்.

---

சரிதச் சுருக்கம்:—பொன்னியாறு எந்நாளும் பொய்யாது பாய்ந்து செழிப்புத் தரும் சோழநாட்டில், மண்ணியாற்றின் தென்கரையில், முன்னாள் கிரவுஞ்ச மலையையும் தாரகாசுரனையும் சங்கரித்துத் தாம் ஏந்திய வேலாயுதத்தின் தன்மையை வெளிப்படக் காட்டிப், பின்னாள் சூரபதுமனாதியோரைச் செயிக்க நின்றவராகிய முருகப்பெருமானால், நிலைபெறும்படி உளதாக்கப்பட்ட காரணத்தால் சேய்ஞலூர் என்ற பேர்பெற்ற ஊர் மறையவர் விளங்கி வாழும் பதியாகும். அதில்வாழும் மறையவர்கள் வேதவாய்மை ஒழுக்கத்திற் சிறந்தவர்கள். மாணவர்களும் ஆசானும் கூடிய வேதம் பயிலிடங்கள் அங்கு விளங்குவன. வேள்விச் சாலைகளும் பல உள்ளன. அந்நகரத்தின் தெருவுகள் பொழுதுதொறும் பால் மடிசுரந்து செல்லும் பசுக்கூட்டங்களாலும், தாம் கற்ற வேதப்பகுதிகளைக் கணித்துக்கொண்டும் சமிதை கொண்டும் கூட்டமாகச் செல்லும் வேதம் பயில் மாணவர் கூட்டங்களாலும், அழகிய நீர்த்தடங்களில் மூழ்கிச் செல்லும் மறையவர்மகளிர்களாலும் பொலிவுற்றுவிளங்குவன. அந்நகரைச் சுற்றிலும் நெல் கமுகு முதலிய பயிர்கள் செழித்துள்ளன. தாமரைத் தடங்களும் அங்கு நிறைந்து காண உள்ளன. வழிக்கரைகளைக் காஞ்சிமரங்கள் நிழல் செய்வன.

தில்லையெல்லை யெல்லாம் பொன்மயமாக்கித் திருப்பணிசெய்த அபய குலோத்துங்க அநபாயச் சோழ அரசரின் முந்தையோர்களாகிய சோழ அரசமரபினர் முடிசூட்டிக் கொள்ளும் ஐந்து நகரங்களில் ஒன்றாகியது அவ்வூர். பண்ணுக்கு இசையும், பாலுக்குச் சுவையும், கண்ணுக்குப் பெருகு ஒளியும், கருத்துக்குத் திருவைந்தெழுத்தும், விண்ணுக்கு மழையும், வேதத்துக்குச் சைவமும் பயனாவனபோல், மண்ணுலகத்துக்குப் பயனாக விளங்கும் அந்தப் பதியின் பெருமை அளவுபடாததாகும்.

பெருமையுடைய அந்தப் பதியிலே மறையவர் மரபிலே இல்வாழ்க்கையிற் சிறந்த காசிபகோத்திரத்திலே தலைமைபெற்ற குடியிலே, அரதனமும் நஞ்சும் ஒருங்கே அளிக்கும் அரவுபோல, நல்வினை தீவினையிரண்டற்கும் ஒருருவாகிய எச்சதத்தன் என்ற மறையவன் ஒருவன் உள்ளான். அவனுடைய திருமனைவி ஏற்ற நற்குடியிற் பிறந்தவள்; சுற்றந்தழுவும் சிறப்புடைய இல்வாழ்க்கைத் தொழிலுடையவள்; துணைப் புதல்வற் பெற்று விளங்கும் தவமுடையவள்; உலகப்பற்றை யெறியும் இறைவன் பற்று வருதற்குச் சார்பாயுள்ளவள்; அவள் பெயர் பவித்திரை என்பதாம். நன்மை

செய்யும் இவர்கள்பால், வேதநெறி விளங்கவும் வேதியர்குலம் பெருகவும், எழுலகங்களும் உய்யவும், சிவபெருமானது சைவ உண்மை வளரவும், மாதவர்களுடைய வெற்றி உலகில் விளக்கமுறவும் விசாரசருமனர் என்ற பெயரால் விளங்குமவர் வந்து உதயமாயினர்.

அவருக்கு ஐந்து வயது அணைந்தபோது, முன்னைப் பிறப்பின் அறிவு தொடர்ந்து வருதலாலே, முகையாய் விரியும் மலரில் மணம் வருவதுபோல், ஆறங்கமுடனே நிறைந்த வேதங்களுட்பட முன்னே சிவபிரான் மொழிந்தருளிய ஆகமங்களின் அறிவு அவரது மனத்தினுட் சிறந்து விளங்கிற்று. அவர்க்கு ஏழுவயதாகிய அளவிலே அவருடைய பெற்றோர்கள் தமது மரபின் வழக்கின்படியே உபநயனம் என்ற சடங்கினையும் செய்வித்துக் கலைபயிலும் செய்கையினையும் செய்வித்தனர். ஆசிரியர் சொல்வதன் முன்னே வேதாகமங்களையும் பல கலைகளையும் தம்மனத்துக் கொண்ட அவரது அறிவின் திறத்தினைக் கண்டு, கற்பிக்கும் மறையோர்கள் அதிசயித்தார்கள். அளவில்லாத கலைகளின் பொருள்களுக்கெல்லாம் எல்லையாய் உள்ளது தில்லைத் திருவம்பலத்தில் அருட்கூத்தியற்றும் திருவடியேயாகும் என்று அந்தச் சிறிய பெருந்தகையார் தெளிந்தனர் ; தெளியவே, அதனுல் அருட்கூத்தரே நம்மை ஆளுடைய தலைவராவார் என்ற உண்மை எப்பொழுதும் அவரது சிந்தையில் ஊற்றெடுத்து வருவதாயிற்று ; வரவே, அன்பினுல் உளதாகும் திருத்தொண்டின் கடமையே இயல்பாய் எழுகின்ற முயற்சியாய் அவரது கருத்தினுள் அம்முயற்சியிற் காதல் மேன்மேல் எழுந்தது ; அவ்வுறுதிப்பாட்டில் நேர் நின்று உறைத்து அவர் விளங்கிவருவாராயினர்.

அந்நாள்களில் ஒருநாள் வேதம் பயிலும் மாணவர் கூட்டத்துடன் விசாரசருமனுர் ஊர் ஆனிரையினுடன் போகும்போது ஈன்றணியதொரு பசு தன்னை மேய்க்கும் ஆயனைக் கொம்பினுல் முட்டப்போயிற்று. அவன் ஒருசிறிதும் கூசாமல் தன்கையிற் கொண்ட கோலினுல் அப்பசுவினைப் புடைக்கப், பசுவின்மேல்வைத்த மிக்க அன்பினுல் அவனைக் கோபித்து மேற்சென்று, விசாரசருமனுர் விலக்கினுர். எல்லாக் 'கலைகளும் வேதங்களும் ஆகமநூல்களும் கூடிய தொகுதியினுல் பொருளின்நிலை நிச்சயித்து உண்மை உணர்ந்துகொண்ட தமது திருவுள்ளத்தாலே பசுக்களின் பெருமையினை அறிந்துகொண்டவராய், அவர் ஆயனை நோக்கி அருள் செய்வாராகி, " ஆனினங்கள் எல்லாயோனிபேதங்களிலும் சிறந்தன ; தூயதீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்தப்பெற்றன ; தேவர் முனிவர் கடவுளர் கூட்டங்கள் சூழ்ந்து பிரியாத அங்கமுடையன ; அச்சிறப்பினுலே ஈன்றவன்றே சிவபெருமான் விரும்பியாடுதற்குப் பஞ்சகவ்வியம் தரும் உரிமையுடையன ; மேலும் சிவன் சாத்தும் திருநீற்றினைத்தரும் மூலமாகிய கோமயம் அவதாரம்செய்யும் இடமாவன ; அன்றியும் இவை சிவபிரானும் உமையம்மையாரும் சேர எழுந்தருளும் விடைத்தேவரின் குலத்தைச் சேர்ந்தன " என்று இன்னபலவும் நினைந்தனர் ; " இத்தகைய பசுக்களைக் காத்தலே சிறந்தகடன் ; இதுவே சிவன் சேவடிகளை வழிபடும் நெறியுமாகும் " என்று துணிந்தனர் ; ஆயனை நோக்கி " நீ ஆன்நிரை மேய்க்குந்தொழிலை ஒழிக ; நானே இனி மேய்ப்பேன் " என்றுர். அவனும் அஞ்சி, வணங்கிப் போய்விட்டான்.

மறையோர்களின் இசைவும் பெற்றவராய்ப் பசும்பயிருக்கு மழைவருதல்போல் விசாரசருமனுர் ஆனிரை மேய்க்க வந்தனர். கோலும் கயிறும்கொண்டு, பிரமசரிய வேடங்களுடன் வரும் அவர், பாலும் பயனும் பெருகவருகின்ற பசுக்களை மேய்க்கின்ற பண்பினுலே மிகவும் புல்உள்ள இடங்களில் அவை வேண்டுமளவும் உண்ணும்படி உடன்சென்று, புல்மிகும் காலங்களில் மேய்த்தும் கையாற் பறித்துக் கொடுத்தும் அவற்றின் பசியைப்போக்கி, இதமாகிய நீர்உண்ணும் துறையில் நல்லதண்ணீரை

ஊட்டி, அவற்றுக்கு நேரும் பயங்கள் வாராமற்காத்து, நல்ல வழிகளிற்செலுத்தி, நிழலில் அமர்வித்துப் பால்தரும் வேளையில் தவருது உடையவர் மனைகள் தோறும் கொண்டு செலுத்தி வந்தனர். மண்ணியாற்றின் கரையில் வளர்கின்ற முல்லைப் புறவின் பக்கத்திலும், படுகரின் பக்கத்திலும், சோலைகளைச்சார்ந்த கரைகளின் பக்கத்திலும் ஆனிரைகளை இவ்வாறு மேய்த்துச், சமிதையும் அரணியும்கொண்டு, இரவுபடுமுன் விசாரசருமனார் ஊரிற்சேர்ந்த நன்னாள்கள் பலவாகும். இப்படிக் காப்பாற்றப்பட்ட அதனால் ஆனிரைகளெல்லாம் அழகுடன் விளங்கிப் பெருகித், தமது மனங்கொண்ட பெருமகிழ்ச்சியினால் இருபோதும் தூய இனிய பால் மடிபெருகிச் சொரிய முலைகள் சுரந்தன. ஆனிரைகள் முன்னையினும் அனேகமடங்கு கறப்பனவாயின. அதுகண்டு " இப்பிரமசாரி மேய்த்ததற்பின் ஓமதேனுக்கள் மாண்புடையனவாயின " என்று மறையோர்கள் எல்லாரும் மனமகிழ்ந்தனர். பசுக்கள் எல்லாவகையாலும் கொண்ட மகிழ்ச்சி அளவின்றிப் பெருகியதனால் மனையில் உள்ள தமது கன்றுகளைப் பிரிந்தபோதிலும் தம்முடன் வரும் சிறிய மறைக்கன்றாகிய விசாரசருமரைக்கண்டு அவர் பக்கத்திற் சென்று உருகித், தாய்போலக் கனைத்து மடிசுரந்து கறவாமே முலைகளின்றும் பால் பொழிந்தன. அதனைக்கண்ட விசாரசருமனாரது செம்மை நெறியே செல்லும் மனமானது அந்தப்பால் சிவபிரானுக்குத் திருமஞ்சனமாகும் குறிப்பினை உணர்ந்தது; உணரவே, அவர் அதனை மேலும் நினைந்து தெளிந்து, சிவனார் பூசைசெய்யும் ஆசை மிகப் பெற்றனர் ; பெறவே, முன் பிறப்பிற் செய்த அர்ச்சனையின் தொடர்ச்சியே விளையாட்டாக நிகழ்ந்து அன்பு பொங்கியது; பொங்கவே, அவர் மண்ணியாற்றின் மணற்றிடரில் ஆத்திமரத்தினடியில் சிவபெருமானது திருமேனியாகிய இலிங்கக்குறியினை மணலாற் செய்து சிவாலயமும் கோபுரமும் சுற்றாலயமும் வகுத்தனர். ஆத்திமலரும் செழுந்தளிரும் முதலாக அருகில் முல்லைப்புறவில் தேடிச் சிவனுக்குச் சாத்தலாகும் திருப்பள்ளித்தாமங் கொய்து இலைகோத்த பூங்கூடையிற் கொணர்ந்து மணந்தங்கிட வைத்தனர். நல்ல நவகும்பங்களைக்கொண்டு பசுக்கள் மேயும் இடங்களிற் சென்று பாற்பசுக்கள் ஒன்றுக் கொருகாலாக முலைதீண்டவே அவை கனைத்துப் பால் பொழிந்தன. அந்தப் பாற்குடங்களைக் கொணர்ந்து வெண்மணலாலயத்தில் தாபித்தனர். முன்னை வழியின்வரும் அன்பின் றொடர்பாலே அருச்சித்துப் பாலின்றிருமஞ்சனமாட்டினர். அவரது அன்பினுள்ளே நிறைந்து அவர் குறித்த பூசையினை ஆளுடையாரும் அமர்ந்து கொள்கின்றாராயினர். இவ்வாறு செய்யும் ஒருமை நினைவுகொண்ட பூசையில் பூசைக்குரிய உறுப்புக்களான திருவமுது புகை சாந்தம் விளக்கு முதலானவற்றில் தாம் தேடிக்கொள்ளாதனவற்றை அன்பினாலே நிறைவு செய்துகொண்டு முறையால் வரும் அந்நெறியிலே அருச்சித்து வணங்கி விசாரசருமனார் மகிழ்கின்றாராயினர். இவ்வாறு அவரது பூசனைக்குக் குடங்கள் நிறையப் பால்சொரிந்தும், ஆனினங்கள் பால் குறைவில்லாமல் மறையோர் மனைகளிலும் முன்பு தரும் வளங்கள் சிறக்க நிகழ்ந்தன.

இவ்வாறே பல நாளும் பூசையே திருவிளையாட்டாக இயல்பில் விசாரசருமனார் செய்யும் இதனைக் கண்டும், இதன் திறத்தினை அறியாத அயல் மற்றொருவன் இதனை அவ்வூர் மறையவர்களுக்கு அறிவித்தான். அது கேட்ட சபையிலிருந்த மறையோர் " எம்பசுக்களை இச்சையறிந்து மேய்ப்பேன் என்று கொண்டு சென்று வஞ்சனையாய் ஒழுகும் மாணவகனின் பொல்லாங்கினைச் சொல்வதற்கு அவனுடைய தந்தையை அழைமின் " என்றார்கள். அவ்வாறே அழைக்கப்பட்டு எச்சதத்தனும் வந்தனன். அவனிடம் மறையோர் தாம்கேட்ட செய்தியைக் கூறினர். அவன் பயந்து " சிறுமாணவகன் செய்த இதனைச் சிறிதும் நான் முன்பு அறிந்திலேன் ; இதன்முன் நிகழ்ந்த

தனை நீங்கள் பொறுத்தல் வேண்டும். இனிப் புகுதிற் குற்றம் எனதேயாம்" என்று குறையிரந்து விடைப்பெற்றுச் சென்று, பழியொன்று வந்ததே எனக் கவன்று, அதனை மகனாரிடம் சொல்லாதவனாய், "இந்த நிலைமையினை நானே நேரில் அறிவேன்" என்றுட்கொண்டு, அவ்விரவு கழிந்த பிற்றைநாள் விசாரசருமனார் ஆனிரை மேய்க்கப் போயினபின் அவர் பின்பு மறைந்து சென்றனன். மகனார் ஆனிரைகளை மண்ணி மணற்குறையில் மேய்ப்பதற்குச் சேர்த்துக் கொண்டு போனதை அறிந்து அருகே நின்றதொரு குராமரத்தின்மேல் ஏறி நிகழ்வதனை அறிவதற்காக அவன் ஒளித்திருந்தான். அன்பு புரிகின்ற பிரமசாரிகளும் நீரின் முழுகிச், சிவனாருக்கு முன்போல மணற்கோயில் செய்து, திருப்பள்ளித்தாமங் கொய்து, ஆன் முலைப்பாற் குடங்களையும் உரிய இடத்திற் கொண்டுவந்து தாபித்து, வேண்டுவனவாகிய பிறவற்றையும் அமைத்துக்கொண்டனர். விதியின் நின்ற வினையாட்டினால் தமது அரிய பூசனையைத் தொடங்கி ஒன்றுபட்ட மனத்தோடு ஆளுடைய நாதனார் திருமுடியின்மேல் மலர்சாத்திப் பாற்குடங்களையும் எடுத்து அன்புடன் திருமஞ்சனம் ஆட்டினார். அதனைக் கண்டவுடன் மேன்மையுடைய விசாரசருமனாரது பெருமையை வெளிப்படுத்துவதற்குச் சிவபெருமான் மேற்கொண்ட திருவருளே என்று சொல்லும்படி குராமரத்தின்மேலிருந்த மறையோன் கோபம் மிகுந்தனன். உடனே இறங்கிவந்து விரைந்துசென்று கையிலிருந்த கோலினால் மகனாரது திருமுதுகிற் புடைத்துக் கொடியமொழிகளையும் சொன்னான். தொண்டுபுரிகின்ற அத்தோன்றலார் செறிந்த ஆசையினைப் பூசையில் வைத்தாராதலின் வேறொன்றனையும் அறிந்திலர். அவன் பலகாலுமடிக்கவும் அவர் வேறொன்றினையும் அறியாராகிப் பாலினாற் றிருமஞ்சனம் ஆட்டுகின்ற திருப்பணியினிற் சலியாதவராய் நிற்கவே, கையாற் கடைமைத் தலைநின்ற அவன் திருமஞ்சனப் பாற்குடத்தைக் காலினால் இடறிச் சிந்தினான். சிந்தினவுடனே ஓரிறையில் அத்தீயோனைத் தந்தையெனவே அறிந்து, அவனது கால்கள் திருமஞ்சனப் பாற்குடத்தைச் சிந்தும் தகுதியினால் அவற்றைத் தண்டிப்பதற்காக அவர் முன்னேகிடந்த கோலை எடுத்தனர். அதுவே முறைமையினால் அவர் கையில்வந்ததும் மழுவாக மாறிற்று. சிவபூசையில் நேர்ந்த இடையூற்றினைப் போக்கும் சிவன்படைக்கலமாக அதனையேகொண்டு தாதையின் இரண்டு தாள்களையும் அவர் துணித்தனர். மறையோனும் மண்மேல் விழுந்தனன். இவ்வாறு பூசையில் வந்த இடையூற்றினைப் போக்கி முன்போல் அருச்சித்திடப் புகுந்தனர்.

சிவபெருமான் உமாதேவியாருடன் விடையின்மேல்ஏறிப், பூதகணங்களும் தேவர்களும் முனிவர்களும் புடைசூழ, எழுந்தருளி முன்னேவந்து காட்சி கொடுத்தனர். அவரது பாதங்களில் பத்திமுதிர்ந்த பாலகனார் விழுந்தனர். அவரை எடுத்து, நோக்கி, "உன்னை ஈன்ற தாதையை எம்பொருட்டாக வெட்டினை! இனி நாமே உனக்கு அடுத்த தாதை" என்று அருளி, அணைத்து, உச்சிமோந்து, மகிழ்ந்துகொண்டருளினர். சிவபெருமானது திருமலர்க்கையினால் தீண்டப்பெற்ற சிறுவனார் அங்கண் மாயையாக் கையின்மேல் சிவமயமாகப் பொங்கிய திருவருளின் மூழ்கிச் சிவவொளியிலே விளங்கித் தோன்றினார். அவரை இறைவனார் தமது தொண்டர்க்கெல்லாம் தலைவராக ஆக்கி, "நாம் உண்ட பரிகலமும் உடுப்பனவையும் சூடுபவையும் உனக்கே உரிமையாகும்படி சண்டீசன் என்னும் பதவியைத் தந்தோம்" என்று அருளிச்செய்து, அதற்கடையாளமாக அவருடைய திருமுடிக்குத் தமது சடைமுடியிற் சூடிய கொன்றை மாலையை எடுத்துச் சூட்டியருளினர். அவரும் தேவர்கள் மலர்மாரி பொழிய, வேதங்கள் துதிசெய்ய, உலகமெல்லாம் ஆரவாரிக்கக், கணநாதர்கள் களிப்படைந்து பாடியாட, தேவதுந்துபிகள் முழங்கச், சைவநன்னெறி ஓங்கச், சிவபெருமானைக் கும்பிட்டுக்கொண்டு, தமது பதவியில் அணைந்தனர்.

அவரது தந்தையாகிய எச்சதத்தன் உலகமறியப் பிழைபுரிந்தும், இறைவருடைய திருவருளினாலே சேய்ஞலூர்ப்பிள்ளையாருடைய திருக்கையில்வந்த அழகிய மழுவினாற் றண்டிக்கப்பட்டமையால் குற்றம் நீங்கினவனாகிச் சுற்றத்தாருடன் முதல்வனாருடைய சிவலோகத்தையடைந்தனன். மறைச் சிறுவனார் அந்த உடம்புடனே சிவனார் திரு மகனாராக ஆயினார். இந்த நிலைமையினை அறிந்தவர் யாவர்? சிவனாருக்கு அன்பு செய்து தம்மை ஆளாக ஒப்புவித்த அடியார்கள் செய்தன எவையோ அவையே தவமாகுமன்றோ?

---

தலவிசேடம் :—1. **சேய்ஞலூர்** - சூரசங்காரத்தின் பொருட்டுக் கயிலைத்திருமலையினின்றும் தேவசேனைகளுடன் எழுந்தருளிவரும் முருகப்பெருமான், வழியில், தாரகாசுரனைச் சங்கரித்துக் கிரவுஞ்சமலையையும் பிளந்து போந்து, மண்ணியாற்றின் தென் கரையில் ஊர் உளதாக்கிச் சிவபூசை செய்துகாட்டியருளிய தலம். இது புராண முதற் பாட்டில் உரைக்கப்பட்டது. இங்குச் சண்டீசநாயனார் திருவருள்பெற்ற வரலாறு புராணத்தினுட் காண்க. இவ்வரலாறுகள் இரண்டினையும் ஆளுடையபிள்ளையார் இத் தலத்தேவாரப் பதிகத்தினுள் "சேயடைந்த சேய்ஞலூர்" (11) - "பீரடைந்த பால தாட்ட"(7) என்ற திருப்பாசுரங்களில் வைத்துப் பாடியருளினர். ஆளுடையபிள்ளையார் இத்தலத்தை அடைந்தருளியபோது சண்டேசநாயனார் அவதரித்த திருத்தலமாதலின் முத்துச்சிவிகையினின்றும் இறங்கி நடந்துபோய் வழிபட்டருளினர். **சுவாமி** - சத்தி கிரீசுவரர். **அம்மையார்** - சகிதேவியார். **தீர்த்தம்** - மண்ணியாறு. பதிகம் 1. திரு ஆப்பாடிக்குத் தெற்கே ½ நாழியளவில் அடையத்தக்கது.

2. **திருஆப்பாடி** - இத்தலம் சண்டீசநாயனார் ஆனிரைகளை மேய்த்து மண்ணி யாற்றின் கரையில் மணற்றிடரில் ஆத்தியின்கீழ் மணலாற் சிவலிங்கமாக்கித் தாபித்து மணற்கோயிலமைத்துப் பசுவின் பாலினாற் றிருமஞ்சனமாட்டிச் சிவபூசை செய்து பதம்பெற்ற இடம்.

**சுவாமி** - பாலுகந்தநாதர். **அம்மையார்** - பெரிய நாயகி. **தீர்த்தம்**-மண்ணியாறு. **மரம்** - ஆத்தி. பதிகம் 1.

ஆடுதுறை (S. I. R.) நிலையத்திலிருந்து வடக்கே கற்சாலை வழி, ஏழு நாழிகை யளவில் உள்ள திருப்பனந்தாளை அடைந்து, அங்கு நின்றும் மேற்கே மட்சாலைவழி 1½ நாழிகை அளவில் அடையத்தக்கது.

---

கற்பனை :—1. தெய்வங்களால் உளதாக்கப்பட்டு நிகழ்தல் ஒரு நகரத்துக்குச் சிறப்புத் தருவதாம். முருகப்பெருமானால் உளதாக்கப்பட்டது சேய்ஞலூரின் பெருஞ் சிறப்பினைக் காட்டுவதாம்.

2. நல்லொழுக்கம்மிக்க மறையவர்கள்குடி நிரம்பி நிகழ்வது ஒரு பதியின் சிறப் பினைக் காட்டுவது.

3. மறையவர் பதிகளின் புறத்தே மறைச்சிறுவர் வேதம் பயிலும் மடங்களும் வேள்விச் சாலைகளும் அமைக்கப்பட்டு விளங்குவது நல்ல நகர அமைப்பின் இயல்பு.

4. பசுக்களும் நல்ல மாணவர்களும் நன்மகளிர்களும் பயிலும் பான்மை யுடைமையினால் தெருக்கள் விளக்கம் பெறுவன.

5. தொன்மை அரசமரபினர் பழங்கால முதல் முடிசூட்டிக் கொள்ளும் இட மாக இருத்தல் ஒருபதியின் சிறப்பினைக் காட்டுவதாம்.

6. பண்ணுக்குப் பயன் நல்ல இசை; பாலுக்குப்பயன் இனிய சுவை; கண் ணுக்குப் பயன் பெருகு ஒளி; கருத்துப் பெற்ற பயன் திருவைந்தெழுத்தை கணித்

தல்; விண்ணுக்குப்பயன் மழைபொழிதல்; வேதப்பயன் சைவம்; இவ்வாறு மண்ணுலகு பெற்ற பயனாய் விளங்கும் ஒரு பதிஉளதாயின் அது திருச்சேய்ஞலூராகும்.

7. விசாரசருமனாரைப் பெற்ற நல்வினையும், அவர் செய்த மன ஒருமையா னிகழ்ந்த சிவபூசையைச் சிதறிய சிவாபராதமும், என்ற இரண்டற்கும் ஒருங்கே இடமாய் நின்ற எச்சதத்தனைப்போல நல்வினை தீவினைகளாகிய இருமை வினைக்கும் ஒருருவாகும் மக்களும் உளர்.

8. இல்வாழ்க்கையில் மனைவியாரது பெருங்கடமை சுற்றந் தழுவுவதாகும். துணைப் புதல்வரைப்பெற்று விளங்குதல் மனையின் மாட்சி என்ப. இல்வாழ்வினின்றே உலகப் பற்றை எறியும் இறைவன்பற்று வரச் சார்பாய் உள்ளது மனைத்தக்காளது மாண்பாகும்.

9. ஐந்துவயதளவில் ஒருவற்கு உணர்வு தொடங்கும்; அவ்வாறு தொடங்கும் உணர்வானது முன்சென்ம வாசனையோடு முகைத்தமலரின் மணம் வெளிப்படுவது போல வெளிப்பட்டுச் சிந்தைமலர உடன்மலர்ந்துகொண்டேவரும். முன்னைப்பிறவியிற் பெற்று முதிர்ந்த நல்லுணர்வு இப்பிறவியிற் றொடர்ந்துவரும். அவ்வாறே முன்பிறவியிற் சேர்த்த தீயுணர்வும் இங்குவந்து முற்றுவதும் விதியாம்.

10. ஏழுவயதளவில் உபநயனம் செய்வித்தலும் வேதமுதலாகிய கலைகள் பயில்வித்தலும் மறையவர் சிறுவர்க்குச் செய்யத்தக்க சடங்குகள்.

11. ஆசிரியர்கள் சொல்லுவதற்குமுன் சிலமாணவர்கள் கலைஞானங்களை அறிந்துணர்ந்து கொள்வது முன்பிறப்பின் முதிர்ந்த வாசனையுணர்வினாலாகும்.

12. இவ்வாறு முன்பிறப்பின் வாசனையறிவுடன் வந்த பெரியோர் எல்லாக் கலைகளுக்கும் எல்லையாயுள்ளது கூத்தப்பெருமானது திருவடியேயாம் என்று விரைவிற் றெளிந்து அவ்வழித்தாய்வரும் அன்பின் பெருக்கினால் சிவபூசைசெய்யும் கடமையே தமது இயல்பாக அதில் ஆசை மிகப்பெற்று அந்நெறியில் ஒழுகுவர்.

13. பசுக்களைப்புடைத்தல், அச்சுறுத்துதல், முதலியவை செய்வது பெரும் பாவங்களாம். இவ்வாறு யாரேனும் செய்யக்கண்டால் இரங்கி வெகுண்டு மேற்சென்று விலக்கி அவர்களுக்கு நல்லறிவு கொளுத்துதல் வேண்டும்.

14. பசுக்களின் பெருமைகளை வேதங்களும் ஆகமங்களும் முதலிய எல்லாம் ஒன்றுபோலவே எடுத்துக்கூறுவன.

15. உலகப்படைப்பில் காணும் எல்லா யோனிபேதங்களுள்ளும் பசுக்கள் சிறந்தன; புனிததீர்த்தங்கள் எல்லாம் என்றும் அவற்றினிடத்திற் பொருந்துவன; தேவர்கள் முனிவர்கள் முதலியோர் அவற்றின் அங்கங்களிற்சூழ்ந்து பிரியாது இருப்பர்; சிவன் விரும்பியாடும் திருமஞ்சனமாகிய ஆனைந்தினையும் அளிக்கும் உரிமையுடையன இப்பசுக் கூட்டங்கள்; சிவபெருமான் அணியும் திருநீற்றைத்தரும் மூலமாகிய கோமயம் இப்பசுக்களிடமிருந்து வருகின்றது; மேலும் இவை இறைவனார் உமையம்மையாருடன் ஒருசேர மேல்கொண்டு எழுந்தருளி வரும் ஊர்தியாகிய விடைத்தேவர் குலத்தைச் சேர்ந்தவை - இவை முதலிய காரணங்களால் பசுக்கள் மிகவும் பெருமையும் தூய்மையும் உடையன.

16. பசுக்கூட்டங்களை இதமாக மேய்த்துக் காத்தல் கடமையாகும். அதுவே சிவனைவழிபடும் நெறியுமாகும்.

17. பசுக்களை அன்போடு கொண்டு சென்று மிகவும் புல்உள்ள இடங்களில் மேய்த்தல்வேண்டும். நல்லபுல்லை வயிறு நிறைய மேயச்செய்தலும், மேய்க்கமுடியாத போது கையாற் பறித்து அளித்தலும், நல்ல தூயதண்ணீர் இருக்கும் துறைகளில்

அவற்றை நீரூட்டலும் வேண்டும். ஆற்றின் கரைப்பக்கமும், படுகரின் பக்கங்களும், சோலைகளை அடுத்த கரைகளைச்சார்ந்த இடங்களும் பசுக்களை மேய்ப்பதற்கு உரிய இடங்களாம். பயிரிட்ட நிலங்களிலும் தூய்மையில்லாத இடங்களிலும் இடர்கள் உள்ள இடங்களிலும் பசுக்களை மேய்த்தலாகாது.

18. நல்ல புல்லும் நீரும் வயிறுநிறைய உண்ணுமாறு கிடைக்கச்செய்து அன் போடு காக்கப்பட்டால் ஆனிரைகள் மனமகிழ்ச்சி யடைந்து முன்னையினும் அனேக மடங்கு பால் சுரப்பனவாகும்.

19. கன்றினிடத்து அன்புமிகும்போது பசுக்கள் கறவாமலே மடிபெருகிப் பால் சொரிவன. அதுவேயுமன்றித் தம்மிடம் மிக்க அன்புகொண்டு காக்கும் அவரைக் கண்டபோதும் அவை தாயாம் தன்மைகொண்டு உருகிக் கனைத்து முலைசுரந்து கறவாமே பால் சொரிதலுமுண்டு. இதனால் அவை வழக்கமாய்த்தரும் பாலின் அளவு குறைவுபடாது நிகழும்.

20. பசு பாலினைச் சொரியக்கண்டால் பலருக்கும் பலவாறு தோன்ற, அது இறைவனுரது திருமஞ்சனமாதற்குரியது என்ற குறிப்பு மனத்துள் தோன்றிப் பூசை செய்யும் விருப்பு எழப்பெறுவது ஒருவற்கு முன்னைப்பிறவியின் வாசனையால் உண் டாவதாம்.

21. முன்னைத் தவத்தின் தொடர்ச்சி யுணர்வுடையார்க்கு ஆற்றின் கரையில் மரத்தினடியில் மணலாற் சிவலிங்கமும் சிவாலயமும் வகுத்து ஒருமையான் மெய்யன் போடு இறைவனுர் உவந்துகொள்ளும்படி பூசை செய்தலும் ஆகும்; புறவில் தாமாகப் பூத்த ஆத்தி முதலாகிய மலர் இலை முதலியவைகளையும், அங்குத் தேடிக் கொள்வனவாகிய பிற சாதனங்களையுமே அவர் தமது அரிய பூசைக்குப் பயன்படுத்திக் கொள்வதும், தேடாதனவற்றை அன்பினுல் நிரப்பிக்கொள்வதும் இயல்பு.

22. இவ்வாறு ஒருமை நினைவால் குறித்துச் செய்யும் பூசையினுள்ளே நிறைந்து இறைவனுர் மகிழ்ச்சி கொள்வார்; பூசிக்கும் அவர்களும் அந்நெறியில் பூசித்து வணங்கி மகிழ்வர்.

23. சிறுவர் செய்யும் பிழைகளுக்குப் பெற்றோரைப் பொறுப்பாகக் கொள்வது உலகநிலை யியல்பு.

24. உலக நிலையில் தகாதெனப்படும் ஒரு நிகழ்ச்சியைக் கண்டவுடனே அதன் உண்மையை ஆராய்ந்தறியும் விதியின்றிச் சினம் மூளுதல் சிற்றுணர்வுடையோர் செயல். அறிவழியப் பெற்றோர்களே கோபத்தால் மீதூரப்படுவோர்.

25. சிவபூசையில் ஒருமை மனம் வைத்து நிகழ்வோர் தம்மை வேறொருவன் புடைத்தாலும் கொடுமொழி கூறினுலும் அறியமாட்டார்கள். அவர்களுடைய ஐம் பொறிகளும் தாம் மனம் வைத்த பூசையிலே செல்வன அன்றிப் புறவிடயங்களை அறியமாட்டா. இதற்குக் காரணம் அவர்களது மனம் அவற்றினுட் கலந்து புற விடயங்களை நுகரவாராமையேயாகும். ஆனுல் அவர்கள் மனம் வைத்த பூசைக்கு இடையூறு வந்த போது மனம் அந்தப் பொறிகளின் வழியே சென்று அந்த இடை யூற்றை அறிந்து விலக்கி முன்போலப் பூசை செய்ய வல்லராதலும் அவரியல்பு.

26. தந்தை தாய் தாரம் மகவு என்ற உலகப்பற்றுக்களை அறவே துணித்து இறைவர்பால் ஒன்றித்த மனம் வைத்தபோது இறைவனுர் வெளிப்பட்டு அருளுவர்.

27. அடியார்கள் கையால் திருவருளின்வழியே தண்டிக்கப்பட்டபோது சிவா பராதமும் நீங்கப்பெற்றுச் சிவலோகமும் கிடைப்பது இயல்பாகும்.

28. இறைவனிடத்து அன்புவைத்துத் தம்மையே ஒப்புவித்த அடியார் செய்தனவே தவமாவன.

29. சிவபெருமான் வெளிப்பட்டருளப்பெற்றுத் திருக்கரத்தினாற் றீண்டப்பெறும் பேறுடையார்களது மாயை யாக்கையே சிவமயமான யாக்கையாக மாறிச் சிவவொளியில் விளங்கும்.

30. ஒரு சிவனடியார் ஒரு குலத்தில் விளங்குவாராகில், அவரால் அக்குலத்தவரும் திருந்தப்பெற்றுச் சிவனருள் பெறுவர்.

31. மனிதப்பிறவி உயிர்களுக்குத் தரப்படுவது சிவனை விதிப்படிபூசித்து முத்திபெறுதற்கேயாம். மனிதப்பிறவி கிடைத்தற்கரியது. இம்மனித உடல் உள்ள பொழுதே சிவனை வழிபட்டுப் பூசித்து வீடு பெற முயலுதல் எல்லாருக்கும் கடமையாகும். அறிவுடையோர் இவ்வாறு முயல்வர். இதனை அறியாமல் வீணே காலம் கழித்தலின் மிக்க அறியாமையில்லை. "ஊனெடுத் துழலு மூமரொன்றையு மொணரா ரந்தோ!", "இறப்பொடு பிறப்பி னுக்கே யினியராய்", "பெயர்த்தும் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே", "அருப்போடு மலர்பறித்திட் டுண்ணாவூரு மவையெல்லா மூரல்ல வடவி காடே" என்பனவாதி திருவாக்குக்கள் அவர்களை நோக்கி எழுந்தன.

32. சிவபெருமானே நம்மை ஆளுடைய முழுமுதற்கடவுள் என்று உணர்ந்து அவர்பால் அன்பு கரைகடந்து பெருக, அந்த அன்பினாலே இன்பம் பெருக, யாதொரு பயனுங் கருதாது தம்மை மறந்த நிலையில் நின்று, சிவாகமங்களில் விதித்தபடி சிவபூசை செய்தல் முறை. சிவபூசையின் முடிவில் விதிப்படி சண்டேசுர பூசையும் செய்யப்படுதல் வேண்டும். சிவபெருமான் உண்ட அமுதும் மாலை ஆடை முதலியனவும் சண்டேசுரர் ஏற்றுச் சிவபூசையின் பயனை அளிப்பர். சண்டேசுவரபூசை செய்யப்படாவிடிற் சிவபூசைப் பயனை மக்கள் அடையார் என்பது துணிபு.

33. லிங்க என்பது சித்திரித்தல் எனப் பொருள்படும். படைத்தல் முதலிய தொழில்களால் உலகத்தைச் சித்திரிப்பதனால் சிவனது அந்தப் பெருமையே சிவலிங்கம் எனப்படும். கல், மண், படிகம், உலோகம் முதலியவற்றால் ஆக்கப்பட்டுச் சிவனது அந்தப் பெருமை வெளிப்படுதற்கு ஆதாரமாயுள்ள சிவக்குறிகளும் உபசாரத்தால் சிவலிங்கம் என வழங்கப்படும். படைத்தல் முதலிய ஐம்பெருந் தொழில்களை அதிட்டிதது நிற்கும் சத்தியே சிவனுக்கு வித்தியாதேகம் எனப்படும். மூலமலம் இல்லாமையால் சிவனுக்கு வைந்தவ முதலிய உடம்பு இல்லை; சத்தியே சரீரமாகும். ஐந்தொழிலுக்கும் உரிய ஈசானம் முதலிய ஐந்து மந்திரங்களாலே தலைமுதலியனவாக அந்தத் திருவுடம்பு கற்பிக்கப்படும். "ஒருநாம மோருருவ மொன்று மில்லா" தவராகிய சிவன், உயிர்கள் தம்மை கண்டு வழிபட் டுய்யவேண்டுமென்ற கருணைப் பெருக்கினாலே சத்தி காரியமாகக் கற்பிக்கப்பட்ட அந்தத் திருவுடம்பினுள் விளங்கி வீற்றிருப்பர். அவரது அந்தப் பெருங்கருணையை அறிந்து வழிபட்டுய்வது அறிவுடைய மக்களின் கடமையாகும்.

சண்டேசுரநாயனார் புராணம் முற்றும்

## சேர்க்கை I

### பசுக் காக்கும் முறை



பசுக்களைச் செலுத்தும்போது அவைகளுக்குச் சிறிதும் துன்பம் செய்யாமலும் அச்சம் வராமலும் இரக்கத்தோடு பலாசங்கோலினாலே மெல்ல ஓச்சிப் போ போ என்று செலுத்தல்வேண்டும். இரக்கமில்லாமற் கோபித்தும், அதட்டியும், அடித்தும் தீங்கு செய்பவர் நரகத்துக்காளாவர். பசுக்களின் பெருமையை உணர்ந்து அவற்றை வணங்கிப் பூசித்துப் புல் கொடுத்தவர்கள் சிவலோகத்தை அடைவர். இதனை எல்லாரும் செய்தல்வேண்டு மென்பதனை "யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை" என்று திருமூலதேவர் திருமந்திரம் அருளினர். பசுக்களின் வருத்தம் தணிப்பதற்கென்றே திருமூலராகும் சிவயோகியார் தமது உடலை விடுத்து அவற்றை மேய்த்த இடையன் உடம்பிற் பரகாயப்பிரவேசம் என்ற யோக நெறியினாலே புகுந்து எழுந்து அவற்றை மகிழ்வித்தனர்.

பசுக்களைத் தீண்டினும் தீவினைகள் நீங்கும்; நல்வினைகள் பெருகும். பசுக்கள் மக்களுக்கு இம்மை மறுமை என்ற இரண்டு பயனும் தருவன. சிவவழிபாட்டுக்குரிய சாதனம் தருதலால் சிவனடி சேர்தற்கும் துணைசெய்வன.

பசுக்கள் தங்குதற்குரிய சாலையை விதிப்படி அமைத்து அதனுள் ஆற்றுமண், புற்றுமண், ஓடைமண், அரசமரத்தடிமண், வில்வத்தடிமண் முதலிய தூயமண்ணினால் நிலம் செய்தல்வேண்டும்.

இளங்கன்று, முதிர்கன்று, நோய்க்கன்று என்பவற்றுக்கு வெவ்வேறாக இடங்கள் அமைக்கவேண்டும். (இதுபற்றி ஆனாயநாயனார் புராணத்தில் உரைத்தவை பார்க்க.)

நாடோறும் அவ்வப்போது கோசல கோமயங்களை அப்புறப்படுத்திச் சுத்தி செய்து, மசகம் வராமல் தூபமிட்டுத் தீபமேற்றிச் சாலையைப் பூ முதலியவற்றால் அலங்கரித்து, அதனுள் சுவத்தி என்னும் சொல்லைச் சொல்லிப் பசுக்களை மெல்லப் புகுவித்து அன்போடும் புல்லைக் கொடுக்கவேண்டும். நோயுற்ற பசுக்களுக்கு வேறிடம் செய்து மருந்து கொடுத்துக் காத்தல்வேண்டும். இளைத்த பசுக்களைக் கண்டு இரங்கித் தாம் வாங்கி வளர்த்தல் பெரும் புண்ணியமாம்.

அட்டமிநாள் தோறும் பசுக்களை நீராட்டிப் பூச்சூட்டிச் சோறும் நீரும் தந்து புகையும் விளக்கும் காட்டிப் பூசித்து வணங்குதல்வேண்டும்.

வேனிற்காலத்திற் சோலைகளிலும் மழைக்காலத்தில் மலைச்சாரல் வனங்களிலும் பனிக்காலத்தில் வெயில் மிகுந்த வெளிகளிலும் துன்பம் வாராதபடி பசுக்களை நல்ல புல்லுள்ள நிலத்தில் மேய்த்துத் தூய நல்ல நீர்த்துறைகளில் நீரூட்டுவித்தல் வேண்டும்.

பசுக்களின் துன்பம்போகக் காக்காதவர்களும், பூசைசெய்யாதவர்களும், காக்காத பாவிகளைத் தண்டிக்காத அரசனும் நரகில் வீழ்வார்கள்.

ஆவுரிஞ்சுதற்குக் கல் - தறி முதலியவற்றை நடுதலும், சிவனுக்கும் ஆசாரியனுக்கும் பசுவைத் தானம் செய்தலும், நல்ல இலக்கணங்களையுடைய எருதைச் சிவசந்நிதானத்துக்குத் தானமாக விடுதலும், சிவபெருமானது திருப்பணிவிடைக்காக எருதுகள் கொடுத்தலும் பெரும் சிவபுண்ணியங்களாம்.

மலட்டுப் பசுக்களின் மேலேனும், இடபத்தின் மேலேனும் பாரம் ஏற்றினவர்களும், இடபத்தில் ஏறினவர்களும் நரகில் வீழ்ந்து வருந்துவர். இடபங்களை உழவுக்காகவேனும் பயன்படுத்தலாகாது என்ற மரபினைச் சேக்கிழார் நாயனார் பலஇடத்தும் உணர்த்தியருளினர். பசுக்களின் மேற்பார மேற்றலாகாது என்பது சொல்லாமலே யமையும்.

பசுக்கள் தரும் திருமஞ்சனம் ஐந்தினையும் சிவனுக்கு ஆட்டுவித்தல் மேலான சிவபுண்ணியமாகும். ஈன்று இரண்டுமாதம் வரை கன்று உண்ணும்படி பாலை விட்டுப் பின் கறந்து சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டுதல் வேண்டும்.

கன்று பால் உண்டு முலையை விடுத்தபோது, நீரினால் முலையைக் கழுவிக் கறத்தல் வேண்டும். பேராசையினாற் கன்றுக்குப் பால்விடாமற் கறப்பவர்கள் நரகத்தில் வீழ்ந்து நெடுங்காலம் வருந்திப் பின்பு பூமியிற் பிறந்து கடும்பசியினாலே வருந்தி வீடுகள்தோறும் பிச்சையேற்பர் ; பிச்சை ஏற்பினும் கிடையாமல் வருந்துவர்.

கபிலையின் பாலைச் சிவபெருமானுக்கே கொடுத்தல் வேண்டும்; அவ்வாறு செய்யாது பருகினோர் நரகில் விழுவர்.

புலையர்கள் பசுச்சாலையில் புகுதலாகாது. புகுந்தால் எண்ணிறந்த காலம் எரிவாய் நரகில் வீழ்ந்து மீட்சியின்றி வருந்துவர்.

பசுக்களைப் பகைவர் கவர்ந்தால் எதிர்த்துக் காத்தல்வேண்டும். காக்க இயலாதபோது அதன் பொருட்டுத் தம் உயிர் விட்டவர்கள் சிவபதமடைவார்கள்.

பசுக்காத்தலின் முறையும் பெருமையும் ஆனாய நாயனார், சண்டேசுவர நாயனார், திருமூலதேவ நாயனார் என்ற மூன்று நாயன்மார்களின் சரிதங்களாலும் அறிவுறுத்தப்பட்டன. அதுவே அவற்றின் சிறப்பினைக் காட்டுவதாம். வேதங்களும் ஆகமங்களும் இச்சிறப்பினைப் பேசும். சிவதருமோத்திரத்தினுள் இவை விரிவாகப் பேசப்பட்டுள்ளன. நித்திய கன்மவிதிப்பத்ததிகளில் பசுவின்பூசையும் விதிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீமத் ஆறுமுகநாவலர் அவர்கள் இப்புராண சூசனத்தில் எழுதியுள்ளவற்றைத் தழுவி இஃது எழுதப்பட்டது.

குறிப்பு :—பசுக்காத்தலின் பெருமையையும், காவாதொழிதலின் தீமையினையும் பற்றி வேதாகமங்களும் மற்றும் நூல்களும் ஒன்று போலவே தோத்திரிப்பன. அவற்றைப் பின்பற்றி ஒழுகி நிகழ்ந்துவந்தது நமது புண்ணிய பூமியாகிய பரதகண்டமேயாம். ஆனால் இக்காலத்து அவ்வொழுக்கம் மாறிவிட்டது. பசுக்களைக் காப்பதும் காவாதொழிவதும் நிற்க, அவற்றை உண்டிப் பொருட்டாக வதைசெய்யா திருந்தாலே போதும் - அதுவே பெரும்புண்ணியமாகும் என்று சொல்லும் காலமாக உள்ளது இக் காலக் கொடுமை ! அந்தோ ! பசுவின் குருதி ஒருதுளி நிலத்தில் வீழ்வதாயின் அதினின்றும் பலகோடி அசுரர்கள் வந்து உதித்து உலகை நாசம் செய்வர் என்றும் நூல்கள் கூறுகின்றன. நாடோறும் மிருக மனித வயிற்றை நிரப்பும் பொருட்டு வதைக்கப்படும் பசுக்களின் இரத்தம் ஆறுகப் பெருகுமாயின் இந்நாடு என்ன அலங்கோலம்தான் படாது? இக்கொடிய பாவம் நமது புண்ணிய நாட்டில் வரத் தலைப்பட்ட நாளே நமது நாட்டுக்கு அளவற்ற கேடுகள்வரத் தொடங்கிவிட்டன என்பது அறிவோர் துணிபாகும். பசுக்களிடம் கருணையில்லாதவர்களும் பசுக் கொலைபுரிவோரும் பசுவிறைச்சி யுண்போரும் ஆகிய புறமதத்தினர், கொலைஞர், புலையர் முதலியோரிடம் பசுக்களையேனும் கன்றுகளையேனும் விற்பது பெரும்பாதகமாகும். விலைக்குப் பெற்றவன் செய்யும் பாதகத்துக்கு விற்றவனும் பொறுப்பாளியாவன் என்பது நூற்றுணிபும் உண்மையுமாம். நோய்ப்பசு, மூப்புடையபசு, இளைத்தபசு முதலியவற்றை விற்பதும், அதனால் வரும் சிறு ஊதியத்தைப் பொருளாக எண்ணுவதும் பாவமாகும் ; அவற்றையும், பால்வற்றிய பசுக்களையும் உடையவர்கள் தாமே வைத்துக் காப்பாற்றுதல் கடமையாம். தம்மால் இயலாதபோது காக்கக்கூடியவர்களிடம் ஒப்புவித்தலே முறைமையாகும். தனித்தனிப் பசுக்காக்க இல்லாதவர்கள் பலர் ஒன்றுகூடிப் பசுக்காக்கும் சாலை நியமித்து அதன் மூலம் அவற்றைக் காக்க முயல்வது பெருங்கடமையும் சிவபுண்ணியமுமாகும். ஊர்ப்புறங்களில் பசுக்கள் மேயப் புல்உள்ள நிலம் உண்டாக்கி வைத்தல் புண்ணியமும், அவ்வாறுள்ள நிலங்களை அபகரித்தல், பெரும்பாவமும் ஆம். மக்கள் இவற்றை அறிந்து திருந்த முயல்வார்களானால் நாட்டுக்கு நலமும் தமக்கு நன்மையையும் தேடிக்கொண்டவராவர்.

**சேர்க்கை II**

சண்டேசுர நாயனாரைப்பற்றிய

## சைவத் தெய்வத் திருமுறைத் திரட்டு

### ஆளுடைய பிள்ளையார்

முதல் திருமுறை — திருச்சேய்ஞலூர் — பண் - பழந்தக்கராகம்.

*பீரடைந்த பால தாட்டப் பேணு தவன்றாதை*
*வேரடைந்து பாய்ந்த தாளை வேர்தடிந் தான்றனக்குத்*
**தாரடைந்த மாலை சூட்டித் தலைமை வகுத்ததென்னே ?**
*சீரடைந்த கோயின் மல்கு சேய்ஞலூர் மேயவனே.* (7)

திருக்கோளிலி — பண் - பழந்தக்கராகம்

**வந்தமணை லாலிலிங்க மண்ணியின்கட் பாலாட்டுஞ்**
*சிந்தைசெய்வோன் றன்கருமந் தேர்ந்துசிதைப் பான்வருமத்*
*தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்*
*கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே.* (4)

திருவூறல் — பண் - வியாழக்குறிஞ்சி

எண்டிசை யோர்மகிழ வெழின் மாலையும் போனகமும் பண்டு
சண்டி தொழவளித்தா னவன் றாழுமிடம் *வினவிற்*
*கொண்டல்கள் தங்குபொழிற் குளிர் பொய்கைகள் சூழ்ந்துநஞ்சை*
*யுண்டபி ரானமருந் திரு வூறலை யுள்குதுமே.* (5)

இரண்டாந் திருமுறை — திருப்புள்ளிருக்குவேளூர் — பண் - சீகாமரம்

*கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்*
*பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்*
*வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் *புள்ளிருக்கு வேளூரே.* (5)

மூன்றாந் திருமுறை — திருப்பாசுரம் — பண் - கௌசிகம்

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் *தாதை பண்டு*
*முடிசேர்ந்த காலை யறவெட்டிட முக்கண் மூர்த்தி*
யடிசேர்ந்த வண்ண *மறிவார்சொலக் கேட்டு மன்றே.* (7)

திருவேட்டக்குடி — பண் - பஞ்சமம்

**தோத்திரமா மணலிலிங்கந் தொடங்கியவா னிரையின்பால்**
**பாத்திரமா வாட்டுதலும்** *பரஞ்சோதி பரிந்தருளி*
*ஆத்தமென மறைநால்வர்க் கறம்புரிநூ லன்றுரைத்த*
*தீர்த்தமல்கு சடையாருந் திருவேட்டக் குடியாரே.* (3)

---

*இங்கு இது இத்தல சம்பந்தமான வேறுமொரு சரிதங் குறித்ததென்றும் கொள்வர்.

திருவாலவாய் - திருவியமகம் பண் - பழம்பஞ்சுரம்

சென்று தாதை யுகுத்தனன் பாலையே சீறி யன்பு செகுத்தனன் பாலையே
வென்றி சேர்மழுக் கொண்டுமுன் காலையே வீட வெட்டிடக் கண்டுமுன் காலையே
நின்ற மாணியை யோடின கங்கையா னிலவ மல்கி யுதித்தன கங்கையால்
அன்று நின்னுரு வாகத் தடவியே யால வாயர னாகத் தடவியே. (5)

---

## ஆளுடைய அரசுகள்

நான்காந்திருமுறை திருவாப்பாடி பண் - திருநேரிசைக்கொல்லி

அண்டமா ரமரர் கோமா னாதியெம் மண்ணல் பாதங்
கொண்டவன் குறிப்பி னாலே கூப்பினான் றாப ரத்தைக்
கண்டவன் றாதை பாய்வான் காலற வெறியக் கண்டு
சண்டியார்க் கருள்கள் செய்த தலைவராப் பாடி யாரே. (4)

திருக்குறுக்கைவீரட்டம் பண் - திருநேரிசைக்கொல்லி

தழைத்ததோ ராத்தி யின்கீழ்த் தாபர மணலாற் கூப்பி
யழைத்தங்கே யாவின் பாலைக் கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் றாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. (3)

திருச்சாய்க்காடு பண் - திருநேரிசைக்கொல்லி

ஆமலி பாலு நெய்யு மாட்டியர்ச் சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப் பொறுததன் றாதை தாளைக்
கூர்மழு வொன்ற லோச்சக் குளிர்சடைக் கொன்றை மாலைத்
தாமநற் சண்டிக் கீந்தார் சாய்க்காடு மேவி னாரே. (6)

திருச்சேறை பண் - திருநேரிசைக்கொல்லி

நிறைந்தமா மணலைக் கூப்பி நேசமோ டாவின் பாலைக்
கறந்துகொண் டாட்டக் கண்டு கறுத்ததன் றாதை தாளை
யெறிந்தமா ணிக்கப் போதே யெழில்கொள்சண் டீச னென்னச்
சிறந்தபே ரளித்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே. (5)

ஐந்தாந்திருமுறை கோயில் திருக்குறுந்தொகை

மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலா மாளக் கொடுத்தவன்
ஆணி யைச்செம்பொ னம்பலத் துண்ணின்ற
தாணு வைத்தமி யேன்மறந் துய்வனே.

திருக்கொண்டீச்சரம் திருக்குறுந்தொகை

கண்ட பேச்சினிற் காளையர் தங்கள்பால்
மண்டி யேச்சுனு மாதரைச் சேராதே
சண்டி யீச்சுர வர்க்கருள் செய்தவக்
கொண்டி யீச்சுர வன்கழல் கூறுமே.

திருமங்கலக்குடி

வண்டு சேர்பொழில் சூழ்மங் கலக்குடி
விண்ட தாதையைத் தாளற வீசிய
சண்ட நாயக னுக்கருள் செய்தவன்
தண்ட மாமதி சூடிய சோதியே.

ஆறாந் திருமுறை திருப்பூவணம் திருத்தாண்டகம்

ஆங்கணைந்த சண்டிக்கு மருளி யன்று
தன்முடிமே லலர்மாலை யளித்த ரேன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி யறுத்தருளும் பரிசுந் தோன்றும்
கோங்கணைந்த கூவிளமு மதமத் தம்முங்
குழற்கணிந்த கொள்கையொடு கோலந் தோன்றும்
பூங்கணைவே ளுருவழித்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (10)

---

ஆளுடைய நம்பிகள்

ஏழாந் திருமுறை திருக்கலயநல்லூர் பண் - தக்கராகம்

இண்டைமலர் கொண்டுமண லிலிங்கம தியற்றி
யினைத்தார்வின் பாலாட்ட விடறியதா தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி யண்டர்தொழ தேத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கனதூர் வினவின்
மண்டபமுங் கோபுரமு மாளிகைசூ ளிகையு
மறையொலியும் விழவொலியு மறுகுநிறை வெய்திக்
கண்டவர்கண் மனங்கவரும் புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்தாடுங் கலயநல்லூர் காணே. (3)

திருப்புன்கூர் பண் - தக்கேசி

ஏத நன்னில மீரறு வேலி யேயர் கோனுற்ற விரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக் கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற வெறிந்தசண் டிக்குன் சடைமி சைமல ரருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன் பூம்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (3)

திருவீழிமிழலை பண் - சீகாமரம்

எறிந்த சண்டி யிடந்த கண்ணப்ப னேத்து பத்தர்கட் கேற்ற நல்கினீர்
செறிந்த பூம்பொழிற்றேன் றுளிவீசுந் திருமிழலை
நிறைந்த வந்தணர் நித்த நாடொறு நேசத் தாலுமைப் பூசிக் குமிடம்
அறிந்து வீழிகொண்டீ ரடியேற்கு மருளுதிரே. (6)

---

## ஆளுடைய அடிகள்

எட்டாந் திருமுறை திருவாசகம் திருத்தோணோக்கம்

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் றாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப வீசன் றிருவருளாற் றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம். (7)

---

## சேந்தனார்

ஒன்பதாந் திருமுறை பண் - பஞ்சமம்

திருவிசைப்பா - திருப்பல்லாண்டு - கோயில்

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு மண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும் போனக மும்மருளிச்
சோதி மணிமுடித் தாமமு நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (௪௦)

---

## திருமூலதேவ நாயனார்

பத்தாந் திருமுறை திருமந்திரம் (2-ம் தந்திரம்)

உறுவ தறிதண்டி யொண்மணற் கூட்டி
யறுவகை யானைந்து மாட்டத்தன் றாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற் றனே. (15)

---

## நக்கீரர்

பதினோராந் திருமுறை கைலைபாதிகாளத்திபாதி யந்தாதி

வந்தமர ரேத்து மடைகூழும் வார்சடைமேற்
கொந்தவிழ மாலை கொடுத்தார்கோல்—வந்தித்து
வாலுகுத்த வண்கயிலைக் கோனார்தம் மாமுடிமேற்
பாலுகுத்த மாணிக்குப் பண்டு.

கோபப்பிரசாதம்

......மாணுடனாகிய சண்டியை, வானவ னாக்கியும்...... (10 - 11)

போற்றித் திருக்கலிவெண்பா

.........மட்டித்து,
வாலுகத்தா னல்லிலிங்க மாவகுத்து மற்றதன்மேற்
பாலுகுப்பக் கண்டு பதைத்தோடி—மேலுகைத்தங்
கோட்டியவன் றாதை யிருதா ளெறிந்துயிரை
வீட்டிய சண்டிக்கு வேறாக—நாட்டின்கட்
பொற்கோயி லுள்ளிருத்திப் பூமாலை போனகமு
நற்கோல மீந்த நலம்போற்றி—.........

---

## பட்டினத்துப்பிள்ளையார்

திருவேகம்பமுடையார் திருவந்தாதி

இனியவ ரின்ன ரவரையொப் பார்பிற ரென்னவொண்ணத்
தனியவர் தைய லுடனு மவர்தரு மம்பணித்த
முனியவ ரேது முகந்தமுக் கண்ணவர் சண்டியன்புக்
கினியவர் காய்மழு வாட்படை யார்கச்சி யேகம்பரே. (48)

## நம்பியாண்டார்நம்பிகள்

திருத்தொண்டர் திருவந்தாதி

குலமே றியசேய்ஞ லூரிற் குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறற் றண்டிகண் டீர்தந்தை தாளிரண்டும்
வலமே றியமழு வாலெறிந் தீசன் மணிமுடிமே
னலமே றியபால் சொரிந்தலர் சூட்டிய நன்னிதியே. (22)

## சேக்கிழார் நாயனர்

பன்னிரண்டாம் திருமுறை சண்டேசுரநாயனர் புராணம்

1219. நன்றி புரியு மவர்தம்பா னன்மை மறையின் றுறைவிளங்க
என்று மறையோர் குலம்பெருக வேழு புவனங் களுமுய்ய
மன்றி னடஞ்செய் பவர்சைவ வாய்மை வளர மாதவத்தோர்
வென்றி விளங்க வந்துதயஞ் செய்தார் விசார சருமனர். (12)

1242. பெருமை பிறங்குஞ் சேய்ஞலூர்ப் பிள்ளை யார்த முள்ளத்தில்
ஒருமை நினைவா லும்பர்பிரா னுவக்கும் பூசை யுறுப்பான
திருமஞ் சனமே முதலவற்றிற் றேடா தனவன் பினினிரப்பி
வருமந் நெறியே யர்ச்சனைசெய் தருளி வணங்கி மகிழ்கின்றார். (37)

1261. அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னாக்கி யனைத்துநாம்
உண்ட கலமு முடுப்பனவுஞ் சூடு வனவு முனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோ மென்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார். (56)

1262. எல்லா வுலகு மார்ப்பெடுப்ப வெங்கு மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர் பாடி யாடிக் களிபயிலச்
சொல்லார் மறைக டுதிசெய்யச் சூழ்பல் லியங்க ளெழச்சைவ
நல்லா றோங்க நாயகமா நங்கள் பெருமான் றொழுதணைந்தார். (57)

1264. வந்து மிகைசெய் தாதைதாண் மழுவாற் றுணித்த மறைச்சிறுவர்
அந்த வுடம்பு தன்னுடனே யரனார் மகனா ராயினார்;
இந்த நிலைமை யறிந்தாரா? ரீறி லாதார் தமக்கன்பு
தந்த வடியார் செய்தனவே தவமா மன்றோ சாற்றுங்கால்! (59)

திருஞானசம்பந்தநாயனார் புராணம்

ஞானசம் பந்தரு நாய னார்சடைத்
தூநறுந் தொடையன்முன் சூட்டும் பிள்ளையார்
பான்மையில் வரும்பதி யென்று நித்தில
யானமுன் னிழிந்தெதி ரிறைஞ்சி யெய்தினார். (244)

வேதியர் சேய்ஞலூர் விமலர் தங்கழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதைதா டடிந்தசண் டீசப் பிள்ளையார்
பாதகப் பயன்பெறும் பரிசு பாடினார். (248)

சைவத் தெய்வத் திருமுறைத்திரட்டு முற்றும்

---

## சேதுபுராணம்

கடவுள் வாழ்த்து

மனுதிகளுக் கெட்டாத பரமா னந்த
　வாழ்வினையங் கோரிலிங்க மணலாற் கூப்பித்
தனுதியயந் தனினின்றுந் தாபித் தான்பா
　றழைத்தவன்பா லாட்டவந்து தடுக்கத் தாதை
யெனுதவன்ற னிருபதமு மழுவாற் றுண்டித்
　திகழ்ந்தவனைப் பரபதத்து ளிருத்தித் தானும்
பினுகியரு ளடைந்தவிறற் சண்டே சன்றாள்
　பிரசமல ரிறைத்திறைஞ்சிப் பரசு வாமே. (12)

—நிரம்பவழகியதேசிகர்.

---

உ
சிவமயம்

# சுந்தரமூர்த்திநாயனார் துதி

தொகை

"ஆரூ ரனாரூ ரிலம்மானுக் காளே"—திருத்தொண்டத்தொகை

வகை

"நிதியார் துருத்திதென் வேள்விக் குடியாய் நினைமறந்த
மதியேற் கறிகுறி வைத்த புகர்பின்னை மாற்றி"டென்று
துதியா வருள்சொன்ன வாறறி வாரிடைப் பெற்றவன்கா
ணதியார் புனல்வய னாவலர் கோனென்னு நற்றவனே"
—திருத்தொண்டர் திருவந்தாதி - (23)

விரி

1265. நேச நிறைந்த வுள்ளத்தா னீல நிறைந்த மணிகண்டத்
தீச னடியார் பெருமையினை யெல்லா வுயிருந் தொழவெடுத்துத்
தேச முய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம். ௩௦

துதி :—இனி, நிறுத்த முறையானே, "மும்மையா லுலகாண்ட" என்று தொடங்கும் திருத்தொண்டத்தொகை மூன்றாவது பாசுரத்தினுள், "அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்" என்ற சரிதத்துக்கடுத்து, "ஆரூ ரனாரூரி லம்மானுக் காளே' என்றதனுட் போந்தபடி ஆரூர்ப் பெருமானுக்கு ஆளுடையநம்பிகள் ஆளாயின சரிதப் பகுதியைக் கூறத்தொடங்கிய ஆசிரியர், நம்பிகளது சரிதத்தின் மற்றொரு பகுதியினை உள்ளமைத்து, ஆளாந்தன்மையைக் காட்டும் முகத்தால் நம்பிகளின் துதியாகக் கூறுகின்றார்.

தொகை :—(தொகைநூலுள் "மும்மையா லுலகாண்ட" என்று தொடங்கும் இப்பாசுரத்திற் றுதிக்கப்பட்ட ஆறு அடியார்களுக்குத் தனித்தனி அடியேனாகிய) ஆரூரன், திருவாரூர் அம்மானுக்கும் ஆள் என்று முடிக்க. முன்னிரண்டு சருக்கங்களின் இறுதியில் (550 - 967) உரைத்தவை பார்க்க. ஆரூரில் அம்மானுக் காளேயாகிய ஆரூரன் முன் சொன்ன ஆறு அடியவர்களுக்கும் தனித்தனி அடியேனாவேன் என்று கூட்டி முடித்தலுமாம்.

வகை :—செல்வம் பொருந்திய துருத்தியும் தென் வேள்விக்குடியும் என்ற தலத்தில் எழுந்தருளி இனிது வாழும் முதல்வரே! உம்மைமறந்த நினைவுடைய எனக்கு அம்மறதியைமாற்றி நினைப்பூட்டும் வகையால் என் உடம்பினில்வைத்த அடையாளங்களாகிய பிணியின் தன்மைகளைப், பின்னை மாற்றியருள்வீராக!" என்று துதித்துச், சொன்னவாறறிவார் என்ற திருநாமமுடைய அம்முதல்வரிடம் அவ்வாறே அருளைப்பெற்றவர், ஆற்றின் நிறைந்த நீர்பாயும் வயல்சூழ்ந்த திருநாவலூரர் என்னும் நல்ல தவத்தினையுடையவரேயாவர்.

**நிதியார் துருத்தி தென்வேள்விக் குடியாய்** - திருத்துருத்தியும் திருவேள்விக் குடியும் சேர்ந்து ஒரே தலமாகக் கணிக்கப்பெறுவதும் மரபு. **சொன்னவாறறிவார்** என்பது இத்தலத்தின் இறைவரது பெயர். "**சொன்ன வாறறிவார் துருத்தியார் வேள் விக் குடியுளார்**" என்று இதனை, நம்பிகள் "**மின்னுமா மேகங்கள்**" என்னும் இத்தலத் தேவாரத்தில் முதற் பாசுரத்திற் போற்றியருளினர். ஆளுடைய பிள்ளையாரும்

ஆளுடையநம்பிகளும் இந்த இரண்டு தலங்களையும் ஒன்றுசேர்த்துத் "துருத்தியும் வேள் விக்குடியும்" என்று திருப்பதிகங்கள் அருளியிருக்கின்றமை காண்க. ஆயினும் இவை காவிரிக்கு வடகரையிலும் தென்கரையிலும் உள்ள தனியாலயங்களாகக் காணப்படுவதனாலும், இவற்றுக்குத் தனித்தனி திருப்பதிகங்களுமுள்ளதனாலும் வேள்விக்குடியைக் காவிரிக்கு வடகரை 23-வது தலமாகவும், துருத்தியைத் தென்கரை 37-வது தலமாகவும் தல வரிசையில் கணித்திருக்கின்றனர். இறைவனார் பகலில் பிரம சரிய வேடத்துடன் துருத்தியில் தங்கி, இரவில் வேள்விக்குடியில் திருமணம் புரிந்து கொண்டனர் என்பது வரலாறு. "பகலிடம் புகலிடம் பைம்பொழில்சூழ், வீங்குநீர்த் துருத்தியா ரிரவிடத் துறைவர் வேள்விக்குடியே" என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரம் காண்க.

"நினைமறந்த...மாற்றிடு" இது நம்பிகள் திருத்துருத்தியில் இறைவரை வேண்டிக் கொண்டது. புராணத்துட் காண்க. "அடியேன்மே லுற்றபிணி, வருத்தமெனை யொழித்தருள வேண்டுமென வணங்குவார்" (ஏயர்கோன் - புரா - 297) பார்க்க. **துதியா** - அவ்வாறு துதித்து.

சொன்னவாறறிவாரிடை அருள் பெற்றவன் என்க. அருள் - வேண்டிக் கொண்டவாறே பிணி நீங்கப்பெற்ற திருவருள். வேண்டிக்கொண்ட அந்த அருள் எனச் சுட்டு வருவிக்க. "என்னுடம் படும்பிணி யிடர்கெடுத் தானை", "பழவினை யுள்ளன பற்றறுத் தானை", "உற்றநோ யிற்றையே யுறவொழித் தானை" "அம் மைநோ யிம்மையே யாசறுத் தானை", "மேலைநோ யிம்மையே வீடுவித் தானை" என்பனவாதி ஆளுடையநம்பிகள் தேவாரங்களால் அவ்வாறருள்பெற்றமை விளங்கும். **துதியா - அருள்பெற்றவன்** - துதித்து அந்தப்படியே அருள் கிடைக்கப்பெற்றவர். "புதியபிணி யதுநீங்கி அக்கணமே மணியொளிசேர் திருமேனி யாயினார்" (ஏயர்கோ - புரா - 299) என்றது காண்க.

நினைமறந்த மதியேற்கு அறிகுறிவைத்த புகர்-என்றது மறந்ததனால் அடையாள மாகத் திருமேனியிற் காணவைத்த நோய். **புகர்** - பிணியால் மேனியிற் காணும் புற அடையாளம். திருத்துருத்தியில் வரும்போது நம்பிகளது திருமேனியில் புதியதாகிய ஒரு பிணியின் அறிகுறி தங்கியதென்பதும், வலது கண் மறைந்ததாகிய ஒரு கண் பார்வையுடனிருந்தனர் என்பதும் சரிதத்தா லறியப்படும். இது திருவொற்றியூரில் இறைவர்முன் செய்த சபதத்தை மறந்த அபசாரத்தால் நேர்ந்ததென்று நம்பிகள் கருதியருளினர் என்பது கருத்து. இது "என்னை நான்மறக்குமா றெம்பெரு மானை யென்னுடம் படும்பிணி யிடர்கெடுத் தானை" என்ற அவர் திருவாக்காலும் கருதி அறிய வுள்ளது. **பின்னைமாற்றிடு** - மறவியை மாற்றியதனால் என்றும் நினைந்துள்ளே னாதலின் பின்னை அதனை மாற்றுக என்பது கருத்து.

**நிதியார் துருத்தி** - செல்வநிறைவு காவிரியின் செழிப்பினால் ஆகியது. "வரைத் தலைப் பசும்பொனோ டருங்கலன்க ளுந்திவந், திரைத்தலைச் சுமந்துகொண் டெறிந் திலங்கு காவிரிக், கரைத்தலைத் துருத்திபுக்கு" (திருவிராகம் - 1) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமும், "பொன்மணி வரன்றியும்" (காந்தாரம் - 6) என்ற ஆளுடையநம்பிகள் தேவாரமும் காண்க. **துருத்தி** - ஆற்றிடைக்குறை. ஆற்றின் வண்டல் சேர்ந்த தரையாதலின் அதனாலும் செழிப்பும் செல்வமுமுளதாம். "பொன் னியி னடுவு தன்னுட் பூம்புனல் பொலிந்து தோன்றும், துன்னிய துருத்தியானை" (திருநேரிசை - 3) என்ற ஆளுடைய அரசுகள் திருவாக்கும் காண்க.

**நற்றவனே - பெற்றவன் காண்** என்க. நற்றவனாதலின் பெற்றனன்; ஏனை யோர்க்கு அவ்வாறு துதித்த அக்கணமே துதித்தவாறே பெறுதல் அரிது என்பதாம். ஏகாரம் தேற்றம். பிரிநிலை எனினுமாம். **காண்** - காண்க - கண்டுகொள்க,

**வைத்துப் புகர்பின்னை** - என்பதும் பாடம்.

**1265.** (இ - ள்) வெளிப்படை. விடம்பொருந்திய அழகிய கண்டத்தையுடைய இறைவனாரது அடியார்களது பெருமையினை, அன்புநிறைந்த வுள்ளத்தினாலே, எல்லா வுயிர்களும் அறிந்து தொழுதேத்தத் தேசமெல்லாம் உய்யும்படி திருத்தொண்டத் தொகையினால் முன் அருளிச்செய்த திருவாளராகிய ஆளுடையநம்பிகளது வாசம் பொருந்திய மலர்போன்ற மெல்லிய பாதங்களை வணங்குதற்குப் பேறு கிடைக்கப் பெற்ற இந்தப் பிறவியினை வணங்குவோம்.

(வி - ரை) **நேச நிறைந்த உள்ளம்** - "இவர்க்குயா னடியே னாகப், பண்ணுநா ளெந்நா ளென்று பரமர்தாள் பரவிச் சென்றார்" (335), "அடியவர்க் கடிய னாவே னென்னுமா தரவு கூர" (336), "அவர்தாம் வேண்டு மதனையே" (341) என்றவை காண்க.

**நீலம்** - நீலநிறமுடைய விடத்துக்காயிற்று. பண்பாகுபெயர். "நீலவாள்" என்றது (1092 - சில குறிப்புக்கள்; பக்கம் - கடுசக) பார்க்க.

**ஈசன் அடியார் பெருமையினை** - ஈசன் பெருமையினையும் அடியார் பெருமையினையும் என்றுரைக்கவும் நின்றது. "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" என்ற தொகுதியினுள் இறைவரும் ஒருவராதலும் காண்க. 350—351 பார்க்க. அடியார் பெருமைகூறவே அதனுடன் அவர்களை ஆண்ட இறைவர் பெருமையும் உடன்கூற வருதலும் கருதத்தக்கது.

**எல்லாவுயிரும் தொழ** என்பது நம்பிகள் பணித்துச்செய்த பேரருளின் பொருட்டு அவரை உயிர்கள் தொழ எனவும், தேசமுய்ய என்பது, நம்பிகள் திருவுள்ளத்தில் உலக முய்யும்படி கருதியருளிப் பணித்தது எனவும் கொள்க. நேச நிறைந்த என்றதனால் உலகுயிர்களின்மேல் வைத்த கருணையும் குறிப்பால் உணர்த்தப் படுதல் காண்க. "மாத வஞ்செய்த தென்றிசை வாழ்ந்திடத், தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப், போதுவார்" (35) என்றபடி அடியார் பெருமையினை அறிந்து வழி பட்டு உலகமுய்யும் பொருட்டுத் திருத்தொண்டத் தொகையினை அருள்வதற்காகவே நம்பிகள் அவதரிக்கத் திருவருள் கூடிற்று என்பதறியப்படுதலும் இங்குக் கருதுக.

**முன் பணித்த** - **முன்** - உலகுயிர்கள் அறியும்படி தேற்றமாக என்க. முன்னாளில் என்றலுமாம்.

**பணித்தல்** - கட்டளையிட்டு - ஆணையிட்டு - அருளுதல். வழிகாட்டுதல் என்ற பொருளில் வந்தது. "ஆரூரன் அடிமைகேட் டுவப்பார் ஆரூரி லம்மானுக் கன்பரா வாரே" என்றதன் கருத்தும் காண்க.

**திருவாளன்** - சிவசம்பந்தமாகிய திருவை ஆள்பவர் - உடையவர். "உயிரளித்த திருவாளன்" (வெள். சருக் - 12) என்பதும் கருதுக. அடியார் பெருமையினை உலகுக்கு அறிவித்து வழிப்படுத்தும் தமது திரு - (முத்தித்திரு) என்ற செயலை இவர்பாலதாகப் பணித்து இறைவர் அருள்செய்தாராதலின் இப்பெயராற் கூறினார்.

**கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்** - பிறவி தீது என்பர் பிறர்எல்லாம்; ஆயின் நம்பிகளது கழல்களை வணங்கும் பேறு கிடைப்பதாயின் அப்பிறவி பிணங்கத் தக்க தீதல்லாது வணங்கத்தக்க பொருளுமாகும் என்பது கருத்து. "மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே" என்ற திருவாக்கின் கருத்தினையும் இங்கு வைத்துக் காண்க.

## மும்மையாலுலகாண்ட சருக்கம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்



சண்டேசுரநாயனார்புராணத்துப்

# பாட்டு முதற்குறிப்பு


| புராணப் பாட்டிலக்கம் | முதற்குறிப்பு | பாட்டு வரிசை | பக்கம் |
|---|---|---|---|
| | **அ** | | |
| 32 | அங்கண் | 1237 | ௩௮ |
| 40 | அச்சொற் | 1245 | ௫௦ |
| 56 | அண்டர்பிரா | 1261 | ௬௫ |
| 42 | அந்தணாளரா | 1247 | ௫௧ |
| 44 | அந்தணாளர் | 1249 | ௫௩ |
| 30 | அனைத்துத்திற | 1235 | ௩௭ |
| 46 | அன்பு புரியும் | 1251 | ௫௫ |
| | **ஆ** | | |
| 41 | ஆங்குமருங்கு | 1246 | ௫௧ |
| 33 | ஆத்திமலரு | 1248 | ௪௧ |
| 20 | ஆயசிறப்பி | 1225 | ௨௩ |
| 28 | ஆயநிரையி | 1233 | ௩௪ |
| | **இ** | | |
| 38 | இறையோனடி | 1243 | ௪௮ |
| | **உ—ஒ** | | |
| 22 | உள்ளூர்ந்தகை | 1227 | ௨௩ |
| 57 | எல்லாவுலகு | 1262 | ௬௭ |
| 52 | எறிந்தவது | 1257 | ௬௧ |
| 23 | என்றின்ன | 1228 | ௨௩ |
| 13 | ஐந்துவருட | 1218 | ௧௮ |
| 17 | ஓதுகிடை | 1222 | ௨௨ |
| | **க** | | |
| 49 | கண்டபோதே | 1254 | ௫௮ |
| 15 | குலவுமறை | 1220 | ௨௧ |
| 35 | கொண்டுமடுத்த | 1240 | ௪௩ |
| 3 | கோதின்மான் | 1208 | ௬ |
| 25 | கோலுங்கயி | 1230 | ௩௨ |
| | **ச** | | |
| 51 | சிந்தும்பொழு | 1256 | ௬௦ |
| 24 | சீலமுடைய | 1226 | ௨௩ |
| 55 | சேங்கண் | 1260 | ௬௨ |
| 2 | செம்மைவெண் | 1207 | ௪ |
| 39 | செயலிப்படி | 1244 | ௪௯ |
| 45 | சென்றமறையோ | 1250 | ௫௪ |
| 8 | சென்னியுபயன் | 1213 | ௧௧ |
| | **ஞ** | | |
| 58 | ஞாலமறிய | 1263 | ௬௭ |
| | **த** | | |
| 19 | தங்குமகில | 1224 | ௨௨ |
| 31 | தம்மையணை | 1236 | ௩௮ |
| 5 | தீம்பாலொழுக | 1210 | ௯ |
| 54 | தொடுத்த விதழி | 1259 | ௬௨ |
| | **ந** | | |
| 16 | நடமேபுரியு | 1221 | ௨௨ |
| 34 | நல்ல நவகும் | 1239 | ௪௨ |
| 12 | நன்றிபுரியு | 1217 | ௧௭ |
| 14 | நிகழுமுறைமை | 1219 | ௧௯ |
| 47 | நின்றவிதியி | 1252 | ௫௫ |
| | **ப** | | |
| 9 | பண்ணின்பய | 1214 | ௧௩ |
| 26 | பதவுகாலங் | 1231 | ௩௨ |
| 48 | பரவமேன்மேல் | 1253 | ௫௫ |
| 18 | பாவுங்கலைக | 1223 | ௨௨ |
| 29 | பூணுந்தொழில் | 1234 | ௩௬ |
| 53 | பூதகணங்க | 1258 | ௬௧ |
| 1 | பூந்தண்பொன் | 1206 | ௧ |
| 37 | பெருமை பிறங்குஞ் | 1242 | ௪௩ |
| 10 | பெருமை பிறங்கும | 1215 | ௧௫ |
| | **ம** | | |
| 27 | மண்ணிக்கரை | 1232 | ௩௪ |
| 7 | மடையிற்கழுநீர் | 1212 | ௧௦ |
| 43 | மறையோர் | 1248 | ௫௨ |
| 11 | மற்றைமறை | 1216 | ௧௬ |
| 36 | மீளமீளவிவ் | 1241 | ௪௩ |
| 50 | மேலாம்பெரி | 1255 | ௫௯ |
| | **ய** | | |
| 4 | யாகநிலவுஞ் | 1209 | ௮ |
| 24 | யானேயினி | 1229 | ௨௩ |
| | **வ** | | |
| 59 | வந்துமிகைசெய் | 1264 | ௬௯ |
| 6 | வாழ்பொற்பதி | 1211 | ௧௦ |

கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு - 12

அருண்மொழித் தேவர் என்னும்
சேக்கிழார் பெருமான் அருளிய

பெரியபுராணம் என்னும்

# திருத்தொண்டர் புராணம்

(படங்களுடன்)

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B.A., அவர்களது

## உரையுடன்

யாவரும் இலகுவில் வாங்கிப் பயனடையுமாறு சஞ்சிகைகளாக
வெளியிடப்பெறுகின்றது

**பன்னிரண்டு சஞ்சிகைகள் வெளியாயிருக்கின்றன**

**முதல் பன்னிரண்டு சஞ்சிகைகள் தனிச் சஞ்சிகைகளாகத் தரப்படமாட்டா.**

சஞ்சிகை ஒன்றுக்கு ராயல் 8 பக்கமுள்ள 16 பார அளவில் பகுதிகளாகச் சுமார் 25 சஞ்சிகைகளுக்குள் புராணமுற்றும் வெளிவரும் என்று நம்பப் பெறுகின்றது.

வெகுகாலம் முயன்று சேர்த்த விசேட ஆராய்ச்சிக் குறிப்புக்கள்—சிவத்தலங்கள், நாயன்மார் தலங்கள் முதலியவற்றின் குறிப்புக்கள்—இப்புராணத்தால் அறிந்து ஒழுகத் தக்க கற்பனைகள்—சரிதச் சுருக்கம்—தலத்தேவாரங்கள்—அவற்றின் குறிப்புக்கள்—பல பழைய ஏடுகளைப் பரிசோதித்துக் கண்ட பாடபேதங்கள்—பாராயணஞ்செய்வோர் வாசித்து நிறுத்தும் இடக்குறிப்புக்கள்—கலைஞான, விஞ்ஞான, சித்தாந்த சாத்திரக் குறிப்புக்கள் முதலியவை இதில் வெளிவரும்.

**சஞ்சிகை ஒன்றுக்கு விலை ரூபா 1. தபாற்கூலி வேறு.**

வேண்டுவோர் தபாற்கூலியையும் சேர்த்து முன்பணமனுப்பியேனும், வி. பி. தபால் மூலமேனும் பெற்றுக்கொள்ளலாம்.

1. **திருமலைச்சருக்கம் - தில்லைவாழந்தணர்சருக்கங்க**ளடங்கிய ஐந்து சஞ்சிகைகள் கட்டிடமான முதற்பகுதி ரூ. 6 - 8 - 0
2. **இலைமலிந்த சருக்கம் - மும்மையாலுலகாண்ட சருக்கங்க**ளடங்கிய ஏழு சஞ்சிகைகள் கட்டிடமான இரண்டாம் பகுதி ரூ. 8 - 0 - 0

தபாற் கூலி வேறு.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசங்களுக்கு எழுதுக :—

1. **திரு.ரா.ஷண்முகசுந்தரசெட்டியார்,**
29, வடவண்டை மாடவீதி,
திருவொற்றியூர், சென்னை.

2. **திரு. K. ஆறுமுக நாயனர்,**
போடோ ஆபீசு, 5, டேவிட்சன் தெரு,
சென்னை

3. **இ.மா. கோபாலகிருஷ்ணக்கோன்,**
புதுமண்டபம், மதுரை.

4. **விவேகானந்தா புத்தகசாலை,**
கொழும்பு, இலங்கை.

5. **முருகவேள் புத்தகசாலை,**
12, கணபதிமுதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை

6. **மு. மயில்வாகனம்,**
ஆசிரியர், இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம், இலங்கை.

---

சேக்கிழார் என்ற அரிய ஆராய்ச்சி நூல். (சென்னைச் சர்வகலாசாலைப் பிரசங்கங்கள்) பெரிய புராணச் சிறப்பும், ஆசிரியர் வரலாறும் அடங்கியது. 16 படங்களுடன் விலை ரூ. 1—8—0.